பெரிய எழுத்து

[illegible]

(மொழிபெயர்ப்பு)

[illegible]

[illegible]

R. E. [illegible]

U:
M88
114599

கடவுள்துணை.

# அண்டபிண்ட வியாக்கியானம்.

இஃது

மகாகனம் பொருந்திய இராஜரிஷி குரு

பெரிய சஞ்சீவிநாத சுவாமிகளால்

மூலபாஷையினின்று மொழிபெயர்க்கப்பட்டு

சங். தே. ஸ்ரீ.

ஞானப்பிரகாசநாத சுவாமிகளாற்

பரிசோதிக்கப்பட்டு,

ம. சா. இயாகப்பிள்ளை யவர்களால்,

முன் அச்சிட்டிருந்த பிரதிக்கிணங்க

அச்சிடப்பட்டது.

MADRAS.

PRINTED AT ST. JOSEPH'S PRESS,

BY M. S. YAGA PILLAI,

BROADWAY.

JUNE 1888.

SECOND EDITION.

*Registered.*

BU
M88



## பொருளட்டவணை.


| அதிகாரம். | விஷயம். | பக்கம். |
|---|---|---|
| | பாயிரம் ... ... S ... | I |
| | முகவுரை ... ... ... ... | III |
| 1-வது. | —நக்ஷத்திரமண்டலம் ... ... | 1 |
| 2-வது. | —கிரகமண்டலம் ... ... ... | 6 |
| 3-வது. | —சூரியனுடைய விவரம்... ... | 14 |
| 4-வது. | —சந்திரனுடைய விவரம் ... ... | 22 |
| 5-வது. | —பூதியங்களுடைய விவரம் ... | 29 |
| 6-வது. | —தேயுவின் விவரம் ... ... ... | 36 |
| 7-வது. | —ஆகாச விவரம்... ... ... | 45 |
| 8-வது. | —அப்புவின் விவரம்... ... ... | 53 |
| 9-வது. | —சமுத்திரத்தின் விவரம் ... | 59 |
| 10-வது. | —பிருதிவின் விவரம் ... ... ... | 67 |
| 11-வது. | —வளர்சீவ வஸ்துக்களின் விவரம்.. | 77 |
| 12-வது. | —பஞ்சேந்திரியச் சீவசெந்துக்களின் விவரம் ... ... | 86 |
| 13-வது. | —பிண்டமானது அண்டத்தின்குறிப்பிடமாயிருக்கிற விவரம். | 96 |
| 14-வது. | —அஸ்தியினுடைய விவரம் ... | 106 |
| 15-வது. | —சிரசின் விவரம் ... ... ... | 115 |
| 16-வது. | —நெஞ்சின் விவரம் ... ... | 127 |
| 17-வது. | —குக்ஷி விவரம் ... ... ... | 137 |
| 18-வது. | —சாணகராதி விவரம் ... ... | 146 |
| 19-வது. | —நரசீவனுடைய விவரம் ... ... | 154 |
| 20-வது. | —அண்ட பிண்ட அறிக்கையினாலே கடவுளைக் கண்டுபிடிக்கிற வகை... ... ... | 163 |

# பாயிரம்.

அண்டபிண்ட வியாக்கியானமென்னும் இந்நூலானது ஏறக்குறைய நூறுவருஷங்களுக்கு முன்னே உரோமை நாட்டினின் றிந்நாட்டிற் கெழுந்தருளிவந்த சத்தியவேதபோதக குருசுவாமிமார்களிலொருவருமாய், வேதசாஸ்திரங்களிலே தேர்ந்த விற்பன்னருமாய், அண்டபிண்ட சாஸ்திரங்களையெல்லாம் பரிசோதித்தறிந்த பாண்டித்தியருமாய், இலங்கைத்தீவின் விகாரியுமாயிருந்த மகா மேன்மை பொருந்திய பெரிய சஞ்சீவிநாத சுவாமிகள், இத்தேசத்தாரிலநேகர் சர்வலோகங்களையும், அவைகளிலுள்ள சமஸ்த பொருட்களையும் உண்டாக்கிக் காப்பாற்றிவருகின்ற மெய்யான தேவனைவிட்டுச் சந்திரசூரியன், கிரகநட்சேத்திரங்கள், அப்புப் பிருதிவியென்னும் நான்கு பூதியங்களையும், இன்னு மநேக உயிரில்லாத வஸ்துக்களையும், பூலோகத்திற் றிரிகின்ற பன்றி, நாய் பெருச்சாளி முதலியமிருக வினங்களும், தாபரசங்கமங்களும் ஆகிய ஜீவப்பொருட்களையும், மனிதர்களிற்றானே வல்லமைசாலிகளுமா யிராசாக்களுமாயிருந்து பாதாள வித்தையால் அநேகரைக் கொன்று பதிவிரதைகளைக் கற்பழித்த காமாதுரரையும் கையெடுத்துக் கும்பிட்டுத் தொழுது தோத்தரித்துப் பூசை நமஸ்காரம்பண்ணி வருவதைக்கண்டு ஆச்சரியப்பட்டு இவைகளையெல்லாம் படைத்த கர்த்தா வொருவருண்டென்றும், அவரையன்றி மற்றவைகளெல்லாம் அவரா லுண்டாக்கப்பட்டன வென்றும், அவைகளெல்லாமெவ்விதமாய்ச் சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன வென்றும் யாவருந்தெளிவாயறியும் பொருட்டும், சந்திரசூரிய கிராணங்களைப்பற்றிய கட்டுக்கதைகளைறும் படிக்கும் விசேஷமாய்த் தெய்வமில்லையென்று சாதிக்கிற அறிவில்லாதவர்களுடைய குருட்டாட்டந் தீரும்படிக்கும், சகலத்தையும் படைத்த ஏகோகர்த்தாவை யெவரும் புகழ்ந்து இடைவிடாது தியானிக்கவும், இந்த அண்டபிண்ட வியாக்கியானத்தைக் கிறீஸ்துபிறந்த 17-ம். நூற்றாண்டில் இலங்கைத்தீவில் எழுதி முடித்தனர். அக்காலத்திலே தமிழ் அச்செழுத் தெங்குமில்லாமையால் இதனை வெகுநாள்வரையி லச்சிடாம லிருந்துவந்த விதப் பிற்பட்டகாலத்திலும் இதனை யச்சிட்டுப் பிரபலியப்படுத்த ஒருவரும் நினையாமற்போய்க் கடைசியாய் 1,800-ம். ஆண்டிற்குப் பிறகு சென்னைக்கல்விச் சங்கத்துத் தமிழ்த்தலைவருமாய் அதில் மானேஜருமாயிருந்த ம-ா-ா-ஸ்ரீ. அ. முத்துச்சாமிப்பிள்ளை அவர்கள் இவ்வரிய நூலின் பெருமையைக்கண்டு மூலபிரதி அகப்படாமையினாலே அங்கங்கேயுள்ள அநேகபிரதிகளை வரவழைத்து ஒன்றற்கொன்று பொருந்தாதிருந்த அநேக அட்சரப்பிழைகளைச் சீர்திருத்தி அச்சிடுவதற் கேதுவாய் வைத்திருந்த சுத்தப் பிரதியானது அவரது மைத்துனரும் எனது மாமனுமாயகாலேஜ் முச்சி ம-ா-ா-ஸ்ரீ. அப்பாவு பிள்ளை அவர்களால் எனக்குக் கிடைத்ததினாலே மகா மேன்மையுங் கனமும்பொருந்திய தே. மரி. ஞானப்பிரகாசநாத சுவாமிகளுடைய உத்தாரம்பெற்று அச்சியற்றி றெஜிஸ்றர் செய்திருக்கிற பிரதிக்கிணங்க நாளது 1888-ஞு-ம். ஜுன் ௴ ம். இரண்டாமுறை அச்சியற்றலாயினேன்.

இங்ஙனம்,

ம. சா. இயாகப்பிள்ளை.

## இந்நூலைச் செய்தவரால்

# முகவுரை.

சர்வத்தையும் படைத்திரட்சிக்கிற பராபரவஸ்துவை யறிந்து அவருக்குப் பொருந்தாத பாவதோஷங்களை யருவருத்து அவருடைய சித்தத்துக்குப் பிரியமாயிருக்கிற தருமசாஸ்திரங்களைப்படித்துக் கடைசியாய் மட்டில்லாத பூர்த்தியைக்கொடுக்கிற பரமானந்தத்தை யநுபவிக்கிறதென்கிறது பூமியிலேதிரிகிற சகலமனிதருடைய வுத்தமகதியாயிருக்கிறதென்று ஞானத்திற்றெளிந்த சகலசாஸ்திரிகளுஞ்சங்கேதம்பண்ணினதுந்தவிரத் தப்பில்லாத வேதப்பிரமாணங்களினாலுமறிந்திருக்கிறோம். ஆனபடியினாலே யாதொருவன் மோக்ஷவிராச்சியத்திற்குப்போக மனதுண்டானால் பரமண்டலத்தையும் பூமண்டலத்தையும் அவைகளிலடங்கின வஸ்துவென்னப்பட்ட யாவையுஞ் சிருட்டித்தவருமா யளவில்லாத கிரமத்துடனே நடத்திக்கொண்டு வருகிறவருமாயிருக்கிற கடவுளுடைய சுபாவத்தையும் மட்டில்லாத தன்மைகளையுங் கூடினமாத்திர மறியப் பிரயாசைப்படக்கடவான்.

ஆனால் அண்டமென்கிற பெரியலோகமும், பிண்டமென்கிற சின்னலோகமும் பரஞ்சோதியாகிற பராபர வஸ்துவினுடைய ஒப்பில்லாத ஞானத்தையும், கனைகாருதகிருபாகடாக்ஷத்தையும், மனோவாக்குக்கெட்டாத மேலான வல்லமையையும், அளவறுக்கப்படாத விமரிசையையும், கணக்கற்ற உபகாரதன்மைகளையும், திவ்விய கீர்த்திப்பிரதாப சோபனங்களையும் சாங்கோபாங்கமான பிரகாரமாகப் பிரத்தியக்ஷமாயக் காண்பிக்கிறதினாலே யாவரும் பராபரவஸ்துவை யறியும்படிக்குச் சம்பூரண தாற்பரியமாயிருக்கிற நம்கடவுளுக்குத் தோத்திரமாக அண்டபிண்ட வியாக்கியானம் பண்ணத்தக்கதாக அபேக்ஷையாயிருக்கிறோம்.

இப்படிப்பட்ட உத்தியோகத்தைப் பராமரிக்கிறதிலே சாஸ்திரங்களை யறியாத இந்தச் சீர்மையிலுள்ள சிலபேர்கள் அண்டபிண்டவியாக்கியானம் பண்ணுகிறதிலே பிரத்தியக்ஷமான தப்பறைகளையும், புத்திக்கொவ்வாத அநேகவிசேஷங்களையும் தாறுமாறாய் விதித்திருக்கின்றார்கள். காமோவெனில் சோதிமண்டலங்களுடைய வர்த்தமானங்களையும், பிரபஞ்சத்திலடங்கியிருக்கிற வென்னப்படாத வஸ்துக்களுடைய சுபாவத்தையும், குணாகுணங்களையும் வெளிப்படுத்துவதில் பொய்யான விசேஷங்களை நினையாமல் நம்மாற் சொல்லப்போகிறதெல்லாம் ஒன்றில் ஸ்திரமுள்ள நியாயங்களினாலொப்புவிக்கப்படும். ஒன்றில் பிரத்தியக்ஷமான அநுபவசித்தியினாற் கண்டுபிடிக்கலாம். சிலசமயங்களிலே அண்டவியாக்கியானத்திலே விசேஷமானநியாயங்களையும் காரணங்களையும் நாம்சொல்லுவது விளங்காதிருக்குமானால் அதுகளை நம்மாலுண்டாக்கப்பட்ட லோகப்பிரமாண சாஸ்திரமென்கிற புத்தகத்தைப் பார்த்தால் தெரியவரும்.



இப்போதுஇந்தப்பிரபந்தத்தின்கிரமமேதென்றால்:—முந்தமுந்த அண்டவியாக்கியானத்திலே உலகத்தில் மிகவும் பிரகாசிக்கிற நட்சத்திரங்களுடைய மண்டலத்தையும், அதினுடையவிஸ்தீரணத்தையும், நட்சத்திரத்தின் சுபாவத்தையும், நிர்க்கமனத்தையும், உயரத்தையும், பருமத்தையும், அயநத்தையும், அட்சயத்தையும், பிரகாசத்தையும், குணாகுணங்களையும், அதற்கடுத்த அநேகவாச்சரிய விசேஷங்களையும்முதல்அதிகாரத்திலே வெளிப்படுத்துவோம்.

இரண்டாம் அதிகாரத்திலே நட்சத்திர மண்டலத்திலிருந்து கிரகங்களுடைய மண்டலத்திற் புத்தியினாலிறங்கி முன்சொல்லப்பட்டபிரகாரமாக நட்சத்திரங்களைப் பரிக்ஷித்தாப்போலே கிரகங்களுடைய அற்புதமான அயநத்தைத் தெரியப்பண்ணுவோம்.

*மூன்றாம் அதிகாரத்திலேயும், நாலாம் அதிகாரத்திலேயும்சகல கிரகங்களிலுஞ் சந்திர சூரியன் மிகவும் விளங்கப்படுகிறதினால் அதுகளுடைய சுபாவத்தையும், பிரகாசத்தையும், கிராணங்களையும், கிராணங்களுக்கடுத்த பன்னிரண்டாச்சரிய விசேஷங்களையும், உத்தரதட்சண அயநத்தையும், பனிரண்டிராசி சக்கரங்களுடைய வகையையும், அமாவாசை, பவுர்ணமி, அபரபட்சத்தையும், பூர்வபட்சத்தையும், சந்திரனுடைய பிறைகளையும், மாசுகளையும், எதுக்குதவும் எதுக்குதவாதென்று சொல்லிக்காட்டி இந்தஇரண்டு கிரகங்களுடையவுதாரணத்தையும் வெளிப்படுத்துவோம்.

இதன்றியே சோதிமண்டலங்களுடைய வர்த்தமானங்களைக் காண்பித்தபிற்பாடு இந்தப் பிரபஞ்சத்துக்குள் இறங்கிச் சகலவஸ்துக்களுக்கும் அஸ்திவாரமாயிருக்கிற பிரிதிவு, அப்பு, தேயு, ஆகாசம், ஆகநாலு பூதியங்களுடைய விவரத்தையும் தெரிவித்து அதுகளுக்குச் சம்பந்தமாயிருக்கிற குளிர், உஷ்ணம், ஈரம், உலர்தல் ஆகநாலுபிரதானகுணங்களையும் அதுகளுடைய நிருபணங்களையும் வெளிப்படுத்திக் காற்றானது ஆகாயஅசைவேதவிர அதொரு பூதியமாயிருக்கக் கூடாதென்றும், இந்த நான்கு பூதியங்களிலெது உத்தமமானதென்கிற வுச்சிதமான தர்க்கத்தைச் சொல்லுகிறதில் ஒவ்வொரு பூதியத்துக்கடுத்த தன்மைகளையும் ஐந்தாம் அதிகாரத்திலே அறிவிப்போம்.

இப்படியே பூதியங்களுடைய சாதாரண வர்த்தமானத்தைச் சொல்லிக்காட்டின பிற்பாடு தனித்தனியே பூதியங்களைப் பரிக்ஷித்து ஆறாம் அதிகாரத்திலே தேயுவென்கிற நெருப்பினுடைய சுபாவத்தையும், அந்தநெருப்பானது எந்த அங்கிஷத்திற் கூட்டப்பட்டதாயிருக்கிறதென்றும், சுவாலையினுடைய ரூபத்தையும் வர்ணங்களையும் அதுகளுக்குக் காரணங்களையும், அக்கினிக்குண்டான சுபாவபலத்தையும், அதையாச்சரியமான வகையோடே யெரியப்பண்ணுகிறதையும், தீக்கண்ணாடிகள் திரவியங்களாகிற பஞ்சலோகங்களை யுருகப்பண்ணுகிற விதத்தையும், சூரியகாந்தியின் சுபாவத்தையும், வானத்

இம்மின்னலும், குமுறலும், இடியுமுண்டாகிற காரணத்தையும், நெருப்பிறைப் பூமிக்குவரும் அதிர்ச்சிகளையும் அக்கினியின்கனத்தைக் கண்டுபிடிக்கும் ஆச்சரியத்திற்குரிய விசேஷங்களையும் இதுமுதலாகிய தீயினுடைய ஆச்சரிய விசேஷங்களையும் சொல்லிக்காட்டுவோம்.

இந்தப்பிரகாரமாக ஏழாம் அதிகாரத்திலே ஆகாயத்தினுடைய விஸ்தீரணத்தையும், அதினுடையபற்பல அந்தஸ்துக்களையும், கமனத்தையும், பிரயோசனத்தையும், ஆகாயத்தின்கமனத்தினாலேபிறப்பிக்கிற ஆச்சரியமான விநோதங்களையும், ஆகாயத்தில் வீசுகிற காற்றினுடைய சுபாவத்தையும் அதற்குக் காரணத்தையும், காற்றினுடைய பற்பல வகைகளையும் நன்மைகளையும் வெளிப்படுத்துவோம்.

இந்தவகையாக எட்டாம் அதிகாரத்திலே அப்புவென்கிற தண்ணீருடைய வர்த்தமானங் காணப்படும். முந்தமுந்த இந்தப்பூதியம் ஒன்றுமாத்திரமே சகலமான வஸ்துக்களையும் பிழைப்பிக்கிறதற்குப் போதுமென் றொப்புவிக்கத்தக்கதாகச் சிலசாஸ்திரிகள் சொல்லுகிற நியாயங்களை யாட்சேபித்து இந்தப் பூதியஞ்சகலவஸ்துக்களுக்குமுதவியாயிருந்தாலும் அஃதொன்றுமாத்திரம் பிழைப்பிக்கப் போதாதென்று நியாயத்தினால் ஸ்தாபித்ததற்குப் பிற்பாடு தண்ணீரானது எந்த அங்கிஷங்களினாலே கட்டப்பட்டதா யிருக்கிறதென்று பரிசோதித்து வேறுமக்களுக்குச் சொல்லப்பட்ட காரணங்களில்எந்தக்காரணத்தை யனுசரிக்கவேணுமென்று குறித்து ஒருவருஷத்தி லெம்மாத்திரமழை வருஷித்ததென்றும், ஆறுகளெல்லாம் மழைகளினால் வருகிறதென்றும்நிச்சயம்பண்ணி மழையும் பனியும் எந்தவிதமாக வருகிறதென்றும்அதுகளுக்கு மெய்யான காரணங்களையும் அறியப்பண்ணுவோம்.

இதற்கப்பால் ஒன்பதாம் அதிகாரத்திலே சமுத்திரத்தின் விவரமும், அக்கடலிலுண்டாகிய உப்புத்தண்ணீருக்குக்காரணமும், இப்படிக்கொத்த காசாரமாகிற சமுத்திரத்தின் அதிசயமுள்ள வடிவுக்கும் பெருக்குக்கும் காரணமும் நிமித்தமும், நன்மைகளும், சாகரத்திற் காணவர்ண முத்து, பவளம், அம்பர்முதலாகிய விலையேறப்பெற்ற அதிசயவஸ்துக்களும், விநோதங்களும், சமுத்திரத்திலே தண்ணீரில்லாமற் போனால் சர்வலோகத்திலுமுள்ள ஆறுகளிலேவருகிற தண்ணீரெல்லாம் கடலிலேவிழுகிறபோது அதை நிரப்புகிறதற்கு எத்தனைவருஷஞ் செல்லுமென் றுநிதானமாய்ச் சொல்லுகிறதும், இது முதலாகிய அதிசயவிசேஷங்களையும் ஒன்பதாம் அதிகாரத்தி லொப்புவிக்கப்படும்.

கடைசியிலே பூமியளவையும், பிரமாணத்தையும் சமுத்திரையாகச்சொல்லிப் பூலோகம் உண்டைபோல் வட்டரூபமாக விருக்கிறதென்றும் ஒப்புவித்ததற்குப் பிற்பாடு பூமி சர்வலோகத்துக்கு மையமாயிருக்கிறதென்று நியாயத்தினாற்காட்டி மனுஷர் திரிகிற பற்பல ஸ்தலங்களுடைய ஆச்சரியமான வேற்றுமையையுங், குளிரையும், உஷ்ணத்தையும், பிரகாசத்தையும், இருட்டையும் அதுகளுடைய விசே



ஷங்களையுங் கண்டுபிடிக்கிற வகையையும் ஸ்தாபித்துப் பூலோகத்தைச் சுற்றிக்கொண்டு வருகிறதிலே சம்பவிக்கிற அற்புத விசேஷத்தையும் வெளிப்படுத்தி பருவதங்களிலே விளைகிற ஒன்பதுவகை இரத்தினங்களுடைய வர்த்தமானங்களையும், பஞ்சலோகத்தினுடைய விவரத்தையும், அதற்குக் காரணங்களையும் பத்தாம் அதிகாரத்திலே தெரியப் பண்ணுவோம்.

இதல்லாமற் புத்தியில்லாத வஸ்துக்களுடைய சுபாவத்தையும், குணங்களையும் பரிசோதித்ததற்குப்பிற்பாடு சீவனுள்ளவஸ்துக்களுடைய வர்த்தமானத்தை வெளிப்படுத்தத்துடங்கி முந்தமுந்தவளர்சீவனுள்ள புல்லுக்கள், புஷ்பங்கள், செடிகள், விருக்ஷங்கள் முதலானதுகள் வளருகிறவகையும், அதுகளுடைய வேர், பட்டை, இலை, பூ, காய், கனிகளுடைய சுபாவகுணங்களும், அதுகளிலுண்டான அதிசயவிசேஷங்களும் அதற்குக் காரணங்களும் பதினோராம் அதிகாரத்திலே சொல்லப்படும்.

இப்படியே இந்திரியங்களுள்ள மிருகங்களுடைய சுபாவவர்த்தமானங்களைக் காண்பிக்கிறதிலே இலோகத்தினுடைய தத்துவங்களைப் பிண்டவியாக்கியானத்திலே விஸ்தீரணமாய்ச் சொல்லப் போகிறதினாலே இந்த அண்டவியாக்கியானத்தின் கடைசியான அதிகாரத்திலே மிருகங்கள் தாங்கள் பிழைக்கிறதற்கும், தங்களுக்குப் பொல்லாப்பு வராதபடிக்கும், குஞ்சுகள் குட்டிகளை வளர்க்கிறதற்கும், காண்பிக்கிற விசேஷ சாமர்த்தியத்தையும், அதற்கடுத்த ஆச்சரியமான விசேஷங்களையும் பனிரண்டாம் அதிகாரத்திலே வெளிப்படுத்துவோம்.

எல்லாமுடிந்த பிற்பாடு பிண்டவியாக்கியானத்திலே முந்தமுந்த பிண்டமான [illegible] குடியிருப்பிடமா யிருக்கிறதென்று கெட்டியுள்ள நியாயங்களினாலேஸ்தாபித்தபிற்பாடு மனுஷனானவன் தன்னிடத்திலே மற்றவஸ்துக்களுடைய நன்மைகளை யெல்லாங் கொண்டிருக்கிறது மல்லாமல் அப்பாலே கடக்கு மகாமகிமையுள்ளவனா யிருக்கிறானென்று ஒப்புவித்து மனுஷனுக்கும் மற்றப்பொருட்களுக்கும் உண்டான சமாதானத்தையும் வேற்றுமையையுஞ் சொல்லிக்காட்டி, பிண்டத்தினுடைய சுபாவமான அளவையும் பிரமாணத்தையும் சாஸ்திரமேடையாக பதின்மூன்றாம் அதிகாரத்திலேநிதானமாயொப்பிப்போம்.

இதற்கப்பால் அஸ்திகள் பிண்டத்துக் கஸ்திவாரமா யிருக்கிறதினாலே தேகத்தை நன்றாயறிகிறதற்கு எலும்புகளுடைய விவரத்தை நன்றாய்க் கண்டுபிடிக்கவேணும். ஆனபடியினாலே அஸ்திகளுடைய நிருபணத்தையும்மாம்ஸங்களையும், சந்துகளையும், சேர்க்கைகளையும், உருபத்தையும், இருப்பிடத்தையும், பிரயோசனத்தையும், சருமத்தையும், துவாரங்களையும் காரணங்களையும் பதினாலாம் அதிகாரத்திலே சொல்லிக்காட்டுவோம்.

அதற்குப் பிற்பாடு சிரசினுடைய விவரத்தைக் காண்பிக்கிறதிலே மூர்தமூர்த மயிர்களுடைய சுபாவத்தையும் அதுகளுக்குண்டான பற்பல வர்ணங்களுடைய காரணத்தையும் சொல்லிக் கபாலத்தினுடைய ரூபத்தையும், அங்கணங்களையும், மூளையினுடைய இரண்டு பிரதான அசைவுகளையும் அந்தஸ்துக்களையும் அவ்விடத்தைச் சுமக்கிற மூன்று தூண்களையும் சில அணுக்கள் வடிக்கட்டப்பட்டுப் போகிற பிரகாரத்தையும், நரம்புகளுடைய பிரதான பத்துச் சோடுகளையும், முகத்தினுடைய மகிமைகளையும், கண்களுடைய விசேஷமான வர்ணிப்பையும், கேட்கிறதற்கும், காண்கிறதற்கும், முகர்ந்து பார்க்கிறதற்கும், ருசியைக் கிரகிக்கிறதற்கும், பரிசிக்கிறதற்கும் சம்பந்தமாயிருக்கிற ஆச்சரிய விசேஷங்களையும் தனித்தனியே பதினேந்தாம் அதிகாரத்திலே வெளிப்படுத்துவோம்.

பதினாறும் அதிகாரத்திலேயோ வென்றால், நெஞ்சினுடைய தத்துவங்களும், இருதயமும் அதுகளிலடங்கியிருக்கிற அதிசயங்களும் விசேஷமான அசைவுகளும், இருதயத்தின் மாம்சங்களும், இரத்தமானது சிவாக்கினியோடே சரீரத்தை யெப்போதும் சுற்றிக்கொண்டு வருகிறதையும், இந்த ஆச்சரியமான சுற்றுக்குச் சம்பந்தமாயிருக்கிற விரத்தத்தாரைகள் இருதயத்தினின்று கிளம்பி மற்றத்தாதுக்கள் வழியாகப்புறப்பட்டுத் தேகமெல்லாம் பாய்கிறதையும், நல்லீரல் வெள்ளீரலுடைய சுபாவ குணங்களும் மூர்ச்சை விடுகிறதும் வாங்குகிறதும், நிருத்திப் பிரகாரமாய் வெள்ளீரல் கிளம்புகிறதும், அமிழ்த்துகிறதும், சுவாசத்தின் பிரயோசனமும் முன்சொல்லப்பட்ட பதினாறும் அதிகாரத்திலே தெரியப்படும்.

இப்பால் குக்ஷி வியாக்கியானம் பண்ணுகிறதிலே மூர்தமூர்த திரேகத்தை மூடுகிற பின்தோலுங் கெட்டியுள்ள சர்மமும் கொழுப்பும் பரிட்சிக்கப்படும். வயிற்றினுடைய சுபாவகுணங்களும் போசன தாரையும், குட்சியிலுண்டாகிய இரண்டு வாசல்களும் ஆகாரபானம் பால்போலே கூழாய்ப்போனபிற்பாடு குடல்களுக்குள்ளே பிரவேசித்து மகா பலமுள்ள இரசங்களோடே கலந்துபோ யநேகவிசை சுற்றிக்கொண்டு வருகிறதும், பசிக்குந் தாகத்துக்குங் காரணமும் சீரணமாகிறவகையும், செரிக்கப்பட்ட போசனமும் சாறும் பால்போலே வெள்ளையாகிறதும், அந்த வெள்ளை யிரசம் பால் தாரைக்குள்ளே புகுந்து பெரிய விசத்தத் தாரைக்குள்ளே விழுகிறதும், வாமீரலும் கல்லீரலும், மாங்காயும் அதுகளுக்கடுத்த தொழில்களும், வேறே யாச்சரியமான தத்துவங்களுடைய வகைகளும் பதினேழாம் அதிகாரத்திலே சொல்லப்படும்.

அப்படியே சாணகராதி விவரத்தை வெளிப்படுத்தும்போது பாதத்துக்குங் கரத்துக்குஞ் சம்பந்தமாயிருக்கிற விசேஷங்களை நன்றாய்த் தெரியப்பண்ணி அவயவங்களுடையகிரியைக்குவேண்டியநரம்புகளுடைய சுபாவத்தையும் அதுகளுக்குள்ளே யோடுகிற சிலவணு



க்களின் அத்தியந்த பலத்தையும், மனுஷன் நடக்கிற வகையையும் மிருகங்கள் நடக்கிற பிரகாரத்தையும், பாம்புமுதலான ஜெந்துக்கள் ஊருகிற விதத்தையும், பட்சிகள் பறக்கிற அடைவையும், மச்சங்கள் நீந்துகிற மேரையையும் அவைகளுடைய குணங்களையும் பதினெட்டாம் அதிகாரத்திலே சொல்லிக்காட்டுவோம்.

இதன்றியே நரசீவனுடைய மகிமையும், சுபாவ குணங்களும், விர்த்திகளும், அட்சயமும், சுதந்தரமுள்ள சித்தமும், அதற்கடுத்த அதிசய விசேஷங்களையும் பத்தொன்பதாம் அதிகாரத்திலே வெளிப்படுத்தப்படும்.

அண்டத்தையும் பிண்டத்தையும் அறிந்ததற்குப் பிற்பாடு அதுகளை யுண்டாக்கி இரட்சித்துக்கொண்டு வருகிற மெய்யான கடவுளைக் கண்டுபிடிக்கும் விதத்தையும் அவருடைய சித்தத்துக்குப் பொருந்தியிருக்கிற கருமங்களைச் செய்யும் வகையையும், அதுகளால் வரத்தக்க மட்டில்லாத பலனையும், சங்க்ஷேபமாக இருபதா மதிகாரத்திலே தெரியப்பண்ணுவோம். கடைசியாய் * உலகப்பிரமாண சாஸ்திரத்தையும் பரமகுருக்ஷாபிப் பிராயத்தையும் வெளிப்படுத்துவோம்.

இந்த அண்டபிண்ட வியாக்கியானத்தைக் கண்டுபிடிக்கிறது சில அதிகாரத்திலே அருமையாயிருந்ததினாலே கடினமான தமிழ் ரீதியை அநுசரியாமல் யாவரும் எளிதாய்க் கண்டு பிடிக்கத்தான வகையோடே வாக்கியங்களைச் சுருக்கத்திலே நிறுத்தி அண்டத்தினுடையவும் பிண்டத்தினுடையவும் வியாக்கியானத்தையெழுதினோம். இத்தொகைப்பட்ட விசேஷங்களடங்கி யிருக்கிற இந்தப்பிரபந்தத்திலுண்டான ஆச்சரிய விசேஷங்களையும், அநாதி யுகந்துவக்கி இந்நாள் வரைக்கும் நடந்துவருங் காலக்கிரமங்களையும், இனி நடக்கும்வரிசைக்கிரமங்களையும், நன்றாய்த் தெரியப்பண்ணுகிறதற்குச் சாஸ்திரங்களும் புத்திக் கூர்மையும் வேண்டியிருப்பதால் என்னுடைய கொஞ்ச புத்தியையும், தற்பலத்தையும் நம்பாமல் இந்தப் பிரபந்தமானது கடவுளுக்குத் தோத்திரமாக வுண்டாக்கப் பட்டதினால் பராபர வஸ்துவினுடைய முட்டில்லாத கிருபாகடாக்ஷத்தை நம்பிக்கொண்டு இந்த அண்டபிண்ட வியாக்கியானத்தை யெழுதத் துடங்கினேன், சுவாமி யிரக்ஷிக்கக் கடவாராக.

முகவுரை முற்றிற்று.

---

* இவ்விரண்டையுங் கூடுமானபோது தனியே அச்சிட்டு சொற்பவிலைக்குக் கொடுக்கப்படும்

## புத்தக விற்கிரய விளம்பரம்.

| | விலை. | | | தபால், | | |
|---|---|---|---|---|---|---|
| * { தத்துவபோதகர். அருளானந்தர். வீரமாமுனிவர். } { இம்மூவர் சரித்திரச்சுருக்கம் படங்களுடன். } | 0 | 12 | 0 | 0 | 0 | 6 |
| *தத்துவக்கண்ணாடி... ... ... | 0 | 6 | 0 | 0 | 0 | 6 |
| *தேவமாதா அந்தாதி ... ... ... | 0 | 2 | 0 | 0 | 0 | 6 |
| *வானவன் விநோதம் ... ... | 0 | 2 | 0 | 0 | 0 | 6 |
| *சரைக் கலங்கம் மூலமும் உரையும் ... | 0 | 8 | 0 | 0 | 1 | 0 |
| *திருவருண்மாலையும், திருவருள் அந்தாதியும் | 0 | 4 | 0 | 0 | 0 | 6 |
| பூர்விமகாண்டம் ... ... ... | 2 | 0 | 0 | 0 | 1 | 6 |
| பச்சிமகாண்டம் ... ... | 1 | 8 | 0 | 0 | 1 | 0 |
| இவ்விரண்டுஞ் சேர்த்து ... ... | 3 | 8 | 0 | 0 | 2 | 6 |
| சுவாமி பிறந்ததின்பேரிற் பாடிய பதங்கள்... | 0 | 2 | 0 | 0 | 0 | 6 |
| அண்டபிண்ட வியாக்கியானம்... ... | 0 | 8 | 0 | 0 | 1 | 0 |

* இக்குறியிட்ட ஆறுதினுசு புத்தகங்களை யொவ்வொன்று சேர்த்து மொத்தமாய் ஒரே தடவையில் வாங்குவோர்க்கு விலை ரூ. 1¼ தபாற் செலவு அணா 1½.




# அண்டபிண்ட வியாக்கியானம்.

## முதலதிகாரம்.

### நக்ஷத்திர மண்டல விவரம்.

இடைவிடாமல் ஸ்துதிக்கப்படுகிறதற்குப் பாத்திரமா
யிருக்கிற சர்வேஸ்வரனானவர் தம்முடைய மட்டில்லாத கிரு
பாகடாக்ஷத்தையும அளவில்லாத விமரிசையையும் அளவ
றுக்கப்படாத பலத்தையும் பிரசித்தமாய்க் காண்பிக்கச் சித்
தமா யிருந்ததினாலே பரிபூரண பூர்த்தியைக் கொடுக்கும்
பரமானந்தமாகிற மோக்ஷபாக்கியத்தை யநுபவிக்கும் பொ
ருட்டாகவே மனுஷரைச் சிருஷ்டித்தார். ஆனால் சர்வத்து
க்கும் வல்லவராயிருக்கிற கர்த்தரானவர் தம்முடைய மோ
க்ஷராச்சியத்துக்கு மனுஷரைக் கூட்டிக்கொண்டு போகுமு
ன்னே யவர்கள் மகாராசாக்களாய்ப் பிரஸ்தாபிக்கத் தக்க
தாக அநந்த தயையோடே சர்வலோகத்தையும் அவர்களுக்
குச் சிருஷ்டித்துக் கொடுத்தார். இதெல்லா மிப்படி யிருக்
கும்போது மனுஷரென்னப்பட்ட யாவரும் நன்றியறிந்த மன
தோடே யிப்படிப்பட்ட கடவுளைத் தோத்திரம் பண்ணுகிற
துமல்லாம லிந்த ஆண்டவருடைய வொப்பில்லாத மகிமை
களைப் பிரகாசிப்பிக்கிற லோகத்தையு மதிலுள்ள பிரதான
வஸ்துக்களையு மனதிலே தியானித்து அவைகளைத் தங்களுக்
குத் தந்தருளின கர்த்தாவின்பேரிலே யத்தியந்த பத்தியா
யிருக்கவேண்டியவர்களா யிருக்கிறோம்.

முற்றமுந்த புத்தியுள்ளமனிதன் கண்ணை திறந்துசோதி
மண்டலங்களைத் தெளிவாயாராய்ந்து பார்த்தால் அவைகளி
லுள்ள பொருட்கள் சகலத்துக்கு மேலான குணங்களைக்
கொண்டிருக்கிறதென் றறியலாம். அதெப்படியென்றால் பிர
பஞ்சத்தி லடங்கி யிருக்கிற பொருளென்னப்பட்ட யாவும
பற்பல விதமா யழிந்து போனாலுஞ் சோதிமண்டலங்கள்
விகாரப்படாமல் அக்ஷயமா யிருக்கின்றது. இது நிமித்த
மாகப் பராபர வஸ்துவானவ ருலகத்தை நிரப்புகிறபோ
தெந்த விதமாக ஆச்சரிய குணங்களைக் கொண்டிருக்கிற
சோதிமண்டலங்களைப் படைத்தாரோ அந்தப் பிரகாரந்தா
னே யிப்படிப்பட்ட சோதிமண்டலங்கள் க்ஷயமாகாம லொ
ருகண்டசீரா யிடைவிடாமற் பிரகாசிக்கிறதென்று அந்தக்

காலங்களிலுள்ள மனுஷர் தலைமுறை தலைமுறையா யநுபவ சித்தியினாலே கண்டுபிடித்துக்கொண்டு வருகிறார்கள். இந்தப் பிரகாசத்தின் வகையைப் பார்க்கும்போது சகலமான வஸ்துக்களும் அலங்காரமா யிருக்கப் பகல் நேரத்திற் சூரியனைச் சர்வேஸ்வரன் கட்டளையிட்டதுமல்லாமல் இராக்காலத்திற் சந்திரன் பிரகாசிக்கச்சித்தமாயிருந்தார். ஆகிலுஞ் சில தருவாய்களிலே நிலவில்லாமற் போனாலும் எண்ணப்படாத நக்ஷத்திரங்கள் பிரகாசிக்கின்றன.

இதற்கப்பா லறிய வேண்டியதாவது:—சோதிமண்டலங்கள் அக்ஷயத்தையும் பிரகாசத்தையுங் கொண்டிருக்கிறபடியினாலே ஆச்சரிய லகுவோடே தன் அயநத்திலே நடக்கின்றன. ஆனால் சூரியன் சந்திரன் முதலான கிரகங்களையும் நக்ஷத்திரங்களையுஞ்சோதிசாஸ்திரத்தின்படியே மட்டிட்டால் அதுகளுடைய பிரமாணம் மிகவு மகா பேர்பெற்ற வித்தியா பாரகருக்கு அற்புதவிசேஷமா யிருக்கும். இதெல்லாம் வெளிப்படுத்துகிறதற்குமுன்னே நக்ஷத்திரத்தின் சிங்காரத்தைச் சுருக்கத்துக்குள்ளே விசாரிக்கக்கடவோம்.

அதெப்படியென்றால் நல்ல இராத்திரி காலத்திலே மேகசஞ்சாரங்க ளில்லாதிருக்கையிலே பற்பல பிரகாசத்தைக் கொண்டிருக்கிற நக்ஷத்திரங்களை யுற்றுப் பார்த்தால் சோதி சக்கரங்களெல்லாம் எண்ணப்படாத வச்சிரங்களினாலேயும் இரத்தினங்களினாலேயும் பிரகாசிக்கின்றன வென்றும், நந்தவனங்கள் பற்பல வர்ணமுள்ள புஷ்பங்களினாலே சிங்காரமாகிறப்போலே நக்ஷத்திரமண்டலங்கள் அத்தியந்த வேடிக்கையோடேயும் அலங்கிருதங்களோடேயும்பூணுகிறதென்று காணலாம். பூர்வகாலத்தி லொரு அரசமகன் பூமிக்குள்ளே யுண்டாகிய இருள் பொருந்தின கெபிக்குள்ளே வாசம்பண்ணி யோரிராத்திரியிற் புறப்பட்டு நக்ஷத்திர மண்டலங்களுடைய சிங்காரத்தைப் பார்க்கும்போது பிரமித்துச் சந்தோஷ மிகுதியினாலே பரவசமாய்ப் போனானாம். இப்படிப்பட்ட விராசகுமாரனானவன் நக்ஷத்திரங்களுடைய * அயநத்தையும் பருமத்தையும் ** நிர்க்கமனத்தையும் நடையினுடைய கதியையுமுயரத்தையும் அட்சயத்தையு மதிலுள்ள வுச்சித குணங்களையு மறியாமலிருந்த இவன் இத்தனை சந்தோஷப்பட்டால் அவைகளெல்லாவற்றையுங் கொஞ்சத்துக்குள்ளே யானாலு

* பாதையையும்.

** அசையாநிலை.



மாராய்ந்திருக்கிறசோதிசாஸ்திரிகளெப்படிப்பட்ட ஆச்சரியத்தோடே நக்ஷத்திரங்களைப்பார்த்தவைகளை யுண்டுபண்ணின கடவுளைத் தோத்திரஞ் செய்வார்களென்று யோசிக்கக் கடவோம். இவ்வற்புத விசேஷங்கள் இன்னமுமதிகமாய் விளங்கும்படிக்கு அறிய வேண்டியதாவது:—

பூமிக்கும் நட்சத்திர மண்டலத்துக்கும் 12,60,00,000 பனிரண்டுகோடியே அறுபதுலட்சகாத தூரமிருக்கின்றது. இப்படிப்பட்ட நட்சத்திரங்களுடைய மண்டலம் சமசக்கரத்திலே 60நாழிகைக்குள்ளே 79,25,00,000 எழுபத்தொன்பது கோடியே யிருபத்தைந்தி லட்ச காதம் நடக்கவேண்டியிருக்கிறது; ஆனபடியினாலே சமசக்கரத்திலுண்டான நட்சத்திரங்கள் ஒருநாழிகைக்குள்ளே 1,72,00,000 கோடியே யெழுபத்திரண்டு லட்சகாதம் நடக்கும். அந்த நட்சத்திரத்தினுடைய விஸ்தீரணத்தையுங் காத்திரத்தையும் அறிய மனதுண்டானால் உத்தராதி ராச்சியத்திலுள்ள சோதிசாஸ்திரிகள் நட்சத்திரக் கூட்டங்களுக்குள்ளே 1181 நட்சத்திரங்கள் கண்களுக்குப் பிரசித்தமாய்க் காணப்படுகிறதென்று கிரந்த சாஸ்திரங்களிலெழுதி வைத்தார்கள். ஆனால் கண்ணுக்கு வெட்டவெளியாகக் காணலான நக்ஷத்திரங்களல்லாமல் தூரதிஷ்டிக்கண்ணாடியால் நட்சத்திர மண்டலத்தைப் பார்த்தால் எண்ணிக்கையி லடங்காத நட்சத்திரங்களைக் காணலாம். இந்தப் பிரகாரமாக இராக்ஷதனென்கிற நட்சத்திரத்தினுடைய கூட்டத்தில் 59 நட்சத்திரமாத்திரங் கண்ணுக்குக் காணப்பட்டாலு மப்படிப்பட்ட நட்சத்திரக் கூட்டத்திலே தூரதிஷ்டி முகாந்திரமாக நன்றாய்ப் பார்த்தால் 10,000 நட்சத்திரங்களைக் காணலாகும். இஃதன்றியே நட்சத்திர மண்டலத்திலே புநர் பூசத்தின் கீழே துவக்கி வடமேற்கே போகிற வெண்மையான நட்சத்திரப் பாதையிலே தூரதிஷ்டியைக்கொண்டு பார்த்தால் கோடாகோடி நட்சத்திரங்களைக் காணலாம். ஆனபடியினாலே நட்சத்திரங்க ளெண்ணிக்கையி லடங்காதென்கிறது சத்தியமாகும். அப்படிப்பட்ட நட்சத்திரங்களின் பிரமாணத்தைக்கண்டுபிடிக்க மனதுள்ளவர்களறிய வேண்டியதாவது:—மகா ஆராசாவுமாய் சாஸ்திரியுமா யிருந்த போலோமேவு என்கிறவரும் அனேகசாஸ்திரிகளும் ஆறுவிதமாக நட்சத்திரங்களின் காத்திரத்தைப் பகுத்தார்கள். முந்தின அந்தஸ்திலேயுண்டான நட்சத்திரங்களொவ்வொன்று பூமியைப்பார்க்க 170 பங்கு பெரியதா யிரு

க்கும். இரண்டா மந்தஸ்திலே யிருக்கிற 45 நட்சத்திங்களில் ஒவ்வொன்று 90 பூமி கொண்டதாயிருக்கும். மூன்று மந்தஸ்திலே யுள்ள 208 நட்சத்திரங்களி லொவ்வொன்று 72 பூமிகொண்டதா யிருக்கும். நாலாமந்தஸ்திலே யுண்டான 264 நட்சத்திரங்களி லொவ்வொன்று 64 பூமிகொண்டதாகும். ஐந்தாமந்தஸ்திலே யுள்ள 217 நட்சத்திரங்களிலொவ்வொன்றில் 35 பூமியடங்கத்தக்கினதா யிருக்கும். கடைசியிலே ஆறுமந்தஸ்திலுள்ள, 241 நட்சத்திரங்களிலொவ்வொன்று 18 பூமிகொண்டதாமென்று அறியக் கடவோம். முன்சொல்லப்பட்ட பூர்வீகசாஸ்திரிகள் உத்தராதி இராச்சியத்திலே வாசமாயிருந்ததினால் தெட்சணதியிலுள்ள நட்சத்திரங்களை யறியாமற்போனார்கள். ஆனாலவர்களுக்குப் பிற்பாடுண்டானமகாபேர்பெற்றசாஸ்திரிகள்தெக்ஷணபக்கத்திலுள்ள நட்சத்திரங்களையும் யாத்திரை வழியாகக்கண்டதினால் முன்னெழுதப்பட்டிருந்த நட்சத்திரங்களோடே கூட்டினார்கள். ஆனால் நட்சத்திரபலத்தையுஞ் சாமர்த்தியத்தையும் விளங்கப்பண்ணத் தக்கதாக வறியவேண்டினதாவது. எந்த நட்சத்திரத்தையும் பார்க்கும்போது திருஷ்டிக் கெத்தனை சிறியதாய்க் காணப்பட்டாலும் ஒவ்வொன்றும் பூமியைப்பார்க்கப் பெரிதாகவே யிருக்கிறதினாலே யாதாமொருவன் நட்சத்திரமண்டலத்திலிருந்து பூமியைப் பார்க்கிறதற்கு எத்தனை பிரயாசைப்பட்டாலும் பரிச்சேதமாய்த் தெரியப்போகிறதில்லை.

இதெல்லா மிப்படி யிருக்கப் புத்திமயங்கி அணுப்போலிருக்கிற பூமியிலுண்டான அழிந்துபோகிற வஸ்துக்களை யபேட்சிக்கிற மனிதர்கள் நட்சத்திர மண்டலத்துக்கப்பாலே கடந்திருக்கிற மோட்சத்தை யனுபவிக்கத் தக்கதாக அபேட்சையா யிருக்கவேண்டாமோ? நட்சத்திரங்களுடைய அயநத்தைப் பார்க்கும்போது அவைகளைச்சிருஷ்டித்தவரான பராபர வஸ்துவினுடைய சக்தியிற் பிரியிருக்க ஆசைப்பட வேண்டாமோ?

இதற்கப்பால் நம்மா லெழுதப்போகிற வற்புத விசேஷங்களை யுற்றுக் கேளுங்கள் இயாதொரு பீரங்கிக் குண்டானது சுட்ட தீவர்த்தி லெத்தனை சுறுக்கா யோடுகிறதோ அத்தனை சீக்கிரமாக இடைவிடாம லோடினால் நாற்பது நாளைக்குள்ளே பூமியெல்லாஞ் சுற்றிக்கொண்டு வரும். ஆனபடியினாலே யெத்தனை தீவரமாய்க் குண்டு பறந்தாலும் 7,920 காதம் நடக்கிறதற்கு நாற்பது நாள் வேண்



டியிருக்கின்றதுபோ லாயிற்று. சம சக்கரத்திலே யுண்டான நட்சத்திரங்களோவென்றால்ஒருநாளைக்குள்ளே79,20,00,000 எழுபத்தொன்பது கோடியே யிருபது லட்சகாதம் நடக்கிறது. இதன்றியே நட்சத்திர மண்டலத்திலிருந்து நாலுமுழ அகல நீளமும் ஒருமுழப் பருமமுள்ள ஒரு பாறையானது பூமியிலே விழுகிறதற்கு 71 வருஷத்துச் சில்வானஞ் செல்லுமென்பது நிச்சயமாகும். அதேதென்றால் முன்சொல்லப்பட்ட கற்பாறையானது சாஸ்திரிகள் சொல்லுகிறப்போலே ஒரு * நாழிகைக்குள்ளே 200 காததூரம் விழலாம். இந்தப் பிரகாரமாக யாதாமொருத்தன் பூமியிலிருந்து நட்சத்திர மண்டலமட்டும் போகிறதற்கு 34,000 முப்பத்து நாலாயிரத்துச் சில்வான வருஷஞ் செல்லும்.

இதெல்லா மிப்படி யிருக்கையிலே இவ்வளவிக நன்மைகளிற் பூமியிலே மாத்திர முண்டான செல்வமென்னப்பட்டதாவு மோரணுவுக்குள்ளேயடங்கியிருக்கும்போது இத்தனை மண்டலங்களையும் அவைகளுக்கப்பால்கடந்திருக்கிற மோட்சத்தினுடைய அளவில்லாத பாக்கியத்தையும விசாரியாமலிருக்கிறதென்ன? மகா சாஸ்திரியான அர்ச். அம்புரோசியுசென்கிறவர் திருவுளம் பற்றினதை யுற்றுக் கேளுங்கள். "சோதிமண்டலங்கள் பராபர வஸ்துவினுடைய புத்தகமாயிருக்கின்றது. இதிலே நட்சத்திர வெழுத்தாலே தம்முடைய அளவில்லாத நன்மைகளுடைய அடையாளங்களை யெழுத்துவாசனை யறியாதவர்களுக்கு முதலா யறிவித்திருக்கின்றார். இப்படிப்பட்ட சோதிமண்டலத்தில் விலைமதியாத விரத்தினங்கள் போலே யெண்ணப்படாத நட்சத்திரங்களை ஆண்டவர் பதித்திருக்கின்றார். அவைகள் இராத்திரி காலங்களிலே தீவட்டிகளைப்போல வுலகமெங்கும் பிரகாசிக்கின்றன." என்றும் சில சாஸ்திரிகள் நட்சத்திரங்கள் மோட்ச மண்டலத்தினுடைய நிலத்தின் திஷ்டிவாசல் என்றும் அருளிச் செய்திருக்கின்றார்கள்.

இதற்கப்பா லறியவேண்டியதாவது:—சோதிசாஸ்திரிகள் நட்சத்திரக் கூட்டங்கள் பற்பல ரூபங்களைக் கொண்டிருக்கின்றனவென்று விதித்தாலும் அந்தரூபங்களுக்குவிசேஷபல முண்டென்று விசாரிக்கவேண்டாம். அதேதென்றால், அங்கங்கே சிதறி யிருக்கிற நட்சத்திரங்களைப் பொதுவிலே பார்த்து யறிகிறது அருமையா யிருக்கிறதினாலே அவைகளெல்லாமனதி

* ஒரு மணி அல்லது இரண்டரை நாழிகை.

வெளிதாய்த் தரிக்கத் தக்கதாகப் பற்பல கூட்டங்களாகப்
பிரித்து அந்தந்த வகுப்புகளுக்குத் தங்கள் மனதின்படியே வெ
வ்வேறு நாமங்களை ஸ்தாபித்தார்கள். இவ்விதமாய்ச் சூரிய
னுடைய அயநம் மனதிலே நன்றாய்த் தரிக்கிறதற்கு மேஷம்,
ரிஷப முதலான பனிரண்டு ராசிகளை விதித்தார்கள். அசு
பதி, பரணி, கார்த்திகைமுதலான 27 நட்சத்திரங்களைப் பகு
த்தார்கள். ஆனுலிதிலே யிரண்டு தப்பித முண்டென்றறிவீர்
களாக. பனிரண் டிராசிகளினுலேயு மிருபத்தேழு நட்சத்
திரங்களினுலேயு மனுஷருக் கபாயம் வருமென்று விசாரிக்க
வேண்டாம். அவ்வண்ணமே யுண்டாக்கப்பட்ட வஸ்து மனு
ஷருடைய சுதந்தர புத்தியைக் கெடுக்கமாட்டாததினுலேயுங்
கண்டிப்புள்ள நட்சத்திரங்களுக்கும் அரூபியாயிருக்கிற மன
துக்குஞ் சம்பந்த மில்லாததினுலேயு மற்றுமுள்ள வநேக
காரணங்களினுலேயுஞ் சுதந்தரமுள்ள மனதினுலே வரப்போ
கிற கிரியைகளை நட்சத்திர யோகங்களின்பலத்தினுலே யேற்
கனவே தப்பாமற் சொல்லலாமென்கிற பட்சமானது புத்தி
க்கும் நியாயத்துக்குங் கிரமத்தின்படியே யொவ்வாததாயிரு
க்கிறதென் றங்கிகரிக்கக் கடவோம். இதெல்லாஞ் சகுன
நிவாரணமென்கிற புத்தகத்திலே விஸ்தீரணமாய் நாமெழுதி
வைத்ததினுலே யிங்கே யிம்மாத்திரஞ் சொல்லிக் காட்டியது
போதும். இரண்டாவது. இந்தச் சீமையிலுள்ள சனங்களறி
ந்திருக்கிற 27 நட்சத்திரங்களல்லாமல் வேறே யநேக நட்சத்
திரங்க ளுண்டாயிருக்கிற படியினுலே உத்தராதிராச்சியத்தி
லுண்டான மெய்யான சோதிசாஸ்திரிகள் கண்களுக்கு வெ
ட்டவெளியாகக் காணப்படுகிற வெல்லா நட்சத்திரங்களையும்
62 பிரிவாகப் பிரித்தார்கள். கடைசியிலே நட்சத்திர மண்ட
லத்தை யிவ்வளவாக வெளிப்படுத்தினமையாற் கிரகங்களு
டைய மண்டலத்தை வருகிற பாடத்திலே சர்வேஸ்வரனு
டைய மகிமை மிகவும் விளங்கத் தக்கதாகச் சுருக்கமாத்தி
ரம வெளிப்படுத்துவோம்.

## ௨-ம். அதிகாரம்.

### கிரகமண்டலங்களின் விவரம்.

நட்சத்திர மண்டலத்தினுடைய பிரதான விசேஷங்
களைக்கூடினமாத்திரம் வெளிப்படுத்தினதற்குப்பிற்பாடு அதி
லேயிருந்து கிரகங்களுடைய மண்டலங்களிலே யிறங்கி கிர



கங்களுடைய வியாரத்தையுங் காந்திரத்தையுஞ் சுபாவத்தை
யுங் குணங்களையும் ஆராய்கிறது கிரமமுள்ள நியாயமாயிரு
க்கிறது.

* முந்தமுந்தக் கண்களுக்குப் பிரத்தியட்சமாய்க் காண்
கிற ஏழு கிரகங்கள் மாத்திரமுண்டு. அவைகளுக்குநாமங்க
ளும் ஒழுங்குகளு மேதென்றால் நட்சத்திர மண்டலத்துக்
குப்பிற்பாடு முதலாவது சனி, இரண்டாவது வியாழம், மூன்
றுவது செவ்வாய், நான்காவது ஞாயிருகிய சூரியன், ஐந்தா
வது வெள்ளி, ஆருவது புதன், ஏழாவது திங்களாகிற சந்தி
ரன் இப்படிப்பட்ட கோள்களுடைய மேரையையும் ஒழு
ங்கையும்ஸ்திரமாய்மனதிலே தரிக்கிறதற்குத் திங்கள் துவக்கி
யேழுகிழமைகள் முகியுமட்டு மொன்றைவிட் டொன்றை
எண்ணிக்கொண்டுபோய்ச் சனியிலே முடித்தாலதுகள் தா
னே கிரகங்களுடைய வொழுங்குமிலைமையுமென்று சொல்
லப்படும்.

இந்த ஏழு கிரகங்களுடைய சக்கரங்களும், நட்சத்திரங்
களுடைய மண்டலங்களும், ஆக எட்டுமண்டலங்களுஞ் சர்
வேஸ்வரனுலே யுண்டாக்கப்பட்ட சங்கீத வாத்தியங்களெ
ன்று பூர்வசாஸ்திரிக ளெழுதிவைத்தார்கள். அதேதென்று
லிந்தஎட்டு மண்டலங்க ளசைகிறபோது தனது அயநத்தினு
லே யாச்சரியமான சங்கீதத்தையும்மேலான சாஸ்திரத்துக்
குச் சம்பந்தமாயிருக்கிற இராகங்களையும் பிறக்கப்பண்ணும்.
இதெல்லாம் ஒருவமையினுலே வெளிப்படுத்துவோம், அதெ
ப்படியென்றல்சரி-கமுபத-கிச-ஏனி-தப-மக-ரிச-என்கிற சப்
தசுர சாஸ்திரிகள் உச்சிதமானபாடல்களைப் பாடுகிறப்போ
ல் இந்த எட்டு மண்டலங்களும்அசரீரியா யிருக்கிறசம்மனசு
க்களா லேவைப்பட்டதா யிருக்கிறபடியினுலே செவிகளுக்கு
மகா விம்பமான தொனிகளைத் தொனிக்கப்பண்ணும். அவ்
வண்ணமே சாஸ்திரத்தின்படியே பாடுகிறவர்களும்இத்தனை
யமிர்தமான இராகங்களைப் பாடினுல் அத்தியந்த புத்தியை
யுஞ் சாமர்த்தியத்தையுங்கொண்டிருக்கிறபரமதூதர்கள்இந்த
எட்டுமண்டலங்களையும் அசைக்கும்போது அற்புதமான வாத்
தியங்களை வாசிக்கிறதற்குச் சமானமாயிருக்கிறதினுலேயமிர்த
மான சப்தங்கள் பிறக்குமென்பதற்குச் சந்தேகமில்லை. ஆன
படியினுலே பக்ஷிகள் இன்பமாகக் கூவுகிறகுரல்களினுலேமது
ரமான கானங்களைத் தொனிக்கப் பண்ணுகிறதைப் பார்க்கி
லுங் காந்தார சாஸ்திரத்தை யறிந்திருக்கிறவர்கள் இராகத்
தின்படியே பாடிக்கொண்டும் பாட்டுக்களோடேகூடச் சங்கீத

வாத்தியங்களை வாசித்துக்கொண்டும் ஆனந்த சந்தோஷத்தை வருத்துவிக்கிறதைப் பார்க்கிலும் எட்டு மண்டலங்களுடைய அசைவினாலே புறப்படுகிறபின்னபேததொனிகள்செவிக்கும் மனதுக்கும் பரிபூரண பூர்த்தியை வருத்துவிக்கலா மென்று முன்சொல்லப்பட்டகிரந்தகர்த்தாக்க ளெழுதிவைத்தார்கள். ஆனால் பூலோகத்திலேதிரிகிற மனுஷர் இப்படிப்பட்ட அற்புதமான சங்கீதங்களைக் கேளாமலிருக்கிறதற்குக் காரணமேதென்றால்பூமிக்கும் அந்தமண்டலங்களுக்கும்மகா தூரமிருக்கிறதினாலே சோதிமண்டலங்களுடைய சத்தங் காதிலே விழமாட்டாததினாலேயும் மனுஷரிந்த அற்புதமான கானங்களைக் கேட்டால் தங்களை முதலாய் நினையாமல் அதிலே முழுதும் அமிழ்ந்திப் பரவசமாய்ப் போவார்க ளென்கிறதற்காகவும் சர்வேஸ்வரன் விலக்கினானென்கிற முகாந்தரமாகும், இதினாலே லோகத்திலே யுண்டான மனுஷருக்கு இந்தவின்பமான கீதங்கேளாமலிருக்கிறதென்று முன் சொல்லப்பட்ட சாஸ்திரிகள் திருவுளம் பற்றினார்கள்.

இப்போது பிரிதிவுக்குங் கிரகங்களுடைய மண்டலங்களுக்கும் எத்தனை தூர முண்டென்றுஞ் சாவதானமாய்க் கேள். முந்தமுந்த இந்த விஷயத்தி லறியவேண்டியதாவது, பூமியானது சர்வலோகத்துக்கு மையமா யிருந்தாலு மெழுகிரகங்களுடைய சக்கரங்களுக்கு மையமா யிருக்கவில்லையென்கிறது பிரசித்தமாகும். அதேதென்றாற் பற்பல சமயங்களிலே கிரகங்களைத் தூரதிஷ்டியினாலே பார்த்தாற் கோள்களுடைய காத்திரம் பற்பல விதமாய்க் காண்பிக்கும், ஆனபடியினாலே கிரகங்களானது தங்கள் சக்கரத்தின் கீழ்ப்பக்கத்திலிருக்கிறபோது பூமிக்குங் கோள்களுக்கும் அத்தனை தூரமில்லை, சக்கரத்தினுடைய மேற்பக்கத்திலே நிற்கும்போது பூமிக்குங்கிரகத்துக்கும் வெகுதூரமா யிருக்கும். இதெல்லாமிப்படி யிருக்கும்போது பூமிக்குஞ் சந்திர சக்கரத்தின் மேற்பக்கத்துக்கும் 83,160 எண்பத்து மூவாயிரத்தி நூற்றறுபது காததூரம். அந்த ஸ்தலத்திலேதானே சந்திரனிருக்கும்போது ஒரு நாழிகைக்குள்ளே 8,712 எண்ணாயிரத்தி யெழுநூற்றிப் பனிரண்டு காதம் நடக்கிறது. இதன்றியே பூமிக்குஞ் சூரிய சக்கரத்தின் மேற்பக்கத்துக்கும் 95,60,800 தொண்ணூற்றைந்து லக்ஷத் தறுபதினாயிரத்தி யெண்ணூறு காததூரம், அதிலேதானே சூரியனிருக்கிறபோது ஒரு நாழிகைக் குள்ளே 10,00,560 பத்துலக்ஷத் தைந்நூற்றறுபது காதம் நடக்கிறது. இந்தப் பிரகாரமாகப் பூமிக்கும் புதன் சக்கரத்தின் மேற்பக்



கத்துக்கும் 1,36,93,680 கோடியே முப்பத்தாறுலக்ஷத்துத் தொண்ணூற்றிமூவாயிரத்தி அறுநூற்றெண்பதுகாதம். அவ்விடத்திலேபுதனிருக்கும்போது ஒருநாழிகையிலே14,34,576 பதினாலு லக்ஷத்து முப்பத்தி நாலாயிரத் தைந்நூற் றெழுபத்தாறுகாதம் நடக்கிறது. இதன்றியே பூமிக்கும் வெள்ளி சக்கரத்தினுடைய மேற்பக்கத்துக்கும் 1,62,77,940 கோடியே அறுபத்திரண்டு லக்ஷத்து எழுபத்தேழாயிரத்தித் தொளாயிரத்தி நாற்பதுகாதம், அவ்விடத்திலேதானே வெள்ளி கிரகமிருக்கிறபோது ஒருநாழிகையில் 17,05,308 பதினேழு லக்ஷத்து ஐயாயிரத்தி முந்நூற்றெட்டு காதம்நடக்கும். இதற்கப்பால் பூமிக்கும் செவ்வாய் சக்கரத்தின் மேற்பக்கத்துக்கும் 2,64,66,300 இரண்டுகோடியே அறுபத்திநாலு லக்ஷத்து அறுபத்தாறாயிரத்தி முந்நூறுகாதம். இப்படிப்பட்ட சக்கரத்தினுடைய மேற்பக்கத்திலே செவ்வாய் கிரகமிருக்கிறபோது ஒருநாழிகையில் 27,72,660 இருபத்தேழு லக்ஷத்து எழுபத்திராயிரத்தி அறுநூற் றறுபதுகாதம் நடக்கும். இத்தன்மையாகப் பூமிக்கும் வியாழத்தின் மேற்பக்கத்துக்கும் 5,99,15,520 ஐந்துகோடியே தொண்ணூற்றொன்பதி லக்ஷத்திப் பதினையாயிரத் தைந்நூற்றிருபதுகாதம். இப்படிப்பட்ட மேற்பக்கத்திலே வியாழ மிருக்கிறபோது ஒருநாழிகையில் 62,76,864 அறுபத்திரண்டு லக்ஷத்து எழுபத்தாறாயிரத்தி எண்ணூற் றறுபத்திநாலுகாதம் நடக்கும். கடைசியிலேபூமிக்குஞ் சனிசக்கிரத்தின் மேற்பக்கத்துக்கும் 11.35,95,300 பதினொருகோடியே முப்பத்தைந்திலட்சத்துத்தொண்ணூற்றையாயிரத்தி முந்நூறுகாதம். அவ்விடத்திலே தானேசனியிருக்கிறபோது ஒருநாழிகையில் 1,19,00,460 கோடியேபத்தொன்பது லட்சத்து நானூற்றறுபது காதம்நடக்கும்.

இந்தக் கிரகங்களுடைய அயநத்தை நாம் வெளிப்படுத்தும்போது முன்சொல்லப்பட்ட கிரகங்கள் மேற்கேயிருந்து கிழக்கே போகிற சுபாவ நடக்கையை நாம் நினைக்கவேயில்லையென் றறியுங்கள். அதேதென்றால் சகலமான நட்சத்திரங்களுக்குங் கிரகங்களுக்குங் கிழக்கேயிருந்து மேற்கே போகிற பலவந்த நடக்கையல்லாமல் மேற்கேயிருந்து கிழக்கேபோகிற சுபாவமான அசைவுமுண்டு. அது பிரசித்தமாய்ச் சந்திரனிடத்திற் காணலாம். அவ்வண்ணமே யொருநாள் சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னே சந்திர னுச்சத்திலே நின்றுதானால் மறுநாள் அந்தநேரத்திலே தானே யுச்ச

த்துக்குக் கிழக்கே சந்திரனுடைய வளையம் 360 பங்கில் 13
பங்கு தாழ்ந்திருக்கும். இதெல்லாங் கன்றாய்க் கண்டுபிடிக்
கிறதற்குச் சகலமான வளையங்களெல்லாம் 360 பங்காய்ச்
சாஸ்திரிகள் பிரித்தார்களென் றறிவீர்களாக. பின்னையும்
ஒவ்வொரு பங்கு 60 * விபித்தமாகவும் ஒவ்வொருவிபித்தம்
60 ** விவிபித்தமாகவும்பகுத்தார்களென்றுநினைப்பீர்களாக.
சூரியனானது தன்னுடைய சுபாவமான அசைவினாலே 59
விபித்தமும் 8 விவிபித்தமும் நடக்கிறது. இது நிமித்தமா
கச் சூரியன் தினந்தினம் ஒருபாகஞ் சரியாய் முடிய நடவா
ததினாலே 360 நாளைக்குள்ளே யொருவருஷ முடியாமல் 5
நாளும் 5 தாசும் 49 விபித்தமும் அதிகப்படுகிறபடியால் ஒரு
வருஷத்திற்கு 365 நாளாகவும் நாலுவருஷத்துக் கொருக்
காற்பின்னு மொருநா ளதிகமாய்ச் சேர்த்து நாலாம் வருஷத்
திலே 366 நாளாகவுங் கூட்டவேணுமென்று சாஸ்திரிகள்
ஸ்தாபித்தார்கள். அதிலே முதலாய்ச் சில விவிபித்தங்கள்
ஏற்றக்குறைச்சலா யிருப்பதினாலே நூறு வருஷத்துக் கொரு
க்கால் 366 நாள் கூட்டாமல் முன்னூற்று அறுபத்தைந்து
நாள்மாத்திரங் கூட்டுவார்கள். சனியோவென்றால் தன்னு
டைய வளையமெல்லாமுடிய நடந்து முன்னின்ற ஸ்தலத்
துக்குத் திரும்ப வருகிறதற்கு 29 வருஷமும் 161 நாளும் 22
தாசுஞ் செல்லும். வியாழமோ வென்றால் 11 வருஷமும்
315 நாளும் 15 தாசுஞ் செல்லும். செவ்வாயோ வென்றால்
ஒரு வருஷமும் 321 நாளும் 22 தாசுஞ் செல்லும். சுக்கிர
னும்புதனும்இடைவிடாமற்சூரியனைப்பெரும்வளையங்களிலே
சுற்றிக்கொண்டு வருகிறதினாலே யதுகளுடைய அசைவை
வேறே விதமாகப் பார்க்கவேணும். ஆனபடியினாலே வெ
ள்ளி யொருவிசை தனது வளையத்திலே சூரியனைச் சுற்றிக்
கொண்டு வருகிறதற்குள்ளே யேழிராசியும் 14 பா
கமும் 47 விவிபித்தமும் நடக்கிறது. புதனோவென்றால் ஒரு
வருஷத்துக்குள்ளே தனது வளையத்திலே சூரியனை மூன்று
விசை சுற்றிக்கொண்டு வருகிறதுமல்லாமல் பின்னையு மொவ்

* விபித்தமென்பது அளவைக் குறிக்கும்போது கிரகபாதை
யின் 360 பங்கில் ஒரு பங்கின் அறுபதி லொருபங்குக்கும் மணிநே
ரத்தைக் குறிக்கும்போது மினிட்டென்னும் விநாடிக்கும் உபயோ
கப்படுத்தி யிருக்கின்றது.

** விவிபித்தமென்பது அளவைக் குறிக்கும்போது விபித்தத்தில்
அறுபதிலொருபங்குக்கும் மணிநேரத்தைக் குறிக்கும்போது செக்கெ
ண்டென்னும் நிமிஷத்திற்கும் உபயோகப்படுத்தியிருக்கின்றது.



வோரிராசியும் 22 பாகமும் 57 விவிபித்தமும் நடக்கிறது.
இதற்கப்பால் கிரகங்களுடைய விஷயத்திலே மகா அதிசய
மான விசேஷத்தை வெளிப்படுத்தவேண்டியிருக்கிறது. அ
தெப்படியென்றால் சந்திர சூரியனல்லாமல் மற்றுண்டான
கிரகங்கள் வக்கிரிக்கிறது. இதற்கர்த்த மேதென்றால் ஒரு
சமயத்திலே வியாழஞ் செவ்வாய் முதலான கோள்கள்
மேற்கேயிருந்து கிழக்கே போகிறது. வேறே தறுவாயிலே
யோவென்றால் பின்வாங்கினாற்போலே கிழக்கேயிருந்து மே
ற்கே போகிறது. ஒரு தறுவாயிலே மகாதீவிரமாய்ப் போகி
றது. வேறே தறுவாயிலே அமர்ந்து நடக்கிறது. சில சமய
ங்களிலே முழுதும் நிற்கிறாப்போலே காண்பிக்கிறது. இந்த
வற்புத விசேஷத்தை வெளிப்படுத்துகிறது வெகு அருமை
யாயிருக்கும். இது நிமித்தமாகச் சித்தி ராச்சியத்திலிருக்கிற
சோதிசாஸ்திரிகள் முதலா யிதற்கான பிரத்தியுத்தரஞ் சொ
ல்லுகிறதற்கு வருந்துகிறபோது புத்திக்கேர்வாத காரியங்
களைச் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். ஆனபடியினாலே
யிந்தச் சந்தேக நிவாரணத்தை யுற்றுக் கேட்கக்கடவீர்கள்.
முந்தமுந்த கிரகத்தினுடைய வளைய சக்கரத்திலே யந்தக்
கோடு மையமாக வேறே வளையப்பண்ணி யந்த இரண்டாம்
வளையத்தின் கீழ்ப்பக்கத்திலே கிரகமிருக்கிறதென்று வி
சாரித்துக் கொள்ளுங்கள். அப்படிப்பட்ட கிரக முன் சொ
ல்லப்பட்ட ஸ்தலத்திலேயிருந்து அந்த வளையத்திலேதானே
மேற்கேபோயினாலென்று விசாரித்துக் கொள்ளுங்கள். அப்
போது கிழக்கேயிருந்துமேற்கேபோயினதாகக் கண்ணுக்குச்
சுபாவமாய்க் காண்பிக்கும். அதின் பிறகந்தக் கிரகந்தானே
வளையத்தின் மேற்பக்கத்திலிருந்து கீழான வளையத்தி
லிறங்கிக் கிழக்கே போகிறதாக விசாரித்துக் கொள்ளுங்கள்.
இந்த அயனத்தி னிமித்தமாகக் கிரக மேற்கேயிருந்து கிழ
க்கே போகிறதாகக் கண்ணுக்குக் காண்பிக்கும். இந்தப்
பிரகாரமாக முன் சொல்லப்பட்ட கிரகமானது தனதிரண்
டாம் வளையத்திலே சுற்றிக்கொண்டு வரும்போது அந்தக்
கிரகத்தினுடைய முந்தின பெரிய வளையமா இடைவிடாமல
மெள்ளமெள்ளக் கிழக்கே போகிறதென்று விசாரித்துக்கொ
ள்ளுங்கள். அப்போது கிரகமானது மேற்கே தீவிரமாய்ப்
போனாலு மந்தக்கிரகத்தின் முந்தின சக்கரத்துக்குள்ளே
மெள்ளமெள்ளக் கிழக்காகப் போனதினாலே கிரகத்தினுடை
ய நடை யிதனாலே குறைந்து போகாதிருந்தாலுங் கண்களுக்
குக் குறைந்துபோனாற்போலேயும் மெல்லென நடக்கிறாப்போ

லேயுங் காண்பிக்கும். ஆனாலந்தக் கிரகமானது மேற்கேயிரு
ந்து கிழக்கே போகிறபோது கிரகத்தினுடைய சுபாவ
அசைவும் பெரிய வளையத்தினுடைய அசைவுங்கூடக் கிழ
க்கே போகிறதினாலே கிரகமானது தீவிரமாய் நடக்கிறாப்போ
லே காண்பிக்கும். கடைசியிலே கிரகம் நிற்கிறாப்போலே
காண்பிக்கிறவகை யேதென்றால் முன்சொல்லப்பட்ட கிரக
மானது மேலே யேறுகிறபோதானாலுங் கீழே யிறங்கிறபோ
தென்கிலும் அந்தவிரண்டு எதிரான பக்கங்களிலேயுமுள்ள
வளைவு கண்ணுக்குக் காண்பியாததினாலே யதிலே நடக்கும்
போது செவ்வையாய்ச் சும்மா நிற்கிறாப்போலே காண்பிக்
கும். ஆனபடியினாலே யிரண்டாம் வளையத்தைக் கிரகமான
தொரு கண்டசிரா யெப்போதுஞ் சுற்றிக்கொண்டு வருகிற
தென்றுங் கிரகத்தினுடையமுந்தின வளையமெப்போது மெல்
லெனவாய்ப் போகிறதென்றும் மனதிலே யெண்ணிக்கொண்
டிருந்தால் முன்சொல்லப்பட்ட ஆச்சரியமான விசேஷங்களை
யெளிதாய் வெளிப்படுத்தலாம். ஆனாற்சூரியனுஞ் சந்திரனும்
வக்கிரியாம லிருக்கிறதென்ன? மற்றக் கிரகங்கள் வக்கிரிக்கி
றதென்ன? என்று இந்தச்சீமை சாஸ்திரிகள் பிரத்தியுத்தரஞ்
சொல்லமாட்டார்கள். ஆனால் நாம் கூடினமாத்திரஞ் சொல
லிக் காட்டுகிறோம். நன்றாயுற்றுக் கேளுங்கள்; சூரியனுஞ்
சந்திரனுங் கிரகங்களுண்டான இரண்டாம் வளையத்தைச்
சுற்றிக்கொண்டு வருகிறதென்று சொன்னாலும்மற்றவளையத்
திலே மெள்ளமெள்ள நடக்கிறதினாலேயும் அதுகளுடையமுந்
தின பெரியவளையம் மேற்கேயிருந்து கிழக்கே சீக்கிரமாய்ச்
சுற்றுகிறதினாலேயும் வக்கிரிக்கிறதற் கிடவகாசமில்லை. இதெல்
லாமனதிலே நன்றாய்த் தரிக்கிறதற்கு இந்தப் புத்தகத்தினு
டைய முடிவிலே காண்பிக்கப்போகிற கிரகங்களுடைய சுரு
பங்களையும் வளையங்களையும் நன்றாய்ப் பார்க்கவேணும்.

இப்போதைக்குக் கிரகங்களுடைய காத்திரத்தை வெ
ளிப்படுத்துவோம். அதெப்படி யென்றாற் சனி கிரகமானது
884 பூமிகொண்டதா யிருக்கும். வியாழக்கிரகமானது 681
பூமி யடங்கத்தக்கினதா யிருக்கும். செவ்வாய் கிரகமானது
பூமியைப்பார்க்க சின்னதா யிருக்கிறது. அதேதென்றால்,
ஏழரைச் செவ்வாய்க்கிரகம் பூமிக்குள்ளே யடங்கி யிருக்க
லாம். சூரியனை மேலெழுந்தவாரியாய்ப் பார்க்கும்போது
1,728 பூமிகொண்டதா யிருக்கும். வெள்ளி ஒன்றரைப்
பூமிகொண்டதா யிருக்கும். இந்தப் பூமியிலே 64 புதனிருக்



கலாம் பூமியிலேதானே 56 சந்திரனடங்கி யிருக்கலாம்
இதெல்லாங் கெட்டியுள்ள நியாயங்களினாலே லோகப்பிர
மாண சாஸ்திரமென்கிற புத்தகத்தி லொப்புவித் திருக்கின்
றது. இந்த ஏழு கிரகங்களிலே வியாழ கிரகத்தை யிடைவி
டாமல் நாலு சின்ன கிரகங்கள் சுற்றிக்கொண்டிருக்கின்றன.
பின்னும் சனி கிரகத்தை யிரண்டு சின்ன கிரகங்கள் எப்போ
தும் வளைந்துகொண்டு வருகின்றன. இதெல்லாம் நன்றாய்க்
காணவேணுமானாற் பெரிய தூரதிஷ்டிக் கண்ணாடி யுண்டா
னால் அவசியமாய்ப்பார்க்கலாம். சந்திரகிரகத்தினாலே மற்றக்
கிரகங்களுக்குந் தன்னுடைய அயநத்திலே யுண்டான நக்ஷ
த்திரங்களுக்குங் கிராணம் வருகிறது. வெள்ளியும் புதனும்
சந்திரனைப்போலே வளர்பிறை தேய்பிறையா யிருக்கிறது.
வியாழ கிரகத்தின் மேலே சில சமயங்களிலே ஒன்று,
சிலவிசை யிரண்டு, சில சமயத்திலே மூன்று பட்டைபோ
லக் கீற்றுகள் காண்பிக்கிறதினாலே வியாழன் தனது மையக்
கம்பிமேலே சுற்றிக்கொண்டு வருகிறதென்று சாஸ்திரிகள்
ஸ்தாபித்தார்கள். சனியோவென்றால் வெவ்வேறே ரூபத்
தோடே யநேகம்விசை காண்பிக்கும். சில சமையங்களிலே
வியாழன் சனியை மறைக்கிறது. வியாழத்தைச் செவ்வா
ய் மறைக்கிறது. வெள்ளி செவ்வாயை மறைக்கிறது. சில
சமையங்களிலே புதன் சூரியனுடைய ஒரு பங்கை மறை
க்கிறது. வெள்ளியும் புதனுஞ் சூரியனைச் சுற்றிக்கொண்டு
வருகிறதென்று சொன்னோமே, சூரியனுக்குமுன் உதயம்
பண்ணினாலுஞ் சரி சூரியன் அஸ்தமித்த பிற்பாடு அஸ்தமி
த்தாலுஞ் சரி கிழக்கு மேற்குமாக எதிர்த்து நிற்கும்
போது வெள்ளி 49 பங்குக்கப்பாலே போகமாட்டாது.
அத்தறுவாயிலே எல்லா மதற்குள்ளே யடங்கி நடக்கும்.
புதனோ வென்றால் 29 பங்குக்குமேல் அதிகமா யிராது,
இந்த ஏழு கிரகங்களுடைய விஷயத்திலே சோதிசாஸ்திரி
கள் வேறே யதிசயமான விசேஷத்தைச் சொல்லிக்கொ
ண்டு வருகிறார்கள். அதெப்படியென்றாற் கிரகங்கள் எங்
கும் நடக்கிற தென்று காண்பித்திருந்தாலும் இராசிகளுடை
ய சக்கரத்திலே மாத்திரம் நடக்கிறதல்லாமல் அப்பாலே
போகாது. இந்த ராசிகளுடைய சக்கரத்தினடுவிலே கிரா
ணவளைய மிருக்கிறது. அந்தக்கிராண வளையத்திலே சர்வே
ஸ்வரனானவர் சூரியனை யுண்டாக்கின நாள் துவக்கி யிதுவ
ரைக்கும் சூரியனானது அங்கேயுமிங்கேயுஞ் சாயாம லொரு
கண்ட சிரா யதிலே நடக்கிறதென்று அநுபவ சித்தியினாலே

சாஸ்திரிகள் கண்டுபிடிக்கிறார்கள். சனியோ வென்றாற் கிரண சக்கரத்துக் கப்பாலே விலகி நடந்தாலும் அதுவு மிரண்டு பங்குக்கும் 48 விபித்தத்துக்கும் அப்பாலே போகாது. வியாழமோ வென்றால் எத்தனை விலகினாலும் ஒரு பாகத்திற்கும் 38 விபித்தத்துக்கும் அப்பாலே போகாது. வெள்ளி கிரகம் மற்றக் கிரகங்களைப் பார்க்கக் கிரண சக்கரத்தைவிட்டு அங்கங்கே சாய்ந்து நடந்தாலும் எட்டுப் பங்கு 54 விபித்தத்துக் கப்பாலே விலகாது. புதனோவென்றால் நாலுபங்கு 5 விபித்தத்துக் கப்பாலே போகாது. கடைசியிலே சந்திரன் சக்கரத்துக் கப்பாலே மெத்த விலகியிருக்கிறபோது 5 பங்குக்கும் 17 விபித்தத்துக்கும் அப்பாலே போகாது. ஆனால் சோதிசாஸ்திரிகள் ஏழு கிரகங்கள் ஏழுவகை யிரத்தினங்களுக்கும், ஏழுவகைதிரவியங்களுக்கும் ஏழுவகை வியாதிகளுக்கும், விசேஷமான காரணமா யிருக்கிறதென்று சொல்லுகிறார்கள். இந்தப்பிரகாரமாக இராகு, கேது என்கிறவிசேஷமான இரண்டுகிரகங்கள் அதிகமாயிருக்கிறதென்று சொன்னாலும் இதெல்லாம் அபத்தமான கதையினாலே ஸ்தாபிக்கப்பட்டதா யிருக்கிறதினாலேயும் சந்திரசூரிய சக்கரங்களுடைய சேர்க்கைமாத்திர மிருக்கிறதினாலேயும் இந்த விசேஷத்தைச் சகுன நிவாரணத்தில் வெவ்வேறே நியாயங்களினாலே ஆக்ஷேபித்திருப்பதினால் இங்கே அதைப்பற்றிப் பிரசங்கிக்கத் தேவையில்லை. கடைசியி லறியவேண்டியதாவது:—ஏழு கிரகங்களுடைய விவரத்தைப் பொதுவிலே சொன்னதற்குப் பிற்பாடு சூரிய சந்திரன் பிரதான கிரகங்களா யிருக்கிறபடியினாலே அவைகளுக்கடுத்த சில அதிசயமான விசேஷங்களை வருகிற அதிகாரத்திலே வெளிப்படுத்துவோம்.

## ௩-ம் அதிகாரம்.

## சூரியனுடைய விவரம்.

போன அதிகாரங்களிலே யேழுகிரகங்களுக்கடுத்த குணங்களையும் அதிசயவிசேங்களையுஞ் சொல்லிக்காட்டினதினால் இந்த அதிகாரத்திலே சந்திரனும் சூரியனும் கிரகங்களுக்குள்ளே யுத்தம கோள்களா யிருக்கிறதென்றும் அவைகளுக்குச் சம்பந்தமா யிருக்கிற இன்னுமநேக காரியங்களையும் தெரியப்படுத்துகிறோம். முந்தமுந்த அறியவேண்டியதாவது பராபரவஸ்துவாகிய கடவுளானவர் நம்முடைய மட்டில்



லாத வல்லமையினா லுண்டாக்கின புத்தியில்லாத வஸ்துகளுக்குள்ளே சூரியனானது உத்தமமா யிருக்கிறதென்று சாஸ்திரிகளும் சாஸ்திர மறியாதவர்களும் சங்கேதம் பண்ணினார்கள். அதேதென்றாற் சூரியனானது தனது பிரகாசத்தினாலேயும் உஷ்ணத்தினாலேயும் பூலோகத்தி லுண்டான சகலமான வஸ்துகளுக்கும் உயிரைக் கொடுக்கிறதுபோ லிருக்கின்றது. ஆனபடியினாலே யித்தனை பிரகாசத்துக்கும் உக்கிரத்துக்குங் காரணமா யிருக்கிற சூரியனிடத்திலே ஒன்றில் நெருப்புள்ள அங்கிஷங்கள் முக்கியமாய் யிருக்கிறதென்றும், ஒன்றில் நாம் உபயோகிக்கிறஅக்கினிக்குமேலான உஷ்ணங்களைக் கொண்டிருக்கிற அக்கினியினாலே உண்டாக்கப்பட்டதா யிருக்கிறதென்றுஞ் சாஸ்திரத்தின்படியே சொல்லவேண்டி யிருக்கிறது. பூர்வகாலத்தி லிருந்த சில சாஸ்திரிகள் சூரியனானது வெறுஞ் சுவாலையா யிருக்கின்றதென்று விசாரித்தார்கள். ஆனால் சுவாலையானது அத்தியந்த பிரகாசத்துக்கும் உஷ்ணத்துக்கும் காரணமா யிருக்கமாட்டாது. ஆகையினாலே இது மிகவும் அடர்த்தியுள்ள அங்கிஷங்களினாலே உண்டாக்கப்பட்ட தென்கிறதற்குச் சந்தேகமில்லை. இதற்குக் காரண மேதென்றால் அக்கினிக் கொழுந்திலே கையை வைத்தா லதினுடைய அங்கிஷங்கள் கொழுந்திலே பிரிந்து போகிறதினாலே அத்தனை சுடாது. ஆனா லக்கினித்தணலிலே அங்கிஷங்கள் அடர்த்தியா யிருக்கிறதினாலேயும் பிரியக்கூடாததினாலேயும் அதின்மேலே கையை வைத்தால் உடனேவெந்துபோம். ஆனால்தணலைப்பார்க்க இரும்பு அதிகமாய் நெருங்கி யிருக்கிறபடியினாலே அது நெருப்பினாலே வெந்து சிவந்துபோனால் அதிகமாய்ச் சுடும். அந்த நியாயத்தினாலே சிலசாஸ்திரிகள் சூரியனானது மகா பிரகாசத்துக்கும் உஷ்ணத்துக்குங் காரணமா யிருக்கிறதென்று பார்க்கும்போது சூரியனானது எரிகிற தங்கமாயிருக்கிறதென்று நிச்சயித்தார்கள். இப்போதைக்குச் சூரியனுக்கெந்த ரூபமுண்டென்று கேட்டால் வட்டரூபமா யிருக்குதென்கிறதற்குச் சந்தேகமில்லை. ஆனால் கண்ணுக்கிப்படி காண்பிக்கிறதினாலே முழுதும் அப்படி யிருக்கிறதென்று விசாரிக்க வேண்டாம். அதேதென்றால் தூரமாயிருக்கிற பொருள்கள் சதுரமாயிருந்தாலுந் திஷ்டிக்குவட்டம் போலே காண்பிக்கும் ஆனால் சூரியனானது வட்டரூபமா யிருக்கிறதென் றொப்புவிக்க மனதுண்டானால் இருள்பொருந்தின அறைக்குள்ளே திஷ்டி வாசல்விட்டு அதினுடைய

கதவுகளையும் நன்ற யிடைவெளி யில்லாம லடைத்துப் பிற்
பாடு சூரியனுக்கெதிராக விருக்கிற இந்தத் திஷ்டிவாரற்கத
வி லொரு சிறு விரல்போக வட்டத்துவாரம் பண்ணி அவ்
வறைக்குள்ளே அத்துளைக் கெதிராக வொரு வெள்ளைத்
துப்பட்டியை விரித்துப் பிடித்தால் சூரியனுடைய துவாரத்
துக்குள்ளே தனது கதிர்களை வீசும்போது அதினுடைய
ரூபம் வட்டரூபமாகச் சீலைமேலே முழுதுங் காண்பிக்கும்
அவ்வண்ணமே சூரியனிடத்திலுள்ள சகல அங்கிஷங்களிலே
நின்று கதிர் புறப்படுகிறபோது அவசியமாய்த் தனது ரூபத்
தை முழுதுந்தோற்றப் பண்ணுகிறது. ஆனாலந்தத் துவாரம்
வட்டரூபமா யிராமலும் அந்தச் சொரூபத் துப்பட்டியிலே
படாமலுந் தரையிலே விழுந்தால் அப்போது முழு வட்டரூ
பங்காணப்போகிறதில்லை. இதற்கப்பா லறியவேண்டியதாவது
தூரதிஷ்டிக் கண்ணாடியைக் கொண்டு சூரியனை யநேக நாள்
பார்த்தால் அதிலே யுண்டான சிலவடையாளங்கள் நிமித்த
மாகச் சூரியனானது தனது மையக் கம்பிமேலே சுற்றிக்கொ
ண்டு வருகிறதென்று எளிதாய்க் கண்டிபிடிக்கலாம். ஆனால்
இவ்விதமாகச் சூரியன் தனது மையக் கம்பிமேலே சுற்றிக்
கொண்டிருப்பதாலும் எப்போதுந் தன் சொரூபத்தை வட்
டரூபமாகக் காண்பிக்கிறதினாலேயுஞ் சூரியனானது சக்கர
த்தைப்போ லிராமல் முழுவுண்டையா யிருக்கிற தென்கிற
து நிச்சயமாகும். ஆனால் சூரியனானது முழுதும் உண்டை
யைப்போலக் காண்பியாமல் தகடுபோல் காண்பிக்கிறதற்
குக் காரணமென்ன? எந்த வுண்டையானாலு மகா தூரமா
யிருக்கும்போது அவசியமாய்த் தகடுபோலே காண்பிக்கும்.
அதேதென்றால் உண்டையானது மெத்த தூரமாயிருக்கும்
போது அதிலே யுண்டாயிருக்கலான கீற்றுகளுக்கும் வேற்று
மை காண்பியாததினாலே யுண்டையானது தூரமாயிருந்
தால் முழுதுந்தகடுபோலே காண்பிக்கும். போன அதிகாரத்
திலே பூமி சர்வலோகத்துக்கு மையமா யிருந்தாலுஞ் சூரிய
னுடைய சக்கரத்துக்கு மையமல்லவென்று சொன்னோமே
இஃதிப்படி யிருக்கையிலே அவசியமாய்ச் சூரியன் தனது
சக்கரத்தின் மேற்பக்கத்திலேயிருக்கும்போது பூமிக்குத் தூர
மா யிருக்கிறதுந் தவிரக் கண்ணுக்குச் சிறியதாய்க் காண்பிக்
கும். சக்கரத்தின் கீழ்ப்பக்கத்தி லிருக்கும்போது பூமிக்
குக் கிட்டி யிருக்கிறது மல்லாமல் கண்களுக்குப் பெரியதா
ய்க் காண்பிக்கிறது. ஆனிமாதத்திற் சிறியதாய்க் காண்பிக்
கிறது. இதெல்லாஞ் சோதிசாஸ்திர எத்தனங்களைக் கொ



ண்டு பார்த்தால் பிரசித்தமாய்க் காண்பிக்கும். ஆனாலித
லே கனமான சந்தேகம் பிறக்கும். அதெப்படி யென்றால்
மார்கழி மாதத்திற் சூரியன் பூமிக்குக்கிட்ட விருக்கும்போ
து கடினமான வெய்யல் காண்பியாம லிருக்கிறதேன்?
பின்னையும் ஆனிமாதத்திற் சூரியன் பூமிக்குத் தூரமாயிருக்
கும்போது மந்தாரமில்லாமற்போனால் கடினமான வெய்யலி
றைக்கிறதென்ன. இத்தொகைப்பட்ட விசேஷங்களெல்லா
ம் விவரமாய்க் கண்டுபிடிக்கிறதற் கறியவேண்டியதாவது:—
சூரியனுடையகதிரானது பூமிமேலேசாய்வாய்ப்படுகிறபோது
அந்தப் பிரகாரமாகத்தானே சாய்ப்பாய்க் கிளம்புகின்றது.
ஆனால் செவ்வையாக விழுந்தால் செவ்வேகிளம்பும். இவ்
வாச்சரியமான விசேஷத்தை யொருவமையினாலேவெளிப்ப
டுத்துவோம். அதெப்படி யென்றால் ஒருபந்தை யடிக்கிற
போது சாய்ப்பாக நிலத்திலேபட்டால்சாய்ப்பாகக்கிளம்பும்.
செவ்வையாக அடிபட்டால்செவ்வையாகக்கிளம்பும். இந்த
ப்பிரகாரமாகப் பிரகாசத்தின் கதிர்களின் விஷயத்திலேயோ
சிக்கக் கடவீர்கள். ஆனபடியினாலே மார்கழிமாதத்திற் சூரி
யன் தெற்கேவெகுவாய்ச் சாய்ந்திருக்கிறதினாலேயும் அதினு
டைய கதிர்கள் அந்தச்சீமையிலேமெத்தசாய்ப்பாய் விழுகிற
தினாலேயுஞ்சரியாயெழும்பாமற்சாய்ப்பாய்க்கிளம்பும். ஆகை
யினாலே விழுகிறகதிருக்குங் கிளம்புகிற கதிருக்கு மெத்ததூ
ரமா யிருக்கிறபடியால் நடுவிலே அத்தனை யுஷ்ணம்பிறக்க
மாட்டாது. ஆனிமாதத்திலோவென்றால் சூரியன் தனதுகதி
ர்களை அத்தனைசாய்ப்பாய் வீசாததினாலேயும் விழுகிறகதிரு
க்குங்கிளம்புகிறகதிருக்கும் அத்தனை தூரமில்லாததினாலேயும்
நடுவிலே வெய்யல்மெத்தப் பிறக்கும். இந்தப் பிரகாரமாகத்
தினந்தினஞ் சூரியன் உதயம் பண்ணும்போது அதினுடைய
கதிர்மெத்த சாய்ப்பாய்ப் பூமியிலே விழுகிறதினாலே உஷ்ணங்
காண்பியாது. ஆனாற்சூரியன் ஏறஏற மத்தியானமட்டும் விழு
கிறகதிரும் கிளம்புகிறகதிரும் கிட்டக்கிட்ட விருக்கிறதினாலே
வெய்யலதிகமாய்க் காண்பிக்கும். மத்தியானத்துக்குப் பிற்
பாடு இதற்கு விரோதமான வகையோடே திரும்புமென்று
யோசித்துக் கொள்ளலாம்.

இப்போதைக்குச் சூரியனிடத்தில் மிகவும் விளங்கிற
வேறே யதிசயமான விசேஷங்களைச் சொல்லிக்காட்டுவோம்.
முதலாவது—சகலமான கிரகங்களுக்கும் நக்ஷத்திரங்களுக்
கும் சர்வலோகத்துக்கும் உண்டான பிரகாசமெல்லாஞ் சூரி
யனாலே வருகிறதென் றிருக்கும்போது பராபர வஸ்துவான

வர் சூரியனைக்கொண்டு சகல வஸ்துக்களுக்கும் செழிப்பும் அலங்காரமுங் கொடுக்கிறாரென் றறிவீர்களாக. முத்து ரத்தினங்களைவிட அதிசயித்திருக்கிற இந்த ஆச்சரியமான தீபத்தையெங்கும் பிரகாசிக்கத்தக்கதாக உலகத்தினுடைய நடுவிலேசர்வேஸ்வரன் ஸ்தாபித்ததுமல்லாமல் அதினுடைய வுஷ்ணத்தி னிமித்தமாகப் பூலோகத்தி லுண்டான ஆவிகளையும் ஈரங்களையு மாகாயத்தி லேறப்பண்ணி அந்த ஆவிகள் மேகங்களாய்ப்போய் மழையாக வருஷிக்கிறது. அந்தமழைகளெண்ணப்படாத நன்மைகளுக் குதவுகிறது. இந்தொகைப்பட்ட விஷயங்களெல்லாம் பூதியங்களுடைய விசேஷங்களை வெளிப்படுத்தும்போது கூடினமாத்திரந் தெரியப்பண்ணுவோம்.

2-வது.—சூரியனானது உத்திரதக்ஷண நிமித்தமாகச் சகலமான காலங்கள், வாரங்கள், மாதங்கள், வருஷங்கள் முதலானவைகளுக்குங் காரணமாயிருக்கும். அதெப்படியென்றால்: சூரியன் இராசிகளுக்குள்ளே நடக்கிறபோது ஒவ்வொரு இராசியிலே முப்பதுநாள் ஏறக்குறைய நடக்கிறதினாலேவெவ்வேறே மாதம்பிறக்கும். இந்தப் பிரகாரமாக மேஷராசியி லிருக்கிறபோது சித்திரைமாதம் நடக்கும். ரிஷபத்திலேவைகாசி மாதமட்டுமிருக்கும். இப்படியே முடியுமட்டும் யோசிப்பீர்களாக. கடைசியிலே பனிரண்டிராசிகளும் பனிரண்டு மாதங்களு முடிந்தவுடனே ஒரு வருஷஞ் சரியாகும்.

3-வது.—வருஷ்காலமுங் குளிர்காலமும் வசந்தகாலமுங் கோடைகாலமும் வருகிறதற்குச் சூரியனிமித்தமாயிருக்கின்றது. இதிலேயாண்டவரைத் தோத்திரம்பண்ணுகிறதற்குப் பரிபூரண நியாயமுண்டு. அதெதென்றால் அநேகவஸ்துக்கள் விளைக்கிறதற்கும முளைக்கிறதற்கும் வளருகிறதற்குங் காய்க்கிறதற்கும் பழுக்கிறதற்கும் மற்றப்பொருள்கள் பிழைக்கிறதற்கும் முன்சொல்லப்பட்ட காலங்கள்வேண்டியிருக்கும்போது இந்தக் காலங்களெல்லாந் தப்பில்லாத கிரமத்தோடேவருகிறதற்குப் பராபர வஸ்துவானவர் புத்தியில்லாத வஸ்துவாயிருக்கிற சூரியனைச் சம்மனசுகளினுடைய கைங்கரியத்தினாலே பலவந்தமாய் நடத்துகிறார்.

4-வது.—சூரியன் உதயந்துவக்கி அஸ்தமிக்கு மட்டும் பகலையும், அஸ்தமிப்புதுவக்கி விடியுமட்டும் இரவையும் பிரிக்கின்றது. இவ்விதமாயிராமல் எப்போதும்பகலானால்பூலோகம்வெந்து சாம்பலாகும், எப்போதும் இரவானால் ஒன்றுஞ்



செய்யமாட்டோம். ஆனபடியினாலே சித்திரக்காரனானவன் பிரகாசமுள்ள வர்ணங்களினாலேயும் கறுப்புமுதலிய நிறத்தினாலேயும் மகாவுச்சிதமான வேலைகளை வர்ணிக்கிறாப்போலே சர்வேஸ்வரனானவர் பிரகாசமானபகலையும் இருளுள்ள விராவையுந் திவ்வியசாஸ்திரத்தின்படியே கலந்து அற்புதமான கிரமத்தோடே லோகமெல்லாம் நடத்திக்கொண்டு வருகிறாரென்று அர்ச். கிறீசோஸ்தமு வென்கிறவரருளிச் செய்தார். ஆனால் யாதாமொருத்தன் பகல்நிமித்தமாக வருகிற நன்மைகளெல்லாம் பிரசித்தமா யிருக்கின்றதே இரவினாலே வருகிற நன்மைகள் ஏதென்று கேட்டால் பிரத்தியுத்தரத்தைச் சாவதானமாய்க்கேள். பகற்காலத்திலே சகலமனுஷருக்கும், மிருகங்களுக்கும் உண்டான இளைப்புகளையிராக்காலத்திலே தீர்க்கலாம், பகல்நேரத்தில் சரீரத்திலே மெத்தவுஷ்ணம் பிறக்கிறதினாலே அது யிரவினுடைய சயித்தியத்தினாலே அமர்ந்துபோம். இதன்றியே யெப்போதுஞ் சாகரணமென்கிற விழிப்புண்டாயிருந்தால்நரம்புகளிலேயும் இரத்தத்தாரைகளிலேயும் உண்டாயிருக்கிறசீவ அக்கினிகெட்டுப்போய்த் தப்பாமற் சாவுவரும். இத்தன்மையாகப் போசனங்களெல்லாம் நன்றாய்ச்செரிக்கிறதற்குமிகவு முதவுகின்றது. கடைசியாயிராத்திரி காலத்திலே வருகிற மற்றுமுண்டான பிரயோசனங்களெல்லாம் விட்டுப்பராபரவஸ்துவானவர் தமது தேவோக்கித்த வேதத்திலே யுவித்த விசேஷத்தை மிகுந்த விமரிசையோடே கேட்பீர்களாக:—சர்வத்துக்கும் வல்லவரான ஆண்டவர் பகல்நேரத்திலே தம்முடைய மட்டில்லாத்தயையை மனுஷருக்குக் காண்பிக்கவும், இராத்திரிகாலத்திலே தம்மை நினைத்துத் தோத்திரம் பண்ணும்படியாகவும் ஓய்வுநேரமாக இரவைக் கட்டளையிட்டிருக்கின்றார். ஆனபடியினாலே நீங்களெல்லாரும் இராத்திரிகாலஞ் செபத்தியானத்துக்கான காலமாயிருப்பதால் நன்றியறிந்த மனதோடே சர்வேஸ்வரனைத் தோத்திரம் பண்ணுகிறதிலே யிரண்டொருதாக செலவழிப்பீர்களாக, பூர்வகாலத்திலே மகா பேர்பெற்ற சாஸ்திரியானவொருவர் "சர்வேஸ்வரனாலுண்டாக்கப்பட்ட வஸ்துகளுக்குள்ளே நீசமான பொருளானாலும் அவரைத் தோத்திரம் பண்ணுகிறதற்குக் காரணமாயிருக்க அவர் சூரியனிடத்திலே தம்முடைய அளவில்லாத பலத்தையுங் கிருபாகடாக்ஷத்தையும் மிகவும் விளங்கப்பண்ணுகிறதினாலே தினந்தினம் பிரகாசிக்கிற சூரியனைப் பார்க்கும்போது அதை யுண்டாக்கினவராகிய பராபர வஸ்துவின்

பேரிலே மிகுந்த நன்றியறிந்த மனதோடே மென்மேலுந் தோத்திரம் பண்ணவேண்டாமோ" என்றருளிச்செய்தார். ஆனால் இதிலே மனுஷருடைய குருட்டாட்ட மேதென்றால் மகா காந்தியோடு சூரியன் பிரகாசிக்கிறபோது அதை யொருத்தரும் பார்க்கக்கூடாமற் சூரிய கிரகணங்களினாலே அதினுடைய பிரகாச மறைந்திருக்குஞ் சமையத்தில் அக்கிரகணத்தைக் கண்டுபிடிக்க மாட்டாமல் மகா ஆச்சரியமாய்ப் பார்த்துக்கொண் டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூரியகிரகணங்களைத் தீர்க்கமாய்க் கண்டுபிடிக்கிறதற் கறிய வேண்டியதாவது.

இராசி சக்கரத்தி னடியிலே கிரகணங்களுடைய வளையமுண்டென்று சொன்னோமே அந்த வளையத்திலே தானே அங்கு மிங்குஞ் சாயாமல் தப்பில்லாத கிரமத்தோடு இடைவிடாமல் நடக்கின்றது. அந்தச் சூரிய வளையத்துக்குக்கீழாகக் குறுக்கே சந்திரனுடைய வளையமிருக்கின்றது அதிலே அது இடைவிடாமல்நடக்கின்றது. இதெல்லாம்இப்படியிருக்கையிலே யவசியமா யிரண்டு ஸ்தலங்களிலே இவ்விரண்டு சக்கரங்களுஞ் சேரும். ஆனபடியினாலே யொருகம்பி யிருக்கிறதென்று நினைத்துக்கொள். அந்தக்கம்பியிலே முன்சொல்லப்பட்ட விரண்டு சேர்க்கையி லொருசேர்க்கையை முந்த முந்தக் கோர்த்துப் பிற்பாடு பூமியைக் கோர்த்துக் கடைசியிலேயந்த விரண்டாஞ் சக்கரத்தையுங் கோர்க்கிறதென்று நினைத்துக்கொள். இதெல்லாம் இப்படியிருக்கையிலே சூரியனானது ஒரு சேர்க்கையின் மேற்சக்கரத்தி லிருக்கும்போது சந்திரன் அந்தச் சேர்க்கையின் கீழ்ச்சக்கரத்திலே தானே யிருந்தால் சந்திரனுக்கும் சூரியனுக்கும் எதிராகப் பூமியிலே நிற்கிறவர்களுக்குச் சூரியன் மறைந்ததினாலே சூரியகிரகணமென்று சொல்லப்படும். சூரியனை முழுதுமறைத்தால் முழுக்கிரகணமென்று சொல்லப்படும். பாதிமறைத்தால் அரைக்கிரகணம். நாலிலொருபங்கு மறைத்தால் காற்கிரகணம். ஆனபடியினாலே சூரியகிரகணமேதென்றால் சூரியன் உயரமாயிருக்கப் பூமிக்குஞ் சூரியனுக்கும் நடுவாகச் சந்திரனிருந்தால் சூரியனுடைய பிரகாச மறைந்துபோய்க் கிரகணமாம். அமாவாசை காலத்திலே சந்திரனும்சூரியனும் அந்தச்சேர்க்கையிலேயிராமல் தப்பிப் பதினேழுபாக நீளத்துக்கப்பாலே சூரியன்போயிருந்தால் சந்திரனும் உத்தரபக்கத்திலிருந்தாற் சூரிய கிரகணமிருக்கலாம். பின்னையும் வேறே அமாவாசையிலே சந்திரன் தென்பக்கத்திலிருக்கச் சந்திரனுஞ்-சூரியனுஞ் சக்



கரங்களுடைய சேர்க்கைக்கு ஏழுபாகதூரமாயிருந்தாற்சூரியகிரகண மிருக்கலாம். ஆனால் நிதானமாய்ச் சூரியகிரகணம் வருமென்று சொல்லுகிறதற்குப் பார்வையினாலே தாழ்த்தியாய்ப் போகுமோ உயர்த்தியாய்ப் போகுமோவென் றறிய வேணும். ஆனபடியினாலே சூரியகிரகண மறிகிறதற்குச்சந்திர சூரியனுடைய நடையைப்பார்த்து அமாவாசை காலத்திலே சந்திர சூரியன் தனது சக்கரங்களில் சேர்க்கைகிட்டவிருக்கிறதோ இல்லையோவென்று பார்க்கவேணும், சேர்க்கையிலே தானே யொன்றில் சேர்க்கையின் சமீபத்தில்தானே யிருக்கையில் அமாவாசையானால் அப்போது கிரகணமா யிருக்கலாம். இல்லாதேபோனாற் கிரகணமா யிருக்கக் கூடாது.

இதற்கப்பா லறியவேண்டியதாவது முதலாவது—சூரியகிரகணங்களிலே சூரியனிடத்திற் சற்றாகிலும்மிருட்டில்லை, சந்திரனுடைய விருண்ட பக்கமாத்திரங் காண்பிக்கும்.

2-வது.—சூரிய கிரகணம் பகல் நேரத்திலே மாத்திரங் காண்பிக்கும்.

3-வது.—அமாவாசை காலத்திலே மாத்திரங் கிரகணம் வரும்.

4-வது.—சில பேர்களுக்குக் காற் கிரகணமும் சிலபேர்களுக்கு அரைக்கிரகணமும் சிலபேர்களுக்கு முக்காற் கிரகணமும் கடைசியிலே சிலபேர்களுக்குமுழுக்கிரகணமும் சில சமயத்திலே பிரகாசமோதிரம்போல் காண்பித்து நடுவிலேயுண்டான பங்குகள் மறைந்தும் இருக்கும்.

5-வது.—கிரகணம் சூரியவளையத்தின் மேற்குப்பக்கத்திலே துவக்கி வளையத்தின் கிழக்குப் புறமாக முடியும்.

6-வது.—கிரகணநேரம் ஒவ்வொரு சீமையிலும் ஒருசாமத்துக்குமே லதிகமிராது. அதுவுமுழுக்கிரகணத்திலே மாத்திரம்பற் பலசீமைகளிலேயும் ஐந்துதாசுமாத்திரமிருக்கலாம்.

7-வது.—பற்பல ராச்சியங்களிலேயுஞ் சந்திர கிரகணம் வருகிற இலக்கத்தைப் பார்க்கச் சூரிய கிரகண மதிகமாயிருக்கலாம்.

8-வது.—சூரிய கிரகணமுழுதும் சேர்க்கையிலே வருகிறபோது ஒன்றில் சேர்க்கையின் அடுத்தாப்போலே வந்தானால் முன்னேபோன பவுர்ணமியிலேயும் பிறகுவரப்போகிற பவுர்ணமியிலேயும் சந்திரகிரகண மிருக்கக்கூடாது.

9-வது.—சக்கரங்களுடைய சேர்க்கைக்குத் தூரமாய்ச் சூரியகிரகணங் கண்டால்அந்தக் கிரகணஞ் சேர்க்கை கடக்

கிறதற்குமுன் வந்துதானல் பிற்பாடு வரப்போகிற பவுர்ணமி
சந்திரகிராணமாயிருக்கும். சேர்க்கையைக் கடந்த பிற்பாடு
தூரமாகச் சூரியகிராணம் வந்துதானு லப்போததற்கு முன்
போன பவுர்ணமியிலே சந்திரகிராணமிருக்கும்.

10-வது.—சூரிய கிராணம்போய் ஆறுமாதத்திலே மறு
படிசூரியகிராண மெளிதாயிருக்கலாம். ஐந்தா மாதத்திலேயு
மேழாமாதத்திலேயும் அபூர்வமுமாய்ச் சிறிதுமாயிருக்கும்.

11-வது,—ஒவ்வொரு சிமையிலொரு மாதத்திலொரு
கிராணமாத்திர மிருக்கக் காண்பார்கள். ஆனல் உத்தரபக்க
த்தி லிருக்கிறவர்களுக்கு மாதத்தின் துவக்கத்தில் ஒரு கிரா
ணம்வரலாம். அந்தக்கிராணந்தென்பக்கத்தி லிருக்கிறவர்கள்
காணமாட்டார்கள். தென்பக்கத்திலேயும் அப்படித்தான்.

12-வது. ஒரு வருஷத்தில் ஐந்துசூரிய கிராணமாத்திர
மிருக்கலாம், அதிகமா யிருக்கக்கூடாது.

## ௪-ம். அதிகாரம்.

### சந்திரனுடைய விவரம்.

போன அதிகாரத்திலே சூரியனுடைய சுபாவத்தையுங்
குணங்களையு மதிசயமான விசேஷங்களையுங் கூடினமாத்திரந்
தெரிவித்திருப்பதினலே இந்த அதிகாரத்திலே சந்திரனு
டைய வர்த்தமானத்தை வெளிப்படுத்தத் தாற்பரியமாயிரு
க்கிறோம். அதெப்படியென்றால் முந்தமுந்த சூரியனைப்போ
லே அக்கினியினுடைய அங்கிஷங்களினலே பராபர வஸ்து
வானவர் சந்திரனை யுண்டாக்க வில்லை யென்று சாஸ்திரங்க
ளைக்கொண்டே யெளிதா யொப்புவிக்கலாம். அதாவது
நெருப்பிலே உஷ்ணமும் பிரகாசமு மிருக்கிறது. ஆனல்
இவ்விரண்டு குணமுஞ் சந்திரனிடத்தி லில்லாததினலே
அக்கினியுள்ள அங்கிஷங்களினலே யுண்டாக்கப்பட்டதல்ல
வென்று சொல்லவேண்டி யிருக்கிறது. அவ்வண்ணமே
சந்திரனுக்குச் சுபாவமாய்ப் பிரகாச முண்டான லெப்போ
தும் பிரகாசிக்கும். ஆனல் அமாவாசி காலத்துக்குப் பிற்
பாடு சந்திரன் மிகவுங் கறுப்பாய்க் காண்பிக்கிறதினலேயும்
பற்பல விதமாகச் சூரியனுக்கெதிராக நின்றதினலேயும் வெ
வ்வேறே பிறை காண்பிக்கிறதினலேயும் சந்திர கிராணங்க
ளிலே சந்திரனுடைய பிரகாசமுள்ள பக்கம் பூமியினிழலுக்
குள்ளே பிரவேசித்து முழுது மிருட்டாய்ப் போகிறதின



லேயும் அவசியமாய்ச் சந்திரனிடத்திற் சுபாவமாய்ப் பிர
காசமில்லை யென்றுஞ் சந்திரனிடத்திற் காண்பிக்கிற காந்தி
யானது சூரியனுடைய கதிர்களினலேயே வந்ததென்றும்
அங்கிகரிக்க வேண்டியிருக்கிறது. இதன்றியே சந்திரனை
து ஒளியுள்ளதுமா யெளிதாய்ப் பிரியலானதுமா யிருக்
கிற அங்கிஷங்களினலே யுண்டாக்கப்படாமல் அடர்த்தி
யானதுமாய்க் கெட்டியானதுமா யிருக்கிற அங்கிஷங்க
ளினற் படைக்கப்பட்டதா யிருக்கிற தென்கிறது நியாயத்
துக் கொத்திருக்கின்றது. அவ்வண்ணமே யெளிதாய்ப்
பிரியலான அங்கிஷங்களினலே சிருஷ்டிக்கப்பட் டிருந்தாற்
பற்பல அசைவி னிமித்தமாகக் கெட்டியுள்ள ஸ்திரத்தைக்
கொண்டிராமல் பற்பல ரூபமாய்ப் போகிறதும் அல்லாமல்
அதிலே யுண்டான மாசுகள் வெவ்வேறே விதமாய்க் கா
ண்பிக்கும். ஆனல் சந்திரனது தன்னிடத்தி லுண்டான
தெல்லா மொருகண்டசீராய்க் காண்பிக்கிறதினலே சந்திரன்
ஒளிவுள்ளதா யிராமற் கெட்டியுள்ள அங்கிஷங்களினலே
யுண்டாக்கப்பட்டதா யிருக்கிறதென்று மனதிலே ஸ்தாபிக்க
வேணும். இதற்கப்பா லறியவேண்டியதாவது.

சந்திரனது குண்டுபோல் உண்டையா யிருந்தாலும்
அநேக வுயர்ந்த பருவதங்களைக் கொண்டிருக்கிற தென்று
சொல்லவேண்டி யிருக்கிறது. அதெப்படி யென்றால் அஷ்
டமி காலத்திலே பிரகாசமுள்ள பக்கமும், இருட்டுள்ள பக்
கமும் சரியாய்ப் பிரிந்திராமற் பிரகாசக்கீற்றுகள் பின்ன பே
தகமாக இரம்பம்போ லிருக்கிறதினலே பள்ளங்களு மேடுக
ளும் அவசியமாய்ச் சந்திரனிடத்திலே யிருக்கிறதென் றறி
யப்பெற்ற விசேஷமாகும். அஷ்டமி காலத்திற் சந்திரனைத்
தூரதிஷ்டியினலே பார்த்தால் இதெல்லாம் பிரசித்தமா யி
ருக்கும். ஆனபடியினலே சந்திரனெங்குஞ் சமனயிருக்க
வில்லை யென்கிறது தப்பில்லாத வடையாளமா யிருக்கின்
றது. இந்தப் பிரகாரமாக நாலாம் பிறையிலே சந்திரனு
டைய ரூபத்தைப் பார்க்கும்போது பிரகாசமுள்ள பக்கமல்
லாமல் இருட்டுள்ளபக்கத்திலும் சிலஸ்தலங்கள்பிரகாசிக்கிற
தினலே அதிலேதானே மேடுகளிருக்கிற தென்றும் பிரகாச
த்தைப் * பிரதிவாதிக்கிற தென்றும் அங்கிகரிக்க வேணும்.
இந்தப் பிரகாரமாக ஏகாதசியிலேயும் முன் சொல்லப்பட்ட
விலக்ஷணங்களுண்டா யிருக்கிறதினலே அந்தப் பிரகாரந்தா
னே யோசிக்கக் கடவோம.

*விசேஷமான ஒரு சங்கதியை ஸ்தாபித்துச் சொல்லுகிறது.

கடைசியிலே வேறே நியாயத்தினாலே சந்திரனிடத்திலே பருவதங்களுண்டென்றெப்புவிக்கலாம். அதெப்படியென்றால் சந்திரனிடத்திலே பிரசித்தமாயிருக்கிற மாசுகள் சூரியனுக்கெதிராய் நின்றால் முழுதுங் கறுப்பாயிருக்கும். பிறகு அத்தனை கறுப்புக் காண்பியாது. வேறேசமயத்திலே சூரியன் வேறேவிதமாக அந்தப் பக்கத்தைப் பிரகாசிப்பிக்கிறதினாலே கறுப்பெல்லாம் வாங்கிப்போய் முழுதும் பிரகாசமாயிருக்கும். இந்த விசேஷத்தைத் நிரவிசாரித்தோமானால் பூலோகத்திலுண்டான பறுவதத்தினுடைய நிழல் சூரியனுடைய பற்பல கடையினாலே வெவ்வேறே விதமாகக் காண்பிக்கிறதுபோல சந்திரனிடத்திலுண்டான மாசுகள் சூரியனுடைய பற்பல அந்தஸ்தினாலே வெவ்வேறே விதமாகக் கண்களுக்குத் தோன்றுகிறதினால் அவசியமாய்ச் சந்திரனிடத்திலே யுயர்ந்த பறுவதங்களுண்டாயிருக்கிறதென்று ஸ்தாபிக்கக்கடவோம். அந்தப் பருவதங்களுடைய வுயரம் ஒருகாதமுண்டென்றும் ஒன்றரைக் காதமுண்டென்றுங் கெட்டியுள்ள நியாயங்களினாலே சோதிசாஸ்திரிகளொப்பிவிக்கிறார்கள். ஆனாலிந்தச் சிமையிலிருக்கிற சனங்களதெல்லாங் கண்டுபிடிக்கிறது அருமையாயிருக்கிறதினாலே இம்மாத்திரஞ் சொன்னதுபோதும். இப்போதைக்குச் சந்திரனுடைய தேய்பிறை வளர்பிறைகளை வெளிப்படுத்துவோம். அதெப்படியென்றால்:—பூர்வீக சோதிசாஸ்திரிகள் சொல்வதுபோல சந்திரனிடத்திற் சுபாவமாய்க் கதிர் விழுகிறதினாலே போகப்போகப் பிரகாசங் குறையவேண்டியது.

2-வது.—பவுர்ணமி காலத்திற் சகலமான பிறைகளிலேயுண்டான பிரகாசத்தைப் பார்க்கச் சுருக்கமாயிருக்கும். அதெப்படியென்றால்:—அமாவாசிகாலத்திலே சந்திரனிடத்தில் அதிகமான பிரகாசமுண்டாயிருந்து சூரியனைவிட்டு அப்பாலே போகப்போக நிலாவினிடத்திலுண்டான பிரகாசங் குறைந்துபோமென்றெப்புவித்தாப்போலாச்சுதே. ஆனபடியினாலே சந்திரனைத் பவுர்ணமி காலத்தில் சூரியனுக்கப்பாலே மெத்ததூரமாய்ப் போனதினாலே அதினுடைய பிரகாசம் வெகுவாய்க் குறைந்ததென் றங்கீகரிக்கக் கடவதாகும்.

3-வது.—மெய்யான பவுர்ணமி காலத்தில் சந்திரனிடத்திலே பரிச்சேதமாய்ப் பிரகாசங் காண்பிக்கவுமில்லை. இருக்கவுமில்லை. அவ்வண்ணமே மெய்யான பவுர்ணமியேதென்றால், சந்திரன் முழுதுஞ் சூரியனுக் கெதிராக நிற்கிறதினாற்



சந்திரனும் சூரியனும் தங்கள் சக்கரங்களுடைய எதிரான சேர்க்கைகளிலே யில்லாமற்போனால் முழுதும் எதிராக இருக்கமாட்டாமல் எப்போதுஞ் சில வேற்றுமை உண்டாயிருக்கும். ஆனபடியினாலே அதிலே பவுர்ணமி வந்ததானால் மெய்யான பவுர்ணமியல்ல சக்கரங்களுடைய சேர்க்கைகளிலே பவுர்ணமி வந்ததானால் அப்போது முழுதுங் கிராணமாயிருக்கிறதினாலே ஒருவனும் பிரகாசத்தைக் காணமாட்டான் பிரகாசமேயிராது.

இப்போது பிரபஞ்சத்தின் மேலேயுண்டாகிய சந்திரனுடைய சுபாவபலத்தைச் சொல்லிக்காட்டுவோம். சுதந்தரமுள்ள மனதினாலே வருகிறகாரியங்களை யேற்கனவே சொல்லுகிறதற்குச் சந்திரன் முதலான கிரகங்களும் நக்ஷத்திர யோகங்களுங் காரணங்களுந்திதிகளும், அபர-பூர்வபக்ஷமும் உதவாதிருக்கிறதுமல்லாமல் இத்தொகைப்பட்ட விசேஷங்களை அங்கிகரிக்கிறது மகா பாவமாயிருக்குமொழிய மற்றப்படியல்ல. ஆனால் அசரீரியாயிருக்கிற மனதின்பேரிலே சந்திரனுக்குப் பலமில்லாமற்போனாலும் கண்டிப்புள்ள பொருட்களிற்சிலது வர்த்திக்கிறதற்கும் சிலதுகுறைகிறதற்கும் பலமுண்டென்று சொல்லலாம். இந்தப் பிரகாரமாக விளைக்கிறதற்கும் நாட்டுகிறதற்கும் மாடுகளுடைய கொம்புகளை வெட்டுகிறதற்கும் இதுமுதலான காரியங்களைச் செய்கிறதற்கும், அமாவாசிகாலத்துக்குப் பிற்பாடு நன்காலமாயிருக்குமென்று அனுபவசித்தியினாலே கண்டுபிடிக்கிறோம். இதற்குக் காரணமேதென்றால் அமாவாசி காலத்திலே சந்திரன் சூரியன் கிட்டவிருக்கிறபோது அதிகமான பிரகாசம் உஷ்ணமுதலான நற்குணங்களைத் திரளாய்ச் * சுவிகரிக்கிறதினாலே அதற்குப் பிற்பாடு புஷ்பங்களுக்கும் செடிகளுக்கும் மரங்களுக்கும் மனுஷருடைய சரீரங்களுக்கும் அதிகமான பலத்தைக் கொடுக்கின்றது. அந்த நியாயத்தினாலே கிளிஞ்சில்களும் சங்குகளுமாயிருக்கிற பூச்சிகளும் நத்தை உள்ளச்சிகளிலிருக்கிற பூச்சிகளும் சிப்பிகளிலே முத்துக்களைக்கொண்டிருக்கிற பூச்சிகளும் அமாவாசி காலத்திலே வர்த்தித்துப் பவுர்ணமிக்குப் பிற்பாடு குறைந்துபோம். இதன்றியேயெலும்புகளுக்குள் உண்டாகிய மூளைகளும் நரம்புகளுக்குள் உண்டாகிய சீவஅக்கினியுந் தாதுக்களிலே யுண்டான விரத்தமும் அபரபக்ஷத்திலே குறையும்

* அங்கீகரிக்கிறது. உபயோகிக்கிறது.

பூர்வபக்ஷத்திலே வர்த்திக்கும். இந்தப் பிரகாரமாக மரங்கள்
முதலான செடிகள் பவுர்ணமிக்குப் பிற்பாடுவெட்டினால் உளு
த்துப்போமென்று அனுபவசித்தியினாலே கண்டுபிடிக்கிறோம்.
இப்படியே அமாவாசி காலத்திலே சரீரத்திலுண்டான விஷ
சலங்கள் மிகவும் அதிகரிக்கிறதினாலே கடினமருந்துகளைக் கு
டிக்கிறது நியாயமல்ல. கடைசியிலே சந்திரனுக்கும்பிரபஞ்சத்
தில் அடங்கியிருக்கிற வஸ்துக்களுக்கும் உண்டாகிய ஐக்கத்
தையுந்தொந்தத்தையும்விட்டுச்சகல சாஸ்திரங்களுக்கும்அற்
புதமாகத் தோன்றுகிற ஒருவிசேஷத்தை யெவ்வளவாகிலும்
வெளிப்படுத்துகிறோம். அதேதெனில்:-சமுத்திரத்தினுடைய
பெருக்குக்கும் வடிவுக்குந் திங்கள் காரணமாயிருக்கிறதென்
றறிவீர்களாக. ஆனால் சமுத்திரத்தினுடைய ஆச்சரிய விசே
ஷங்களை நாமினிமேல் வெளிப்படுத்துகையில் விஸ்தீரணமா
ய்ச் சொல்லப்போகிறதினால் இந்த யர்த்தமானத்தை யிங்கே
இம்மாத்திரந் தெரிவித்ததுபோதும். இந்தச் சமையத்திலே
அமாவாசி பவுர்ணமி காலங்களிலே இத்தனை அதிசயமான
விசேஷங்கள் சம்பவிக்கிறதென் றிருக்கும்போது அமாவாசி
பவுர்ணமி வருகிறதை யேதென்றறியக் கடவீர்களாக.

இயாதொரு நக்ஷத்திரத்தின் கீழே சந்திரனுஞ் சூரியனு
ங்கூடி அமாவாசி வந்ததென்று விசாரித்துக் கொள்ளுங்கள்;
சந்திரனானது தன்னுடைய வளையத்திலே நடந்து சக்கரத்
தைச் சுற்றிக்கொண்டு முன்னிருந்த ஸ்தலத்துக்கு வருகிறத
ற்கு 27 நாளும், 7 தாசும், 43 விபித்தமும், 4 விலிபித்தமும்
செல்லும். ஆனாலதுக்குள்ளே சூரியனானதுசுபாவ நடையி
னாலே மேற்கேயிருந்து கிழக்கே போனதினால் சந்திரன் சூரி
யனோடேமுழுதுஞ் சேர்ந்திருக்கிறதற்கு 2 நாளும், 5 தாசும்,
1 விபித்தமும் நடக்கவேண்டும். ஆனபடியினாலே ஒரு அமா
வாசிக்கும் வேறே அமாவாசிக்கும் 29 நாளும், 12 தாசும், 44
விபித்தமுஞ் செல்லும். ஆகையினாலே அமாவாசிக்கும் பவுர்
ணமிக்கும் 14 நாளும், 18 தாசும், 22 விபித்தமுஞ்செல்லும்.
இப்படிப்பட்ட கணக்கில் மோசம்போகாதபடிக்கு அறியவே
ண்டியதாவது: சந்திரனுடைய சுபாவமான நடைமாத்திரம்
இங்கே பார்த்தோம். ஆனால் பூலோகத்திலிருக்கிற மனுஷருக்
குப் பற்பல காரணங்களினாலே வெவ்வேறு விதமாகச் சந்திர
ன்காண்பிக்கிறதினா லுண்டாகிற வகைக்கு இந்தக் கணக்கு
முழுதுஞ் சரியாயிருக்கமாட்டாது. சுபாவமெனாக்குச் சரி



யாயிருக்கும். இந்தவிகாரங்களை யெல்லாமறிய மனதுண்டா
னால், மகாவிஸ்தீரண பிரபந்தங்களை யெழுதவேண்டியிருக்
கும். ஆகையினாலே சந்திரகிராணத்தினுடைய வகைகளையெ
ல்லாஞ் சுருக்கத்திலே சொல்லிக்காட்டுவோம். அதெப்படி
யென்றால்:—

பிரகாசமுள்ள சூரியனுடைய கதிர்களானது கண்டிப்பு
ள்ள பொருட்களின்பேரிலேபட்டால் அவசியமாய் நிழலுண்
டாம். ஆனபடியினாலே சூரியனுடைய கதிர்பூமியிலே விழுகி
றபோது அவசியமாய்ச் சூரியனுக்கெதிராக விருட்டுள்ள நிழ
ல்பிறக்கும். பின்னையும் பூமியானது மகாவிஸ்தீரணமாயிருக்
கிறதினாலேயும் உண்டை ரூபமாயிருக்கிறதினாலேயும்எதிரான
ஆகாசத்திலே வட்டரூபமாக வுருக்ஷியாய்ப் பண்ணப்பட்ட
கோபுரம்போலே யடிபெருத்து நுனிசிறுத்து அநேகமாயிரங்
காதவழிக்கப்பாலே கிழற்புறப்பட்டுப்போய் விழுமென்கிறது
நிச்சயமாகும். இதன்றியே சூரியனானது கிராணசக்கரத்தில்
அங்கங்கே பிசகாமல் செவ்வையாய்நடக்கிறதினாலே சூரியனு
டைய கதிருக் கெதிராகப் பிறக்கிற பூமியின்நிழல் அந்தச்சூ
ரிய சக்கரத்திலேதானே யெதிரான சக்கரத்திலே படாதிருந்
தாலும் அதற்குச் செவ்வையாய்ப் போய்விழும். ஆனபடியி
னாலே சந்திரனானது கிராணசக்கரத்துக்குக்கீழே செவ்வை
யாயிராமற்போனால் கிராணம் வரக்கூடாது. ஆனால்சந்திரனு
டைய வளையம் சூரியனுடைய கிராண சக்கரத்துக்குச் சாய்
ப்பா யிருக்கிறதினாலேயும் இரண்டு விடங்களிலே மாத்திரஞ்
சேர்ந்திருக்கிறதினாலேயும் இவ்விரண்டு சேர்க்கைகளிலே மா
த்திரஞ் சந்திரகிராணம் வரலாமொழியமற்றப்படியல்ல. அவ்
வண்ணமே ஒரு சேர்க்கையிலே சூரியனிருக்க எதிர்த்து
நிற்கப்பட்ட வேறே சேர்க்கையிலே சந்திரனிருக்க இப்படிப்
பட்ட நேர்த்திலே சந்திரனிருக்கிற ஸ்தலத்திலே பூமியினு
டைய நிழல் செவ்வே விழுந்திருக்கிறதினாலே அவசியமாய்
முழுக்கிராணமா யிருக்கும். பின்னையுஞ் சந்திரனானது அந்
தச் சேர்க்கைக்கு 15 பாகத்துக்குள்ளாக விருக்கமட்டும் பவு
ர்ணமி வந்துதானால் கிராணமெவ்வளவாகிலு மிருக்கலாம்.
10 பாகத்திலே பவுர்ணமி வந்துதானால்நிச்சயமாயிருக்கலாம்.
இதற்குள்ளே யேற்றக்குறைச்சல் வந்தாலும் அத்தனை யதிக
மாய்ச் சந்திரன் மறையலாம். கடைசியிலே சந்திர கிராணத்
துக்கடுத்த வேறே விசேஷமேதென்றால்:—

முதலாவது.—சந்திர கிராணமானது சூரியனாலே சந்திரனுக்கு வந்த பிரகாசமில்லாத் தன்மையா யிருக்கிறது.

2-வது.—சந்திர கிராணம் இரவிலே மாத்திரங் காண்பிக்கிறது.

3-வது.—பவுர்ணமி காலத்திலே மாத்திரம் வருகிறது.

4-வது.—எந்தத் தேசத்தாருக்குச் சந்திர கிராணத்தில் இரவாயிருந்ததோ அவர்களெல்லாருங் கிராணத்தைக் காண்பார்கள்.

5-வது.—சந்திரகிராணமானது அதின் வளையத்தின் கீழ்ப்பக்கத்திலே பிடித்து மேல்பக்கத்திலே முடியும்.

6-வது.—சந்திர கிராணமானது எத்தனைநேர மிருந்தாலும் 4 தாசுக்குமே லதிகமா யிருக்கமாட்டாது.

7-வது.—சூரியகிராணத்தின் கணக்கைப்பார்க்கச் சந்திரகிராண மொருசீமையிலே தானே யதிகமான இலக்கமுண்டாயிருக்கும்.

8-வது.—சந்திரகிராணம் சக்கரங்களுடைய சேர்க்கையிலே யுண்டாயிருந்தால் ஒன்றில் அதற்கு முன்னேபோன அமாவாசியில் சூரியகிராண மெவ்வளவாகிலு மிருந்திருக்கும் ஒன்றில் பிற்பாடு வரப்போகிற அமாவாசியிலே சூரியகிராண மிருக்கவேண்டியது.

9-வது.—வருஷத்துக்குள்ளே யிரண்டுவிசை சந்திரகிராண மிருக்கலாம் சுபாவமாய் ஆறுமாதத்திலே வரவேணும். ஐந்தாம்மாதத்திலே வந்துதானாற் சின்னதா யிருக்கவேணும். ஏழாமாதத்திலே ஒருக்காலும் வருவதில்லை.

10-வது.—சந்திரன் சேர்க்கைக்குத் தூரமாயிருந்தால் கிட்டின அமாவாசிகளிலொன்றில் சூரியகிராணமாயிருக்கும்.

11-வது.—ஒன்றின் பிறகே யிரண்டு அடுத்தாப்போலே வருகிற பவுர்ணமியிலே யொருமிக்க எந்தச் சீமைகளிலேயும் இரண்டு சந்திரகிராண மிருக்கமாட்டாது.

12-வது.—மூன்றுவிசை மாத்திர மொருவருஷத்திலே சந்திரகிராணம் வரலாமென்கிறதற்குத் தப்பாது. இனி பூதியங்களுடைய விசேஷத்தை வருகிற அதிகாரத்திலே சொல்லிக் காட்டுவோம்.



## ரு-ம் அதிகாரம்.

## பூதியங்களுடைய விவரம்.

நக்ஷத்திரங்களுடைய சக்கரங்களையும் கிரகங்களுடைய மண்டலங்களையும் அவைகளுன்றுள் சம்பந்தமாயிருக்கிற ஆச்சரிய விசேஷங்களையும் வெளிப்படுத்தினதற்குப் பிற்பாடு பிரபஞ்சத்துக்குள்ளே அடங்கியிருக்கிற வஸ்துக்களுடைய சுபாவங்களையும் குணங்களையும் அறிவிக்கிறது கிரமமுள்ள நியாயமாயிருக்கின்றது. ஆகையால் முந்தமுந்த பூலோகத்திலுண்டான வஸ்துகளுக்குப் பூதியங்கள் பிரதானகாரியங்களா யிருக்கிறதினாலே அந்தப் பூதியங்களுடைய சுபாவத்தையும் ஆச்சரியமான குணகுணங்களையும் தெரியப்பண்ணத்தக்கதாகப் பிரயாசப்படுவோம். அதெப்படியென்றால் பூதியமானது வெவ்வேறு விதமான பற்பல பாவகுணங்களைக் கொண்டிருக்கிறதுமாய் அதினுடைய அங்கிஷங்களைக் கெடுக்கத்தக்கதாக எத்தனை பிரயாசப்பட்டாலு முன்னிருந்த அந்தகுணங்களை எப்போதும் போலவே சுவிகரித்துக் கொண்டிருக்கிற பொருளுமா யிருப்பதுதான் பூதியமென்று சொல்லப்படும். அதெப்படியென்றால் தண்ணீரென்று சொல்லப்படுகிற பூதியமானது நெருப்பினுடைய வுஷ்ணத்தினாலே யெத்தனை பிரிவாய்ப் பிரிந்துபோனாலும் அக்கினியினுடைய வுக்கிரத்தினாலே ஆகாயத்திற் புகைபோலேறினாலும் அதினுடைய அங்கிஷங்களெல்லாம் மறுபடியுங்கூடி யெப்போதும்போலே தண்ணீராய்ப்போம். இப்படிப்பட்ட பூதியங்கள் நாலுமாத்திர முண்டென்று சாஸ்திரிகள் நிச்சயிக்கிறார்கள். அந்தப்பூதியங்களுடையபேரேதென்றால், பிரிவு, அப்பு, தேயு, ஆகாயம், ஆக இந்த நாலுபூதியங்களும் சகலமான வஸ்துக்களையுங் கூட்டுகிறதற்கு ஏற்றகருவிகளா யிருக்கிறதினாலேயும் பூமி, தண்ணீர், ஆகாயம், அக்கினி முதலானவைகள் சகலபொருட்களையும் நவமாய்ப் பிறப்பிக்கிறதற்குக் காரணமா யிருக்கிறதினாலேயும் பூதியங்கள் 4 மாத்திரமுண்டென்று நியாயத்தின்படியே சொல்லலாம். பின்னையுஞ் சகலவஸ்துகளும் அழிந்து போகிறபோது கடைசியிலே பூதியங்களாய்ப் போகிறதினாலே அந்த நாலு பூதியங்களினாலேதானே கூட்டப்பட்டதா யிருக்கிறதென்று தப்பா தடையாளமா யிருக்கின்றது. இப்பிரகாரந்தானே மரத்தைவெட்டி நெருப்பிலே போட்டால் அதிலே நின்

றுபுறப்படுகிற ஈரமுள்ள புகையானது, தண்ணீரினுடைய அடையாளம். ஆகாயம் சுவாலையோடே கலந்திருக்கின்றது. ஆனபடியினாலே ஆகாயத்துக்கும் நெருப்புக்குந் தப்பில்லாத இலக்ஷணம். கடைசியிலே அடுப்பிலே கிடக்கப்பட்ட சாம்பலானது பூமியினுடைய சுபாவத்தைநிதானமா யொப்புவிக்கிறது. இப்படியேமற்றுமுண்டான காரியங்களின்விஷயத்திலே யோசிக்கலாம். ஆனபடியினாலே சகலமான பொருட்களிலும் உண்டான குணங்களிற் பிரதான நாலுகுணங்கள் வெவ்வேறே விசேஷங்களைக் காண்பிக்கிறதற்குக் காரணமாயிருக்குமாப்போலே சகலமான கண்டிப்புள்ள வஸ்துக்களையுங் கூட்டப்படுகிறதுக்கு நாலுபூதியங்களும் நாலுபிரதான தளவாடங்களாயிருக்கிறதென்று சொல்லவேண்டி யிருக்கிறது. இந்த நாலு பிரதான குணங்களுக்கும் பேரேதென்றால்; உஷ்ணம், குளிர், உலர்தல், ஈரம், ஆக 4 இந்நாலுகுணங்களும் 4 பூதியங்களிலே யெப்படி விளங்கிற தென்றால், பிரிதிவு-உலர்தலும், குளிருமாயிருக்கும். அப்பு-குளிரும், ஈரமுமாயிருக்கிறது. ஆகாயம்-உஷ்டணமும், ஈரமுமாயிருக்கிறது. அக்கினி உஷ்டணமும், உலர்தலுமா யிருக்கிறது. இதிலே பராபரவஸ்துவுடைய அளவில்லாத விமரிசையையுங் கனாகாணாத சாமர்த்தியத்தையுங் காணலாம். அதெப்படியென்றால், இந்த 4 பூதியங்களுந் தங்களுக்குள்ளே விரோதமா யிருந்தாலும் அந்தவாஸ்தவத்தினாலே லோகங்கெட்டுப்போகாம லிருக்கிறதுந் தவிர உலகமெங்கும் நன்றாயிருக்கிறதற்கு சர்வத்துக்கும்வல்லவரா யிருக்கிறஆண்டவர் இந்த 4 பூதியங்களையும் அனஸ்தலங்களிலே ஸ்தாபித்தார். அவ்வண்ணமே யொவ்வொரு பூதியதுக் கிரண்டுபிரதான குணங்கொண்டிருக்கச்சே யொரு குணத்தினிமித்தமாக வேறேகுணத்துக்குச் சேரலாமென்கிறதினாலே யிந்தச் சேரலான குணங்களைக்கொண்டு மட்டில்லாத ஞானத்தைக் கொண்டிருக்கிற சர்வேஸ்வரனானவர் 4 பூதியங்களை நடத்திக்கொண்டு வருகிறார். இந்த மேனையாகப் பூமி குளிரும் உலர்தலுமா யிருக்கிறதினாலே யெல்லாத்துக்கும் அஸ்திவாரமாக ஸ்தாபித்து அதற்கருகில் குளிரும் ஈரமுங் கொண்டிருக்கிற தண்ணீரைக் கட்டளையிட்டு அந்தத் தண்ணீரின்கிட்ட ஈரத்தையு முஷ்ணத்தையுங் கொண்டிருக்கிற ஆகாயத்தை யிருக்கப்பண்ணி யெல்லாத்துக்கும் மேலானவுஷ்டணத்தையு முலர்தலையுங் கொண்டிருக்கிற நெருப்பைக் கற்பித்தருளினார். இந்தப்பிரகாரமாகப் பூதியங்கள்கலந்



திருந்தாலுஞ் சமாதானமா யிருக்கிறதினாலே யாதொரு பொல்லாப்புஞ் செய்யாமல் உலகத்திலே நன்மையுண்டாகிறதற்கு அவைகள் காரணமாயிருக்கிறது. ஆகையால் இந்த 4 பூதியங்களின் விஷயத்தி லறியவேண்டின ஆச்சரியமான விசேஷங்களை மனதிலே தரித்துக்கொண்டு அதுநிமித்தமாகச் சர்வேஸ்வரனை ஸ்தோத்திரம் பண்ணக்கடவோம்.

அதெப்படியென்றால்பூதியங்களுக்குள்ளே சிலதுதனது சுபாவ சம்பந்தமாயிருக்கிற விர்த்திகளைச் செய்கிறதற்கு அத்தியந்த பலமும் மகாசுறுசுறுப்பும் கொண்டிருந்தாலும் அதற்கு விரோதமான மற்றொருபூதியத்தை யுண்டாக்கிறதற்கும் எதிர்த்து யுத்தம்பண்ணுகிறதற்கும் பலமில்லை.

வேறே சில பூதியங்களோ வென்றால் எதிராக நிற்கிறதற்கும் பின்வாங்காமல் எப்போதும் ஒரு கண்டசீரா யிருக்கிறதற்கும் சுபாவ பலத்தைக் கொண்டிருந்தாலும் ஒருகிரியையாகிலுஞ் செய்கிறதற் கவகாசமில்லை. அதற்குத் திருஷ்டாந்தமாக:—

அக்கினியானது சகல வஸ்துக்களையும் எரிக்கிறதற்கு மகா சத்துவத்தைக் கொண்டிருந்தாலும் அதினுடைய ஆரபாரமெல்லாம் அமர்த்துகிறதற்குக் கொஞ்சந் தண்ணீர்மாத்திரம்போதும். இப்படியே சுடுகிறதற் குண்டான பலத்தைப் போலச் சலத்தோடே யெதிர்க்கப் பலமுண்டானால் அவசியமாய் உலகமெல்லாங் கெட்டுப்போம்.

பூமியோவென்றால் வஸ்துவென்னப்பட்ட தெல்லாத்தோடேயு மெதிர்க்கிறதற்கும் அழிவில்லாமலுஞ் சேதமில்லாமலும் பின்வாங்காமலு மொருகண்டசீரா யெப்போதும் இருக்கிறதற்கும் வல்லமையுடைத்தானதா யிருந்தாலும் பலவந்தமாய்[illegible]னது சுபாவத்தினாலொன்றுஞ் செய்யமாட்டாது.

இதற்கப்பா லறியவேண்டியதாவது:—இப்படிப்பட்ட நாலுபூதியங்களும் சர்வேஸ்வரன் தங்களை ஸ்தாபித்த நிலைமைகளிலே சேருகிறதற்கு எப்போதுஞ் சொல்லப்படாத அபேக்ஷையுள்ளதாகக் காணப்படுகிறது. அதெப்படியென்றால் ஆகாயத்தில் எத்தனை பலத்தோடே கல்லுகள் குண்டுகள்முதலான கனமுள்ள வஸ்துக்க ளெறியப்பட்டாலுந் திரும்பச் சற்றுநேரத்துக்குள்ளே தனது ஆதாரமான பூமிமேலேவந்து விழுகிறதுமல்லாமல் எவ்விடமதிகமாய்க் கிட்டியிருந்ததோ அவ்விடத்திலே சீக்கிரத்தில்விழும். இத்தன்மையாகப் பரிபூ

ரணமழை வருஷித்ததற்குப் பிற்பாடு அந்தச் சலம் உயர்ந்த
பருவதங்களிலேநில்லாமற் பூமியிலேவிழுந்து வாய்க்கால்களி
லோடி ஆறுகளிலேசேர்ந்து கடைசியிலே தனது நிலைமையா
னசமுத்திரத்திலே கலந்துநிற்கும். இவ்விதமாக ஆகாயம்பூமி
க்குள்ளே யகப்பட்டாற் பூமியை யதிரப்பண்ணி மேலாகத்
திறந்துகொண்டு தனது நிலைமைக்குச் சேரும்பொருட்டாகப்
பறந்துபோம், அக்கினியோவென்றால் ஆகாசத்திலேயித் தன
துமண்டலத்துக்குச் சேருவதற்கும் மற்றுமுள்ள பூதியங்க
ளைப்பார்க்க வதிகமான சுறுசுறுப்போடேயும் பலவந்தத்தோ
டேயும்ஓடும். இத்தொகைப்பட்டவுன்னதமான விசேஷங்க
ளை ஒருமகாத்துமாவானவர் தியானிக்கும் வேளையில் திருவு
ளம் பற்றினதாவது:-"இதேது புத்தியில்லாத வஸ்துக்களெல்
லாந் தனது நிலைமைகளிலே சேருகிறதற்குஇத்தனை ஆவலைக்
கொண்டிருக்கப் புத்தியுள்ள மனுஷன் மாத்திரந் தனது நிலை
மையாகிய மோக்ஷத்தை யனுபவிக்கத்தக்கதாக வுண்டாக்க
ப்பட்டவனாயிருந்தும் இதைச் சட்டைபண்ணாமல் தன்னு
டைய ஆத்துமத்தைக் கெடுக்கிற அழிந்துபோகிற லௌகீக
சுகசெல்வங்களைத் தேடிக்கொண்டு திரிகிறது எவ்வளவு பயங்
கரமுள்ளதா யிருக்கிறது என்று ஆச்சரியப்படுகிறார்.

இப்போதைக்குப் பூதியங்களுக்குள்ளே எந்தப் பூதியம்
உத்தமமாயிருக்கிறதென்று அறியவேணுமென்றால் அதுகளை
யெல்லாங் கிரமத்தின்படியே வொவ்வொரு பூதியத்துக்கான நி
யாயங்களைச் சொல்லிக்காட்டுவோம். அதெவ்வாறெனில்:—

1-வது.—பூமியை நினைக்கும்போது அதினாலே மனுஷ
ருக்குண்டாகிற பிரயோசனத்தை முழுதுங் காண்போமாகில்
இதுமற்றப் பூதியங்களைப்பார்க்க வுத்தமமா யிருக்கிறதென்று
சொல்லக் கூடுமானதா யிருக்கின்றது. அதெப்படியென்றால்
பிரிதிவானது மனுஷருக்கு எவ்வளவாகிலும் பொல்லாப்பு
வருத்திவியாமல் எப்போதும் எண்ணப்படாத நன்மைகளு
ண்டாகிறதற்குக் காரணமா யிருக்கிறது.

2-வது.—அப்புவானது வருஷம் பரிபூரணமாய் வருஷி
க்கிறபோது அந்தத்தண்ணீர் மிகுதியினாலே பயிர்களும்மரங்
களுங் கெட்டுப்போய் சாத்தினாலே யெண்ணப்படாதமனுஷ
ருக்கும்மிருகங்களுக்கும் பற்பலவியாதிகளை வருத்திவிக்கும்.

3-வது.—ஆகாயமானது பெரும்புயலடிக்கும்போது
பெருங்கோட்டைகள் போலேயிருக்கிற விஸ்தீரணமான கப்



பல்களைச் சமுத்திரத்துக்குள்ளே யமுந்தப்பண்ணி பூமிமே
லேயுண்டான வுயர்ந்த விருக்ஷங்களை முதலாய் வேரோடுபிடு
ங்கி வீடுகளை அடியோடே பறக்கடித்துப் பெரிய மதில்களை
யும் அரமனைகளையுந் தகர்த்து மகா நேத்தியான வுப்பரிகை
களையெல்லாம் நிர்மூலம்பண்ணி மனுஷரையெல்லாம் பாதா
ளங்களிலே தள்ளிவிட்டு இந்தப்படியே பிரபஞ்சத்திலே யட
ங்கின வஸ்துக்களையெல்லாம் நாசம் பண்ணுகிறுப்போலேகா
ண்பிக்கின்றது. பலவந்தத்தினாலே யசைக்கப்பட்ட ஆகாயம்
இத்தனை பயங்கரமான சேதத்தை வருத்துவிக்கின்றது.

4-வது.—அக்கினியோ வென்றால் இவைகளெல்லாவற்
றையும் பார்க்க அகோரமான பொல்லாப்புகளுக்குக் காரண
மாயிருக்கின்றது. அதெப்படி யென்றால்:—நெருப்பானது
மகா விஸ்தீரணமான பட்டணங்களை யெல்லாஞ் சற்றுநேரத்
துக்குள்ளே சாம்பலாக்கி வெகு விசாலமான வனங்களை யெ
ல்லாந் தகனித்துப் பூமியைத் தனது அதிர்ச்சியினாலே நடுங்
கப்பண்ணிப் பயங்கரமான இடிகளினாலே பருவதங்களையும்
உப்பரிகைகளையும் பிளக்கப்பண்ணி மனுஷரையும் மிருகங்
களையும் எரித்து ஆகாயங்களைப் பயங்கரமான சத்தங்களி
னாலேயும் மின்னல்களினாலேயும் நடுநடுங்கச் செய்து பிரபஞ்
சத்தி லடங்கியிருக்கிற வஸ்துக்களை யெல்லாம் நீறாக்கிறுப்
போலே காண்பிக்கிறது. இப்படியே 4 பூதியங்களும் உல
கத்துக் கபாயம் வருவிக்கத் தக்கதா யிருந்தாலும் அவைக
ளால் அநேக நன்மைகளும் உண்டாகின்றன. அதெப்படி
யென்றால்:—

முதலாவது.—பூமியோவெனில் மனுஷருக்கு அற்பசே
தத்தையாகிலும் வருத்திவியாமல் அவர்களை யிரவும்பகலும்
இரக்ஷித்துக்கொண்டு வருகிறதுந்தவிரப் பார்வைக் கலங்கா
ரமான புஷ்பங்களையும் விநோதங்களையும், இரத்தினங்களை
யும், திரவியங்களையும், முகருகிறதற்குக் கஸ்தூரி புனுகு கந்
தவெடி முதலான சுகந்தங்களையும், [illegible]ங்களையும் ஆகா
ரத்துக்கு வேண்டிய ருசிகரமான காய் கனிகளையும் உசித
மான பதார்த்தங்களையும் பராமரித்துக்கொடுக்கின்றது. இது
வுந்தவிர மனுஷர் நடந்தாலுஞ் சரி இருந்தாலுஞ் சரி எப்
போது மவர்களைச் சுமந்துகொண்டிருக்கின்றது. அப்படிப்
பட்ட மனுஷர் உயிரோடேதிரிகிறபோது இத்தனை நன்மைக
ளைப் பண்ணுகிறது மல்லாமல் அவர்களுடைய ஆத்துமஞ்

சரீரத்தைவிட்டுப் பிரிந்தவுடனே தன்னிடமா யிருக்கிற அந்தச் சரீரத்தைத் தனது கர்ப்பத்திலே வைத்துப் பதனம் பண்ணிக்கொள்ளுகின்றது. இத்தொகைப்பட்ட நியாயங்களை யெல்லாங்கேட்டு எது வுத்தமமான பூதியமென்று நியாயத்தீர்வை சொல்லுகிறதற்கு முன்னே மற்றுமுள்ள பூதியங்களைப்பற்றிச் சொல்லப்போகிற நியாயங்களையும் அறியவேண்டியது அவசியமா யிருக்கின்றது. அதெப்படி யென்றால்:—

2-வது.—அப்புவானது மனுஷருக்குப் பிரதானபானமா யிருக்கிறதினாலே அது லோகத்திலில்லாமற்போனால் மிருகங்களு மனுஷரென்னப்பட்ட யாவரும் பிழைக்கப் போகிறதில்லை யென்பது பிரசித்தமான சத்தியமாகும். பூமியிலே நின்று ஜெனிக்கிற மரங்களுஞ் செடிகளும் பயிர்களு மற்றுமுள்ள வளர் சிவனைக் கொண்டிருக்கிற எல்லா வஸ்துக்களும் ஜலமில்லாமற்போனால் நில்லாது. மழையில்லாத சமயத்தில் எல்லாம் சாகிறாப்போலிருக்கின்றதே; வருஷம் வருஷித்தவுடனே யெல்லாவற்றிற்கு முயிர்வருகிறாப்போலாகுதே. உயிர் பிரதானமாயிருக்கும்போது இப்படிப்பட்ட வுயிர் நிற்கிறதற்கும் நவமாய் விர்த்திக்கிறதற்கும் மிகவு முதவுகிற தண்ணீர் பிரிதிவைப்பார்க்க வதிக பிரயோசன முள்ளதென்று காண்பிக்கவில்லையோ? இதனோடு சமுத்திரத்தினாலே வருகிற பிரயோசனத்தைக்கூடக் கூட்டினாலென்ன சொல்லுவோம்.

3-வது.—இப்போது ஆகாசத்தினுடைய நன்மைகளைக் கொஞ்சத்துக்குள்ளே சொல்லிக்காட்டுவோம். முந்தமுந்த மனுஷர் பிறந்தவுடனே மூச்சு விடுகிறதற்கும், மூச்சு வாங்குகிறதற்கும் அவசியமாய் வேண்டியிருப்பது ஆகாசந்தானே. இந்த ஆகாச மில்லாமற் போனா லொருக்ஷண முதலா யுயிரோ டிருக்கமாட்டோம். பூமியானது நல்ல ருசிகரமான ஆகாரங்களைக் கொடுத்தாலுந் தண்ணீருச்சிதமான பானமா யிருந்தாலும் உயிருக் கவசியமாய் வேண்டிய சுவாசம் விடுகிறதற்கு ஆகாச மில்லாமற்போனால் போசன பானங்களினாலாகிற பிரயோசனமென்ன? ஆகார பானமில்லாமல் அநேக நாளிருக்கலாம்; சுவாசமில்லாமற் சற்றுநேர மிருக்கக்கூடாது. இது தவிர ஆகாசமானது பிழைக்கிறதற்கு வேண்டியிருக்கிறது மல்லாமல் சகல வஸ்துக்களும் நன்றா யிருக்கிறதற்கு முதலா யவசியமாய் வேண்டியிருக்கின்றது. அவ்வண்ணமே ஆகாசமில்லாமற்போனால் எல்லாம் இருட்டாயிருக்கும். அதேதென்றால் பிரகாசமானது சகலமான வஸ்துக்கள் பேரிலேயும் வியாபிக்கிறதற்கு ஆகாசம் வழியாயிருக்கும்.



4-வது.—கடைசியிலே நெருப்பினுடைய பிரயோசனத்தைச் சரிவரவிசாரித்தோமானால் அது மனுஷருக்கும் மற்ற வஸ்துக்களுக்கும் வெகு அவசரமான பொருளென்று எளிதாய்க்கண்டு பிடிக்கலாம். அவ்வண்ணமே இருதயமானது அக்கினிபொருந்தி யிருக்கப்பட்ட அங்கிஷங்களை யெப்போதுந் தனது இரண்டு பைகளிலே தரித்திருக்கிறதினாலேயும், அந்த வுஷ்ணத்தினாலே யிரத்தத்துக்கும் அந்த விரத்தத்தைக்கொண்டு சரீரத்தினுடைய சகல அவயவங்களுக்கும் வேண்டிய பலத்தைக் கொடுக்கிறதினாலேயும் இந்த வுஷ்ணதிக்கஞ் சரீரத்திலே யில்லாமற்போனால் சீக்கிரத்திலே யழியப்படுமென்கிறதினாலேயும் அவசியமாய்த்தேயு மனுஷருக்கு வேண்டியிருக்கிறதென்று நிச்சயமாகும். இல்லாமல் அக்கினி யில்லாமற்போனால் சமைக்கிறதெப்படி? சகல கிரியைகளை நிறைவேற்றுகிறதெப்படி?

இப்படியே ஒன்றுக்கொன்று தோல்வியிராத இந்த 4 பூதியங்களினாலேயும் மனுஷருக் கித்தனை நன்மைகள் வரும்போது இவைகளை மனுஷருக் குபகாரமாகக் கட்டளைபண்ணின பராபர வஸ்துவை நன்றியறிந்த மனதோடே தோத்திரம் பண்ணவேண்டிய யிருக்கிறது மல்லாமல் புத்தியில்லாத இந்நான்கு பூதியங்களுந் தன்தன் நிலையை யடைவது போல நாமும் நமது சொந்த நிலையாகிற மோக்ஷாநந்தத்தை யடையதக்கதாக இவைகளையெல்லாம் படைத்த கர்த்தருமாய் மட்டில்லாத பலத்தையும் அளவில்லாத தயாபத்தையுங் கொண்டவருமா யிருக்கிற ஆண்டவரை ஸ்துதிக்கவேண்டியவர்களா யிருக்கிறோம். அதை யோருவமையினாலே தெளியப்பண்ணலாம். அதெப்படி யென்றால்:—ஓர் இராயனானவன் ஒரு நல்ல அரமனையைக் கட்டி அதிலே யிரண்டு இரத்தின தீபங்களையும் பட்டுப்பட்டா வளிகளையும் வைத்து விலையேறப்பெற்ற நவரத்தினங்களையும் அங்கங்கே பதித்து, அந்த அரமனையிலே யொருவனை நிறுத்தி அதிலே யுண்டான பாக்கியங்களையெல்லாம் அவனுக்குக் கொடுத்திருக்க அவன் இதெல்லாவற்றையுந் தந்த இராயனைச் சட்டை பண்ணாமலும் நினையாமலும் அவனுக்கான ஆசாரங்களைப் பண்ணாமலும் அந்தப் புத்தியில்லாத தீபங்களையும் ஆகார பானங்களை

யுங் கும்பிட்டு நமஸ்காரம் பண்ணினால் புத்திக்கும் நியாயத்
துக்கும் ஒவ்வாத அக்கிரமமும் அநியாயமும் பயித்தியமும்
அனாசாரமுமாயிருக்குமென்று யாவரும் ஒப்புக்கொள்ளவே
ண்டிய ஞாயந்தானே. அத்தன்மைபோல இராசாதிராசனா
யிருக்கிற பராபர வஸ்துவானவர் மனுஷனையிரக்ஷிக்கத்தக்க
தாக 4 பூதியங்களையும் உண்டாக்கி அவைகளாலேயுண்டான
திரவியங்களையும் விநோதங்களையும் ஆகார பானங்களையும்
உபகாரமாகக் கட்டளையிட்டதற்குப் பிற்பாடு நாமவருக்கு
நன்றியறியாதவர்களாயிருந்துசர்வலோகங்களையும் அவைகளி
லேயுண்டான வஸ்து வென்னப்பட்டதெல்லாவற்றையுமொரு
வார்த்தையினாலே சிருஷ்டித்தவருமா யிரக்ஷிக்கிறவருமாயி
ருக்கிற சர்வேஸ்வரனைப் பிறக்கணித்து அவருக்குச் செய்யத்
தக்க வுத்தம ஆராதனை பண்ணாமலும் மனதிலே முதலா
யவரை நினையாமலும் அவர் நமக்குபகாரமாகத் தந்தருளின
புத்தியில்லாத வஸ்துக்களைக் கும்பிட்டு நமஸ்காரம் பண்ணி
னால் மகா பாவதோஷமுமாய் துரோகமுமா யிருக்கிறதுந்
தவிர அப்படிப்பட்ட பாவிகளுக்கு நீதிபரரான கர்த்தர் தம
து மட்டில்லாத நீதியினாலே ஆக்கினை யளிப்பாரென்கிறதற்
குத் தப்பாது. இதைப்பற்றி யினிமேல் வரப்போகிற அதிகா
ரங்களிலேயும் ஆண்டவருடைய பலமும் விமரிசையும் அதிக
மதிகமாய் விளங்கும் பொருட்டாக 4 பூதியங்களையுங் கூடின
மாத்திரம் தனித்தனியே சுவாமியுடைய கிருபாகடாக்ஷத்தி
னாலே வெளிப்படுத்துவோம்:—

## ௩ - ம். அதிகாரம்.

### தேயுவின் விவரம்.

பூதியங்களுடையசுபாவங்களையுங்குணங்களையும்பொது
விலே ஆராய்ந்து பார்த்ததற்குப்பிற்பாடு அவைகளைத்தனித்த
னியே விசாரித்து உண்டாகிற சந்தேகங்களை நிவாரணம்பண்
ணக்கடவோம். அதெப்படியென்றால்:—

பூதியங்களுக்குள்ளே தேயுவானதுமகா சுறுசுறுப்போ
டே பற்பல [illegible]களுக்கும் * கிரிஷிகளுக்கும் பிரதான
கைங்கரியமா யிருக்கிறதினாலே முந்தமுந்த அக்கினிக்குச்
சம்பந்தமாயிருக்கிற அநேக ஆச்சரியமான விசேஷங்களை

* தொழில்.



வெளிப்படுத்துவோம். அதெப்படியென்றால். அக்கினியா
னது மகா தீவிரத்தோடேயும் பலத்தோடேயும் இடைவிடா
மல் அசைவாடுகிற அங்கிஷங்களினாலே யுண்டாக்கப்பட்ட
தாயிருக்கின்றது. இப்படிப்பட்ட சிறிய அங்கிஷங்கள் அணுப்
போலே யிருந்தாலும் பற்பல ரூபங்களைக் கொண்டிருக்கி
ன்றது. அவைகளுக்குள்ளே சிலதுகள் உண்டைகளைப்போ
லிருக்கின்றன. சிலதுகள் முக்கோணமா யிருக்கின்றன.

அல்லாமலும் நெருப்பிலே யிரண்டு குணங்களுண்டாயி
ருக்கிறன. முதலாவது, நெருப்பினுடைய அங்கிஷம் சகலவ
கையிலுஞ்சீக்கிரத்தில் அசைவாடுகிறதாயிருக்கிறது. இந்தவி
சேஷத்தைச் சுவாலையிலே பிரத்தியக்ஷமாய்க்காணலாம். மற்
றுமுண்டான சமயங்களிலே கண்ணாலே காணாதிருந்தாலும்
அதினுடைய குணம் போகாதென்று யோசிக்கக் கடவோம்.

மேலும் அக்கினியானது எரிகிறபோது ஐக்கமா யிருக்
கிற வஸ்துக்களை விசேஷமானவகையோடே பிரியப்பண்ணு
கின்றது. ஆனபடியினாலே மேலேயுங்கீழேயும்பக்கங்களிலே
யும் எவ்வெந்த வகையோடேயும் அசைகிறதற்கு உண்டையா
யிருக்கிறதினாலேயும் ஐக்கமான வஸ்துக்களைப் பிரிக்கி
றதற்கு முக்கோண ரூபமானது மிகவும் அனுகூலமாயிரு
க்கிறதினாலேயும் நெருப்பானது முன் சொல்லப்பட்ட ரூபங்
களைக் கொண்டிருக்கிற அங்கிஷங்களினாலேகூட்டப்பட்டதா
யிருக்கிறதென்று நியாயத்தின்படியே சொல்லவேண்டும்.

இப்போதைக்குச் சுவாலைக்கடுத்த விசேஷங்களைவெளி
ப்படுத்துவோம். அதெப்படி யென்றால்; அஸ்திவாரத்திலே
பருமமாயிருந்து போகப் போகக் குறைந்து நுனியிலே கூர்
மையா யிருக்கிறதற்குக் காரணமேதென்றால், இதைநன்றாய்
க்கண்டு பிடிக்கிறதற்குத் தீபங்கொளுத்தி யிருக்கிறதென்று
விசாரித்துக் கொள்ளுங்கள். அப்படிப்பட்ட தீபத்தின் சுவா
லையிலே மூவித அந்தஸ்துகள் உண்டென்று விசாரிக்கக் கட
வோம். முந்தமுந்த அஸ்திவாரத்தில் எண்ணெயினுடைய
சில அங்கிஷங்கள் வெந்ததும் வேகாததுமாயிருக்கிறதினாலே
தீவிரமா உயர எறமாட்டாது. நடுவிலேயிருக்கிறது அதைப்
பார்க்க அதிகமாவெந்திருப்பதினாலே அதிகமா மேலேயேறுகி
றது. கடைசியிலே கொழுந்திலேயிருக்கிற சில அங்கிஷங்கள்
[illegible] யிருக்கிறதினாலே வெளிகா வெகுசீக்கிரத்தோ
டேயேறுகிறது. ஆனபடியினாலே வகுவினாலேயும் பாரத்தி
னாலேயும் இந்தவேற்றுமை காணுகின்றது.

மேலும் சுவாலையானது உருட்சியாய்க் காண்கிறதற்குக் காரணமேதென்றால், ஆகாசமானது எங்குஞ் சூழ்ந்திருக்கிறதினாலேயும் சரியாச் சுவாலையை யிழுக்கிறதினாலேயும் திரண்டு உருட்சியா யிருக்கின்றது. இதன்றியே அப்படிப்பட்ட சுவாலையிலே பலபல வர்ணங்கள் காண்பிக்கிறதற்கு நிமித்தமேதென்றால், அடியிலே நீலவர்ணமாயும் நடுவிலே வெண்மையாயும் கொழுந்து சிவப்பாயும் இருக்கின்றது. அஸ்திவாரத்தில் எண்ணெய்யினுடைய அங்கிஷங்களைச் சுவிகரித்து நெருப்பு தனது அங்கிஷங்களோடு கலந்ததினாலே நீலவர்ணங்காண்பிக்கிறது. நடுவிலே அத்தனை கலப்பில்லாததினாலே சுபாவமா வெண்மை காண்பிக்கிறது. சுவாலையினுடைய நுனி புகையோடே கலந்திருக்கிற படியினாலே சிவப்புவர்ணங்காண்பிக்கிறது. அந்தநியாயத்தினாலே கனநெருப்புகளிலே கட்டைகள் நன்றாய்வேகாமற் புகைகிளம்பும், அந்தப் புகையினுடைய ஆவிகள் சுவாலையோடு கலந்து போகிறதினாலே சிலசமயங்களிற் பக்கங்களில்முதலாய்ச்சிவப்புகாண்பிக்கும். இந்தப் பிரகாரமாக எரிகிற வஸ்துக்கள் சுத்தமாயிருந்தால் பலபல வர்ணங்களைக் காண்பிக்கப்பண்ணும். மகா அழுக்குள்ள அங்கிஷங்களைக் கொண்டிருந்தால் பற்பல நிறங்கள் பிறக்கும். அந்தநியாயத்தினாலேதானே வெள்ளைமெழுகுதிரிமகா சுத்தமா யிருக்கிறதினால் அதினுடைய சுவாலைமகா வெண்மையும் பிரகாசமுமா யிருக்கும். மஞ்சள் மெழுகுதிரியோவென்றால் அசுத்தமுள்ள அங்கிஷங்களைக் கொண்டிருக்கிறதினாலே அத்தனை வெண்மையும் பிரகாசமுமா யிருக்கமாட்டாது.

இது தவிர சுவாலையானது குதிக்கிறதுபோலே யிருக்கிறதற்கும் வெவ்வேறே விதமாக அசைகிறதற்குங் காரணமேதென்றால், எரிகிற வஸ்துவினுடைய அங்கிஷங்கள் சரியா வேகாததினாலேயும் சுற்றிக்கொண்டிருக்கிற ஆகாசம் அசையப்பட்டிருக்கிறதினாலேயும் அப்படிப்பட்ட விகாரம் வருகிறதென்றறிவீர்களாக.

இன்னுமொரு விசேஷமான காரியத்தைச் சொல்லிக்காட்டுவோம், அதென்னவென்றால்சுவாலையினுடைய நடுவிலேயுண்டான அங்கிஷங்கள் சுடுகிறதைப்பார்க்க சுவாலையின் நுனியானது அதிகமான வுக்கிரத்தோடு சுடுகிறதென்று அநுபவ சித்தியினாலே கண்டு பிடிக்கிறோம். இந்த ஆச்சரியமான விசேஷத்துக்குக் காரணமேதென்றால், சுவாலையின் கொழுந்தை ஆகாசமானது மெத்த நெருக்கிறதினாலேயும் சுவாலை



யினுடைய கதிர்கள் அதிகமா ஒன்றித்திருக்கிறதினாலேயும் அதிகமான வுக்கிரத்தோடு சுடுமென்பதற்குச் சந்தேகமில்லை. அந்த நியாயத்தினாலே உத்தாராச்சியத்தி லுண்டான ஸ்படிக வேலைக்காரர் ஒரு சிறு விரற் பருமத்திலே ஒரு முழ நீளத்திலே ஒரு செப்புக்குழல் பண்ணி முனையிலே வளைத்து அந்தக்குழல் நுனியில் எழுத்தாணி முனைபோன்ற மெல்லிய துவாரம்வைத்து ஊதுகிற பக்கத்திலே விரற்பருமம் துவாரமிட்டு ஊதப்படுங் காற்றினால் சுவாலையினுடைய கதிர்களெல்லாம் *ஒன்றித்திருக்கப் பண்ணி அப்படி ஒன்றித்திருக்கிற அந்தக் கதிர்களுடைய வுக்கிரத்தினாலே சற்று நேரத்துக்குள்ளே வளையலும் ஸ்படிகமும் துளிதுளியாகவுருகப் பண்ணுகிறார்கள் பிறகு அவைகள் துளிதுளியா விழுந்து பிசின்போலிருக்கிறபோது யெடுத்து அதிலேதானே பற்பல மிருகங்களையும் பக்ஷிகள் முதலான வெவ்வேறு விநோதங்களையும் முன்சொல்லப்பட்ட தொழிலாளிகள்உண்டுபண்ணுகிறார்கள்.

இதைப்பார்க்க ஆச்சரியமான வெவ்வேறு காரியங்களைச் சோதிசாஸ்திரிகள் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். அதெப்படியென்றால்; முன்சொல்லப்பட்ட மகா சாஸ்திரிகள் சூரியனுடைய கதிர்களொன்றித்திருந்தால் மகா பலமும் உக்கிரமுமா யிருக்கிறதென்று அறிந்தவர்களா யிருந்ததினாலே தீப்பற்றுகிற கண்ணாடிகளைக் கண்டுபிடித்தார்கள். இந்தக் கண்ணாடிகளுடைய வகையேதென்றால், பஞ்சலோகங்களை உருக்கிக் காற்றுப்போலே வார்ப்பித்து சிலி மகா பிரயாசத்தோடே விளக்கிக் கண்ணாடி பண்ணினதற்குப் பிற்பாடு சூரியனுடையகதிர்கள் அதின்மேலே விழுகிறபோது அந்தக் கண்ணாடி * தாக்கடைவா யிருக்கிறதினாலே அதிலே விழுந்த எல்லாக் கதிரும் மையத்திலே கூடி விழுந்தகதிர்களுங் கிளம்புகிறகதிர்களும்மையத்துக் கெதிராக *விரண்டொருசாண் ஆகாசத்திலே உயரக் கூடிநிற்கும். அப்படிப்பட்ட இடத்திலே ஈயம், இரும்பு, செம்பு, வெள்ளி, பொன் முதலிய பஞ்சலோகங்களை வைத்தால் மழைபோலே உருகிப்போமென்று அநுபவசித்ததினாலே நாம் தானே அநேகரோடு பரிக்ஷித்திருக்கிறோம் அந்தச் சாஸ்திரத்தினாலே மகா பேர்பேன வித்தியார்த்தி யொருவன் பூர்வகாலத்தில் உரோமாபுரிபட்டணத்தார் கப்பலேறிச் சிரகூஸ் என்கிறபட்டணத்துக்கு முத்திக்கையிடத்தக்கதாக வந்திறங்கும்போது அவர்க

* தங்கத்தக்கதாய்.

ளுடைய கப்பல்களையெல்லாம் முன்சொல்லப்பட்ட சாஸ்தி
ரியான அர்க்கிமேதஸ் என்கிறவன்மேலேசொல்லப்பட்டதீக்
கண்ணாடியினாலே வேகப்பண்ணினான். இப்படிப்பட்ட காரி
யங்களை யிந்தச் சீமையிலே சோதிக்கக்கூடாதிருந்தாலும் அ
தினுடைய பிரத்தியட்சமான அடையாளங்களைச்சூரியகாந்
தத்திலேயும் மூக்குக்கண்ணாடியிலேயுங் காணலாம்.

இப்போ தறியவேண்டியதாவது; சில சமையங்களிலே
ஆகாசங்களிற் காண்பிக்கிற முழக்கங்களையும் மின்னல்களை
யும் இடிகளையும் அவைகளுக்கடுத்த அநேகமான வதிசய
விசேஷங்களையும் வெளிப்படுத்துவோம். அதெவ்வாறெனில்;
முதலாவது தண்ணீரிலேயுண்டான ஆவிகளையும்பூமிகனைந்
திருக்கிற ஸ்தலங்களிலே யுண்டான ஈரங்களையும்சூரியனை
ஆதனதுஉஷ்ணத்தின்நிமித்தமாக ஆகாசத்திலேறப்பண்ணுகி
றதுபோல் திரவியங்களை விளைவிக்கிறபருவதங்களிலேயின்று
ம்பஞ்சலோகங்களுள்ளமலைகளிலேயின்றும்மகாவுஷ்ணத்தை
க்கொண்டிருக்கிறபூமியிலேயின்றுஞ் சூரியனை ஆதனதுஉக்கிர
த்தினிமித்தமாகஎண்ணப்படாதபுகைகளையும் அக்கினியுள்ள
அங்கிஷங்களைம்ஆகாசத்திலேற்றுகிற தென்றறிவாயாக. இந்த
மெய்யானவிசேஷத்தைக்கடினமானவெய்யில்காலத்திலேபிர
த்தியட்சமாய்க் காணலாம். அவ்வண்ணமே கோடைகாலத்
தில் அகோரமான வெய்யிலெறைக்கிறபோது எங்கேபார்த்தா
லும்இப்படிப்பட்டபுகைகள்ஆகாசத்தி லேறுகின்றன. சிலச
மயங்களிலே வழிப்போக்கர் இந்தப் புகைச்சலைத் தூரகின்று
பார்க்கிறபோது நல்லதண்ணீருள்ள குளங்களைப் போலே
யும் ஜலத்தினாலே நிறைந்திருக்கிற விஸ்தீரணமான ஏரிகளை
ப்போலவும் காண்பிக்கும். அந்த ஸ்தலத்துக்கு வழிப்போ
க்கர் மகா தீவரத்தோடே தாகந் தீர்ப்போமென்றுபோய்க் க
டைசியாய்த் தங்களுக்கு மோசம் வந்ததென்றும், வெறுங்கா
னல் தங்களுக்குத் தண்ணீர்போலே காணப்பட்டதென்றுங்
காண்பார்கள். இப்படிப்பட்ட அக்கினியுள்ள ஆவிகளும்,மகா
வுஷ்ணத்தைக் கொண்டிருக்கிற புகைகளும் ஆகாசத்தி லேறி
னதற்குப் பிற்பாடு சிலதுகள் ஈரமுள்ள ஆவிகளினாலே கூட்
டப்பட்ட மேகங்களுக்குள்ளே அகப்பட்டு இந்தமேகங்கள்
மேலேவேறேமேகங்கள்விழுகிறபோதுஉள்ளேயுண்டான அக்
கினிப்புகைக ளடர்த்தியாய்ப்போய்க் கட்டாயத்தினாலே நெ
ருங்கிப் போகிறதினாலே சிவக்கக்காய்ந்த இரும்பினுடைய
குணங்களைச் சுவிகரித்துப் பழுத்தஇரும்பைப்பார்க்கக்கெட்
டியாய்ப்போம். இப்படியே அக்கினியினுடைய வுக்கிரத்தினா



லேயும் மேகங்களுடைய அசைவினாலேயும் நெருப்புள்ள அங்
கிஷங்களுக்குள்ளே ஒன்றுக்கொன்று பின்னியிருக்கிறதினா
லேயும்அந்தப்புகைகளெல்லாம் அதினாலேயெரியப்படும். எரி
கிறநெருப்புக்கு மகாவிஸ்தீரணமான ஸ்தலம்வேண்டியிருக்கி
றதினாலே கட்டாயமாய் நெருங்கியிருக்கிற இந்த நெருப்பினு
டைய அங்கிஷங்கள் பிரியத்தக்கதாக அத்தியந்த பலத்தோ
டேயும் அதிர்ச்சியோடேயும் மேகங்களைக் கிழித்துக்கொண்
டு அங்கங்கே விழுகிறபோது பருவதங்களைப்பிளந்து வுப்பரி
கைகளைப்பிடித்துப்பெரிய விருக்ஷங்களை வேரோடேபிடுங்கி அ
கோரமான பயம்வருத்திவிக்கும். இதினாலே மின்னல்களும்
இடிகளும் முழக்கங்களும் ஏதென்றெளிதாய்க் கண்டுபிடிக்க
லாம். மேலும் அக்கினியுள்ள புகைகள் அங்கங்கே சிதறியிரு
க்கும்போது ஒன்றுக்கொன்று பின்னிக்கொண் டிருக்கிறதி
னாலே வெறுஞ்சுவாலை காண்பிக்கும். எரிகிறபோது மின்ன
ல்காண்பிக்கும். அப்போது பயங்கரமான சத்தங்களுயர்வி
ருப்பதென்ன? அந்தப் புகைகள் நெருக்கமில்லாததினாலே
வெறுஞ்சுவாலை காண்பிக்கும். அந்நியாயத்தினாலே சாஸ்தி
ரமறியாதவர்கள் ஆகாசத்திலிருந்து பிரகாசக்கிற்றுப்போலே
நக்ஷத்திரமெரிந்து விழுகிறதென்று சொல்லுகிறதுக்குக் கார
ணமேதென்றால் அந்தவழியாக நெருப்பின் அங்கிஷமுள்ள
புகைகளுண்டா யிருக்கிறபடியினாலேஒருபக்கத்திலே துவக்கி
வேறே பக்கத்திலேமுடியும். ஆனால் இதிலேகனமான அதிச
யமொன்றிருக்கிறது. அதென்னவென்றால அந்தச் சுவாலைக்
கீற்று நெருப்பின் சுபாவத்தின்படியே உயரவேறாமல் கீழே
விழுகிறதென்ன? அந்த அக்கினியுள்ள புகையானது நெருப்
பினுடைய அங்கிஷங்களினாலே பரிபூரணபூர்த்தியா யிருக்கி
றதினால் நெருப்பு நெருப்போடே சேர்ந்திருக்கிறதற்குச் சுபா
வமாய் விழும். இதைப் பிரத்தியக்ஷமாய்க் கண்டுபிடிக்கலாம்.
அதெப்படியென்றால் இரண்டு தீபங்களையேற்றி ஒன்றைச்ச
ற்றே உயரவைத்து வேறொன்றை அதின்கீழேபிடித்துக்கீழே
யிருக்கிற தீபத்தை ஊதியணைத்துப் போட்டால் உடனே அக்
கினியினாலே அடர்த்தியான புகைகிளம்பும். அந்தப்புகையை
உடனே அந்தமேலான சுவாலைக்குச் சரியாகக் கீழ்ப்பிடித்
தால் அந்தப்புகைச்சல் வழியாக மேலேயிருக்கிற தீபத்தின்
சுவாலையிறங்கிக் கீழேயிருக்கிற வத்தியைக் கொளுத்திப் பிர
காசிப்பிக்கும். சற்றேபொறுத்தால் புகையிருந்தாலும் அதி
லே நெருப்பாங்கிஷங்க ளில்லாததினாலேயிறங்கிப் பற்றப்போ
கிறதில்லை.

இதன்றியே இடி யிடிக்கிறபோது பயங்கரமான சத்தமுண்டாகிற காரணமென்ன? இடியானது மேகங்களைக்கிழிக்கிறபோது அத்தியந்த பலவந்தத்தோடே மேகங்களைத் தள்ளுவதினலே அந்தமேகங்கள் மகா பலத்தோடே ஆகாசத்தை விலக்கித் தள்ளிப்போடுகிறதினல் அவசியமாய்ப் பயங்கரமான சத்தமுண்டாகின்றது. சிலசமயங்களிலே யிடிவிழாதிருந்தாலும் மேகங்கள் ஒன்றுக்கொன்று மகா வலுமையோடுமோதுவதினலே முழக்கம் பிறக்குமென்பதற்குச் சந்தேகமில்லை; கடைசியிலே யிடியினுடைய சுபாவமேதென்றால், முன்சொல்லப்பட்ட அக்கினி அங்கிஷங்களைக் கொண்டிருக்கிற புகையானது கட்டாயமாய் நெருங்கப்பட்டுக் காய்ந்த இரும்பினுடைய குணங்களைச் சுவிகரிக்கும்போது இடியாய்ப்போம். இதெல்லாம் ஒருவமையினலே நன்றாய்த் தெரியப்பண்ணுவோம், அதெப்படியென்றால்; பீரங்கியிலே மருந்தைக்கெட்டித்து மகாபலத்தோடே நன்றாய்த் தாணித்தபிற்பாடு பெரிய குண்டைப்போட்டு சின்ன துவாரத்திலேயும் நெருப்புகொளுத்தத் தக்கதாக மருந்துபோட்டுச் சுடுகிறபோது மின்னல் முழக்கம் இடி இம்மூன்று விசேஷங்களையுங் காணலாம். அதேதென்றால்; சிறியதுவாரத்தின் வழியாகமருந்து பற்றுகிறபோது மின்னுதலடையாளமும், கேட்கப்படுகிற சத்தம் முழக்கத்தினடையாளமும், குண்டு இடியினுடைய அடையாளமும் ஆகும்.

இப்போது அக்கினி நிமித்தமாக வருகிற பூமியதிர்ச்சியை வெளிப்படுத்துவோம். அதெப்படியென்றால்; பூமியிலிருந்து ஆகாயத்திலே அநேக நெருப்பாங்கிஷங்களேறுகிறதென்று சொன்னோமே. இப்படிப்பட்ட நெருப்பாங்கிஷங்களைக் கொண்டிருக்கிற புகைகள் பூமிக்குள்ளே யுண்டான அநேகந்தாரைகளுக்குள்ளே யகப்பட்டுப் புறப்படுகிறதற்கு அவகாசமில்லாமற்போனல் அந்த அக்கினி அங்கிஷங்களின் கூட்டத்துக்குப் புதிதாய் வேறே அனேக அக்கினி யங்கிஷங்களைக் கொண்டிருக்கிற ஆவிகளும் புகைகளும் சேருகிறதினலே, அவைகளெல்லாம் கட்டாயத்தினலே அடர்த்தியாய் நெருங்கிப்போகிறதினலேயும் புறப்படுகிறதற்கும் பலவந்தம்பண்ணும்போது பூமியிலே அதிர்ச்சியுண்டாகும். அந்தநியாயத்தினலே சிலஸ்தலங்களிலே மாத்திரம் அதிர்ச்சியாயிருக்குமல்லாமலெங்கு மிருக்கமாட்டாது. பூமியதிர்ச்சி யிருக்கிறதற்குச் சில அடையாளங்களுண்டு. அதெப்படியென்றால்; முதலாவது—கிணறுகளிலே யுண்டான தண்ணீர் வேறே காரணமி



ல்லாமல் குழம்பாய்க் கலங்கித் துர்க்கந்தம்வீசும். 2-வது கேணித்தண்ணீர் கொதித்து மேலேயேறும். 3-வது.—காற்றில்லாமல் சமுத்திரம் பொங்கும். 4-வது.—கோடைகாலத்திலே மகாகுளிர்பிறக்கும். இதன்றியே பூமிக்குள்ளே யிந்த அக்கினி ஆவிகளும்நெருப்புப்புகைகளும்மெத்தவுண்டானல் பூமியதிர்ச்சி அநேகநாளிருக்கும். பூமியதிர்ச்சியினலே மதில்கள் உப்பரிகைகள் முதலாய் நடுங்கிறது. சிலசமையங்களிலே பூமி யிரண்டாய்ப் பிளந்துபோய்ப் பட்டணங்களையும் உப்பரிகைகளையும் விழுந்தாட்டுகின்றது. சில சமையங்களிலே மகா அதிர்ச்சியுண்டானல் ஆறுகள்முதலாய் வேறேவழியிட்டுக்கொண்டு வெவ்வேறே சீமைகளிலேபோம். கடைசியிலே பூமியிலுண்டான அக்கினிப் புகைகளும் நெருப்பாவிகளும் மிகுதியா யிருக்கும்போது ஆகாயத்திலே யேறி வால்நக்ஷத்திரமுண்டாகுமென்று சில சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். ஆனல் இந்தப்பக்ஷத்தையாக்ஷேபிக்கிறதற்கு அநேகநியாயங்களுண்டு. வேறே சாஸ்திரிகளோ வென்றால், சூரியனானது எரிகிறதங்கமென்று சொல்லி இப்படிப்பட்ட சூரியன் தனது மையத்திலே அத்தியந்த பலத்தோடே சுற்றிக்கொண்டு வருகிறபோது அதினுடைய பங்குபிரிந்து போகிறபோதும் வாலநக்ஷத்திரமாயிருக்குமென்றும் விசாரித்தார்கள். இதனலே நக்ஷத்திரங்கள்போகிற திக்குகளெல்லாம் நன்றாய் வெளிப்படுத்துகிறார்கள். கடைசியிலே வேறேசாஸ்திரிகள் பராபரவஸ்துவானவர் லோகத்தை யுண்டாக்கிறபோது விசேஷமான சோதியை யுண்டாக்கி அதிலே அநேகம் வால் நக்ஷத்திரங்களைப் பற்பலவிதமாக வைத்து அதிலே அந்த வால்நக்ஷத்திரங்கள் சுற்றிக்கொண்டு வருகிறபோது மேற்பக்கத்திலே யிருந்தால் மனுஷருக்குக்காணப்படாது. கீழ்ப்பக்கத்திலே யிருந்தால் மனுஷர் காணலாமென்கிறார்கள். இப்படிப்பட்ட வால்நக்ஷத்திரத்தைச் சோதி சாஸ்திரிகள் ஆனகருவிகளினலே மூன்றுராத்திரி பார்த்தால் எப்போது துவக்கி யெப்போது முடியுமென்று சொல்லுவார்கள். பூருவகாலத்திலே உத்தராதி ராச்சியத்தி லிருக்கிற இராயருடைய சமுகத்தில் அநேக சாஸ்திரிகள் கூடியிருக்கும்போது அவர்களிலொருவன் நெருப்பினுடைய நிறையும் புகையினுடைய நிறையும் பார்க்கலாமோவென்று கேட்கும்போது எல்லாரும் பார்க்கக்கூடாதென்று சந்தேகம் பண்ணினார்கள். அந்தச் சந்தேக வார்த்தையைக் கேட்ட இந்தசாஸ்திரியானவன் நான் அந்தச் செய்கிறேனென்று சொன்னதுந் தவிர கிரியையினலேலப்புவித்தான்.

அதெப்படியென்றால் அநேகம் விறகுகளை யழைப்பித்து அதிலே 500 பலம் நிறுத்துக்கொண்டு சுத்தமுள்ளவொரு ஸ்தலத்தில் எரியவிட்டு முடிந்த பிற்பாடு கண்ட சாம்பலை நிறுத்துப்பார்த்து 50 பலமாத்திரம் இருக்கிறதென்று கண்டு மற்ற 450 பலமும் நெருப்பிலேயும் புகையிலேயும் இருந்ததென்று திருஷ்டாந்தமாக வொப்புவித்தான்.

இப்போது நெருப்புக்குச் சம்பந்தமா யிருக்கிற சில விசேஷங்களை யின்னமும் வெளிப்படுத்துவோம். அதெப்படியென்றால்; அக்கினியிலுள்ள அங்கிஷங்களின் அசைவினாலேயாகிலும் அக்கினி பொருந்திருக்கிற அங்கிஷங்களின் அசைவினாலேயாகிலும் உஷ்ணமானது பிறக்கிறதென்று அநுபவ சித்தியினாலே கண்டுபிடிக்கிறோம். அதெப்படியென்றால்; முதலாவது குளிர்ந்திருக்கிற இரண்டுகையும் ஒன்றாய்த் தேய்த்தால் உஷ்ணந்தப்பாமற் பிறக்கும் 2-வது—அநேகம்விசை கல்லோடேகல் அடிபடுகிறதினாலே அக்கினிப்பொறி கிளம்பும். 3-வது.—மூங்கிலுஞ்சில மரங்களும் ஒன்றோடொன்று ரைபடுவதினாலே நெருப்பு புறப்பட்டுப் பத்திக்கொள்ளும். 4-வது.—வெந்த சுண்ணாம்புக் கல்லின்மேலே தண்ணீர் வார்த்தால் கடினமான வுஷ்ணம் புறப்படும். குளிர்ந்த தண்ணீரையும் கொதிக்கப்பண்ணும். அவ்வண்ணமே தண்ணீரானது அக்கினி அங்கிஷங்களை மறைத்துக்கொண்டிருக்கிற சுண்ணாம்பின் அங்கிஷங்களைத் தண்ணீர் பட்டவுடனே விலகப்பண்ணிக் கரைத்து அக்கினியங்கிஷம்புறப்பட விடங்கொடுத்ததினாலே யந்தப் பொறிகள் கிளம்பித்தனது சீக்கிர அசைவினாலே தண்ணீரைப்பலத்தோடே அசைத்துக் கொதிக்கபண்ணும். 5-வது.—உத்தராச்சியத்திலிருக்கிற குலாரி வண்டிகளுடைய விரண்டு உருளைகளுக்கு நடுவிலே ஒரு விட்டம் வைத்திருக்கிறது, அந்த விட்டம் உருளையினுடைய தீவிர அசைவினாலே திரளான உஷ்ணம் புறப்படும் அந்த வுக்கிரத்திற்கான கொழுப்புகளைப் பூசாமற்போனால் தப்பாமல் எரிந்துபோம். 6-வது.—இரும்பை அரத்தினாலே ராவினால் இரும்புக்கு மகா வுஷ்ணம் பிறக்கும். மற்றக்காரியங்களிலேயும் இப்படியே யோசிக்கக் கடவது. ஆனால் இதிலே ஒரு சந்தேகம் வரலாம். அதெப்படியென்றால் சுவாலையினுடைய அக்கினி அணுக்கள் மகா தீவிரத்தோடு அசைகிறதினாலே சகலமான வஸ்துகளைப் பார்க்க அதிகமாய்ச்சுடுகிறதற்குப் பலமாயிருக்கிறதென்று காண்பிக்கிறது. ஆனால் இரும்பானது நெருப்பிலே போட்டால் சிவக்



கிறதற்கு முன்னே நாமே தொட்டாலுஞ் சுவாலையைப்பார்க்க அதிகமாய்ச் சுடுகிறதென்று அநுபவ சித்தியினாலே கண்டுபிடிக்கிறோம். இந்தச் சந்தேகத்துக்கு நிவாரணமேதென்றால் சுவாலையினுடைய அங்கிஷங்கள் எளிதாய்ப் பிரிகிறதினாலேயும் எதிராக நிற்கமாட்டாததினாலேயும் சுடுகிறதற்குப் பலன் குன்றந்துபோகிறது. இரும்போவென்றால், நெருப்பின் அங்கிஷங்களைச் சுவீகரித்ததற்குப் பிற்பாடு அந்த அங்கிஷங்கள் பிரிகிறது அரிதாயிருக்கிறதினாலேயும், இரும்பினுடைய அங்கிஷங்கள் அடர்த்தியாயிருக்கிறதினாலேயும் அதிலே கைபட்டால் கடினமாய்ச் சுடும். கடைசியிலே ஓர் விளக்கின் சுவாலையாகிய தீபத்தை விரல்களால் அணைத்துப்போடுகிறபோது அது விரலிலே சுடாமலிருக்கிற தென்னவென்றால், சுவாலையினுடைய அஸ்திவாரம் எண்ணெயில்லாததினாலேயும் அதினுடைய அங்கிஷங்கள் தீவிரமா யசைவாடிக்கொண்டிருக்கிறதினாலேயும் சற்றுநேரத்துக்குள்ளே ஆகாயத்தில் சிதறிப்போம். இந்த விசேஷத்தை யோருவமையினாலே வெளிப்படுத்துவோம். அதெப்படியென்றால், சுவாலையினுடைய புகைதானே சற்றுநேரத்துக்குள்ளே காணாமற்போகிறதென்ன? அதுவு மிதுவுமாகாசத்தினுடைய அங்கிஷங்களுக்குள்ளே கலந்து காணாமற்போகின்றது.

## ௭-ம். அதிகாரம்.

### ஆகாச விவரம்.

நாலு பூதியங்களுக்குள்ளே ஆகாசமானது மகா விஸ்தீரணமா யிருக்கிறதென்று அநுபவ சித்தியினாலே கண்டுபிடிக்கிறோம். அவ்வண்ணமே சர்வலோகமும் பூமிதுவக்கி நக்ஷத்திர மண்டலமட்டும் ஆகாசத்திலே நிறைந்திருக்கின்றது. இப்படிப்பட்ட விஸ்தீரணத்தை யறியவேணுமானால், பூமிக்கும் நக்ஷத்திர மண்டலத்துக்கும் 12,60,00,000 பன்னிரண்டுகோடியே அறுபது லக்ஷகாததூரம். இதுவுமையக் கம்பியினுடைய பாதியானபடியினாலே முழுக்கம்பியானது 25,20,00,000 இருபத்தைந்துகோடியே இருபது லக்ஷகாததூரம். எக்கெந்த வளையத்தின் மையக்கம்பியின் பாதியளவு அகப்பட்டதானால் அந்தந்த வளையமெல்லாமறியலாம். அதெப்படியென்றால், முழுமையக்கம்பியை யேழுபங்காய்ப் பிரித்துக் கண்டதிலொருபங்கு புறம்பாய்வைத்து முன் சொல

லப்பட்ட முழுக்கம்பியை மூன்றைக்கொண்டு பெருக்க அத
னோடு முன் புறம்பாய்வைத்த எழிலொரு பங்கையுங் கூடக்
கூட்டிக்கண்டதானை முழுவளையம். இந்தப்பிரகாரமாக ஆகா
சத்திலே எத்தனை அணுக்கள் இருக்கலாமென்று எளிதாய்க்க
ண்டுபிடிக்கலாம். ஆனால் அணுக்களினாலே ஆகாசமானது
கூட்டப்பட்டதாயிருந்தாலும் மூன்றுவகையாய்ப் பிரிந்து
போகிறதென்றறிவாயாக. முந்தமுந்தப் பூமியைச் சூழ்ந்து
கொண்டிருக்கிற ஆகாசமானது அநேகம் ஆவிகளோடேயும்
புகைகளோடேயும் ஈரமுள்ள அங்கிஷங்களோடேயும் அக்கி
னியுள்ள அங்கிஷங்களோடேயும் கலந்திருக்கிறதென்று அ
னுபவ சித்தியினாலே கண்டுபிடிக்கிறோம். இரண்டாம் அந்
தஸ்திலுண்டான ஆகாசமேதென்றால் முன்சொல்லப்ப
ட்ட ஆவிகள் புகைகளொடு திரளாய்க் கலக்காதேபோனா
லும் சிலதாகவிருக்குதென்கிற பற்பல அடையாளங்களைக்
காணலாம். கடைசியிலே மூன்றாம் அந்தஸ்திலுண்டான
ஆகாயமானது ஆவிகள் புகைச்சல்கள் முதலானவைகளுடை
ய கலப்பில்லாமல் வெறும் ஆகாயம் வெறும் வெளியாயிருந்து
கண்களுக்குக் காண்பிக்கிற அங்கிஷங்களைப்பார்க்க மகா சிறி
யதாயிருக்கிற அங்கிஷங்களினாலே கூட்டப்பட்டதாயிருக்
கிறதென்று மனதிற் கெட்டியாக ஸ்தாபிக்கவேண்டியது.
அவ்வண்ணமே மச்சங்கள் சமுத்திரத்திலே நீந்தித் திரிகி
றாப்போலே யேழுகிரகங்களும் அந்த ஆகாயத்தின் வெளியிலே
நடக்கவேண்டியிருக்கும்போது கிரமத்தோடு கூடின நடை
யைச் சமுத்திரையாகச் செலுத்துகிறதற்கு ஆகாசமானது
முன் சொல்லப்பட்ட குணங்களைக் கொண்டிருக்க வேணு
மென்பது நிச்சயமாகும். இதல்லாமல் நக்ஷத்திரங்களுடைய
காந்தியுங் கிரகங்களுடைய பிரகாசமும் அத்தியந்தத் தீவிர
த்தோடே கண்ணுக்கு அகப்படுகிறதற்கு இப்படிப்பட்டவழி
அவசியமாய் வேண்டியிருக்கிறது. இந்தப் பிரகாரமாகச்
சூரியனுக்கும் பூமிக்கும் 90,00,000, தொண்ணூறு லக்ஷ
காத தூரத்துக் கதிகமாயிருந்தாலும் சூரியன் உதயம்பண்
ணின அந்தக் ஷணத்திலேதானே கண்ணுக்குக் காண்பிக்கி
றதே, வழியிலே விக்கினமுண்டாயிருந்தால் கண்ணுக்குக்
காண்பிக்கிறதெப்படி? அதிலேயும் பராபர வஸ்துவினுடை
ய மட்டில்லாத விமரிசையையும் கிருபாகடாக்ஷத்தையும்
அறிக்கிறதற்கு அநேககாரணங்களுண்டு. அவ்வண்ணமே ஆகா
யத்தைவேறேவிதமாகவுண்டுபண்ணியிருப்பாராகில் அல்லது
கிரகங்களை வேறே ஸ்தலத்திலே ஸ்தாபித்துவைத்தால் தப்



பாமல் உலகமெல்லாங் கெட்டுப்போம். ஆனால் சர்வேஸ்வர
னானவர் தம்முடைய திவ்விய சாஸ்திரத்தினாலே ஆகாயத்தையுங்
கோள்களையும் ஆச்சரியமான கிரமத்தோடே கட்டளையிட்
டதினால் சூரியனுடைய பிரகாசமும் உஷ்ணமும் கிரகங்க
ளுடைய நற்குணங்களும்; நக்ஷத்திரங்களுடைய தீர்க்க மன
மும் ஆகாயத்தின் வழியாகப் பூமிமேலே யெளிதாய்வந்து
பிரபஞ்சத்தி லுண்டான வஸ்துக்களெல்லாம் பிழைப்பி
க்கின்றது. ஆனால் பூமியை ஒட்டியிருக்கிற ஆகாயமானது
அநேக ஆவிகளோடேயும் புகைகளோடேயும் பற்பல குண
ங்களைக் கொண்டிருக்கிற அங்கிஷங்களோடேயும் கலந்திருப்
பானேன்? இதினாலே பராபர வஸ்துவினுடைய அளவறுக்
கப்படாத கிருபாகடாக்ஷத்தை விளங்கப்பண்ணுகின்றது. அதெ
ப்படியென்றால், மனுஷனுடைய இருதயமானது அக்கினி
பொருந்தியிருக்கிற அங்கிஷங்களுடைத்தான இரத்தத்தினால்
எப்போதும் அசைவுண்டிருக்கிறதினாலே அதினின்றுபுறப்படு
[redacted]ணியாமற்போனால் அவசியமாய்ச்செத்துப்போ
வான். இதற்காக ஆச்சரியமான ஒருபாயத்தைச் சர்வத்
துக்குங் கர்த்தராயிருக்கிற சர்வேசுரனானவர் செய்திருக்கின்
றார். அதெப்படியென்றால், மனிதனானவன் சுவாசம் வாங்
கிறபோது அதினாலே இருதயத்தில் நின்று புறப்படாத
உஷ்ணத்தின் மிகுதி அமர்த்தப் படுமென்று அங்கீக
ரிக்கக் கடவதாகும். ஆனால் பூமிக்கு அருகேயிருக்கிற கலப்பு
ள்ள ஆகாசமானதுமாத்திரம் சுவாசம் விடுகிறதற்கும் வாங்
கிறதற்கும் உதவுமொழிய மற்றப்படியல்ல. இந்த நியாயத்
தினாலே உயர்ந்த பறுவதங்கள் மேலே யிருக்கிற ஜனங்கள்
பெருமூச்சு வாங்கிறதற்கும் விடுகிறதற்கும் மகா கடின
மாயிருக்கும். இந்த நியாயத்தினாலேதானே சாஸ்திரிகள்
[redacted] கத்தினாலொரு எத்தனம்பண்ணி அதிலே ஒரு பக்ஷி
யைவைத்து அந்த ஸ்படிக எத்தனத்தின்மே லுண்டான
கலப்புள்ள ஆகாசத்தைச் சூத்திரங்களைக்கொண்டு மேலே
வாங்கினால் தவராமாய்ப்பக்ஷி செத்துப்போம். ஆனால் சாகி
றதற்கு முன்னே மறுபடி கலப்புள்ள ஆகாயத்துக்கு வழிதி
றந்தால் உடனே பிழைக்கும். இந்தக் கலப்புள்ள ஆகாசத்தி
னிமித்தமாக ஆச்சரியமான விசேஷத்துக்குக் காரணத்தைச்
சொல்லலாம். அதெப்படியென்றால், சில சமையங்களிலே
சூரியன் உதயம்பண்ணும்போது சிவப்பாயும் சில சமையங்
களில் வெண்மையாயும் சில சமையங்களிலே நீலமாயும் இப்
படியே பற்பல சமையங்களிலே வெவ்வேறு விதமாகச் சூரி

யன் காண்பிக்கிறது. இதெல்லாம் பூமியினருகே யுண்டான ஆகாயம் பற்பலவகையுள்ள அங்கிஷங்களோடே கலந்திருக்கிறதினாலே வெவ்வேறே விதமாய்க் காண்பிக்கிறதற்குக் காரணமாயிருக்கின்றது. இந்த மேனாயாகப் புகை மெத்தக் கலந்திருக்கும் சமையத்தில் சூரியன் சிவப்பாய்க் காண்பிக்கும். கனமான கலப்பில்லாத சமையத்திலே மகா காந்தியாயிருக்கும். ஈரமுள்ள ஆவிகளோடே ஆகாயம் வெகுவாய்க் கலந்திருந்தால் அப்போது சூரியன் வெளிறாய்க் காண்பிக்கும். இந்தப் பிரகாரமாக மற்ற அநேக மேனாயிலே யோசிக்கக் கடவாய். இதெல்லாம் ஒரு உவமையினாலே வெளிப்படுத்துவோம். அதேதென்றால், பச்சை வர்னத்தைக்கொண்டிருக்கிற மூக்குக் கண்ணாடியினாலே பற்பல வியங்களைப் பார்க்கும்போது அந்த வஸ்துவினுடைய பிரதிபிம்பம் பச்சைக் கண்ணாடிக்குள்ளே பிரவேசிக்கிறதினாலே கண்களுக்குச் சுபாவநிறத்தை விட்டுப் பச்சையாகத் தோன்றுகிறாப்போலே சுபாவமாய் சூரியன் மகா காந்தியுமாயப் பிரகாசமுள்ளவனாயிருந்தாலும் அதினுடைய கதிர்கள் கலப்புள்ள அங்கிஷங்களைக் கொண்டிருக்கிற ஆகாயத்துக்குள்ளே பிரவேசித்ததினாலே சுபாவத்தை விட்டு வெவ்வேறே விதமாய்க் காண்பிக்கும்.

இதற்கப்பால் அறியவேண்டினதாவது. பூமிக்குக்கிட்டியிருக்கிற ஆகாசமானது பற்பல ஆவிகளினாலேயும் புகைகளினாலேயும் கலந்திருக்கிற படியினாலே தண்ணீர்மேலேயும் பூமிமேலேயும் பரவிக்கொண்டு கனத்தோடே அமிழ்த்துகிறாப்போலே காண்பிக்கும். ஆகையால் ஆகாசங் கனக்கிறதென்று பிரத்தியக்ஷமா யொப்புவிக்கலாம். அதெப்படியென்றால்; ஆட்டினுடைய சிறுநீர்ப்பையை யெடுத்து நன்றாய்ச்சுத்தம்பண்ணி நிறுத்துஇத்தனை பலமென்று பார்த்து அதை ஊதிவிட்டபிற்பாடு ஆகாசம் உள்ளே நிறைவதினாலே யதிகமான கனமுண்டாயிருக்கும். ஆதலாற் சுபாவமா ஆகாயத்துக்குக்கனமுண்டென்று சொல்லவேண்டும். அனபடியினாலே சமுத்திரத்துக்குள்ளே நீந்தித்திரிகிற மச்சங்களைத் தண்ணீரானது சுமக்கிறாப்போலே ஆகாயத்திற் பறக்கிற பட்சிகளை அந்த ஆகாயந்தானே சுமந்துக்கொண்டிருக்கிறதென்று நிச்சயிக்கவேண்டியது. இப்படிப்பட்ட கனம் மனுஷருடைய சரீரத்துக்குக் காண்பியாதிருந்தாலும் கனமில்லையென்று நிதானிக்கவேண்டாம். அநேகமென்றாற் பாலவயதிலேதுவக்கிப் பழகியிருக்கிறபடியினாலேயும் சரீரத்தினுடைய அங்கிஷங்களெல்லாம் சரி



யா யிருக்கிறதினாலேயும் கனமாயிருந்தாலும் பாரம்போலே காண்பியாது. இந்த இரண்டாம் நியாயத்தினாலே யாதொருவன் ஆழமுள்ள ஆற்றுக்குள்ளே மூழ்கியிருந்தாலும் சரீரத்தினுடைய அவயவங்களெல்லாம் சரியாகச் சுமக்கிறதினாலே கனங் காண்பியாது. இதிலேயறியவேண்டியதாவது பூமிக்குக் கிட்டின ஆகாசம்மெத்தவும்கனமாயிருக்கிறது. உயரஏறஏற லகுவுள்ளதாயிருக்கும். இதெல்லாம்கண்டுபிடிக்கிறதற்குஒருவனைச்சொல்லிக்காட்டுவோம். அதெப்படியென்றால், ஆட்டுரோமங்களினால் ஒருபறுவதமுள்ளதென்றுவிசாரித்துக் கொள்ளுங்கள். அப்படிப்பட்ட மலையினுடைய அடிவாரத்திலிருக்கிற மயிர்கள் அதிகமாய் நெருக்கியமிழ்த்தப்பட்டிருக்கும். உயரப்போகப்போக நெருக்கமில்லா திருப்பதுபோல ஆகாயத்தின் கனத்தினுடைய விஷயத்திலேயும் அப்படியே யோசிக்கக்கடவது. அந்தக் காரணத்தினால் ஒருவிரற் பிரமாணமுள்ள அப்படிக்குழலிலே யொருபக்கம் அடைத்திருக்க ஒருபக்கந் திறந்திருக்க அந்தத் திறந்தபக்கத்தில் இரசத்தைநிறைய வார்த்து மற்றொரு கிண்ணியிலே முக்காற்கிண்ணி யிரசம்வார்த்து அந்தக் குழலிலேயிருக்கிற விரசத்தை யெடுத்துத் திறந்த பக்கத்திலே விரலாலே மூடிக்கொண்டு தலைகீழாய்க் கவிழ்த்தாப்போலே கிண்ணியிலேவிட்டு அந்தக்குழல் கிண்ணியிரசத்திலே பட்டபிற்பாடு விரலைவாங்கினால் அப்போதந்தக் குழலிலேயிருக்கிற விரசமெல்லா மதிலேவிழாமல் குழலிலேயொருபங்கு நிற்கும். அவ்வண்ணமே கிண்ணியிலிருக்கிற விரசத்தின்மேலே ஆகாயம் நெருக்கியிருக்கிறபடியினாலே குழலிலிருக்கிற பங்குவிழவொட்டாது. அந்தநியாயத்தினாலேதானே சிறுபிள்ளைகள் பீச்சாங்குழலென்று விளையாடுகிற குழலின் சிலையினாலே தற்றப்பட்ட ஒருகழியினாலே தண்ணீரை ஏற்றுகிறதும் விடுகிறதுமா விளையாடுகிறார்களல்லவோ அதிலே தண்ணீர் ஏறுகிறதற்குக் காரணத்தைச் சொல்லலாம். அதேதென்றால், ஆகாயமானது தண்ணீரை நெருக்கிறதினாலே விக்கினமில்லாத ஸ்தலத்திலேயேயும், இந்தப்பிரகாரமாகப் பெரியவிராசர்க்களுடைய தோட்டங்களிலே எங்கும் தண்ணீர்நிறைக்கிறதற்கு மகா வுச்சிதமான எந்திரத்தை யுண்டாக்குவார்கள். அந்தப்பெரிய குழலைக்கிணற்றிலேவைத்துக்கொண்டு கிணற்றுத்தண்ணீரை 40 அடிஉயரம் ஏறப்பண்ணுவார்கள். அதேதென்றால், தண்ணீர்மேலேயுண்டான ஆகாயம் அமுக்கிக்கெட்டியாக அமிழ்த்துகிறதினாலே வெளிதான வழியுள்ள குழலுக்குள்ளே யேறுகிறது கனமானவதி

சயந்தானே. அவ்வண்ணமேகுழல்களுக்குள்ளே யிருந்தேறுகிற தண்ணீர் 40 அடிமாத்திரம் ஏறுகிறதும் அதிகமாயேறாமல் அவ்வளவிலே நிற்கிறதும்ஏனென்றால்இந்தவிசேஷத்தினால் ஆகாயத்தினுடைய கனம் எம்மாத்திர முண்டென்றெப்புவிக்கின்றது. அதெப்படியென்றால், ஆகாயத்தினுடையகனம் தண்ணீரேறுகிறதற்குக் காரணமா யிருக்கும்போது தண்ணீர்அதிகமா யேறமாட்டாதசமையத்தில் அவ்வளவுமாத்திரம்ஆகாயத்துக்குப் பலமிருந்தது. அப்பா லேற்றிவிக்கிறதற்குப் பலமில்லையென்று தப்பாதடையாளமா யிருக்கிறது. இதெல்லாம் இப்படியிருக்கையிலே சகலவஸ்துக்களுடைய கனங்களைத் திராசிலேதூக்கி நிறுத்துப் பார்க்கிறப்போலே இதிலே ஆகாயத்தினுடைய கனத்தையறியலாம். இதிலேயும் அநேகம்விசை சோதனை பார்த்ததற்குப் பிற்பாடு ஆகாயத்தைப்பார்க்கச் சலம்ஆயிரம்விசை கனமாயிருக்கிறதென்றும், ஆகாயந்தண்ணீரைப்பார்க்க ஆயிரம்விசை லகுவாயிருக்கிறதென்றுஞ் சாஸ்திரிகள் சங்கேதம் பண்ணினார்கள். ஆனபடியினாலே அகலத்திலேயும், நீளத்திலேயும் ஓரடி சதிரமுள்ளவொருபாத்திரத்தை யுண்டாக்கி யதற்குயரம் 32 அடிவைத்து அதிலேதண்ணீர் நிறையவார்த்து அந்தத் தண்ணீருடையகனம் பார்க்கும்போது 26,880 இருபத்தாறாயிரத் தெண்ணூற்றெண்பது பலங்கண்டதென் றநேகந்தரஞ் சோதனைபார்த்திருக்கின்றது. ஆனபடியினாலே 40 அடி யுயரத்துக்குமேலே தண்ணீரேறமாட்டா திருக்கும்போது முன்சொன்ன பிரகாரமாய்ச் சித்திரத்தூண்போலே பூமியிலேதுவக்கி லகுவான ஆகாயமட்டு முண்டாயிருந்தா லந்தத் தூணுக்குள்ளே யடங்கின ஆகாயம் 26,099 இருபத்தாறாயிரத்தித் தொண்ணூற்றொன்பது பலங்கனமா யிருக்கும். கடைசியிலே ஆகாயமானது போகப்போக லகுவாயிருக்குமென் றெப்புவிக்கத்தக்கதாக அறியத்தக்கதாவது: முன்சொல்லப்பட்ட இரசக்கிண்ணியுங் குழலும் மலையினுடைய அடிவாரத்தி லிருக்கும்போது குழலிலே யிரசமதிகமாயேறும். மலையின்மேலாகவிருக்கும்போது குழலிலே கொஞ்சமாயிருக்கும். அவ்வண்ணமே பருவதத்தினடியிலே யாகாயமெத்த விருக்கிறபடியினாலே யிரசமதிகமா யேறப்பண்ணும். மலையின்மேலே ஆகாயத்துக்கத்தனை கனமில்லாததினாலே யதிகரசம் ஏறமாட்டாது.

இப்போது ஆகாயத்திலே ஆகாயஅசைவினால் வீசுகிற காற்றினுடைய சுபாவத்தையுங் காரணங்களையும் சங்க்ஷே



பமாகச் சர்வேஸ்வரனுடைய கிருபையினாலே வெளிப்படுத்துவோம். இந்தவிஷயத்திலே முக்கியமாய் அறியவேண்டியதாவது: ஆகாயஞ் சும்மாயிருந்தால்வெறும் ஆகாயமென்றுசொல்லவேணும். ஆகாயம் அசையப்பட்டால் காற்றென்றுசொல்லப்படும். ஆனவிப்படியே ஆகாயம்அசைகிறதற்குக்காரணத்தைச் சொல்லுகிறதிலேசாஸ்திரிகள்மகாபிரயாசைப்பட்டார்கள். அதெவ்வாறெனில் சிலபேர்கள் பூமியிலிருந்து ஆகாயத்திலேறின ஆவிகளும் புகைகளும் சூரியனுடைய வுஷ்ணத்தினாலே மிகவும் விசாலமாக வுப்புகிறபோது அங்கங்கேயிருக்கிற ஆகாயங்களை அசைத்துக்காற்றுப்புறப்படப்பண்ணுமென்றும் வேறேசிலர் சூரியனானது தானேதனதுஉஷ்ணத்தினாலே நெருக்கமாயிருக்கிற ஆகாயத்தினுடைய அங்கிஷங்களைப் பிரியப்பண்ணி விசாலமாய்ப் பரம்பப் பண்ணுவதினாலே ஆகாயத்தை அங்கங்கே வீசப்பண்ணுகிறதென்றும் வேறு காற்றென்று உயர்ந்த ஆகாயத்திலிருக்கிற பெரியமேகங்கள் தாழவிருக்கிற மேகங்கள் மேலே விழுகிறதினால் மிருதியான வாய்வு பிறக்கப் பண்ணுகிறதென்றும் வேறேசாஸ்திரிகளோவென்றால் சந்திர சூரிய கிரக நக்ஷத்திரங்கள் நடையினாலே யாகாயத்தை மகா தீவிரத்தோடேயும் பலத்தோடேயும்அசைக்கிறதினாற் காற்றுண்டாமென்றும்எழுதிவைத்தார்கள். இப்படிப்பட்ட மகாத்துமாக்கள் தங்களுடைய பக்ஷத்தை யொப்புவிக்கத்தக்கதாக நிச்சயமான விசேஷத்தைச் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். ஆனால் சம சக்கரத்தின் கீழே யுண்டான பெரிய சமுத்திரத்தின்மேலே கிழக்கேயிருந்து எப்போதும் மேற்கே காற்றுவீசுகிறதுண்டு. பூமிமேலே வேறேகாற்று வீசுகிறதுக்குக்காரணமேதென்றால் அங்கங்கே உயர்ந்த பறுவதங்கள் குறுக்கே யிருக்கிறதினாலே காற்று வெவ்வேறே விதமாய் வீசுகிறதற்குக் காரணமா யிருக்கும். இதல்லாமல் ஆவிகளும் புகைகளும் வெவ்வேறே விதமாக உப்பிப்போகிறதினாலேயும் ஆகாயத்தினுடைய மேலந்தஸ்திலிருந்து தள்ளுண்டு போகிறதினாலேயும் பற்பல விதமாய்க் காற்றுவீசும். இதல்லாமற் சூரியனானது உத்தர தக்ஷிண அயனத்தினிமித்தமாக இந்தச் சிந்து ராச்சியத்திலே வீசுகிற இரண்டுபிரதானகாற்றுகளும்பிரதானகாரணமா யிருக்கிறதென்று அறிவீர்களாக. இந்தச்சீமைகளில்மேல்காற்றுமகாவுஷ்டணமாயிருக்கும். கீழ்காற்றுமகா குளுமையாயிருக்கும். இதற்குக் காரணமேதென்றால் வடமேற்கில் வெகுராச்சியங்களுண்டா யிருக்கிறபடியால் சூரியனுடைய வுஷ்ணத்தினாலே

பூமிக்கு அனலதிகமா யிருந்து அந்தவழியிலே வருகிறகா
ற்று வுஷணத்தோடே வரும் கீழ்காற்று கிட்டின சமுத்திரத்
தின்தண்ணீர்மேலே வருகிறதினுல் குளுந்திருக்கும், ஆனுல்
மேல்சமுத்திரத்தைக்கிட்டியிருக்கிறபேர்கள்இதற்குவிரோத
மாயோசிக்கவேணும். இற்றைவலாக்கும்நம்மாலேபண்ணப்
பட்ட பிரசங்கத்தினிமித்தமாக வாய்வானது ஐந்தாம்பூதி
யமா யிருக்கக் கூடாதென்பது பிரசித்தமான சத்தியமாகும்
அவ்வண்ணமே காற்றானது அசையப்பட்ட ஆகாயமா யிரு
க்கும்போது வேறே பூதியமா யிருக்கிறதென்று சொல்லுகிற
தற் கவகாசமில்லை. இதை யோருவமையினுலே தெரியப்
பண்ணுவோம். ஒரு மனுஷன் சில சமயங்களில்சும்மாயிருக்
கிறான் சில சமயங்களிலே நடக்கிறுன் அப்படிப் பட்ட
வனை யிரண்டு மனுஷனென்று சொல்லக்கூடா திருக்கு
மாப்போலே வெறும் ஆகாயமும் அசைவுள்ள ஆகாயமும்
ஒரே பூதியமல்லாமல் இரண்டு பூதியமென்று சொல்லக்கூ
டாது. ஆனபடியினுலே இந்த அபத்தமான விசேஷத்தை
விட்டு இப்போது ஆகாய அலைசவாகிற காற்றினுலே வருகிற
பிரயோசனத்தைப் பராமரிசிப்போம். முந்தமுந்த சமுத்திர
த்தின்மேலே யுண்டான கப்பல்களெல்லாம நாலுதிக்குகளி
லேயும் பதினறு கோணங்களிலேயும் உண்டான சீமைகளு
க்குப்போகிறதற்குஉதவுகின்றது. பூமிமேலேதிரிகிறகுடியான
வர்களுக்கு வெள்ளாமை தானியம் தூற்றுகிறதற்கு ஒத்தா
சையாயிருக்கின்றது. கடினவெய்யிலிறைக்கும்போது மனுஷ
ருக்கு ஆரோக்கியத்தையும்குளிர்ச்சிமையும்வருத்திவிக்கின்ற
து. இதல்லாமல் மத்தியானத்திலேபூமியெங்கும்மகா அனல்
வீசுகிறபோது காற்றானது மேகங்களைஅங்கங்கே சிதறப்ப
ண்ணிச்சூரியனைமறைப்பித்து மந்தாரம் வருத்திவிக்கின்றது.
இந்த விஷயத்துக் கடுத்த சந்தேகத்தைத்தெளியச்சொல்லு
வோம். சில சமையங்களிலே மந்தாரகாலத்திலே சூரிய
கதிர் பூமிமேலேபடாதிருந்தாலும் இறுக்கமான உஷ்ணமதிக
மாய்க் காண்பிக்கிற தென்ன? அந்தச் சமையங்களிலே
பூமியிலே யிருந்து ஆகாயத்திலேறுகிற கானல் மேலாகாயத்
துக் கேறுகிறதற்கு மேகங்கள் விக்கினமா யிருக்கிறதினுலே
யும் அவைகளாலே மறுபடி பூமிமேலே தள்ளப்படுகிறதினு
லேயும் அதிகமான வுஷ்ணம் பிறக்குமென்பதற்குச் சந்தே
கமில்லை. கடைசியிலே காற்றினுல் வருகிற கனமானபிரயோ
சனமேதென்றுல், ஒரு சீமையிலே மிகுதியாய்ப் பெருவா
ரிக்காச்ச லுண்டானுல் ஆகாசத்திலே விஷமுள்ள அங்கிஷ்ங்



கள் மெத்தக் கலந்திருக்கிறபடியினுலே பெருங்காற்று அதிலே
அடித்தால் அங்கங்கே அந்தந்த விஷமுள்ள அங்கிஷங்க
ளைச் சிதறப்பண்ணி ஆரோக்கியம் வருத்திவிக்கும். அந்தப்
பெருவாரிக் காச்சலிலே யநேக மனுஷர் தீவரமாய்ச் சாகிற
தற்கும் வியாதிக்காரர் கிட்டவிருந்தால்அவனுடைய வியாதி
யெளிதாய்த்தொற்றுகிறதற்க்குங் காரண மேதென்றுல் மனு
ஷர் இடைவிடாமல் சுவாசம் வாங்கிறதினுலேயும் விடுகிறதி
னுலேயும் ஆகாயத்திற் கலந்திருக்கிற விஷ அங்கிஷங்களைச்
சுவிகரிப்பார்கள்; வியாதிக்காரனண்டையிற் பொல்லாத அங்
கிஷங்கள் திரளாயிருக்கிறதினுலேயெளிதாய் வியாதிவரும்.
கடைசியில் ஆகாயத்திலே மேகங்களும்மழையும்பனிமுதலா
னவைகளும் உண்டாயிருந்தாலும் அவைகளெல்லாம் அப்பு
வென்கிற பூதியத்துக்குச் சம்பந்தமா யிருக்கிறதினுலே அ
வைகளை யெல்லாம் வருகிற அதிகாரத்திற் கூடினமாத்திரம்
வெளிப்படுத்துவோம்.

## அ-ம். அதிகாரம்.

### அப்புவின் விவரம்.

பூர்வகாலத்தில் சிலசாஸ்திரிகள் அப்புவானது பிரதான
பூதியமா யிருக்கிறது மல்லாமல் சகலமான வஸ்துகளையும்
பிழைப்பிக்கிறதற்கு அதுவேக பூதியமாயிருக்கிறதென்று சொ
ன்னுர்கள். இந்தப்பக்ஷத்தை ஒப்புவிக்கத் தக்கதாக முதலா
வது.—கண்டிப்புள்ள வஸ்துக்கள் கடைசியிலேதண்ணீராய்
ப்போமென்று சொல்லுகிறுர்கள். 2-வது.—ஸ்படிக பாத்திர
ங்களிலேமழைத்தண்ணீரைவார்த்துவைத்திருந்ததில்சிலசெ
டிகள் முளைந்ததுவளர்ந்ததுஎன்கிறுர்கள். 3-வது.—பெரிய
தொட்டி சம்பாதித்து அதிலே 2800 பலம்உலர்ந்த மண்ணை
ப்போட்டு அதிலே யெழுபது பலமுள்ள வொருகொம்பை
காட்டி அதற்குத் தினந்தினந் தண்ணீரிறைத்து அந்த பூமிக்
குள்ளே வேர்விழுந்து செடியாய்வளர்ந்து ஐந்துவருஷத்துக்
குப்பிற்பாடு அதைப்பிடுங்கினபிறகுமுன்னிருந்தமண்ணை மறு
படி நிறுத்துப்பார்க்க மூன்றுநாலு பலமாத்திரங் குறைந்திரு
க்கிறதென்று கண்டதினுலேயும்; மரம் 2,240 பலங் கனமிரு
ந்ததினுலேயும் அந்தமரம் மழையினுலும் இறைக்கப்பட்ட
தண்ணீரினுலும் வளர்ந்ததென்றும் சகல காரியங்களி
லேயும் இப்படியே யோசிக்க வேண்டுமென்றுந் தண்ணீர்

ஏகபூதியமா யிருக்கிறதென்றும் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். ஆனால் இந்தக் காரியங்களைச் சரியா விசாரித்தோமானால் கண்டிப்புள்ள வஸ்துகள் கடைசியிலே தண்ணீராய்ப் போமென்கிறது பொய்யான விசேஷமா யிருக்கிறதென்றும் தண்ணீர்சகல வஸ்துக்களும்பிழைக்கிறதற்குஉதவியாயிருந்தாலும் ஏக வுதவியல்லவென்றும்; தண்ணீருக்குள்ளே தானே பூமியினுடைய மெலிவான அங்கிஷங்களும் அக்கினியினுடைய புகைச்சலும் ஆகாயத்தினுடைய அணுக்களும் கலந்திருக்கிறதென்றும் அந்தக் கலப்பினிமித்தமாக வளர்சிவனைக்கொண்டிருக்கிற மரங்களும் செடிகளும் பூக்களும் விர்த்திக்கின்றனவென்றும் அனுபவ சித்தியினாலே கண்டுபிடிக்கிறோம். அவ்வண்ணமே மழைத் தண்ணீரும் மற்றத் தண்ணீரும் அநேகநாள் அசைவில்லாமற்போனால் அழுகிநாற்ற மெடுக்கிறதென்று தினந்தினங் காண்கிறதினாலே அவசியமாய்த் தண்ணீரிலே கலப்பிருக்கிறதென்றும், அந்தக்கலப்பினாலே அதற் கழிவு பிறக்கிறதென்றும், கலப்பில்லாமற்போனால்அழிவுவரக்கூடாதென்றும்அங்கீகரிக்கக் கடவோம். இதல்லாமல் கலப்பில்லாத தண்ணீரினாலேமாத்திரம் மரங்களுஞ் செடிகளுங் கூட்டப்பட்டதா யிருந்தால் எல்லாமொருமிக்க அழிந்துபோமென்றும் பின்ன பேதமில்லாம லொரு க்ஷிணத்திற் கெட்டுப்போமென்றுஞ் சொல்லவேண்டி யிருக்கும், ஆனால் முன் சொல்லப்பட்ட வஸ்துக்களிலே சிலது தீவரமா அழுகிப்போமென்றும் சிலதுகள் நாள் வட்டத்திலே மாத்திரங்கெடுமென்றும்இருக்கும்போது அவசியமாய் வெவ்வேறே சுபாவங்களைக் கொண்டிருக்கிற அங்கிஷங்களினாலே உண்டாக்கப்பட்டபட்டவைகளென்று தப்பாதடையாளமாகும். அதிலே மெய்யான விசேஷம் ஏதென்றால் தண்ணீரானது மகா அவசரமான பூதியமா யிருக்கிறதென்றும் சகல பூதியங்களுடைய குழல்போலே யிருக்கிறதென்றும், அதினுடையசரமானதுபுஷ்பங்களும்செடிகளும் வளருகிறதற்குஉதவியா யிருக்கிறதென்றும் மிருகங்களுக்கும் பக்ஷிகளுக்கும் மனுஷருக்கும் அகத்தியம் வேண்டியயானமாயிருக்கிறதென்றும் பிரசித்தமான சத்தியமாகும். இப்போதைக்குத் தண்ணீருடைய அங்கிஷங்களெப்படி யிருக்கிறதென்று கேட்டால், சில சாஸ்திரிகள் தண்ணீரை அழுத்துகிறது மகா அருமையா யிக்ருகிறதென்றும அதினுடைய அங்கிஷங்கள் சதிரமா யிருக்கிறதென்றும் ஸ்தாபித்தார்கள், இந்தப் பக்ஷமானது நியாயத்துக் கொவ்வாததா யிருக்கிற



தென்று காண்பிக்கிறது. அதேதென்றால், அப்புவானது சதிர அங்கிஷங்களினாலே சேர்க்கப்பட்டதா யிருந்தால் வெள்ளம் வரும்போது தண்ணீர் தீவரமா யோடுகிறதற் கவகாசமில்லை, ஆனால் வேறே சாஸ்திரிகளோ வென்றால் தண்ணீருடைய அங்கிஷங்கள் சற்று நீளமுமாய் மச்சம் போலே நழுவப்படத் தக்கதுமாய்த் துவளுகிறதுமாய்ப் பாம்புபோல உருட்சியுமா யிருக்கிறதென்று சொன்னார்கள். அவ்வண்ணமே இப்படிப்பட்ட குணங்களைக் கொண்டிருப்பதால் தண்ணீருக்குச் சம்பந்தமாயிருக்கிற பிரதான விசேஷங்களெல்லாம் சுபாவமாய் வெளிப்படுத்தலாம். முதலாவது,—சலத்தை அமிழ்த்தினால் எளிதா அமுங்காமல்பக்கங்களிற் பிதுங்கிப்போம, 2-வது,—தண்ணீர் வாய்க்கால் சற்று வளைந்திருந்தால் சீக்கிரமா வோடும். 3-வது,—வஸ்திரமுதலான வஸ்துக்களுக்குள்ளே யெளிதாய்ப் பிரவேசிக்கும். 4-வது,—அசுத்தங்களை யெல்லாந் தள்ளுகிறதற்கான அங்கிஷங்களா யிருக்கிறது மல்லாமல் சீலைமுதலான வஸ்துக்களை நனையப்பண்ணினதற்குப் பிற்பாடு காற்றினாலேயாகிலும் வெயிலினாலே யாகிலும் எளிதா ஆகாயத்திற் பறந்துபோம், 5-வது,—சமனாக இருக்கிற வஸ்துக்கள்மேலே விழுந்த ஜலம் துளித்துளியாக நிற்குமல்லாமற் கலக்கமாட்டாது. இப்படிப் பிரகாரமாக மற்றுமுண்டான காரியங்களிலே யோசிக்கக் கடவீர்கள். இங்கே ஊற்றுக்களுடைய விசேஷங்களைச் சொல்லிக் காட்டுவோம். முந்தமுந்த ஊற்றுக்களுக்குக் காரண மேதென்றால் இந்த விஷயத்திலே சாஸ்திரிகளுடைய பற்பல பக்ஷங்களைச் சொல்லிக்காட்டுவோம். அதெப்படியென்றால் சில வித்தியாபாரகர் சமுத்திரமானது பூமிக்குள்ளா யிருக்கிற சிறு தாரைகளுக்குள்ளே பிரவேசித்து பூமி மணலுக்குள்ளே போகப்போகவடிக்கட்டுகிறாப்போலே உப்பு அங்கிஷங்களைவிட்டுத்தண்ணீர் லகுவாயிருக்கிறதினாலே பூமிமேலே யேறிக்கிளம்புமென்கிறார்கள். ஆனால் இந்தப்பக்ஷத்துக்கு அநேகம் விரோதமான காரியமுண்டு, அதெப்படியென்றால சிலர் தண்ணீர் லகுவினாலே பூமிமேல் கொஞ்சமாயேறினாலும் உயர்ந்த பருவதங்கள் மேலேயிருக்கிற ஊற்றுக்களில் எப்படியேறுமென்கிறார்கள். வேறே சாஸ்திரிகள் ஸ்தலங்களிலே யுண்டான மணல்கள் தண்ணீரைச் சுவிகரிக்கிறாப்போலே யிருக்குமென் றெழுதிவைத்தார்கள், இதற்கநேக விரோதமான நியாயங்களுண்டு. வேறே சாஸ்திர்களோவென்றால் பூமிக்குள்ளே யநேக ஸ்தலங்

களிலே அக்கினி அங்கிஷங்கள் கூடுகிறதினாலேமேலே ஓடுகிற தண்ணீரைத் துளித்துளியாகத்தனதுஉஷ்ணத்தினாலே மணல் தாரைகளிலேயும் மலைகளுடைய வெடிப்புகளிலேயும் ஏறப்பண்ணி ஊற்றாக ஊறும் நெருப்புள்ள அங்கிஷங்களைக் கொண்டிருக்கிற ஸ்தலங்களுக்குள்ளே தண்ணீரோடுகிறதென்று ஒப்பிவிக்கத் தக்கதாக சில விடங்களில் கொதிக்கிற தண்ணீர் புறப்படுகிறதென்று அனுபவ சித்தியினாலே கண்பிடித்தார்கள். கடைசியிலே வேறே சாஸ்திரிகள் இந்தப் பக்ஷங்களை யெல்லாம் விட்டு ஊற்றுகளெல்லா மழையினுடைய தண்ணீரினாலே வருகிறதென்றுசொல்லுகிறார்கள். அவ்வண்ணமே பறுவதங்கள் மேலே திரளாய்த் தண்ணீர் விழுகிறபோது அதிலுண்டான பள்ளங்களிற்கூடி மணல் கொஞ்சமா யிருக்கிறதிலே பிரவேசித்து மெள்ளமெள்ள இறங்கி அநேக வூற்றுக்களுக்குக் காரணமாயிருக்கும். இதற்கடையாள மெதென்றால்: கோடைகாலத்தில் ஊற்றில் ஒன்றில் தண்ணீரில்லை ஒன்றில் கொஞ்சமா யிருக்கும். மழைகாலத்திலேயோவென்றால் விரைவாய்த்தண்ணீரூறும். மகா பேர்போன ஒரு சாஸ்திரியானவர் இந்தப் பக்ஷத்தை யொப்பிவித்தது மல்லாமல் சகல ஆறுகளும் மழைகளினாலே வருகிறதென்று கெட்டியானநியாயத்தினாலே ஸ்தாபித்தார். அதெப்படியென்றால்: நீளத்திலேயும் அகலத்திலேயும் உயரத்திலேயும் இரண்டுமுழப்பிரமாணமுள்ள ஒருபாத்திரத்தை யுண்டாக்கி ஒரு வருஷம் மழையினால் அதிலே விழுந்த தண்ணீரையெல்லாம் பார்க்கும்போது முப்பது விரற்கடை யாழமுண்டா யிருந்தது. ஆனபடியினாலே இந்தப் பிரகாரமாக யெங்கு மிப்படியே மழை பெய்ததென்று விசாரித்துக்கொள். இப்படிப்பட்ட தண்ணீரெல்லாமொவ்வொரு சீமையிலே கூடினால் உலகமெங்கு முண்டான ஆறுகளிலொரு வருஷத்துக்குள்ளே ஓடுகிற தண்ணீரைப் பார்க்க காலத்தனை யிருக்கலாமென்று எளிதாய்க் கண்டுபிடிக்கலாம் ஆனபடியினாலே பூமி சுவிகரிக்கிற தண்ணீரும் ஆகாசத்தில் போகிற நீராவிகளுமல்லாமல் ஆறுகளிலே யோடுகிற தண்ணீர் மிஞ்சிப்போம்.

இப்போது இரண்டாறுகளி லோடுகிற தண்ணீர் ஒன்றுக்கொன்று எத்தனை அதிக சீக்கிரமாயோகிற தென்றறிய மனதுண்டானால் ஒரு மாவுண்டை பண்ணி அந்த வுண்டையை முந்த முந்த வோராற்றிலேபோட்டு அதை உருண்டுபோக விட்டு ஒன்று துவக்கி நூறுமட்டும் விடாம லெண்ணிக்கொண்டு கடைசியான ஸ்தலத்திலே நிறுத்தி முன் துவக்கின ஸ்தலத்துக்கு முடிந்த ஸ்தலத்துக்கு மெத்தனை நேரமுண்டென்று பார்த்து இந்தப் பிரகாரமாக வேறே ஆற்றிலேயும் பார்த்து எதிலே அதிகமான அளவுண்டா யிருக்கிறதோ அதிலே தண்ணீர் சீக்கிர நடையென்று சொல்லப்படும்.

இதற்கப்பாலறிய வேண்டியதாவது. ஆற்றிலே ஓடுகிற தண்ணீர் சமுத்திரத்துக்குப் போகிறதற்கு முன்னே எம்மாத்திரந் தணிவாய்ப் போகிறதென் றறியவேணுமானால் ஆற்றினடுவிலே யுயர்ந்த கோல் நாட்டி யதற்குக் கிழக்கே நூற்றிக்கபா லெதிராக வெறே ஒரு உயர்ந்த கோலை நாட்டி அந்த இரண்டு கோலும் தண்ணீர் மேலாக எத்தனை விரற்கடையுண்டென்று பார்த்து அந்த ஆறு மேற்கே நின்று வந்ததானால் மேலக்கோல் கிட்ட நின்று பருமமா யிருக்கிற ஒரு சதிரப் பலகை சம்பாதித்து அதிலே இரண்டு பக்கத்திலும் எதிர் எதிராகச் சரியான விரண்டு சின்ன கொம்புகளைக் கட்டி யிரண்டுஞ் சரியாக வொரு பார்வையிலே படுகிறாப்போலே யிரண்டு துவாரம் பண்ணி பக்கங்களிலே சாயாமற் சதிரப் பலகையோடு கட்டித் துவார வழியாகக் கிழக்கே எதிராக நிற்கிற கோலைப்பார்த்து எத்தனத்தினுடைய துவாரத்துக்குந் தண்ணீருக்கும் எத்தனை விரற்கடை யுண்டென்று பார்த்துக் கிழக்கே யிருக்கிற கோலிலே துவாரத்தின் வழியாகக் கண்டு குறித்த கீற்றுக்கு எத்தனை விரற்கடையுண்டென்று பார்த்து முந்தின மேற் கீற்றுக்கோலுக்கும் இதற்கும் எத்தனை விரற்கடை யதிகமா யிருக்கிறதோ அத்தனை தண்ணீர் தணிந்தோடுகிறதென்று அறியலாம். இந்தப் பிரகாரமாகப் போகப் போகச் சமுத்திரமட்டும் எம்மாத்திரந் தணிவு வுண்டென் றறியவும்.

ஆறுகளெல்லாம் மழைகளினாலே வருகிற தென்று சொன்னோமே, மழைகளுக்குக் காரணமேதென்றால்: சமுத்திரத்திலேயும் பூமியிலேயும் உண்டான ஆவிகளினாலே வருகிறதென் றறிவாயாக. அதெப்படி யென்றால்: சூரியனானது தனது கதிர்களுடைய பலத்தினாலே சமுத்திரத்திலேயும் பூமியிலே யுண்டான ஈரமுள்ள ஸ்தங்களிலேயும் எண்ணப்படாத ஆவிகளை இடைவிடாமல் ஆகாசத்தி லேறப்பண்ணுகிறது. புகைபோலே யேறுகிற இந்த ஆவிகள் போகப் போக ஆகாசங் குளிர்ந்திருக்கும்போது அந்தக்குளிர் நிமித்தமாக ஜலங்கள் ஒன்றாய்க்கூடி மேகங்களாய்ப் போகிறது. பெ

ரியபறுவதங்களுக்கு சமீபமாக வாசமா யிருக்கிறபேர்கள் இதைத் தினந்தினங் கண்ணாலே பார்த்துக்கொண்டு வருகிறார்கள். அவ்வண்ணமே முந்தமுந்தப் புகைபோலே காணப்படுகிற ஆவிகள் சற்றுநேரத்துக்குப் பிற்பாடு மேகங்களாய்ப்போச்சுதென்று கண்ணுக்கு முதலாய்ப் பிரத்தியக்ஷமாய்க் காணப்படுகிறது. கீழேயிருந்து இப்படிப்பட்ட விசேஷத்தைக் கண்டவர்கள் உயர்ந்த பறுவதங்கள் மேலே யேறினால் கீழ்த்தரமான ஸ்தலங்களிலே யீரமுள்ள ஆவிகள் புகையாக வேறினால் மாத்திரம் மேகங்கள் உண்டாகிறதென்று காண்பார்கள். கடைசியிலே யிந்த மேகங்கள் காற்றினாலே அங்கங்கே ஒதுங்கித் திரண்டு குளிர்மிகுதியால் துளித்துளியாகவிழுகிற போது மழை வருஷிக்கிறதென்று சொல்லப்படும். ஆனால் சூரிய கதிரின் உஷ்ணத்தினாலே ஆவிகள் மாத்திரம் ஏறுகிறதென்று விசாரிக்கவேண்டாம். பூமிக்குள்ளே யுண்டான அக்கினி யங்கிஷங்களின் உஷ்ணத்தினாலேயும் ஈரமுள்ள ஆவிகள் ஆகாசத்திலே யேறப்படுமென்பது சந்தேகமில்லை. இந்த விசேஷத்தை யொருவமையினாலே தெரியப்பண்ணுகிறோம். அதெப்படியென்றால், யாதொரு வைக்கோல் வீட்டின்மேலே மழை பெய்ததற்குப் பிற்பாடு அந்தச் சிறு வைக்கோல் தண்ணீரினாலே நனைந்திருக்கிறபடியினாலே அந்த வீட்டுக்குள்ளே தீயெரியப்பண்ணினால் அந்த விஷ்டணத்தினாலே தட்டைச் * சிகின்மேலே உண்டான தண்ணீரெல்லாம் ஆவிகளாய் புறப்பட்டு ஆகாசத்தி லேறுகிறாப்போலே பூமிமேலே ஈரமுள்ள ஸ்தலங்களுக்குக் கீழே அநேகம் விசைஅக்கினி யங்கிஷங்களுண்டா யிருக்கிறதினாலே யீரமுள்ள ஆவிகளைப் புகைபோலே ஆகாயத்தி லேற்பண்ணுமென்று யோசிப்பாயாக.

கடைசியிலே பனிநீருண்டாகிற வகையினாலே மழையினுடைய விசேஷங்களெல்லா மெளிதாய்க் கண்டுபிடிக்கலாம். அதெப்படியென்றால்; ஈயத்தினாலே பூசப்பட்ட ஒரு செம்புச் சட்டியைச் சம்பாதித்து அதிலே பரிமளமுள்ள புஷ்பங்களை நிரம்பப்போட்டு அந்தச் சட்டியினுடைய வாய்க்குச் சரியாகக் குடைவா யிருக்கிற ஒருமுழ வுயரமுள்ள வேறொரு செம்பு சட்டியால் சந்தி லலாமல் நன்றாய்மூடியந்த மேன்மூடியி னடியிலே கமண்டல மூக்குப்போலே வளையமாய்த் தரையை நோக்கப்பண்ணி அதின்பிறகு அந்தப் பாத்திர மிரண்டையுந் தூக்கி யடுப்பிலே வைத்துக்

* மேன்கூரை.



கொஞ்சமாய்த் தீயெரியப் பண்ணினால் புஷ்பங்களி லுண்டாகிய ஈரமுள்ள அங்கிஷங்கள் மெல்லிய புகைபோலே யுயரவேறி மேல்மூடியினுடைய உச்சிமட்டும்போய் அவ்விடங் குளிர்ந்திருக்கிறபடியினாலே யிந்த ஆவிகளெல்லாங் கூடித் துளித்துளியாக மூக்கின் குழல்வழியாயிறங்கிப் புற்றியிலே விழுறாப்போலே மழையினுடைய விஷயங்களிலேயும் யோசிப்பாயாக.

பின்னும் முன்பனி பின்பனி யேதென்றால் பகல் நேரத்திற் சூரியனுடைய கதிர்களினாலே ஆகாசத்திற் கொஞ்சமா யேறின பற்பல ஆவிகளும் புகைகளுஞ் சூரியன் அஸ்தமிக்கிறபோது ஆகாசத்தில் அதிகமா யேறுகிறதற் கவகாசமில்லாததினால் சுபாவமாய்ப் பூமிமேலே விழுகிறது. இதற்குப் பெயர் முன்பனி யென்கிறார்கள். இப்படியே யிராத்திரி காலத்திலே பூமிக்குள்ளே யுண்டான புகைகளும் ஆறுகளிலே யுண்டான ஆவிகளும் ஆகாசத்திற் கொஞ்சமாயேறி மேலாகாயத்துக்குப் போகிறதற்குப் பலமில்லாததினாலே அதிகாலமே பூமிமேல விழுகிறது. இதற்குப் பெயர் பின்பனி யென்கிறார்கள். ஆனால் இப்படிப்பட்ட பனிகளிலே ஆகாச அங்கிஷங்கள் கலந்திருக்கிற படியினாலேயும் அந்தத் துற்குணங்களைத் தள்ளுகிறதற்கு உஷ்ணம் போதாததினாலேயும் முன் சொல்லப்பட்ட பனி மனிதர்மேலே விழுந்தால சில சமயங்களிற் பனியோடே கலந்திருக்கிற வாகாசத்தைச் சுவாசத்தினாலே சுவீகரித்தால் அநேகம் வியாதிகளுக்குக் காரணமாயிருக்கும். வருகிற அதிகாரத்தில் தண்ணீருக்குச் சம்பந்தமாயிருக்கிற பிரதான சாரியமாகிற சமுத்திரத்தினுடைய அநேக அதிசயமான விசேஷங்களைச் சங்க்ஷேபமாகச் சொல்லிக் காட்டுவோம்.

## ௯-ம். அதிகாரம்.

### சமுத்திரத்தின் விவரம்.

பராபர வஸ்துவானவர் சமுத்திரத்திலே தம தளவில்லாத மகிமையினுடைய குறிப்பிடத்தைக் காண்பித்திருக்கிறதொன்று மகாத்துமாக்க ளெழுதிவைத்தார்கள். அதெப்படியென்றால்; சமுத்திரமானது காற்றில்லாத சமயத்திலே ஸ்படிகத்தைப்போலவும் கண்ணாடியைப்போலவும் இருக்கிற படியினாலே பராபர வஸ்துவினுடைய அளவில்லாத

தயையைக் காண்பிக்கின்றது, அன்றியும் கடலானது மகா பலத்தோடே அசைக்கப்பட்டுக் காற்றுகளுக்கும் தங்களுக்கும் அகோரமான யுத்தமுண்டாகி உயர்ந்த பர்வதங்களைப் போலே ஆகாயத்திலே மிகவும் ஏறிப் பாதாளத்தைத் திறந்து ஆகாயத்தில் மோதி சாகரம் பயங்கரமான சத்தத்தோடே கர்ச்சித்து இது முதலான கடினமான கோபத்தினுடைய அடையாளமா இருக்கும்போது இது கடவுளுடைய அளவில்லாத நீதியை வெளிப்படுத்துகின்றது. இத்தன்மையாகச் சமுத்திரத்தினுடைய அதிசயமான ஆழமானது பரப்பொருளினுடைய அளவறுக்கப்படாத விமரிசையின் பரமரகசியங்களைக் காண்பிக்கும், பராபரவஸ்துவானவர் புத்திக்குள்ளே அடங்காதவருமாய்மனோவாக்குக்கெட்டாத சகல நன்மைச் சொரூபியுமாயிருப்பதுந் தவிரத் தம்மிடத்திலே அற்பகுற்றத்தினுடைய நிழல் முதலாயிருக்கக்கூடாதிருக்குமாப்போலே சமுத்திரமானது நாசத்தையும் அழியப்பட்ட வஸ்துக்களையும் பிரேதங்களையும் தன்னிடத்திலிருக்கவொட்டாமல் அசுத்தங்களையெல்லாந் தள்ளிப்போடுகின்றது. இப்படியே சமுத்திரமானது மகா விஸ்தீரமாயுஞ் சகலமான ஆறுகளுக்குங் காரணமாயும் இருந்தாலும் தனது ஆவிகளைக்கொண்டு எங்கு மழைவருஷிக்கப் பண்ணினாலுந் தன்னிடத்திலே குறைவில்லாமல் எப்போதும் நிறைந்திருக்குமாப்போலே கடவுளானவர் எங்கும் வியாபித்து மட்டில்லாத தயையோடே எண்ணப்படாத நன்மையுபகாரங்களைப் பண்ணினாலும் எண்ணிக்கைக்குள் அடங்காத வுத்தம தானங்களைக் கட்டளையிட்டாலும் எப்போதும் மட்டில்லாத நன்மைகளுடைய பூர்த்தியாயிருக்கிறார். இப்படிப்பட்ட சமுத்திரத்தைச் சர்வேஸ்வரனானவர் மனுஷருக்குத் துணையாகவே யுண்டாக்கினார். அதெப்படியென்றால், அநேக இராச்சியங்கள் ஒன்றுக்கொன்று தூரமாயிருந்தாலும் சமுத்திரமானது மகா தீவிரத்தோடே ஒன்றிக்கச் செய்கிறதினாலே கிட்டினதாகக் காண்பிக்கும். இந்தச் சமுத்திரத்துக்குள்ளே அங்கங்கே அநேகம் ஸ்தலங்களிலே ஆண்டவர் தீவுகளை யுண்டாக்கினவகை யேதென்றால் இந்த இராச்சியத்திற் பெரியபாதைகளிலே சத்திரங்களும் தண்ணீர்ப்பந்தல்களும் உண்டாயிருக்கிறதுபோலே மனுஷர் பிழைக்கிறதற்கு வேண்டினவைகளெல்லாம் உபகாரமாகக் கொண்டிருக்கிற தீவுகளைச் சர்வேஸ்வரனானவர் தமது சத்திரமாகச் சமுத்திரயாத்திரை போகிறவர்களுக்குக் கட்டளையிட்டருளினார்.



ஆனால் இப்படிப்பட்ட கடலானது உப்புத் தண்ணீரைக் கொண்டிருப்பானேன்? இதற்குப் பிரதியுத்தரத்தை உற்றுக்கேள். சமுத்திரத்திலே உப்புத்தண்ணீரில்லாமற் போனால் சில நாளைக்குள்ளாகக் கெட்டழிந்துபோம், மேலும் மகாமகாய் பாரமுள்ள கப்பல்களைச் சுமக்க நல்ல தண்ணீரைப்பார்க்க வுப்புத்தண்ணீர் பலமாயிருக்கும். ஆனால் இந்தவுப்பின் குணம் எப்படிவருகிறதென்றால்:—சிலசாஸ்திரிகள் சூரியனுடைய உக்கிரத்தினாலே வருகிறதென்கிறார்கள். வேறேபேர்கள் சமுத்திரத்துக்குள்ளே உப்புமலைகளுண்டாயிருக்கிறதென்றும் அது கரைவதினாலே உப்புத் தண்ணீராய்ப் போகிறதென்றுஞ்சொல்லுகிறார்கள் கடைசியிலே வேறேமகாத்துமாக்கள் சர்வேஸ்வரன் லோகத்தை யுண்டாக்கிறபோது சமுத்திரஜலத்தை இப்படியே யுண்டாக்கினாரென்றார்கள்.

இப்போது சமுத்திரத்திலுண்டான மேலான வதிசயத்தை வெளிப்படுத்துவோம். அதெப்படியென்றால்; தினந்தினம் கடலானது பூமிமேலே மெள்ளமெள்ள ஏறி இப்படி ஐந்து தாசு ஏறினதற்குப்பிற்பாடு ஒரு தாசு சும்மாயிருந்து அதின்பிறகு ஐந்து தாசுக்குள்ளே மெள்ளமெள்ள வாங்கிப்போம், பின்னையும் ஒரு தாசு சும்மாயிருந்து எப்போதும் போலே யேறி யெப்போதும் போலே வாங்கிப்போமென்று அநுபவ சித்தியினாலே கண்டுபிடிக்கிறோம். இப்படிப்பட்ட சமுத்திரத்தினுடைய வற்புதமான வடிவுக்கும் பெருக்குக்கும் காரணத்தைச் சொல்லத்தக்கதாக எண்ணப்படாத சாஸ்திரிகள் பிரயாசப் பட்டார்கள். அவர்களுக்குள்ளே மகா பேர்போன சாஸ்திரியாகிய அரிஸ்தோதலியானென்கிறவர் அநேக வருஷம் இந்த அதிசயமானவிசேஷத்துக்குக் காரணத்தைத் தேடினதற்குப் பிற்பாடு அதைக்கண்டுபிடிக்கமாட்டாமல் சமுத்திரத்தைப்பார்த்து நீ யென்னிடத்தில் அகப்படவில்லை நானுன்னிடத்தில் அகப்படுவேனென்று சொல்லிக் கடலிலே விழுந்துசெத்தார். ஆனால் இந்த விஷயத்திலே சாஸ்திரிகளுடைய பற்பல பக்ஷங்களைச்சொல்லிக்காட்டுவோம். சிலசாஸ்திரிகள் கரைதுவக்கி யுள்ளேபோகப் போகச் சமுத்திரத்தினிலுஞ் சாய்ப்பாய்ப் போகுதென்றுசொல்லி அந்தப் பாதாளத்தின் வழியாய்க் கரைகளிலேயுண்டான தண்ணீர் நிரம்பிப்போயன்னியோன்னியமா யெதிராகமோதி மகாபலத்தோடே திரும்பத் தள்ளுண்டு போமென்கிறார்கள். வேறேபேர்கள் கடலின் கீழே மகாவிஸ்தீரணமான பாதாளங்

களுண்டென்றும் அதிலே நீ ராக்குசுளும் நெருப்பாங்கிஷங்க
ளும் வெகு அடர்த்தியா யிருக்கிறதினாலே மகாபலத்தோடே
அசைந்து இந்த அசைவினாலே மேலேயிருக்கிற தண்ணீரைக்
கொதிக்கப்பண்ணி யிப்படிப் பொங்கியிருக்கிற தண்ணீர்பூமிமே
லே மெள்ளமெள்ள ஏறி மற்றபடி சுபாவகனத்தினாலே கடலி
லே விழுந்துபோமென்றும் அப்படி நெருக்கமாயிருக்கிற அக்
கினிமேலே விழுந்து பொங்குமென்றும், இப்படி யேற்றமும்
இறக்கமுமா யிருக்குமென்றும் சொல்லிக்கொண்டு வருகிறார்
கள். வேறேசில வித்தியாபாரகர் வடக்கேயிருக்கிற துருவ
நக்ஷத்திரத்துக்குக் கீழேயும் அந்தஸ்தலத்துக் கெதிராகத் தெ
ன்பக்கத்திலேயும் பயங்கரமான பாதாளங்க ளுண்டாயிருக்க
அந்தப் பாதாளங்களுக்குள்ளே பெரும்புசல்பிரவேசித்து அத்
தியந்த பலத்தோடே சமுத்திரத்துத் தண்ணீரைத் தள்ளிப்
போட்டு கடல்மேலே யேறப்பண்ணினதற்குப் பிற்பாடு சமு
த்திரத்தினுடைய தண்ணீர்சுபாவ கனத்தினாலே கீழேவிழுந்
து ஆகாசத்தைத் தாத்தி யிப்படிகடலின் சலத்துக்கும் ஆகா
சத்துக்குமுண்டான அன்னியோன்னிய யுத்தத்தினாலே சமு
த்திரத்தினுடைய பெருக்கும் வடிவும்வருகிறதென்கிறார்கள்.
வேறேபேர்கள் பூமியிலுண்டான ஆறுகள் சமுத்திரத்திலே
விழுகிறபோதும் கடல்தண்ணீரையெல்லாந் தள்ளும்போதும்
தள்ளுண்டுபோன தண்ணீர்திரும்ப ஆறுகள்மேலே விழுகிற
போதும் பெருக்கும்வடிவும் வருகிறதென்றுஸ்தாபித்தார்கள்.
சிலபேர்கள் மனுஷருக்குண்டான மூன்றுமுறைநாலாமுறைக்
காய்ச்சல் எப்போதும் ஏறக்குறைய ஒருநேரத்திலே வருகிற
தென்றும் தாரங்கிஷங்கள் இரத்தத்தோடே கலந்திருக்கிறப
டியினாலே பொங்குகிறதற்குக் காரணமா யிருக்கிறதென்றும்
அதித்து சமுத்திரத்துக்குள்ளேயும் அநேகவர்ணவுப்பு கலந்தி
ருக்கிறதினாலே பெருக்குக்கும் வடிவுக்கும் காரணமென்கிறா
ர்கள். வேறேபேர்கள் சமுத்திரமிருகம் உண்டென்றுசொல்லி
அதுசுவாசம் விடுகிறபோதும் வாங்குகிறபோதும் பெருக்கும்
வடிவும் உண்டாகிறதென்கிறார்கள். ஆனால்வேறே அநேகமகா
த்துமாக்கள் முன்சொல்லப்பட்ட நியாயங்கள் ஒன்றில் பிரத்
தியக்ஷமான தப்பறையா யிருக்கிறதென்றும் ஒன்றில் கெட்டி
யுள்ள நியாயங்களினாலே ஸ்தாபிக்கப்படவில்லை யென்றும்
கண்டுஇந்த அதிசயத்துக்குக் காரணத்தைத் தேடத்தக்கசா
கச் சோதிமண்டலமட்டும் புத்தியினாலேயேறித் திருவுளம்ப
ற்றினதாவது. சகலமண்டலத்துக்குமுதல்மண்டலம் நக்ஷத்
திரத்தையுங் கிரகங்களையும் ஆகாயத்தையுங் கிழக்கேயிருந்து



மேற்கே தள்ளுகிறபோது சமுத்திரத்தையுங் கூடத்தள்ளுகி
றதென்றும், சமுத்திரம் மறுபடிதனது சுபாவஅசைவினாலே
கிழக்கே போகிறதென்றுஞ் சொன்னார்கள். வேறேபேர்கள்
சூரியனனது சமுத்திரத்தினுடைய அலைகளைத் தனதுகதிர்க
ளினாலே உப்பப்பண்ணி ஏற்றவற்றத்துக்குக் காரணமாயிருக்கு
மென்கிறார்கள். கடைசியிலே வேறேஅநேகஞ் சாஸ்திரிகள்
சந்திரனாலே இப்படிப்பட்ட அதிசயம் வருகிறதென்று ஸ்தாபி
த்தார்கள். அவர்களுடைய பக்ஷத்தை நன்றாய்க் கண்டுபிடிக்
கிறதற் கறியவேண்டியதாவது: முதலாவது.—ஒரு நாளில்
பதினைந்து பாகமுண்டென்று விசாரித்துக் கொள்ளுங்கள்.
அந்தப்பாகங்களிலே தினந்தினம் பதினைந்தில் நாலுபாகமும் நாற்
பத்தெட்டு விபித்தமும் ஒருநாள்வருகிற பெருக்குக்கும் மறு
நாள்வருகிற பெருக்குக்குந் தாமதமாயிருக்கும். இந்தப் பிர
காரமாக இன்றுசூரியோதயத்திற் பெருகத்துவக்கினால் நாளை
க்கு முக்கால்நாழிகைக்குப் பிறகுதுவக்கும். 2-வது.—பவுர்ணமி
அமாவாசி காலங்களிற் பெருக்க மதிகமாயிருக்கும். ஆனபடி
யினாலே சந்திரனனது உதயம் பண்ணுகிறதற்குத் தினந்தினம்
முக்கால்நாழிகை தாமதம் பண்ணுகிறதினாலேயும் அமாவாசி பவு
ர்ணமியிலே அதிகமான பலத்தைக்கொண் டிருக்கிறதினாலே
யும் வடிவுக்கும் பெருக்குக்கும் சந்திரனனது பிரதான கார
ணமா யிருக்கிறதென்பதற்குச் சந்தேகமில்லை. ஆனால் இந்த
க்காரணத்தை வெளிப்படுத்துகிறதிலே இரண்டு வகையுண்டு.
அதெப்படியென்றால், ஊசிக்காந்தமானது இரும்பைத் தன
க்குச் சேரத்தக்கதாக இழுக்கிறாப்போலே சந்திரன் சமுத்திர
த்தின்மேலே யேறுகிறபோது சமுத்திரத்தை உயர்த்துகிறத
ற்கு விசேஷமான பலமுண்டென்றுஞ் சந்திரன் அப்பாலேகட
ந்ததற்குப் பிற்பாடு சுபாவமாய்த் தணிந்துபோமென்றும் அங்
கீகரிக்கிறார்கள். வேறே சிலபேர்களோவென்றால், சகல கிரக
ங்களைப் பார்க்கச் சந்திரன் பூமிக்குக்கிட்ட விருக்கிறபடியினா
லே சமுத்திரத்தின்மேலே யேறுகிறபோது கடலுக்குஞ் சந்
திரனுக்கும் நடுவேயிருக்கிற ஆகாயத்தை அமிழ்த்தி அமிழ்த்
தப்பட்ட ஆகாயஞ் சாகரத்தை அமிழ்த்தி அதினுடைய அலை
களைப் பூமிமேலே ஏறப்பண்ணிச் சந்திரன் போனதற்குப் பிற
பாடு எப்போதும்போலே வற்றுமென்றுஞ் சொல்லிக்கொண்டு
வருகிறார்கள். கடைசியிலே சிலஸ்தலங்களிற் பெருக்குக்கும்
வடிவுக்கும் வேற்றுமை யுண்டாயிருந்தால் கரைகளுடைய
பலபல அந்தஸ்துக்கள் முதலான பற்பல காரணங்களினாலே
வருமென் றறிவாயாக.

இப்போதைக்குச் சமுத்திரத்திற் காணலான அதிசயமான காரியங்களைச் சுருக்கத்திலே சொல்லிக் காட்டுவோம். அதெப்படியென்றால், சில இரத்தினங்களைப்பார்க்க விலையேறப்பெற்றதுமாய் மனுஷருக்கு மிகவும் உதவுகிறதுமாயிருக்கிற முத்துக்கள் பவளங்கள் அம்பர்கள் சமுத்திரத்திலே கிடைக்கும். முந்தமுந்த முத்துக்களைப் பார்க்கும்போது ஒரு காரியத்திலே பூமிக்குள்ளேயுண்டான திரவியங்களையும் பருவதங்களிலே யுண்டான இரத்தினங்களையும்விட அதிசயித்திருக்கிறது. அவ்வண்ணமே, வெள்ளியும் பொன்னுந் திரவியங்கள் விளைவிக்கிற இடத்திலே அகப்படுகிறபோது அநேக மணலோடேயும் அசுத்தங்களோடேயுங் கலந்திருக்கிறபடியினாலே அவைகளெல்லாம் பிரகாசமாயிருக்கத்தக்கதாகவுஞ்சுத்தமாயிருக்கத் தக்கதாகவும் அநேகஇடங்களிலே கழுவி மகாபிரயாசத்தோடு உருகப்பண்ணவேணும். வச்சிரமுதலான இரத்தினங்களோவென்றால் பருவதங்களிலே நின்றெடுத்ததற்குப் பிற்பாடு எத்தனை யெச்சரிக்கையோடேயும் பிரயாசத்தோடேயுந் தகுமான ரூபங்களைக் கொண்டிருக்கிறதற்குச் செப்பனிடவேணும். முத்துகளோவென்றால், எத்தனை பெரிதாயிருந்தாலுஞ் சிப்பியிலே நின்றெடுத்தவுடனே இராசாக்களுடைய கிரீடத்திலே பதிக்கலாம். அதற்கொன்று கூட்டவுங் குறைக்கவும் தேவையில்லை; சமுத்திரத்துக் குள்ளேதானே முத்தானது சாங்கோபாங்கமாய் முடியும். இப்போது பவளத்தின் விசேஷத்தைக்கேள்: பவளமானது சிறியசெடிபோலே சமுத்திரத்தினுடைய * கயத்திலேயும் கடலிலே யுண்டான பாறைகள் மேலேயும் முளைத்துவரும். பவளங்களெல்லாஞ் சிவப்பாயிருக்கிறதென்று விசாரிக்கவேண்டாம். சகல வர்னங்களையுங் கொண்டிருக்கிற பவளங்களுமுண்டு. நாமும்கண்டோம். சிலசெடிகள் பலபல வர்னங்களைக் கொண்டிருக்கிற கொம்புகளைத் தரித்திருக்கிறது. மற்றுமுண்டான செடிகள் பழமும் விதையும் உண்டாயிருக்குமாப்போலே பவளச்செடிகளுக்குக் கொட்டை யுண்டென்று விசாரிக்க வேண்டாம். கொம்புகளிலேநின்று பால்போலே யிரண்டுமூன்றுதுளி தரையிலேவிழுந்து வேறே பவளச்செடிகளுக்கு விதையாயிருக்கும். பவளங்கள் சமுத்திரத்துக்குள்ளேயிருக்கும்போது அத்தனை கெட்டியாயிராமல் ஆகாயத்திலே வந்தபிற்பாடு மாத்திரங் கல்லுப்போலேபோம். கடைசியிலே சில அம்பரானது கோமேதகம்போலே யிருக்கும். வேறேசில அம்பர் சாம்பல்வ

* ஆழம்.



ர்ணம்போலே யிருக்கும். அப்படிப்பட்ட அம்பர் சமுத்திரத்துக்குள்ளே உண்டான ஊற்றுக்களிலேநின்று புறப்பட்டு அலைகளினுடைய அசைவினாலே அடிபட்டுப் பரிமளத்தையும்உச்சிதகுணத்தையுஞ் சுவிகரிக்கிற தென்கிறார்கள். வேறேசில பேர்கள் காளான்மணலிலே வெடிக்கிறாப்போலே கடலிலே யுண்டான கயத்தின் மணலுக்குள்ளேயாகிலும் அவ்விடத்தின் பாறைகளின் வெடிப்புகளிலே யென்கிலும் புறப்பட்டுப் பெரும்புசல்களினாலேசமுத்திரம் அசைக்கப்படுகிறபோது அம்பரென்கிறதைப் பிடுங்கி யங்கேயும் இங்கேயுந் தள்ளித் தரையிலொதுக்கிப்போடு மென்கிறார்கள். சிலபேர்கள் அம்பரானது ஒருவகைத் தேனென்று சொல்லுகிறார்கள். அதெப்படியென்றால் சமுத்திர ஓரத்திலுண்டான பருவதங்களிலே தேனீ தேனைவைத்து அந்தஇராட்டு சூரியனுடைய கதிர்களினாலே சூழப்பட்டு உஷ்ணத்தின் மிகுதியினாலே பேர்ந்துபோய்ச்சமுத்திரத்திலே விழுந்ததினாலே அடிபட்டு அதினுடைய நல்ல குணங்களைச் சுவிகரித்துக் கரையிலேதள்ளுண்டுபோம். இப்படிப்பட்ட முத்துக்களும் பவளங்களும் அம்பர்களுங் கண்களுக்கு மகாஅலங்காரமாய்க் காண்பிக்கிறதும் அல்லாமல் அவைகளுடைய தூள்யெண்ணப்படாத மருந்துகளுக்குமாகும்.

இப்போதைக்கு வேறே சந்தேகத்தை நிவாரணம்பண்ணுவோம். அதெப்படியென்றால், இத்தனை ஆறுகள் சமுத்திரத்தில் விழுந்துகொண்டு வர இத்தனை வருஷகாலஞ் சமுத்திரம் பெருகாம லிருக்கிறதென்ன? இதற்குப் பிரத்தியுத்தரத்தை விவரமாய்க்கேள். ஒரு நாளையிலே சகல ஆறுகளாலும் சமுத்திரத்திலே விழுகிற தண்ணீரெல்லாஞ் சமுத்திரத்தினுடைய பெருக்குக்கு வேற்றுமைகாண்பிக்க அவகாசமில்லை. அவ்வண்ணமே பூலோகமானது மேல் தாக்கிலே யேறக்குறைய பாதிபூமியாகவும் பாதிதண்ணீராகவுமிருக்கச் சகலமான ஆறுகளாலுங் கடலிலேவிழுகிற தண்ணீரெல்லா முன் சொல்லப்பட்ட விஸ்தீரணத்திலே பரம்பிச் சிதறினாலொரு விரற்பிரமாணமுதலா யுயரங் காண்பியாது. பின்னையும் ஆறுகளுடைய தண்ணீர் சமுத்திரத்திலே ஓடுகிறபோது அதற்குச் சரியாகவொன்றில் பூமிக்குள்ளாக விருக்கிறவாய்க்காலுக்குள்ளேயும் ஒன்றில் மேகங்களுக் குள்ளேயும் ஆவிகளாகப் போகப்பண்ணும். ஆனால் சமுத்திரத்திலே தண்ணீரில்லாமற் போனால் சகல லோகத்திலேயும் உள்ள ஆறுகளெல்லாந் தண்ணீராலே நிறைந்து அந்தச் சமுத்தி

ரத்தை நிரப்புகிறதற் கெத்தனை நாள் எத்தனை வருஷஞ் செல்லும்? இதெல்லாம் நன்றாய்க் கண்டுபிடிக்கிறதற் கறிய வேண்டினதாவது: கடலினுடைய ஆழமானது கடற்கரையின்கிட்ட கொஞ்சமாயிருந்தாலும் நடுவேயும் மற்ற ஸ்தலங்களிலேயும் வெகு வேறுபாடு காண்பிக்கும். அநேகம் பெரிய விராசாக்களும் இராயருஞ் சமுத்திரத்தினுடைய ஆழத்தைக் கப்பல்களை யனுப்பி சமுத்திரத்தினுடைய கயத்தைச் சோதிக்கச்சொல்லி சமுத்திர சாஸ்திரிகளுக்குக் கட்டளை யிட்டார்கள். அந்தப்பிரகாரமாக அநந்தம் பேர்கள் எங்கும் போய்ச் சோதித்ததற்குப், பிற்பாடு சிலவிடங்களிலே நூறு பாகம், சில ஸ்தலங்களிலே யிருநூறுபாகம், வேறே ஸ்தலங்களிலே ஐந்நூறு பாகமாகக்கண்டது மன்றி வேறே சில விடங்களிலே கயங்கண்டு பிடிக்கமாட்டா மலும்போனார்கள். ஆனாலிது அபூருபம்.

இதெல்லாம் இப்படி யிருக்கையில் எங்கும் 200 பாக முண்டென்று விசாரித்துக்கொள். பின்னையும் பூலோகத்திற் பெரிய ஆறுகளும் சின்ன ஆறுகளு மெத்த வுண்டாயிருந்தாலும் பெரிய ஆறுகளுடைய அளவைக்குறைத்துச் சின்ன ஆறுகளுடைய அளவைப் பெருக்கி யிந்த ஆறுகளெல்லாந் தங்களுக்குள்ளே சரியாயிருக்கிறதென்று விசாரித்துக் கொள். ஒவ்வோரு ஆறும் 10 பாகம் ஆழமாயிருக்க 1,000 பாக மகலமாயிருக்க ஒரு காதக்குள்ளே 10,000 பாகமோட இப்படிப்பட்ட 10,000 பாகம் என்னவென்றால் இந்தச் சீமைகாதம் ஒருகாதமுங் காதத்தில் மூன்றத்தொரு பங்குமாகும். சமுத்திரத்திலேவிழுகிற ஆறுகளைச்சோதித்த சமுத்திர சாஸ்திரிக ளெல்லாருமாக 3,602 ஆறுகள் கண்டதாகச் சொல்லுகிறார்கள். ஆனால் துற்கை நக்ஷத்திரத்தின் கீழேயிருக்கிற ஆறுகளையும் அதற்கு விரோதமான பக்கத்திலிருக்கிற நதிகளையும் குளிர் நிமித்தமாக அறிகிறது மகா அருமையா யிருக்கிறபடியினாலே இன்னும் 400 கூட்டி ஆக 4,000 ஆறுகளுண்டென்று விசாரித்துக்கொள். ஒவ்வொரு ஆறும் ஒவ்வொரு காவேரியென்று நினைத்துக்கொள். இப்படியே 4,000 காவேரி இடைவிடாமல் தண்ணீரில்லாத சமுத்திரத்திலே விழுந்தால் முழுதும் நிரம்புகிறதற்கு 30 வருஷமும் 6 மாதமுஞ்செல்லும். ஒரு காவேரிமாத்திரம் விழுந்தால் 1,21,092 லக்ஷத்து இருபத்தோராயிரத்துத் தொண்ணூற்றிரண்டு வருஷஞ்செல்லும்.



அப்போதைக்குச் சமுத்திரத்தினுடைய தண்ணீர் உப்புத் தண்ணீராக விருக்கிறபடியினாலே பாரங்களைச் சுமக்கிறதற் கதிகமான பல முண்டென்று சொன்னோமே அந்த நியாயத்தினாலே சில கப்பல்கள் விக்கினமில்லாமல் கடலிலே ஓடினதற்குப் பிற்பாடு நல்ல தண்ணீருள்ள ஆறுகளிலே வந்தவுடனே யமுந்திப் போயிற்று.

கடைசியிலே எந்தத் தண்ணீர் நன்றா யிருக்கு தென்றறியவேணுமானால் எந்தத் தண்ணீர் லகுவா யிருக்கிறதோ அதுவே நல்ல தண்ணீர். ஆனால்சில வஸ்துக்கள் அமிழ்ந்திப் போகிறதையும் சிலதுகள் மிதக்கிறதையும் அறியவேணுமானால் எந்த வஸ்து தனது அந்தஸ்துக்குத் தக்கது தண்ணீரைப் பார்க்க கனமாயிருக்கிறதோ அது அமிழ்ந்திப்போம். எந்த வஸ்து தனது அந்தஸ்துக்குத் தக்கது தண்ணீரைப் பார்க்க லகுவா யிருக்கிறதோ அது மிதக்கும். இந்தப் பிரகாரமாக ஒரு சிறியமணல் தண்ணீரில் விழுந்தால் அழுந்திப்போம் ஒரு பெரியவிட்டஞ் சமுத்திரல் விழுந்தால் மிதக்கும். அவ்வண்ணமே விட்டத்தைப் பார்க்கச் சிறுமணல் இலகுவாயிருந்தாலும் அந்த மணல் ரூபத்துக்குத் தண்ணீர் வார்த்து நிறுத்தால் தண்ணீரைப் பார்க்க மணல் கனமாயிருக்கும். விட்டமோ வென்றால் அந்த ரூபத்துக்குத்தக்க தண்ணீர்வார்த்து நிறுத்தால் விட்டம் தண்ணீரைப் பார்க்க லகுவாயிருக்கும். இதெல்லாம் இப்படியிருக்கையிலே ஒரு காசு தண்ணீரிலே விழுந்தால் அமிழ்ந்திப்போகிறதென்ன. குடிக்கிற செம்புமிதக்கிறதென்ன? செம்பு ஆகாயத்தினாலே நிறைந்திருக்கிறபடியினாலே அந்த ஆகாயமுஞ் செம்பும் அதற்குச் சரியான தண்ணீரைப்பார்க்க லகுவாயிருக்கும்.

## ௰-ம் அதிகாரம்

### பிரிதிவின் விவரம்.

நாலு பூதியங்களுக்கும் அஸ்திவாரமா யிருக்கிற பிரிதிவென்கிற பூதியத்துக்குச் சம்பந்தமாயிருக்கிற அநேக அதிசயங்களை யிந்த அதிகாரத்திலே சர்வேஸ்வரனுடைய கிருபையைக் கொண்டு வெளிப்படுத்துகிறோம். ஆனால் அவைகளெல்லாம் மனதிலே நன்றாய்த் தரிக்கிறதற்கு நம்மாலே யுண்டாக்கப்பட்ட லோகப்பிரமாண சாஸ்திரத்தி லெழுதியிருக்கிற காரியங்களிற் சிலதைச் சங்க்ஷேபமாக இங்கே சொல்லிக் காட்டுவோம்.

அதெப்படியென்றால், 16 கீற்றுகொண்டது ஒரு விரல். 16 விரல் கொண்டது ஒரு பாதம், 5 பாதங்கொண்டது ஒரு பாகம், 3,000 பாகங்கொண்டது ஒரு காதம் இப்படிப்பட்ட சாஸ்திர காதத்தைக் கெட்டிக்காரனை ஒருவன் ஒரு நாசுக்குள்ளே நடப்பான். இப்படிப்பட்ட காதங்கள் பூலோகத்தைச் சுற்றிக்கொண்டு வருகிறதற்கெத்தனை காதமிருக்கிறதென்று கண்டு பிடிக்கிறதற்கு முன்னே கடலும் பூமியும் [illegible]கிற பூலோகத்தின் ரூபத்தையும் ஸ்தலத்தையும் பராமரிசிக்கக்கடவோம். அதெப்படியென்றால்; சர்வ லோகத்துக்கும் பூலோகமானது நடுவாயிருக்கிறதென்றும், வட்ட ரூபமாயிருக்கிறதென்றும், எளிதாயொப்புவிக்கலாம். அதெப்படி யென்றால்:—

முதலாவது.—பூலோகத்திலே எந்த ஸ்தலத்திலேயிருந்தாலும் பரமண்டலங்களுடைய பாதியை யெப்போதுங் காணலாம்.

2-வது.—பன்னிரண்டிராசிகளும் இடைவிடாமலசைந்துகொண்டிருந்தாலுந் தரிசனசக்கரத்தின்மேலெப்போதும் ஆறு ராசிகளிருக்கின்றன.

3-வது.—ஒரு நக்ஷத்திரம் அஸ்தமிக்கிறபோது அதற்கு முழுது மெதிராயிருக்கிற வேறொரு நக்ஷத்திரம் உதயம் பண்ணுகின்றது.

4-வது.—தரிசன சக்கரத்திலே சந்திர கிராணம் வரும்போது சந்திரனுஞ் சூரியனு மெதிராகத் தரிசன சக்கரத்திலிருக்கிறதென்று காணலாம்.

5-வது.—சம சக்கரத்தின் கீழேயிருக்கிற சனங்களுக்கு இரவும் பகலும் சரியாயிருக்கின்றது. ஆகையால் பூமி சர்வ லோகத்தினுடைய மையத்திலில்லாமற்போனால் முன் சொல்லப்பட்டவர்களுக்கு இரவும் பகலுஞ் சரியாயிருக்கப் போகிறதில்லை.

6-வது.—சந்திர கிராணம் சூரியனுக்கு எதிராக நிற்கிறதினாலேயும் பூமியினுடைய நிழலினாலேயும் வருகிறதல்லவோ? ஆனால் பூமி சர்வ லோகத்தினுடைய மையமாயில்லாதிருந்தாலுஞ் சந்திரனுடைய கிராணமிருக்கலாம். ஆனபடியினாலே வெவ்வேறே அபத்தங்களெல்லாஞ் சொல்லாதபடிக்குப் பூமி சர்வலோகத்தினுடைய மையமாயிருக்கிறதென்று சொல்லவேண்டியது.



இப்போதைக்குப் பூமியானது உண்டைபோலே வட்டரூபமாயிருக்கிறதென்று கெட்டியுள்ள நியாயங்களாலே யொப்புவிக்கலாம். அதெப்படியென்றால்:—

முதலாவது.—சந்திரகிராணங்கள் வரும்போது பற்பல ஸ்தலங்களிலே வாசமாயிருக்கிற அநேகஞ் சனங்கள் இப்படிப்பட்ட கிராணங்களை யொருமிக்கக் கண்டாலும் அப்படிப்பட்ட பலபல ஸ்தலங்களிலே வெவ்வேறே காலங்களிருக்கும். சிலபேர்களுக்குச் சூரியனஸ்தமிக்கிறது. சில பேர்களுக்கு அஸ்தமித்து ஒருசாமம். வேறே சிலபேர்களுக்குநடுச்சாமம். ஆகையால் பூமி வட்டரூபமாயில்லாதிருந்தால் இந்தக் கால வேற்றுமை காண்பிக்கமாட்டாது.

2-வது.—வடக்கேயிருந்து தெற்கே செவ்வே போனால் துற்கை நக்ஷத்திரங் கீழே காண்பிக்கும். பின்னையுந் தென்பக்கத்திலே மறைந்திருக்கிற நக்ஷத்திரங்கள் நவமா உதயம் பண்ணும். கடைசியிலே தெற்கேயிருந்து வடக்கேபோனால் துற்கை நக்ஷத்திரம் மேலே யேறுகிறாப்போலே காண்பிக்கும். ஆனபடியினாலே பூமி உண்டைபோலே வட்டரூபமாயில்லாமற்போனால் இந்த விசேஷங்களை யொருக்காலுங் காணப்போகிறதில்லை.

3-வது.—சமுத்திரத்திலோடுகிற கப்பல்மேலேயிருக்கிற ஜனங்கள் முந்தமுந்தப் பருவதத்தினுடையசிகரத்தைப் பார்ப்பார்கள். பின்னையும் போகப்போக மலையினடிவாரத்தைக் காண்பார்கள். இந்தப் பிரகாரமாய்த் தூரத்திலெதிராக வருகிற வேறே கப்பலின் பாய்மரத்தினுடைய நுனியை முந்தமுந்தக் கண்டதற்குப் பிற்பாடு முழுக்கப்பலையுங் காண்பார்கள். ஆனபடியினாலே சமுத்திரமும் பூமியோடேகூட வட்டரூபமாயிருக்கிறது. இதன்றியே ஆறுகளெல்லாம் இடைவிடாமல் சமுத்திரத்தில் விழுகிறதே. ஆனபடியினாலே சமுத்திரத்துக்கும் பூமிக்கும் ஒரு மையக்கம்பியுண்டாயிருக்கும்.

4-வது.—பூமி வட்டரூபமாயில்லாமற்போனால் அநேக அபத்தங்களை யெல்லாஞ் சொல்லவேண்டியிருக்கும். அதெப்படியென்றால், பூமிமேலேயிருக்கிற சனங்களெல்லாருக்கும் சந்திரனுஞ் சூரியனும் ஒருமிக்கவொரு க்ஷணத்திலே காண்பிக்கும். இதன்றியே சில பேர்களுக்குச் சூரியன் உதயம் பண்ணி மத்தியானமட்டும் இரண்டு சின்ன நாழிகைமாத்திரஞ் செல்லும். மத்தியானந்துவக்கி அஸ்தமிக்குமட்டும் இருபத்தெட்டு நாழிகைசெல்லும். வேறேபேர்களுக்கு

இதற்கு விரோதமாகக் காண்பிக்கும். ஆனபடியினால் இப்படிப்பட்ட அபத்தங்களை யெல்லாஞ் சொல்லாதபடிக்குப்பூமியுண்டைபோலே வட்டரூபமா யிருக்கிறதென்று சொல்லவேண்டி யிருக்கின்றது.

இதன்றியே பூமி வட்டரூபமாக விருக்கச்சே அதினுடைய அளவு பிரமாணத்தை நன்றாய்க் கண்டுபிடிக்கிறதற்கு முந்தமுந்தப் பூமியினுடைய வளையத்தை யறியவேணும். அதெப்படியென்றால் பூமியினுடையவளையம் 7920 காதவழி. இப்படிப்பட்ட வளையத்தினுடைய மையக்கம்பி 2,520 காதம் இப்படிப்பட்ட மையக் கம்பியினுடையபாதி 1,260 காதவழி இப்படிப்பட்ட மையக்கம்பியினுடைய பாதியை வளையக்கதி யென்று சொல்லுவார்கள். பின்னையும் பூமியின் தாக்குரூபமான புறத்திப் பக்கமெல்லாம் 1,99,58,400 கோடியே தொண்ணூற்றொன்பது லக்ஷத்து ஐம்பத்தெண்ணாயிரத்து நானூறு காதவழி. இப்படிப்பட்ட பூமியை யிரண்டாய்ப் பிளந்தால் மேற்பக்கத்திலே 49,89,600 நாற்பத்தொன்பதுலக்ஷத்து எண்பத்தொன்பதினாயிரத்து அறுநூறு காதவழி. கடைசியிலே பூமியெல்லாங்கூட வுள்ளேயும் புறத்திலேயும் எல்லாமாகிய அளவு. 838,25;28,000 எண்ணூற்று முப்பத்தெட்டு கோடியே இருபத்தைந்து லக்ஷத்து இருபத்தெண்ணாயிரங் காதவழியானபடியினாலே பூமிக்குள்ளே யெத்தனை மணல்கள் இருக்கலாமென்று இந்த அளவைப் பார்த்துச் சுமுத்திரையாகச் சொல்லலாம். இப்படிப்பட்ட அளவு பிரமாணத்தைக்கெட்டியுள்ள நியாயங்களினாலே நம்மாலுண்டாக்கப்பட்டிருக்கிற லோகப்பிரமாணமென்கிற புத்தகத்தி லொப்புவித்திருக்கின்றது. அதுகளையறிய மனதுள்ளவர்கள் அதை வாசித்து அறிந்துகொள்ளக் கடவார்கள்.

இப்போது சிலஅதிசயமான சந்தேகங்களுக்குப் பிரத்தியுத்தரஞ் சொல்லுவோம். அதெப்படியென்றால், ஒரு ஏணிமேலே யிரண்டு மனுஷர் ஒருமிக்கக் காலெதிராக வைத்துக்கொண்டு ஏறுகிற வகையென்ன? முப்பதடி யேணியென்று விசாரித்துக்கொள். அந்தஏணி பூமியினுடைய மையத்திலே பதினைந்தடியிருக்க. இரண்டுபேர் அவனவன் எதிராகக் கால் வைத்துக்கொண்டு அதினுடைய விரண்டுதலைப்பிலேயும் ஆளுக்கொரு தலைப்பிலே யேறலாம். அவ்வண்ணமே சர்வலோகத்துக்கும் பூமி மையமாயிருக்க, பூமியினுடைய மையமானது சகலமான வஸ்துக்களைப்பார்க்கக் கீழ்த்தரமான ஸ்தலத்திலேயிருக்கும். ஆனபடியினாலே அந்தமையத்துக்குத் தூரமாய்ப்



போகிறவர்களும் வருகிறவர்களும் அவசியமா யேறுவார்கள். இதல்லாமற் பூலோகத்திலுண்டான கனடிப்புள்ள வஸ்துக்களெல்லாம் அந்த மையத்துக்குப் போகிறதற்குச் சுபாவமாயிழுக்கப்படும். அந்தநியாயத்தினாலே பூலோகம் வட்டரூபமா யிருக்கும்போது வேறே பக்கத்தில் நமக்கெதிராக நிற்கிறவர்கள் நம்மைப்போலே சுபாவமாய் நிற்கிறார்கள். அவ்வண்ணமே சுபாவமா அந்தமையத்தாக் கிழுக்கப்படு மாப்போலே அவர்களும் பூமியின் மையத்துக் கிழுக்கப்படுவார்கள். அவர்களுடைய இருப்பைச் சிலபேர் கண்டுபிடிக்க மாட்டாதிருக்கிறாப்போலே நம்முடைய இருப்பை அவர்களுங் கண்டுபிடிக்கமாட்டார்கள். இத்தன்மையாக்இரண்டுசுவர் பூமியிலேசெவ்வேவைத்திருந்தால் அந்தச்சுவர்உயர ஏறஏறப்பிரிந்துபோம். பூமிக்குக்கீழே மையத்துக்குப் போகப்போக வொன்றித்துப்போம். அந்தநியாயத்தினாலே வட்டமுள்ள பூமிமேலே வளையாமற் செவ்வையா யிருக்கிற பாலத்தின்மேலே மனுஷர் நடந்தால்சிலநாள்அதிலே நடந்ததற்குப் பிற்பாடு போகப்போகப் பூமிமேலே சாய்ந்துபோய்க் கடைசியிலே சட்டாயத்தினாலே விழுவார்கள். இந்தப்பிரகாரமாகப் பூமி வட்டரூபமாயிருக்க அதின்மேலே நடக்கிறமனுஷர் பூமியின் வளையத்திலே நடக்கிறபோது பூமியின்மேலே கால்நடந்த தூரத்தைப்பார்க்கத் தலையதிகமானதூரம் நடந்ததென்கிறதற்குத் தப்பாது.

இப்போது பூமியெல்லாமூன்று விதமாய்ப் பிரிகிறதென்றறிவாயாக. சமசக்கரத்தின் கீழேயிருக்கிற பூமியானது சூரியனுடைய வுக்கிரத்தினாலே விசேஷமாய்ச் சுடப்படும். இரண்டுபக்கத்திலேயுஞ் சூரியனை நிறுத்துச் சக்கரமட்டும் அதற்குள்ளே யுண்டான பூமியில்விசேஷமா யுஷ்ணமுண்டென்றறிவாயாக. பின்னையுந் துற்கைநக்ஷத்திரத்தின் கீழேயும் அந்த நக்ஷத்திரத்துக்கு இருபத்து மூன்றரைப்பாகம் இப்பாலேயும் இருபத்து மூன்றரைப்பாகம் அப்பாலேயுமாக ஒரு வளையமுண்டு அந்தவளையத்தின் கீழேயிருக்கிற ஜனங்களுக்குச் சொல்லப்படாத குளிர்காலம் அதற்கெதிராக விருக்கிற பூமியிலேயும் இப்படியே யோசிப்பாயாக. இந்தக் குளிருள்ள பூமிக்கும் உஷ்ணமுள்ள பூமிக்கும் நடுவிலே வடக்கேயுந்தெற்கேயுமட்டுள்ள பூமியென்று சொல்லப்படும். உஷ்ணசிமையிலுண்டான ஜனங்களுக்குத் தலைக்குநேரா யொருவருஷத்திலிரண்டுவிசை சூரியனிறங்குகிறது. அப்போது மத்தியானத்திலே நிழலில்லை. மற்றச்சமயங்களிலே சிலவிசை வடக்கே நிழல்சாய்ந்துபோகிறது. சிலவிசை தெற்கே சாய்ந்துபோகி

றது. சமசக்கரத்தின்கீழேயிருக்கிறவர்களுக்கெப்போதும்இரவு
ம்பகலுஞ் சரியாயிருக்கும். ஆனால் சமசக்கரந்துவக்கி நிறுத்
துச் சக்கரமட்டும்உத்தரபக்கத்திலே கீழாயிருக்கிறசனங்களு
க்குச் சூரியனுடைய வுத்திராயணத்தி னிமித்தமாகத் தினந்
தினம் பகல்நேரம்அதிகமதிகமாய் வர்த்திக்கும். இராக்காலம்
குறையும். தெற்கத்தியருக்கு இதற்கு விரோதமா யோசிக்கக்
கடவாய். பின்னையும் வடக்கத்தியரில் சூரியனை நிறுத்துகிற
சக்கரத்தின் கீழிருக்கிற ஜனங்களுக்கு ஆனிமாதம் பதினைந்
தாந்தேதி பகல் பதின்மூன்றரை தாசும், மார்கழிமாதம் பதி
னைந்தாந்தேதிபகல் பத்தரை தாசுமிருக்கும். மற்றதெல்லாம்
இராத்திரி, முன்சொல்லப்பட்ட பெரியபகலிலே சூரியன்அவ
ர்கள் தலைக்குநேரா யிருக்கும், சின்னபகலிலே சூரியன் நாற்
பத்தேழரை பாகந்தூரமாய் தெற்கேயிருக்கும். இந்தச்சீமை
களிலேயோவென்றால பெரியபகல் பதின்மூன்றே முக்கால்
தாசு. சின்னபகல் பதின்மூன்றே கால்தாசும், மற்றுமுள்ள
பூமிமேலே யிருக்கிற ஜனங்களுக்கோவென்றால் சூரியன்ஒரு
க்காலும் அவர்கள் தலைக்குநேரேவராது. வடக்கத்தியருக்கு
நிழல்எப்போதும் வடக்கேபோகிறது. சூரியன் சமசக்கரத்தி
லேயிருக்கிறபோது மாத்திரம் லோகமுழுதும் இராப்பகல்சரி
யாயிருக்கிற தல்லாமல் மற்றுமுண்டான நாட்களிலே சூரிய
ன் உத்தராயநத்திலே ஆனிமாதமிருபத்தோராந்தேதிமட்டும்
தினந்தினம் பகல்வர்த்திக்கும். அந்நாள்துவக்கி மார்கழிமா
தம் இருபத்தோராந்தேதிமட்டும் தக்ஷணாயநத்தி னிமித்தமா
கத் தினந்தினம் பகல்குறைந்துபோம். அவர்களுக்குஅருணோ
தயமும் முன்மாலையும் பெரிதாயிருக்கும். துற்கைநக்ஷத்திரத்
துக்குக்கீழே சனங்களுண்டா யிருந்தால் அவர்களுக்கு ஆறு
மாதம் சூரியனைக்காணாமல் முழுவிராத்திரி. வேறேஆறுமாத
ம்இரவில்லாம லெப்போதும் பகலாயிருக்கும். பின்னையுஞ்சந்
திரனை மாதந்தோறும் இடைவிடாமல் பார்ப்பார்கள். பதினை
ந்துநாள் காணாதிருப்பார்கள். சூரியனையுஞ் சந்திரனையும்பார்
க்கும்போது உதயமும் அஸ்தமிப்பு மில்லாமல் இடைவிடா
மல் அவர்களைச் சுற்றிக்கொண்டுவரும். அவர்களுக்கு நக்ஷத்
திர வுதயமும் அஸ்தமிப்பும்இல்லை. பாதிநக்ஷத்திரங்களையெப்
போதுங் காணலாம். அவர்களுக்குக் கீழ்காற்றுமேல்காற்றும்
வடகாற்றும்இல்லை. எப்போதுந் தென்றல் மாத்திரமிருக்கும்.

இதற்கப்பா லறியவேண்டினதாவது; யாதாமொருத்தன்
பூலோகத்தைச் சுற்றிக்கொண்டுபோனால் அந்தப் பயணத்தி



லேகிழக்கு முகமாயெப்போதும் நடந்தால் புறப்பட்ட ஸ்தல
த்துக்குத் திரும்பவரும்போது அதற்குமுந்தித் தமக்குவயதி
லே சரியாயிருக்கிறவர்களைப் பார்க்க ஒருநாள்அவனுக்குஅதி
கமாயிருக்கும். ஆனால் மேற்குமுகமாக யெப்போதும் நடந்
தால் இதற்கு விரோதமானவகையோடே யோசித்துக்கொள்.
இதற்குக் காரணமேதென்றால் கிழக்கேபோகிறவன் சூரியனு
டைய அயநத்தின்படியே நடந்ததினாலே அவசியமாய்ப்பூலோ
கத்தைச் சுற்றிக்கொண்டு வருகிறதற்குள்ளே ஒருநாள் அதி
கமாயிருக்கவேணும். ஆனால்மேற்கே போகிறவர்கள் சூரி
யனுடைய அயனத்துக் கெதிராகப் போகிறதினாலே ஒருநாள்
குறைந்துபோம்.

இப்போதைக்குப் பறுவதங்களுடைய அளவு சங்
க்ஷேபமாகச் சொல்லிக் காட்டுவோம். அதெப்படியென்
றால் அந்தப் பறுவதங்களுடைய நுனிமேலே யேறுகிறதற்கு
மூன்று காத தூரத்துக் கதிகமா யிருந்தாலும் பூலோகத்தி
லிருக்கிற பறுவதங்களுக் குள்ளே ஒரு மலையானாலும்
உச்சிக்கும் அதற்கு நேரான அடிக்கும் இந்தச் சீமைக்காத
த்தில் ஒன்றரைக்காத மில்லையென்று சாஸ்திரிகள் சங்கேதம்
பண்ணினார்கள். இதுவு மெளிதா யொப்புவிக்கலாம்.

இங்கே சாஸ்திரஎத்தனங்களில்லாமல்மலைகளினுடைய
உயரத்தை அளவெடுக்கும் விதங் காண்பிக்கப்படுவது.

முதலாவது.—எந்தமலையை உயரமறியவேண்டி யிருக்
கின்றதோ அந்த மலையினடிவாரத்தின் சமபூமியிற் சிலஅடிக
ளுக்கிப்பால் ஓர் கொம்பை நிறுத்தி அக்கொம்பி னுனிக்கும்
மலையினுச்சிக்கும் பொருந்தும்படியான இடத்திலுட்கார்ந்து
பார்த்துக் கொம்புநின்ற இடத்திற்கும் பொருந்தப் பார்த்த
விடத்துக்குமுள்ள அளவை யெடுத்துக் கொள்ளுகிறது.

2-வது.—முன்கொம்பு நின்றவிடத்திற்கும் பொருந்தப்
பார்த்த விடத்திற்கும் நேராகவே பின்னுஞ் சில அடிகளுக்
கிப்பால் முன்னிறுத்திய கொம்பையாவது அல்லது அதற்
குச் சரியான வேறொரு கொம்பையாவது நாட்டி முன்போ
லவே யிதற்கும் மேற்படி மலையின் உச்சிக்கும் பொருந்தும்
படியான விடத்திற்குப்போய் உட்கார்ந்து பார்த்து இதை
யும் அளவெடுத்துக்கொண்டு முன் தொகையை இதிற்கழித்
து மீதினிற்குந் தொகையைக் குறித்துக்கொள்ளுகிறது.

3-வது.—முதற்கொம்பு பொருந்தும்படி உட்கார்ந்து
பார்த்தவிடத்தி லிருந்து இரண்டாவது கொம்பு பொருந்தப்

பார்த்த கடைசியிடமட்டும் ஏகாண்டத்திற்கும் ஒரே அளவாயெடுத்துக்கொண்டு இதை முன்சொல்லிய கொம்புகளிலொன்றி னளவாற் பெருக்கிக் கூடியதொகையை முன் கழித்த மீதியைக்குறித்து வைத்திருக்குந் தொகையாற் பிரித்தால் என்னவருகின்றதோ அதுதான் மலையின் உயரமென்றறியவும்.

இதெல்லாம் இப்படி யிருக்கையிலே மேகங்கள் பெரிய பறுவதங்களின் மேலே முதலாய் நிற்கிறது அபுரூபமாயிருக்கும்போது மேகமானதுளத்தனை உயரமாயிருந்தாலும் மூன்று காதவழி தூர மிருக்கமாட்டாது. இந்தப் பிரகாரமாகக் காற்றுகள் இந்தப் பறுவதங்கள் மேலேவீசுகிறதில்லை. இதற்கடையாள மேதென்றால், அந்த மலைமேலே கிடக்கிற தூசிமேலேஎழுதினவெழுத்துகள் பத்துவருஷத்துக்குப்பபிற்பாடு பார்த்தபோது அப்படியே யிருந்தது, அந்தப்பருவதங்கள் மேலே காற்றடிக்கிற தென்று சொன்னாலும் மகா அபுரூபமா யிருக்கிறதல்லாமல் அந்த நுனியைப் பார்க்க வயரங் கொஞ்சமா யிருக்கும்.

கடைசியிலே பறுவதங்களுக்குள்ளே யுண்டான விரத்தினங்களுடைய விவரத்தையும் திரவியங்கள் விளைகிறஸ்தலங்களிலே யுண்டான பஞ்சலோகத்தினுடைய சிலவிசேஷங்களையும் சுருக்கத்திற் சொல்லிக்காட்டுவோம். அதெப்படியென்றால்; வச்சிரம், வயிடூரியம், கோமேதகம், புஷ்பராகம், தரளம், மரகதம், நீலம், பவளம், கெம்புஆக ஒன்பதுவகை இரத்தினங்கள் முதலான அநேக மாணிக்கங்கள் மலைகளிலே யுண்டான வெடிப்புகளுக்குள்ளே யிருக்கும் உருகின மணலாலே வளையலுண்டாக்கப் படுகிறாப்போலே மிருதுவான அங்கிஷங்களினாலே மூந்தமூந்த உண்டாக்கப்பட்டுப் பிறகு கல்லுப்போலே கெட்டியாய்ப்போம். முன் சொல்லப்பட்ட அங்கிஷங்களினாலே யுண்டாக்கப் படாமற்போனால் ஒருக்காலும் இந்தப்பிரகாசம்வராது. வேறேசிலபேர்கள் உப்புமண்ணேரிலே தண்ணீர் விட்டால்உப்பாங்கிஷங்கள்ஒன்றுகூடிஉப்பாய்ப்போகிறாப்போலேவெடிப்புகளுக்குள்ளே யுண்டானமாணிக்கங்களையுண்டாக்குகிறதற்குவேண்டியதா யிருக்கிற அங்கிஷங்கள்தண்ணீரினாலே ஊறப்பட்டதற்குப் பிற்பாடு இரத்தினங்களாய்ப்போகிறதற்குஆனதாயிருக்குமென்று சொல்லுகிறார்கள். இரத்தினங்களுடைய வர்னமோவென்றால் சுபாவமாயிரத்தினங்களுக்குவர்ணமிராமல் பலபல காரணங்களினாலே வருமென்றுசொல்லுகிறார்கள், சிலசமயங்களிற்பஞ்சலோகங்களுடையபுகையினாலேயும், சிலசமயங்களிலே விசேஷமான



சாரத்தினாலேயும், சிலசமயங்களிலே கெந்தகம் இரசமுதலானதுகளுடைய குணங்களைச் சுவிகரிக்கிறதினாலேயும்பலபல வர்னங்களைக் கொண்டிருக்கும். அந்த நியாயத்தினாலேசில தறுவாய்களில் வச்சிரமானது கோமேதக வர்ணம்போலே யிருக்கும். சிலசமயங்களிலே ஏறக்குறைய பச்சையானது நீலவர்ணங்களைக் கொண்டிருக்கும். மற்றுமுண்டான விரத்தினங்களோவென்றால் சாங்கோபாங்கமாக உண்டாக்கப்படுகிறதற்கு முன்னே அவைகளுடையகுணங்களுக்கானவர்ணம் நன்றாய்க்காண்பியாது. இப்படிப்பட்ட வர்ணங்கள் இரத்தினங்களுக்குச் சுபாவமாயிருக்கவில்லை யென்கிற அடையாளமேதென்றால், ஏறக்குறைய இரத்தினத்தினுடைய வர்ணங்களெல்லாம் உக்கிரத்தினாலே வெவ்வேறே விதமாய்ப்போம்.

கடைசியிலே பஞ்சலோகங்களுடைய குணங்களை யறியத் தக்கதாக நாலைந்துவார்த்தை சொல்லுவோம். மூந்தமூந்த திரவியங்கள் விளைகிற ஸ்தலங்களிலே இடைவிடாமல் எண்ணெய்யின்புகைபோலேஆவிகள் அங்கங்கேயோடி இப்படிப்பட்ட ஆவிகளும் புகைகளும் ஒன்றாய்க்கூடி லோகங்களையுண்டாக்குகிறதற்கு அஸ்திவாரமாம். அதின்பிறகு ஒவ்வொருலோகத்துக்கான அங்கிஷங்கள் அதனோடுகூடி வெவ்வேறேலோகங்களைப் பிறப்பிக்குமென்று பஞ்சலோக சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். வேறேபேர்கள் இரும்பல்லாமல் மற்றப்பஞ்சலோகமெல்லாம் இரசத்தினாலே வருகிற தென்கிறார்கள். ஆனால்ரசத்தினாலே லோகங்கள் வாராதிருந்தாலும் அதுகளைச் சாங்கோபாங்கமாய்ப்பண்ணுகிறதற்கு ரசம்மெத்தஉதவுமென்பதிற் சந்தேகமில்லை. சிலசமையங்களிலேபொன்னும் வெள்ளியும் பறுவதங்களுடைய நரம்புகளாகக் கொடிபோலேஉள்ளேயும் புறத்தியிலேயும் அங்கங்கேசுற்றிக்கொண்டிருக்கும். வேறேசமையங்களிலே மணல்போலே அனேக அசுத்தங்களோடே கலந்திருக்கும். அப்போதந்தத் திரவியங்களைப்பிரிக்கிறதற்கு மகாபிரயாசமா யிருக்கும். பொன்வெள்ளி விளைகிற ஸ்தலங்களேதென்றால் சிலசமையங்களிற் பூமிக்குள்ளே கிடைத்திருந்தாலும் மகாஅபுரூபம், எப்போதும் ஏறக்குறைய சிலபறுவதங்களுக்குள்ளே யிருக்கும்.

திரவியங்கள் விளைகிற பறுவதங்களுடைய அடையாளமேதென்றால் கோடைகாலத்தில் அந்தமலைகள் மேலேநீல்முள்ள சுவாலைகள் புறப்பட்டோடிக் கொண்டு திரியும். அவ்விடத்தின் சமீபங்களிலே ஆறுகளுண்டானால் அதிலே பொன்பொடிகள் மணலோடு கலந்திருக்கும். அந்தஸ்தலங்கள்மே

லே அனேக வுஷ்ணங்களுள்ள ஆவிகள் புறப்படும், அங்கே ஒருக்காலும் பனியில்லாது. அதிலேபெரியமரங்கள் வளரமாட்டாது. சிறியசெடிகளிருந்தாலும் அவைகளெல்லாம் செத்துப் போனதுபோலேயும் அதுகளுடைய இலை மஞ்சள் வர்ணமாயிருந்து சீவரமாயுதிர்ந்துபோம். இப்படிப்பட்ட திரவியங்கள் விளைகிற ஸ்தலத்திலே யிரசமுங் கெந்தக முதலானதுந் திரளாய்க் கலந்திருக்கும். சிலசமையங்களிலே ஊசிக்காந்தமும் அகப்படும்.

இந்த ஊசிக்காந்தமானது இரும்பைத் தன்னோடுசேர்க்கவும் இழுக்கவும் பண்ணுகிற காரணமேதென்றால் அந்தஊசிக்காந்தத்தில் உண்டான சின்னஅங்கிஷங்கள் இடைவிடாமல் அத்தியந்த பலத்தோடே புறப்பட்டுக் கிட்டின ஆகாயத்தினாலே தள்ளப்பட்டுத் திரும்பவுந் தன்னுடைய ஸ்தலத்துக்குப் போகிறபோது இரும்புக்குள்ளே பிரவேசித்து அதைத் தன்னோடு இழுத்துக்கொண்டு போம்.

பிரதான வஸ்துக்களுடைய கனத்தை யறிகிறதற்கு உபாய மேதென்றால், ஒருசதிரப் பாத்திரத்திலேநிறைய உருகினலோகங்களைத் தனித்தனியே வார்த்தால் அவைகள் ஒவ்வொன்றும் எம்மாத்திரங் கனமிருக்குமென்று நிறுத்தறியலாம், இந்தப்பிரகாரமாக அநேகம்விசை சோதனைபார்த்ததற்குப் பிற்பாடு அந்தப்பாத்திரத்திலேதானே உருக்கிவார்க்கப்பட்டபொன்னானது நூறுபலமுண்டானால் அதிலேவார்த்தஇரசம் எழுபத்தொன்றரைப் பலமிருக்கும். இந்தப் பாத்திரத்திலே தானேஈயம்வார்த்து நிறுத்தால் அறுபதரைப்பலமும், வெள்ளி ஐம்பத்துநாலரைப்பலமும், செம்புநாற்பத்தேழுபலமும், ஒரு பலத்தில் மூன்றத்தொருபங்கும், பித்தளைநாற்பத்தைந்துபலமும், இரும்பு நாற்பத்திரண்டுபலமும், மகாசுத்தமுள்ளதுத்தநாகம்முப்பத்தொன்பதுபலமும், ஊசிக்காந்தமிருபத்துநாலுபலமும், கருங்கல்21பலமும், கல்14பலமும், ஸ்படிகம்12பலமும் ஒருபலத்திலேந்திலொருபங்கும், தண்ணீர் ஐந்துபலமும் பலத்தின் மூன்றத்தொரு பங்கும், முந்திரிகைப் பழத்தின்ரசம் 5¼பலமும், மெழுகு5பலமும், எண்ணெய்4¾பலமும்இருக்கும். இப்படியேவுயிரில்லாத வஸ்துக்களுடைய சுபாவங்களையுங் குணங்களையும்வெளிப்படுத்தினதற்குப்பிற்பாடுஉயிருள்ளவஸ்துக்களுடைய சுபாவங்களையுங் குணங்களையும் வருகிற அதிகாரத்திற்சர்வேஸ்வரனுடைய கிருபையினாலே வெளிப்படுத்துவோம்.



## ௰௧-ம். அதிகாரம்.

### வளர்சீவ வஸ்துக்களின் விவரம்.

மட்டில்லாத தயையும் அளவில்லாத வல்லமையுங் கொண்டிருக்கிற பராபர வஸ்துவினாலே யுண்டாக்கப்பட்டவுயிரில்லாத வஸ்துக்களுடைய சுபாவங்களையும் ஆச்சரியமான விசேஷங்களையும் ஆராய்ந்து பார்த்ததற்குப் பிற்பாடு, சர்வத்துக்கும் வல்லவரா யிருக்கிற சர்வேஸ்வரன்பேரில் அதிக மதிகமாய்த் தோத்திரம் பண்ணுகிறதற்கும், அவருடைய சித்தத்துக்குப் பொருந்தியிருக்கிற தருமங்களைச் சுறுசுறுப்பொடே பண்ணுகிறதற்கும் தயாபரரான ஆண்டவர் மனுஷருக்கு உதாரமாய்த் தந்தருளின உயிருள்ள வஸ்துக்களுடைய சுபாவத்தையும் சாதாரணமான குணங்களையும் பராக்கின்றி பரிசோதிக்கக் கடவோம்.

முந்தமுந்த இதிலறியவேண்டினதாவது, ஜீவப்பிராணிகளில் மூன்றுவகை யுண்டென்று சாஸ்திரிகள் சங்கேதம் பண்ணினார்கள். முதலாவது.—வளர்சீவன். 2-வது - பஞ்சேந்திரியச் சீவன். 3-வது.—நரசீவன். ஆகையால் இந்த அதிகாரத்திலே வளர்த்தியுள்ள சீவனுக்குச் சம்பந்தமா யிருக்கிற ஆச்சரியமான விசேஷங்களைச் சொல்லிக் காட்டுவோம்,

அதெப்படியென்றால், புல்லும் புஷ்பங்களும் விருக்ஷங்களும் வளர்சீவனாயிருக்கிறதென்று சொல்லுகிறோம். அவ்வண்ணமே முன் சொல்லப்பட்ட செடிகளும் பூண்டுகளும் விதையிலேயிருந்து புறப்பட்டுமுளைத்துவளர்ந்துகொம்புகளாய்ப் போய் அதுகளிலே யிலைகளும் அரும்புகளுங் காய்களுமுண்டாயிருக்கிறதினாலேயும் வேரிலிருந்து நரம்புகளின் வழியாகச் சாரங்கள் முழுதுமேறி அத்தியந்த சிரமத்தோடே மரத்தினுடைய அங்கிஷங்களெல்லாம் பிழைக்கிறதற்கு எங்குஞ் சுற்றிக்கொண்டு போகிறதினாலேயும் இதெல்லாம் உயிருள்ள வஸ்துவினுடைய அடையாளமா யிருக்கும். ஆனால் இப்படிப்பட்ட விருக்ஷங்களுக்குப் பஞ்சேந்திரியங்களுடைய சீவனுக்குரிய அற்பவடையாள முதலா யில்லாததினாலேயும் மரத்திலுண்டான அதிசயங்களெல்லாம்வளர்த்தியென்கிற அபிவிர்த்தியிலேமாத்திரம்அடங்கியிருக்கிறதினாலேயும்பூண்டுகளிலேயும் செடிகளிலேயும்வளர்சீவகுணம்மாத்திரம் இருக்கிறதென்று சாஸ்திரிகள் அங்கீகரிக்கிறார்கள். இப்போது

புஷ்பங்களும் செடிகளும் பூமியிலே விதைக்கப்பட்டு முளைத்து வளர்ந்து பூத்துக் காய்த்துப் பழுக்கும் வகைகளை யெவ்வளவாகிலுஞ் சொல்லிக் காட்டுவோம். அதெப்படியென்றால், பூண்டுகளுடைய வித்து ஈரமுள்ள பூமிக்குள்ளே விதைக்கப்பட்டிருக்கும்போது பூமிக்குள்ளே யுண்டான ஈரத்தினாலேயும் புகைகளினாலேயும் ஆவிகளினாலேயும் நனையப்படுகிற அந்தவித்தானது ஈரிக்கப்பட்டு மிருதுவாய்ப்போம். இப்படியே நமர்ந்துபோன வித்தும் அதிலே யுண்டான நரம்புகளும் உப்பிப்போய் ஒருபாகம் பூமிக்குள்ளே வேராய் விழுந்து மற்றொருபாகம் மேலேயேறி வேரைக்கொண்டு ஆனசாரங்களைச் சுவிகரித்துச் சூரியனுடைய [illegible]களினாலே அந்த சாரத்துக்கு அடைவுண்டாய் மெள்ளமெள்ள வுயர்ந்து விருக்ஷங்களாய் வளர்ந்துபூத்துக் காய்த்துப் பழுக்கும். இதெல்லாம் எவ்வளவாகிலும் கண்டுபிடிக்கிறதற்கு அறியவேண்டினதாவது. பெரிய மரங்களிலே யிருக்கிறதெல்லாம் சுருக்கத்திலே வித்துகளிலே யடங்கியிருக்கிறதென் றறியவாயாக. ஆனபடியினாலே கொம்புகளும் இலைகளும் காய்கள் முதலானவைகளும் வித்தென்கிற குறிப்பிடத்திலே காணப்படலாம். அதெப்படியென்றால், ஒருவிசேஷமான கண்ணாடி யுண்டு. அதினாலேதோன்றாத அணுக்கள்முதலாய்மகாபெரிதாய்க் காண்பிக்கும். இப்படிப்பட்டகண்ணாடியைக்கொண்டு ஒரு வித்தைப் பகுத்து நன்றாய்ப் பார்த்தால் அந்த வித்திலேதானே மரத்தினுடையபிரதான காரியங்களெல்லாஞ் சுருக்கத்திலே காணலாம். இதெல்லாம் இரண்டு உவமைகளினாலே வெளிப்படுத்தலாம். அதெப்படியென்றால், எங்கும் அடைத்திருக்கிற ஒரு அறையிலே சூரியனுக்கெதிராயிருக்கிற பக்கத்தில் ஒரு திட்டிவாயில் விட்டு அதைக் கதவினாலே அடைத்து அந்தக் கதவிலே யொருசிறு வரற் பிரமாணம் வட்டத் துவாரம் பண்ணினால் அந்தத் துவாரத்துக் கெதிராகப் புறத்திப்பட்ட வஸ்துக்களுடைய பிரதிபிம்பங்களை இந்தத் துவாரத்துக்குள்ளேகூடியெதிராகவுள்ள சுண்ணாம்பினாற் பூசப்பட்ட சுவரில் விஸ்தாரமாய்க் காண்பிக்கும். ஆனபடியினாலே திட்டிவாயில் முன்பாக இருக்கிற சுவர், மரங்கள், மிருகங்கள் முதலான வஸ்துக்களுடைய பிரதிபிம்பங்களெல்லாம் இந்தத் துவாரத்துக்குள்ளே கலப்பில்லாமற் சுருக்கத்திலே அடங்கிநுழைந்ததற்குப் பிற்பாடு அப்பாலே கடந்து விஸ்திரித்துச் சுவர்மேலே பெரிதாய்க் காண்பிக்கிறாப்போலே மரங்களி லுண்டாகிய பிரதான



அங்கிஷங்களெல்லாஞ் சுருக்கத்திலே வித்திலடங்கி யிருக்கிறதுமல்லாமல் விஸ்திரித்ததற்ப் பிற்பாடு பாரமான விருக்ஷமாய்ப்போம். பின்னையும்பெரிய மனுஷரிடத்தில் உண்டான அவயவங்களும் தத்துவங்களும் சின்னகுழந்தைகளிடத்திலேயும் சுருக்கமா யிருக்கிறாப்போலேயும் அந்தச் சின்னஅவயவங்களுந் தத்துவங்களும் ஆகாரபான நிமித்தமாகப் பெரிய மனுஷனாய்ப் போகிறாப்போலேயும் மரத்திலுண்டானவேரும் அடிமரமுங் கொம்புகளுங் கனிகளும் வித்திலே குறிப்பிடப் பிரகாரமாகச் சங்க்ஷேபமா யிருக்கிறதுந்தவிர பூமிக்குள்ளே யுண்டான சாரத்தினிமித்தமாகவும் ஆவிகள் நிமித்தமாகவும் இந்தச் சின்னதத்துவங்கள் விஸ்திரித்துப் பெரியவிருக்ஷமாய்ப்போம். இதற்கப்பா லறியவேண்டியதாவது;

மனுஷரு மிருகங்களுஞ் சருமத்தினாலே மூடப்பட்டிருக்குமாப்போலே விருக்ஷங்களெல்லாம் பட்டையினாலே மூடியிருக்கிறது. இப்படிப்பட்ட பட்டைகளுக்குள்ளே அநேக நரம்புகள் எங்கும்பரம்பி மரத்தினுடைய கொம்புகளெல்லாம் பிழைக்கிறதற்கு வேண்டியசாரங்கள் இந்தநரம்புகள்வழியாக வேறிப்பாயும். ஆனால்இப்படிப்பட்ட மரங்களிலே இத்தனை இலைகள் இருப்பானேன்? முதலாவது.—சர்வேஸ்வரனானவர் மனுஷருக்காக விருக்ஷங்களை யுண்டாக்கினதினாலே அந்த மரங்களுடைய நிழலிலே மனுஷரிருக்கிறதற்கு அவசியமாயிலைகள் வேண்டியிருந்தது.

௨-வது.—புஷ்பங்களும் காய்களும் புதுசாய்ப் புறப்படுகிறபோது அவைகள்மிருதுவான பச்சையா யிருக்கிறதினாலேயும் பலமில்லாததினாலேயும் அதுகளுக்கு ஆகாசத்தினுடைய கடினத்தினாலேயும் வேறேகுணங்களினாலேயும் மோசம்வராதபடிக்கு அவைகள் தடித்துவருமளவும் இலைகளினாலே மூடப்பட்டிருக்கவேண்டியிருக்கிறது.

௩-வது.—சூரியனுடையவுக்கிரத்தினாலே யிப்படிப்பட்ட புஷ்பங்களையுங் கனிகளையும் வெதும்ப வொட்டாமல் சூரியகதிருக் கெதிராக இலைகளானவைகள் பரிசைபோலே நிற்கிறது. ஆனால் சூரியனுடைய வுஷ்ணமானது கனிகள் பழுக்கிறதற்கு அவசியமாய் வேண்டியிருக்கிறதினாலே விருக்ஷங்களிலுண்டான இலைகள் தாறுமாறுகத் தழைத்திருக்கிறதென்று காண்பித்திருந்தாலுஞ்சூரியனுடைய கதிர்களில் சிலதுகள் தழைகளுக்குள்ளே பிரவேசித்து ஆனவகையோடே மாத்திரம் கனிகள்மேலே படுகிறதற்குச் சர்வேஸ்வரனுடைய மட்

டில்லாத சாமர்த்தியத்தினாலே ஸ்தாபிக்கப்பட்டதென்று அனுபவ சித்தியினாலே கண்டுபிடிக்கிறோம்.

4-வது.—மரத்தினுடைய சாரமானது திரளாய் நரம்புகள் வழியாக முழுதும் ஏறுகிறதினாலே அதுகளை யிலைகள் சுவிகரியாமற்போனால் சாரத்தினுடைய மிகுதியினாலே காயாமலும் பழுக்காமலும் மரங்கள் முழுதுங் கெட்டுப்போமென்பதற்குச் சந்தேகமில்லை.

இதுவுமல்லாமல் இலைகளானவை வடிகட்டுகிறாப்போலே சாரத்தின் கனமுள்ளதுமாய்ப் பதமில்லாததுமாயிருக்கிற அம்சங்களைச் சுவிகரித்துப் புஷ்பங்களுக்கும் கனிகளுக்கும் பதமுள்ளதுமாய்க் காய்ந்திருக்கிறதுமா யிருக்கிற சாரத்தினுடைய அம்சங்களை விடுகிறதினாலே மகாப் பிரயோசனமா யிருக்கிறதென்பதற்குச் சந்தேகமில்லை. அந்த நியாயத்தினாலே மரங்களுடைய இலைகளுக்கு வாசனை கொஞ்சமா யிருக்கும். புஷ்பங்களும் கனிகளுமெத்தப் பரிமளிக்கும். அவ்வண்ணமே “சுகந்தமென்று உலரப்பட்ட அம்சங்களினாலே கூட்டப்பட்டதா யிருக்கிறதென்று சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள்” அந்த நியாயத்தினாலே பழங்களும் மகா ருசிகரமாயிருக்கும். அவ்வண்ணமே கனிகள் பழுக்கிறதற்குச் சாரத்தினுடைய அம்சங்களால் உலர்ந்ததுமாய்ப் பதமுள்ளதுமா யிருக்கவேணும்.

இனி பூமிமேலேயுள்ள இலைக்கறிகளையும் எண்ணப்படாத புஷ்பங்களையும் பழுக்கிற விருக்ஷங்களையும் உற்றுணர்ந்து விசாரிக்கிறபோது அதுகளை அளவில்லாத கிருபாகடாக்ஷத்தோடே தந்தருளின பராபர வஸ்துவின்பேரிலே தோத்திரம் பண்ணவேண்டாமோ? காய் கறிகளுடைய இலக்கத்தைப் பார்க்கும்போது எண்ணிக்கைக்குள்ளே அடங்காததா யிருக்கிறதென்று காண்பிக்கிறது. அதெப்படியென்றால், சிலதுகள் பூமிமேலே வளருகிறது. சிலதுகள் பூமியின்கீழே கிழங்குகளாய்ப் பெருக்கிறது. மனுஷருடைய தேகங்களுக்குத் தக்கபடி சிலதுகள் குளிர்த்தி யுண்டாக்கும், சிலதுகள் உஷ்ணிக்கும், சிலதுகள் பத்தியத்துக்காகும், சிலதுகள் ஆரோக்கியக் காரருக்காகும், காலங்களுக்குத்தக்கது வெவ்வேறே காய்கறிகள் கிடைத்துக்கொண்டு வரும், சிலதுகள் மனுஷருக் குதவாமற்போனால், மனுஷருக்குவேண்டிய மிருகங்களுக்குதவும், சிலதுகள் பக்ஷிக்கிறதற் குதவாமற்போனால் வியாதிகளுக்குக் கவுஷதமாயிருக்கும். இப்படிப்பட்ட சஞ்சீவிகளுக்குள்ளே சிலதுகள் வாதத்தையடக்கும், சிலதுகள் பித்தத்தை யமர்த்தும், சிலதுகள் சிலேஷ்மத்தையறுக்கும், சிலதுகள் இரத்தத்தைச்சுத்தமாக்கும், சிலதுகள் வயிற்றுக்கு உஷ்ணத்தை வருத்திவிக்கும், சிலதுகள் கல்லீரலுடைய வுஷ்ணத்தை யமர்த்தும், சிலதுகள் கல்லீரலிலே யுண்டான மணலைக் கரைத்துப்போடும், சிலதுகள் கண்களிலே யுண்டான புகைச்சலைத்தள்ளி மகாப் பிரகாசம் வருத்திவிக்கும். சிலதுகள் ஊசிக்காந்த மிரும்பை யிழுக்கிறாப்போலே சரீரத்திலுண்டான துற்குணங்களை யெல்லாந் தன்னோடேகூட கழித்துக்கொண்டுபோம், இதுமுதலான விசேஷங்களை நன்றாய் விசாரித்தவொரு சாஸ்திரியானவர் பராபர வஸ்துவைப் பார்த்துத் திருவுளம்பற்றின தாவது, “ஆ! அளவறுக்கப்படாத கிருபாகடாக்ஷத்தைக் கொண்டிருக்கிற ஆண்டவரே நீர் மனுஷரை யிரக்ஷிக்கத்தக்கதாக எண்ணப்படாதவுபகாரங்களைப் பண்ணியிருக்க இப்படிப்பட்ட உபகாரங்களைப் பெற்றுக்கொள்ளுகிற துரோகிகளாகிற மனுஷர் நன்றியறியர்தவர்களா யிருந்து தேவரீரைச் சட்டை பண்ணாமலும் தேவரீரை நினையாமலுந் தங்களுடைய பொல்லாத இச்சைகளைத் தீர்க்கத் திரிகிறார்களொழிய மற்றப்படியல்ல” என்கிறார்.

மேலும் புஷ்பங்களுடைய அதிசயமான விசேஷங்களை ஆராய்ந்து பார்த்தால் இன்னும் பராபரவஸ்துவை அதிகமாய் ஸ்துதிக்கிறதற்கு நியாயமுண்டு. அதெப்படி யென்றால், பராபர வஸ்துவானவர் நல்ல பிதாவைப்போலே நமக்கவசரமானதுகளைத் தந்தருளினதுமல்லாமல் நமக்குச் சந்தோஷம் வருத்திவிக்கத் தக்கதாக எண்ணப்படாத பரிமளபுஷ்பங்களை யுண்டாக்கினார். அந்தப் புஷ்பங்களுடைய விநோதத்தையும் அலங்காரத்தையும் பார்க்கும்போது நமக்கு நற்கந்தங்களை வீசுகிற இந்தப் புஷ்பங்களி னிமித்தமாக அவைகளைப் படைத்த தயாபரரான கர்த்தரை ஸ்துதிக்க மனது வருமொழிய மற்றப்படியல்ல, இப்படிப்பட்ட புஷ்பங்களுடைய எண்ணிக்கையைச் சொல்லுகிறவனார்? மல்லிகை, முல்லை, இருவாக்ஷி, செண்பகம், பிச்சி, மருக்கொழுந்து, தாமரை, செங்கழுநீர், அல்லி, ஆம்பல், நீர்க்கோட்டான், குங்குமம், முளரி, மகிளம்பூ, அசோகு, குவளை, வாடாமல்லி, அலரி, செந்தாமரை, அரவிந்தம், பற்பம், பங்கசம், புண்டரீகம், குமுதம், கொன்றை, மயிற்கொன்றை. பன்னீர்ப்பூ, புன்னைப்பூ, சூரியகாந்தம், லிரியு, ரோசம், இதுமுதலான எண்ணிக்கைக்குள்ளே யடங்காத அநேகபுஷ்பங்களை யளவிட்டுச் சொல்லுகிறதார்?

இப்படிப்பட்ட புஷ்பங்களை நந்தவனங்களிலேயும் பறுவதங்களிலேயுஞ் சிங்காரத் தோப்புகளிலேயும் விஸ்தீரணத்தோட்டங் காமுதலான வனங்களிலேயும் குளங்களிலேயுந்தயாபரரான கர்த்தர்திரளாய்ப்படைத்தார். அவைகளுக்குள்ளே சிலபுஷபங்கள் கெம்புபோலவும் வச்சிரம்போலவும், கோமேதகம்போலவு மற்றுமுள்ள நவரத்தினங்கள் பிரகாரமாகவுமிருக்கும். இப்படிப்பட்ட வர்னங்களுடைய பிரகாசத்தையும் காந்தியையும் இதழ்களுடைய வின்பத்தையும் விநோதத்தையும் பரிமளத்தையும் வர்ணிக்கிறவனார்? இராத்திரி காலத்திலே சோதிமண்டலங்களிலே யெண்ணப்படாதிருக்கும் நக்ஷத்திரங்களைப்போலே இவைகளும் நந்தவனங்களிலேயும் மற்றுமுண்டான விடங்களிலேயும் கிரக நட்சத்திரங்களுக்குச் சமானமாய் எண்ணிக்கைக்குள்ளே யடங்காத புஷ்பங்கள் பிரகாசிக்கும்.

இப்படிப்பட்ட புஷ்பங்களுக்குள்ளே மகா சிங்காரமான செந்தாமரைப்பூவை ஒரு மகாத்துமாவானவர் தன்கையிலே பிடித்துக்கொண்டு அந்தப்பூவைப் பார்த்துத் திருவுளம் பற்றினதாவது. "சர்வத்துக்கும் லல்லவராயிருக்கிற பராபரவஸ்துவானவர் எ[illegible]ன்னை உண்டாக்கினார்? எந்தக் கருத்தோடே எந்தத் தாற்பரியத்தோடே உன்னைப்படைத்தார்? அசரீரியாயிருக்கிற ஆண்டவருக்கும் அவருடைய சம்மனசுகளுக்கும் உன்னாலாகிற பிரயோசன மொன்றுமில்லையே, மனுஷருக்கும் நீஅவசரமான வஸ்துவல்லவே. ஆனபடியினாலே திவ்விய பிதாவாயிருக்கிற சர்வேஸ்வரனுடைய மட்டில்லாதகிருபாகடாக்ஷத்தை யெவ்வளவாகிலுங் கண்டுபிடிக்கிறேன். அதேதென்றாற் கர்த்தருக் கடிமையாயிருக்கிற வெனக்குச் சந்தோஷத்தை வருத்திவிக்கச் சித்தமாயிருந்ததினாலல்லோ உன்னைப்படைத்தார்" என்றதுந்தவிர இந்தவார்த்தை அருளிச்செய்ததற்குப்பிற்பாடு பராபர வஸ்துவைப்பார்த்து அத்தியந்தபத்தியோடே விண்ணப்பம் பண்ணினதாவது. "ஆ! அளவில்லாத மகிமையுள்ள ஆண்டவரே நீசப்பூச்சியாயிருக்கிறவென்மேல் அத்தியந்த தயையாயிருந்து நான் பிழைக்கிறதற்குவேண்டிய அவசரமான காரியங்களைத் தந்துஎன்னை யிரக்ஷிக்கிறதுமல்லாமல் அடியேனுக்கு மகிழ்ச்சி வருத்திவிக்கிறதற்காக இந்தப்புஷ்பத்தையும் இன்னமும் அநேகவிதமுள்ள மலர்களையுஞ் சிருஷ்டித்ததினாலே தேவரீருக்கு மட்டில்லாத தோத்திர முண்டாக்கக்கடவது." இதுவுமன்றி "அளவில்லா தஞானத்தைக் கொண்டிருக்கிற தேவரீர்ஒருநாளைக்குள்ளே



அழிந்துபோகிற இந்தப்புஷ்பத்தை இத்தனை வேடிக்கையான வர்னங்களினாலேயும் விநோதமுள்ள இணக்கங்களினாலேயும் அலங்கரித்திருக்கிறதினால் உம்முடைய தேவசுபாவத்திலே மனோவாக்குக் கெட்டாததுமாய்ப் புத்தி சந்நிதானத்திலே அடங்காததுமா அளவறுக்கப்படாததுமாயிருக்கிற பெருமை மகிமை கீர்த்தி குணாதியமுதலிய அநந்த நன்மைகளுடைய கரைகாணாத கருணாசமுத்திரமா யிருக்கிறீரென்பதற்குச் சந்தேகமில்லையே. இப்படிப்பட்ட மட்டில்லாத நன்மைப்பிரவாகங்களைப் பிரத்தியக்ஷமான தெரிசனத்தினாலே காண்கிறதற்கும் அதுகளைத்தெரிசித்து அதனாலேவருகிற சந்தோஷத்தினுடைய பரிபூரணபூர்த்தியை யெனக்குத்தந்தருளும்" என்றார். இப்படியே இந்த மகாத்துமாவானவர் புஷ்பங்களைப் பார்த்துத் தியானம் பண்ணினாப்போலே நீயுந் தியானிப்பாயாக.

இப்போது விருக்ஷங்களுடைய வகையிலே யறியவேண்டின சிலவிசேஷங்களைச் சொல்லிக் காட்டுவோம். அதெப்பயென்றால், முந்தமுந்த அந்தமரங்களுடைய எண்ணிக்கையைச் சொல்லுகிறது மகா அருமையா யிருக்கும். அதெவ்வண்ணமென்றால், தென்னை, கமுகு, வாழை, பனை, கரும்பு, பலா, சினி, கொய்யா, நெல்லி, இலுப்பை, ஆலந்தி, அரசு, இச்சி, புளி, முந்திரிகை, கொட்டைமுந்திரிகை, அகத்தி, முருங்கை, ஆத்தி, இலவு. வேம்பு, ஓதி, புன்னை, புங்கு, பூவரசு, நாரத்தை, எலுமிச்சை, கொழுஞ்சி, அழுஞ்சி. மாதளை, கொம்மட்டி, மாவிலங்கு, தேக்கு, மூங்கில், பாலை, வெட்பாலை, நுணா, கருவேல், வெள்வேள், அடப்பு, அசோகு, எட்டி, முருக்கு, இலந்தை, நவ்வல், நரிநவ்வல், நெட்டி, நரியிலந்தை, கடம்பு, கி[illegible]லுப்பை, வரப்பூலா, களச்சி, இண்டு, மருக்காலை, உசிலை, வன்னி, பாதிரிமரம் இதுமுதலான அநேகவிருக்ஷங்களையும் அதுகளுக்குண்டான சுபாவங்களையும் குணங்களையும் பிரயோசனங்களையும் நன்மைகளையும் சாஸ்திரிகளெல்லாருங் கூடினாலுஞ் சொல்லமாட்டார்கள். இந்த விருக்ஷங்களுக்குள்ளே சிலதுபழுக்கும் சிலது பழுக்காது. சிலதுமிருகங்களுக்கும், சிலதுமனுஷருக்கும், சிலதுகிழலுக்கும் உதவும். வெவ்வேறே காலங்களில் வெவ்வேறேமரங்கள் காய்க்கும், ஒருமரத்துக்கு ஒருபெயர்மாத்திரம்இருந்தாலும் அதிலே அநேக சாதிகளடங்கி யிருக்கும். இந்தப்பிரகாரமாக வாழைக்கொருபெயரா யிருந்தாலும்அதிலே மொந்தன், ரஸ்தாளி, கருவாழை, செவ்வாழை, பச்சை நாடான் இது முதலான பலசாதிகள் உண்டாயிருக்கும்.

இதற்கப்பா லறியவேண்டினதாவது; சிற்பசாஸ்திரிகளானவர்கள் அரண்மனை கட்டத்தக்கதாக முந்தமுந்த அஸ்திவாரத்தைப் பறிக்கிறாப்போலே மரங்கள்வளருகிறதற்குமுன்னே தன்னுடைய உயரத்துக்கும் பருமத்துக்குந் தக்கதுபூமிக்குள்ளே வெகு விசாலமாய் வேரோட்டப்பண்ணும். அதின்பிறகு அடிமரம் தூண்போலே வளர்ந்து மரத்தினுடைய தலையையுங் கைகளாகிற கொம்புகளையுஞ் சுமக்கும். இலைகள்மயிர்மேரையாகவிருக்கும். புஷ்பங்களும் பழங்களும் இலைகளும் முழுதுந் தனக்குள்ளாகச் சரியாயிருக்குதென்று காண்பித்தாலும் பத்தும்பத்தா அதுகளைத் தனித்தனியே பார்க்கும்போது இலைஇலைகளுக்கும் பூ பூக்களுக்கும் பழம் பழங்களுக்கும் முழுதுஞ் சரியா யிருக்கப்போகிற தில்லையென்று பிரத்தியக்ஷமாகும். வர்ணத்திலே யானாலும் பருமத்திலேயானாலும் அங்கிஷங்களுடைய இணக்கத்திலேயானாலும் ரூபத்திலேயானாலும் எவ்வளவாகிலும் வித்தியாசமா யிருக்குமெனறங்கீகரிக்கக் கடவதாகும். இதிலே பராபர வஸ்துவினுடைய அளவில்லாத விமரிசையையுஞ் சாமர்த்தியத்தையுங் காணலாம். அதெப்படியென்றால் ஒரு சித்திரக்காரன் பச்சைவர்னத்தினாலே 4000 இலைவித்தியாசமாக வெழுதமாட்டான். கடவுளோவென்றால் கோடாகோடி யிலைகள் புஷ்பங்கள் பழங்களையுண்டாக்கினாலுந் தங்களுக்குள்ளே பின்னபேதகமா யிருக்குமல்லாமல் ஒன்றுக்கு ஒன்று முதலாய்ச் சரியாயிருக்கப்போகிறதில்லை. இப்படிப்பட்ட பழங்களை வர்ணிக்கிறதற்கவகாச மில்லாமற்போனாலும் அதுகளுக்குள்ளே யொருபழத்தையானாலும் எடுத்துச் சோதித்துப் பார்ப்போம்.

ஒருமாதளம்பழத்தைக் கையிலேயெடுத்து முழுதுந்திரவிசாரித்தாயானால் அதிலேமகா அதிசயமான விசேஷங்களைக்காணலாம். முந்தமுந்த சூரியனுடைய உக்கிரத்தினாலேயும், ஆகாரத்தினுடைய பலபல துற்குணங்களினாலேயும், காற்றுகளினாலேயு மோசம் வராதபடிக்கு எங்குந்தனது ஓட்டினாலே மூடிக்கொண்டிருக்கும். பலபல வர்ணங்களினாலே அலங்கரிக்கப்பட்ட அந்தவோடு புறத்திலே கெட்டியாயிருந்தாலும் உள்ளே மகாமிருதுவா யிருக்கிறது. மாதளைகளுடைய விதைகளெல்லாம் அநேக அங்கணங்களிலே பிரிந்திருக்கிறது. அந்தப்பலபல அங்கணங்களை மகாமிருதுவானசருமமூடியிருக்கிறது. அந்தத் தோலானது மிருதுவாயிருக்கிறதற்குக் காரணமேதென்றால், பச்சையாயிருக்கிற விதைகளுக்குக் கேடுவாராதபடிக்கு இப்படி மெல்லியதாயிருக்கும். இதல்



லாமல் ஒரு அங்கணத்திலே உண்டான விதைகளழிந்துபோனால் மற்றஅங்கணத்துக்கு அழிவு வராதபடிக்கு அந்தச்சருமந் தடையாயிருக்கின்றது. இதுவுந்தவிர கெம்புகளைப்பார்க்க மகா பிரகாசமாயிருக்கிற அந்த மாதளைவிதைகளின் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு சிறியவாலுண்டு அந்த வாலைக்கொண்டுமரத்திலுண்டான சாரத்தைச் சுவிகரித்து அதனாலே பிழைத்திருக்கும். இப்படிப்பட்ட ஆச்சரியமான பழங்கள் சகலபழங்களுக்கும் இராசாவைப்போலே யிருக்கிறதென்கிற அடையாளமாக முனையிலே மகாசிங்காரமான முடியினாலே சோடிக்கப்பட்டதா யிருக்கிறது. அந்த முடியைப் பார்த்துத் தான் லோகத்தி லுண்டான பேர்போன விராசாக்களெல்லாருந் தங்கள் தலையிலே கிரீடங்களைச்செய்து தரித்துக்கொண்டிருக்கிறார்களென் றெண்ணலாம். கடைசியிலே இப்படிப்பட்ட மரங்களும், புஷ்பங்களும், பூண்டுகளும் நாள் வட்டத்திலே யழிந்து போகாதிருக்கும்படிக்குப் பராபரவஸ்துவானவர் அதிசயமான வோருபாயம் பண்ணியிருக்கிறார். அதேதெனில் சகலமான புல்லுகளும், புஷ்பங்களும் தங்களுடைய சாதிக்குத்தக்கது எண்ணப்படாத விதைகளையும் எண்ணப்படாத கிழங்குகளையுங் கொட்டைகளையும் வித்துக்களையும் உண்டாக்கிறதற்குப் பலமுள்ளதுமாய் இந்த விதை வித்து கொட்டை முதலானதுகளால் அந்த எண்ணப்படாத செடிகளைநவமாய் முளைப்பிக்கிறதற் கேதுவுள்ளதுமா யிருக்கின்றன.

அதெப்படி யென்றால் யாதாமொரு விதையைக் கையிலே யெடுத்துப்பார்த்தால், முதலாவது.—அதைச்சுற்றியிருக்கிற அந்த[illegible] சாதிகளுக்குத் தக்கதாகிய மேல்த்தோலையாவது ஓட்டை[illegible]து காண்போம். 2-வது.—இத்தோலுக்குள்ளே அல்லது ஓ[illegible]டுக்குள்ளே ஓர் மெல்லிய தோலைக்காணலாம். 3-வது.—அதற் கடியில் இருபிளப்பாய் அல்லது பகுக்கக்கூடாததாகிய (இவைகளிற் சிலதை அரிசியென்றுஞ் சொல்லப்பட்ட) பருப்பிருக்கின்றது. 4-வது.—அந்தப் பருப்புக்குள்ளே மிகவுஞ் சிறியதும் மிருதுவுமான ஓர் முளையிருக்கின்றது. 5-வது.—இந்த முளையிற் பின்னாலுண்டாகப்போகிற இலை, பூ, காய், கனி முதலாயினவைகள் அடுக்கடுக்கா யிருக்கின்றன. இவ்வடுக்குகள் தான் சகல விதசெடிகளுக்கும் அவைகளிலுள்ள யாவற்றிற்குங் காரணமாயிருக்கின்றது. அதெப்படியென்றால், விதையானது புதைக்கப்பட்ட மறுதினத்தில் அல்லது 2-ம் 3-ம் 4-ம் 5-ம் தினத்தில் அந்தந்த ஜாதிக்குத் தக்கதுபோல் முளைக்கும். அந்த

முளையைச் சூழ்ந்திருக்கும் பருப்பானது அதற்கு ஆகாரமாயிருக்கும். வேரென்று சொல்லப்படுகிற அடிபாகமானது மேலே கிளம்பிப் பின்பு பூமியிலுள்ள சலத்தை யிழுக்கும்படிக்கு விரையை அல்லது கொட்டையை விளைத்துக்கொண்டு பூமிக்குள்ளே செல்லுகின்றது. மேற்பாகமாகிய முளையானது தலைகீழாய் நாட்டப்பட்டிருந்தபோதிலும் வளைத்துக்கொண்டு மேலே கிளம்பித் துவக்கத்தில் நுட்பமான இலைகளையும், பின்பு கணக்கற்ற தடித்த இலைகளையும் பற்பல கிளைகளையும், பூ, காய்கனி முதலாயின் வைகளையும் தருகின்றன. அடிபாகமாகிய வேரானது அநேகவகைப் பிரிவுகளாக உள்ளே நுழைந்து விருக்ஷங்களை அல்லது செடிகளை விழவொட்டாமல் நாலு பக்கங்களிலேயும் இழுத்துப் பிடித்துக்கொண்டிருப்பதுந்தவிர அவ்வேர்களின் முனையில் மிகவும் எளிதாய் ஜலத்தைக் கிரகிக்கத்தக்கதாகக் கடவுளா லேற்படுத்தப்பட்டிருக்கின்ற மிருதுவான பஞ்சுபோன்ற வேர்நுனிகளால் பூமியிலுண்டான ஜலங்களை யுறிஞ்சி பட்டைகளின் வழியாயும் கர்ப்பத்தின் வழியாயும் மேலே யேற்றுகின்றன. ஆகையால் யாதாமொரு இலையைக்கையிலே யெடுத்து உற்றுப்பார்த்தால் அதிலே அளவிறந்த கிளைகளாக வோடுகின்ற நரம்புகளைக் காண்போம், அவைகள் பூண்டுகளிலுள்ள சாரத்தை இலைகளின் எப்பக்கத்திலுஞ் செலுத்திக் காப்பாற்றிக்கொண்டு வருகின்ற குழல்களாயிருக்கின்றன. இப்படியே பூவினிதழ்களையும் காய்கனிகளையும் யோசிக்கவேண்டியது. இதுவுந் தவிரப் பூமியிலே நீரில்லாமற் காய்ந்திருக்குந் தருணங்களிற் குளுங்காற்றின் வழியாய் வருகிற அப்புவின் [illegible]ஷங்களை இலைகளானது கிரகித்து வேர்மட்டும் [illegible]சுகின்றன.

இப்படியே வளர்சீவனுக்குச் சம்பந்தமாயிருக்கிற விசேஷங்களை யெல்லாம் வெளிப்படுத்தினமையால் இனிபஞ்சேந்திரியச் சீவனுக்கடுத்த வர்த்தமானங்களைச் சர்வேஸ்வரனுடைய அனுக்கிரகத்தினாலே வருகிற அதிகாரத்திலே கூடின மாத்திரம் வெளிப்படுத்துவோம்.

## ௰௨-ம் அதிகாரம்.

### பஞ்சேந்திரியச் சீவசெந்துக்களுடைய விவரம்.

புஷ்பங்களிடத்திலேயும், விருக்ஷங்களிடத்திலேயும் எத்தனையதிசயமான விசேஷங்க ளடங்கியிருந்தாலும் அவைகளுக்கு வளர்த்தியாகிற சீவன்மாத்திர முண்டாயிருக்கிற படியி



னாலே அவைகளெல்லாம் பஞ்சேந்திரியங்களையுடையசீவனைக்கொண்டிருக்கிற யெல்லாப் பிராணிகளுக்குங் கீழ்த்தரமாயிருக்கிறதென் றங்கீகரிக்கக் கடவதாகும். அவ்வண்ணமே பஞ்சேந்திரியச் சீவனுள்ள வஸ்துகளுக்கு வளர்த்தியாகிற அபிவிர்த்தி யுண்டாயிருக்கிறது மல்லாமல் அப்பாலேகடந்து சுவை; ஒளி, ஊறு, ஓசை, நாற்றம், என்னும் பஞ்சேந்திரியங்களுக்குச் சம்பந்தமாயிருக்கிற சேஷ்டைகளை யெல்லாம் பண்ணுகிறதினாலே வளர்சீவனுள்ள வஸ்துவென்னப்பட்டயாவையும் விட இவைகள் மிகவுமதிசயிக்கத்தக்க தென்பதற்குச் சந்தேகமில்லை. இப்படிப்பட்ட பஞ்சேந்திரியங்களுடையசுபாவத்தையுங் குணங்களையும் வெளிப்படுத்தத் தக்கதாக இவ்விடத்திலே அவகாசமுண்டென்றாலும் இனிமேல் வரப்போகிற அதிகாரங்களிலே பிண்டத்தின்மேல் வியாக்கியானம்பண்ணும்போது பஞ்சேந்திரியங்களுக்கடுத்த அதிசயவிசேஷங்களை விஸ்தாரமாய்த் தெரியப்பண்ணப் போகிறதினாலே இந்த அதிகாரத்தில் யோசனை புத்தியில்லாமற்பஞ்சேந்திரியச் சீவனைமாத்திரங் கொண்டிருக்கிற மிருகங்களுடைய சாமார்த்தியத்தையும் அதற்கடுத்த அற்புதவர்த்தமானத்தையும் வெளிப்படுத்துவோம். முந்தமுந்த அறியவேண்டினதாவது.

மிருகங்களிற் சிலதுகள் ஊர்வன, சிலதுகள் நடப்பன, சிலதுகள்பறப்பன. இந்தப்பிரகாரமா யுண்டாயிருந்தாலும் சாங்கோபாங்கமான மிருகங்களுக்கு மாத்திரம்பஞ்சேந்திரியங்களும்உள்ளிந்திரியங்களும் நினைவும் மதிக்கிற சத்தியுமிருக்கும். மற்றச் செ[illegible]க்களுக்கு இப்படி கிடையாதென் றங்கீகரிக்கக் கடவதாகும். இ[illegible]ப் பிரகாரமாக நத்தை, நெட்டூத்தி, ஊமச்சி, நகர்வண்டு, நாக[illegible]ப்பாம்பு, முதலானபூச்சிகளுக்கு நினைவுஞ்செவியுமில்லை. எறும்பு, செல்லு முதலானவைகளுக்குக் கண்ணில்லை, இப்படியே மற்றுமுண்டான செந்துக்களுடையவிஷயத்திலே யோசிக்கக்கடவாய். ஆனால் பஞ்சேந்திரியங்களைக் கொண்டிருந்தாலுஞ்சரி அல்லது அவைகளிலே சிலதுகளைமாத்திரங் கொண்டிருந்தாலுஞ்சரி அந்தமிருக செந்துக்களிலே விளங்குகிற ஆச்சரியமான சாமர்த்தியத்தைப் பார்க்கும்போது அவைகளை அதுகளுக்குத் தந்தருளின சர்வேஸ்வரன்பேரிலே தோத்திரம் பண்ணவேண்டியது நியாயமாயிருக்கின்றது. இவைகள் கொண்டிருக்குஞ் சாமர்த்தியங்களில் விசேஷமாய் நாலுகாரியங்களைமாத்திரம் பரிட்சிப்போம், அதெப்படியென்றால்: முதலாவது.—மிருகங்கள்தாங்கள்

பிழைக்கிறதற்குப் பண்ணுகிறவுபாயங்களையும். 2-வது.—தங்களுக்கு மோசம்வராதிருக்கப் பண்ணுகிற தந்திரங்களையும். 3-வது.—தாங்கள் ஆரோக்கியமாயிருக்கிறதற்கும், வியாதியாயிருந்தால் அந்த ரோக்காட்டைத் தள்ளுகிறதற்கும் உபயோகம்பண்ணுகிற ஔஷதங்களையும். 4-வது.—தங்களுடைய குஞ்சு குட்டிகளைக் காப்பாற்றுகிறதற்குக் கொண்டிருக்குங் கவலைகளையும் வெளிப்படுத்துவோம். முந்தமுந்த அளவில்லாத தயையைக்கொண்டிருக்கிற சர்வேஸ்வரனானவர் சகலமான மிருகங்களும் பிழைக்கிறதற்கான இரைகளைப் படைத்ததுமல்லாமல் அந்தஇரைகளை அவைகளறிகிறதற்கும்பரிக்ஷிக்கிறதற்கும் வேண்டிய சாமர்த்தியத்தையுந் தந்தருளினார். இந்தப்பிரகாரமாக ஆடுமாடுமுதலானவைகள் காட்டிலே திரியும்போது அவ்விடத்திலே யெண்ணப்படாத புல்லுகளுண்டாயிருக்க அதுகளிற் சிலதுகள் விஷத்தைக் கொண்டிருக்கிறதுமாய் வர்ணங்களைப் பார்க்கும்போது ஆரோக்கியம்வருத்திவிக்கிற புல்லுகளுக்கு முழுதுஞ்சரியொத்ததுமாயிருந்தாலும் புத்தியில்லாத இந்தமிருகங்கள்வைத்தியசாஸ்திரங்களையறியாமற்போனாலும் சர்வேஸ்வரன் அவைகளுக்குத் தந்தருளின சாமர்த்தியத்தினாலே நஞ்சுள்ள புல்லுகளைத்தொடாமல் தங்களுக்குள் ஆன புல்லுகளைமாத்திரமே மேய்கின்றன. இதல்லாமல் ஆட்டுக்குட்டி பிறந்தவுடனே ஆயிரம் ஆடுகளுக்குள்ளே தனதுதாயைத்தேடிமற்ற ஆடுகளைச்சட்டைபண்ணாமல் தனது தாயார் முலையிலே மாத்திரம் பால்குடிக்க ஆசையாயிருந்து அதைக்கண்டவுடனே ஊட்டப்போம். இப்படியேதானே தாயானது அநேகம் ஆட்டுக்குட்டிகளைச் சட்டைபண்ணாமல் தனதுகுட்டியின் சத்தத்தைக் கேட்டவுடனே அதன்கிட்டே ஓடும். இந்தவிஷயத்திலே மேய்க்கிறவன் அநேகம்விசை அடையாளமறியாமல் மோசம்போனாலும் தாயாட்டுக்கும் குட்டிஆட்டுக்கும் ஒருக்காலு மோசம் வந்ததில்லை. இதல்லாமல் பசுமாடு, ஆடு, ஒட்டகமுதலானவைகள் பகல் நேரத்தில் நிரம்பமேய்ந்ததற்குப் பிற்பாடு அந்தப்புல்லுகளை நன்றாய் மெல்லாமல் விழுங்கினதினாலே இராத்திரிகாலத்தில் மறுபடி வாயில்வரப்பண்ணி மெள்ளமெள்ள மென்று மறுபடியுட்கொண்டு எளிதாய்ச் செரித்துப்பாலாய்ப்போகும். அந்த நியாயத்தினாலே அதிகாலையிலும் இராத்திரிகாலத்திலும் பால் கறக்கலாம். வேறேமிருகங்கள் பிழைக்கிறதற்குப் பண்ணுகிறதந்திரங்களெண்ணிக்கையில்லை, இதற்கப்பால் அறியவேண்டினதாவது.

## பஞ்சேந்திரியச் சீவசெந்துக்களுடைய விவரம்.

சர்வேஸ்வரனானவர் ஒவ்வொருஜாதி மிருகங்களுக்கும் வெவ்வேறே இரைகள்உண்டாக்கியிருக்கிறபடியினாலே ஆகாயத்திலானாலும் பூமிக்குள்ளென்கிலும் தண்ணீர்க்குள்ளேயாகிலும்உண்டான தீனிகளை அவைகள் பராமரிக்கிறதற்கு அதற்கேற்ற எத்தனங்களாகிற விசேஷவிதமான அவயவங்களைக் கட்டளையிட்டார். இந்தப்பிரகாரமாகச், சிங்கம், புலிமுதலான துஷ்டமிருகங்கள் வேட்டை நிமித்தமாகத் தப்பிப் பிழைக்க வேண்டியிருக்கிறதினாலேபிடிக்கிறதற்குங்கடிக்கிறதற்குங்கடினமானபற்களையுங் கூரமுள்ள நகங்களையும்ஓடுகிறதற்கு லகுவையுங் கர்த்தர் கட்டளையிட்டிருக்கிறார். அந்த நியாயத்தினாலேவேட்டையாடுகிற பக்ஷிகளுக்குக் கால்களிலேபலத்தநகங்களும், கூர்மையுள்ளதுமாய் வளைவுள்ளதுமாயிருக்கிற மூக்குகளும், கத்திபோலிருக்கிறதாழ்வாயும் உண்டாயிருக்கும். காகங்கழுகுமுதலிய பிணங்களைத்தின்கிற பக்ஷிகள்பிரேதங்களுடைய நாற்றத்தை ஒருகாதவழியிலே கண்டுபிடிக்கும். தானியங்களைத்தின்கிற பக்ஷிகளுக்கு மூக்குவளையாமற் கூர்மையாயிருக்கும். குழிக்குள்ளே கிடக்கிற தானியங்களைக் கண்டுபிடிக்கிறதற்குக் கால்களில் விரலும்நகமுமுண்டு. ஜலத்திலேசஞ்சரித்து இரைகளைத்தேடுகிற பக்ஷிகளுக்கோ வென்றால், அகலமான காலும் விரல்களுக்கு நடுவே சருமங்களும் உண்டு. இப்படிப்பட்ட கால்களினாலே தண்ணீருக்குள்ளேயும்மேலேயும்நீந்தியோடுகிறதுமல்லாமல் அதுகளுடைய வாய் மட்டமாயிருந்து கடைவாயிலே அரம்போலிருக்கும். அதேதினாலென்றால், யாதொரு சிறுமச்சங்களை விழுங்கிறபோது நழுவிப்போகாதபடிக்கு அதிலே சிக்கப்பண்ணும். இதல்லாமற் சிலமிருகங்கள் [illegible]தாவுயரமாயிருக்கும்போது அதுகள் மேய்கிறதற்குக் குனிய வேண்டியிருக்கிறதினாலே கழுத்து மகா நீளமாயிருக்கும். யானைக்கோ வென்றால் கழுத்துக் கொஞ்சமாயிருக்கிறபடியினாலே தலைகுனியமாட்டாதிருந்தாலும் தும்பிக்கையைக்கொண்டு தின்கிறதற்குங் குடிக்கிறதற்கும் வேண்டியதெல்லாஞ் சம்பாதிக்கும். ஆக்குலாவென்கிற பக்ஷியோவென்றால் மகாஉயரமாயேறித் தனதுகூர்மையுள்ள திஷ்டியினாலே மகாதூரமாயிருக்கிற இரையைப் பார்த்து அதின்மேலே வெகுதீவரத்தோடே விழுகிறதுமல்லாமற்சில சமையங்களிலே ஆமையைத் தனதுநகத்தினாலே தூக்குகிறபொழுது அந்தஆமை தன்னை ஓட்டினாலே முழுதுமூடியிருக்கிறதைக்கண்டு உள்ளேயுண்டான மாங்கிஷங்களைத் தின்னும் பொருட்டாய் ஆமையை உயரத்தூக்கிப் பாறைமேலே போட்டு உடைத்துத் தின்னும்.

114594

இதன்றியே வேட்டைநாய்களுடைய சாமர்த்தியத்தைச்சொல்லுகிறவனார்? சிலதுமகா வேகமாயோடி முயல்மேலே விழுகிறது. சிலதுகள் கவுதாரியைக் கண்டவுடனே அதை மறிக்கிறாப்போலே அப்பாலே போகவொட்டாமல் விசேஷமான வகையோடே குலைத்து அதினாலே வேட்டைக்காரனுக்கொப்புக் கொடுக்கும். வேறேநாய்கள் தண்ணீருக்குள்ளே தாராமுதலியவைகளையும் பிடிக்கும்.

இதுவுந்தவிர மிருகங்கள் வியாதியாயிருந்தால் தங்களுடைய நோக்காட்டுக்கான ஒளஷதங்களைச் சம்பாதிக்கிறசாமர்த்தியத்தை வெளிப்படுத்துவோம். அதெப்படியென்றால், மிருகங்களுடைய சரீரமானது நாலுபூதியங்களினாலே கூட்டப்பட்டதா யிருக்கிறதினாலே அவசியமா அநேகம்விசை அவைகளுக்கு விகாரங்களும் வியாதிகளும் வரவேண்டியிருக்கும். மனுஷர் வியாதியாயிருக்கும்போது ஒன்றில் தங்கள் புத்தியைக்கொண்டு ஆனமருந்துகளைச் சம்பாதிக்கிறார்கள். ஒன்றில் ஒளஷதங்களை யறிந்திருக்கிற வயித்தியரைக் கேட்கிறார்கள். யோசனை புத்தியில்லாத மிருகங்களோ வென்றால் அவைகளுக்குச் சர்வேஸ்வரன் கட்டளைபண்ணின சாமர்த்தியத்தினாலே மனுஷர்முதலா அறியாத சஞ்சீவிகளை அறிந்திருக்கின்றன. இந்தப்பிரகாரமாக வுத்தராதி ராச்சியத்திலுண்டாகிய அருந்தோவென்கிற பக்ஷியானது தனது குஞ்சுகளுக்குக் கண்தெரியாமற்போனால் அவைகள் பார்வையடையும்படிக்கு கெலிதோயுவென்கிற செடியினுடைய தழையைப்பறித்துக் கண்ணிலே பொற்றும். அப்படியே போத்தாமுவென்கிற மிருகமானது வியாதியாயிருக்கும்போது [illegible]க்கரும்பு அறுத்தபிற்பாடு கூர்மையாயிருக்கிற அத[illegible]க் கட்டையினருகே சென்று அதினாலேதனது தொடையிலிருக்கிற பெரிய விரத்தத்தாரையைக் குத்தியிரத்தம்வாங்கும். ஆனால் காயத்திலிரத்தமதிகமாய்ப் பிறப்பட்டுப் போகாதபடிக்குத் தகுமானவிரத்தம்வடிந்தபின் சேற்றிலே விழுந்து புரண்டு இரத்தத்துவாரத்தை யடைத்துப்போடும். பின்னையும் காட்டாடுகள் வேட்டைக்காரராலே காயம்பட்டால் திக்கித்தாமுவென்கிற செடியினுடைய இலையைக் காயத்திற்போட்டு அதிலே ஊடுருவிநிற்குங் குண்டுஅம்புகளையுந் தள்ளிக் காயத்தைக் குணப்படுத்தும். காடியானத் விஷந்தின்று லெறும்பைத்தின்று விஷம் போக்கும். நாய், நரி, பூனை முதலானது அசீரணமாயிருந்தால்வாந்திபண்ணுகிறதற்கு ஒரு விசேஷமான புல்லுண்டுஅதைத்தின்னும்; கடைசியிலே ஆகாசத்திலே பறக்கிற பட்சிகளும் பூமிமேலே திரிகிற மிருகங்களும் தண்ணீருக்குள்ளே நீந்து



கிற மச்சங்களும் ஆனகாலங்களிலே வெவ்வேறே சீமைகளுக்குப் போய்விடும்.

இப்போது மிருகங்கள் தங்களுடைய யுத்தத்தில் எதிர்க்கிறதற்கும் தாங்குகிறதற்குங் கொண்டிருக்கும் ஆயுதங்களைச் சுருக்கத்திலே வெளிப்படுத்துவோம். அதெப்படியென்றால்; சிலதுகளுக்குக் கெட்டியுள்ளதுமாய்க், கூர்மையுள்ளதுமா யிருக்கிறநகங்களுண்டு. சிலதுகளுக்குப் பயங்கரமான பற்களுண்டு. சிலதுகளுக்குத் தலையிலே யிரண்டு கொம்புகளுண்டு. சிலதுகளுக்கு நெற்றியிலே ஒருகொம்புண்டு. வேறே சிலதுகளுக்குப் பலத்த ஓடுகளுண்டு. சிலதுகளுக்குச் சருமங்கெட்டியா யிருக்கிறதினாலே அம்புகளை அதிலே பூரவொட்டாது. சிலதுகளுக்குக் கால்களிலே யிருக்கிற குளம்பு கெட்டியா யிருக்கிறது. சிலதுகள் யுத்தம்பண்ண மாட்டாமற்போனால் ஓடுகிறதற்கு மகாபலமும் லகுவுமுண்டாயிருக்கும். இந்தப்பிரகாரமாகமுயல், மான்முதலானதுகளும்பூமியேலேஓடினாலும் ஆகாசத்திற் பறக்கிற பக்ஷிகளைப்போற் பறந்துபோம்.

கடைசியிலே மிருகங்கள் தங்களுடைய குஞ்சுகளையுங் குட்டிகளையுங் காப்பாற்றுகிற வகையைச் சுருக்கத்திலே வெளிப்படுத்துவோம். இந்த விஷயத்திலே மிருகங்களிடத்திற் காண்பிக்கிற கவலைகளைப் பார்க்கும்போது ஆச்சரியப்படுகிறதற்கேதுவுண்டு. அவ்வண்ணமே சிலதுகளெந்தெந்த ஆபத்துக்கும் எந்தெந்த இக்கட்டுக்கும் பயப்படாமற்தண்ணீருக்குள்ளேயும் நெருப்புக்குள்ளேயும் விழுந்து குஞ்சுகளுக்காகவும் குட்டிகளுக்காகவும் பிராணனைக் கொடுக்கும். நீசமான கோழிகள் மு[illegible]க் குஞ்சுகளுக்குமோசம்வராதபடிக்குச் சகல துஷ்டமிருகங்களுக்கு முதலாய்ப் பயப்படாமலெதிர்த்து நிற்கும். தங்கள் குஞ்சுகளைப்பிழைப்பிக்கிறதற்கு அவைகளும் பட்டினியா யிருக்கும். யாதொரு இரையைக் கண்டால் தனது குஞ்சுகளுக்குக் காண்பித்து வேறே குஞ்சுகள் வந்தாற் கொத்தும். சிங்கம், புலி முதலானது களைத்தனை பசித்திருந்தாலுங் கெபிக்குள்ளே யொளித்திருக்கிற தனது குட்டிகளுக்கு மூந்தமுந்த மாங்கிஷங்களைக் கொண்டுபோம். பக்ஷிகளானதுகள் நிழலிலே குஞ்சுகளைப் பொரித்தாலுஞ் சிற் சில சமயங்களிலே சூரியனுடைய கதிர்படாம லிறகினாலே குஞ்சுகளை மூடிக்கொள்ளும். பெலிக்கானென்கிற பக்ஷி குஞ்சுகளுக் கிரையில்லாத சமயத்திலே தன்னெஞ்சைக் குத்திக் குஞ்சுகள் இரத்தத்தைக் குடிக்கப்பண்ணும்.

குஞ்கள் நன்றா யிருக்கிறதற்குப் பக்ஷிகள் கூண்டு பண்ணுகிற விதத்தை விசாரித்தால் மகா வதிசயம் பிறக்கும். அதெப்படியென்றால், சிலபக்ஷிகள் கூடு கட்டுகிறபோது குச்

சிகளையும், புல்லுகளையும் நார்களையும் அங்கங்கே தேடிக் கொண்டுவந்து பின்னி யஸ்திவாரம்போலே போட்டுப் பிறகு உள்ளே மிருதுவா யிருக்கிறதற்குப் பஞ்சு, மயிர், இறகு கொண்டுவந்துமனுஷரறியாத சாஸ்திரத்தின்படியே பரப்பிவைக்கும். தூக்கணாங் குருவியானது தென்னை முதலிய ஈர்க்குகளைக் கிழித்துக் கொண்டுவந்து அவைகளால்தைத்துமகா விநோதமாகப் பின்னி யிரண்டடுக்கஸ்தாய்ப் பிரித்துக் கொம்புகளிற்கட்டிவைத்து அதற்குக் கீழேதானே வழிவிட்டு மேலே பார்த்தால் வழியில்லா திருக்குமாப்போலே காண்பிக்கும். சிலதோவென்றால், சிற்பியனைப்போலே பஞ்சு சம்பாதித்துத் திரித்து ஒரு பக்கத்தில் முடிந்துமூக்கினாலே யிலைகளைக் கொத்தி அதிலே யந்தச் சரட்டாலே தைத்துத் தொன்னையைப் போலே பண்ணி அதிலே நிரம்பப் பஞ்சிட்டுப்பரப்பி அந்தக் கூட்டிலே குஞ்சு பொரிக்கும்.

மிருகங்களைப்பற்றி மேலே சொல்லிய சமாசாரத்தைக் கேட்கிறதிலே நீங்கள் மோசம்போக வேண்டாம். அதாவது: இத்தனை யாச்சரியமான விசேஷங்களை விசாரிக்கும்போது இப்படிப்பட்ட மிருகங்களுக்கு யோசிக்கிற புத்தி உண்டோ இல்லையோவென்கிற சந்தேகப்படத் தேவையில்லை. அதேதென்றால் இதெல்லாம்யோசனை புத்தியினாலே வந்ததானால் மற்றுமுண்டான காரியங்களிலேயும் இப்படிப்பட்ட புத்தியைக் காண்பிக்கும். ஆனால் சர்வேஸ்வரனானவர் மிருகசாதிகள் நாள்வட்டத்திலே குறைந்து நிர்மூலமாய்ப் போகாதபடிக்கு இவ்விதமான சாமர்த்தியத்தை அவைகளுக்குக் கட்டளையிட்டார். இதற்குத்தப்பாத அடையாளமேதென்றால், மிருகங்களுடைய குஞ்சுகளுங் குட்டிகளும் பெரிதாய்ப் போனதற்குப் பிற்பாடு தாய் தகப்பனை யறியாமல் தாய் தகப்பனுங் குஞ்சு குட்டிகளை முழுது மறியாமற் போகின்றது. ஆனபடியினாலே இப்படிப்பட்ட சாமர்த்திய மெல்லாம் யோசிக்கிற புத்தியினாலேயும் மெய்யான பக்ஷத்தினாலேயும் வராமல் தப்பில்லாத கிரமத்தோடு சகலத்தையும் நடத்திக் கொண்டுவருகிற சர்வேஸ்வரனுடைய அளவில்லாத விமரிசையினாலே வருமென்கிறதற்குத் தப்பாது. ஆனபடியினாலே இந்த விஷயத்தில் அவர்பேரிலே தோத்திரம் பண்ணவேணுமொழிய மற்றப்படி யல்ல. இதெல்லாம் ஒருவமையினாலே வெளிப்படுத்துவோம். அதெப்படியென்றால், கெட்டிக்காரனுமாய் மகா சமர்த்தனுமா யிருக்கிற வொருசேவகனை வில்லுக்காரன் மறைவுள்ள ஸ்தலத்திலிருந்து தனக்கெதிராக விருக்கிற சுவரின் வளையக்கோட்டிலே யுண்டான நடுக்



குறியிலே சுமுத்திரையாக அம்பையெய்து அதிலே பட்டபண்ணினால் அப்படிப்பட்ட அம்பு அந்தக்குறியிலே பட்டதை வேறொருத்தன் கண்டு இந்த அம்புக்கு மகா புத்தியும் ஆலோசனையும் உண்டென்றும், இது அங்கங்கே சாயாமல் நடுவிலேதானே பட்டமையால் இப்படிப்பட்ட புத்தி வேறொன்றுக்கும் இராதென்றும் சொல்லாமல் அந்த அம்பு இதிலே மாத்திரந் தைத்ததையும், மற்றொரு சேஷ்டையும் அது செய்யமாட்டாதென்பதையும் ஆலோசித்து வில்லுக்காரனைக் காணாதிருந்தாலும் மகா கெட்டிக்காரனான யாதொருத்தன் அவசியமா யிந்த அம்பை யெய்திருக்கிறானென்றும் சொல்லுவானொழிய மற்றப்படியல்ல. அத்தன்மைபோலே மிருகங்கள் சில காரியங்களுக்கு மாத்திரஞ் சாமர்த்தியமுள்ளதுமாய் மற்று முண்டான அநேக காரியங்களிலே யோசனை புத்தியினுடைய அற்பவடையாள முதலா யில்லாததுமா யிருப்பதினால் மிருகங்களுடைய சேஷ்டைகளெல்லாம் யோசிக்கிற ஆலோசனையினாலே வருகிறதென்றுவிசாரியாமல் மிருகவினங்களெல்லாம் நாள்வட்டத்திலே கெட்டுப்போகாதபடிக்குச் சர்வேஸ்வரன் இதெல்லாந் தம்முடைய அளவில்லாத விமரிசையினாலே நடத்திக்கொண்டு வருகிறாரென்று அங்கீகரித்து இதற்காக ஆண்டவர்பேரிலே தோத்திரம்பண்ணக் கடவோமாக. இல்லாமல் மிருகங்களுக்கு வேணும் வேண்டாமென்கிற புத்தியின் பலனுண்டா யிருக்குமேயொழிய அதுகளுக்குச் சுதந்தரமுள்ள மனதில்லை. அதிருக்குமேயானால் புண்ணியமும் பாவமும் மிருகங்களுக்கும் இருக்கும். ஆனால் இதற்கு எள்பிரமாணமானாலும் அடையாளமில்லை. ஆனபடியினாலே மிருகங்களுக்கு யோசனைபுத்திதியில்லை யென்று அவசியமா யங்கீகரிக்க கடவதாகும். இதற்கடுத்த வேறே அநேக நியாயங்களை அவனவன் எளிதாய்க்கண்டு பிடிக்கலாமென்கிறதினாலே யிம்மாத்திரஞ் சொல்லிக்காட்டினதுபோதும்.

இற்றை வரைக்கும் மிருகங்கள் தாங்கள் தனித்தனியே பிழைக்கிறதற்குப் பண்ணுகிற வுபாயத்தைச்சொன்னபடியினாலே இங்கே கூட்டமாய்த் திரிகிற மிருகங்களைச் சர்வேஸ்வரனானவர் நடத்தும்வகையைச் சுருக்கத்தினாலே சொல்லிக் காட்டுவோம். அதெப்படி யென்றால்; பெரிய மிருகங்களிலே சர்வேஸ்வரனுடைய விமரிசையும் பலமுங் காண்பித்திருந்தாலும் நீசமான பூச்சிகளிலேயும் எறும்புகளிலேயும் தேனீக்களிலேயும் அதிகமாய் விளங்குகிறதென்று மகாத்து

மாக்க ளெழுதிவைத்தார்கள். அதெவ்வாறெனில் சிறுவுடல்களிலே யிந்திரியங்களுந் தத்துவங்களுங் கிரமத்தோடிருக்கிறது மகா அருமையா யிருக்கும். எறும்புகளுடைய கூட்டத்தின் வகையை விசாரிக்கும்போது அதிகமான ஆச்சரியமுள்ளதாயிருக்கின்றது. அதேதென்றால் அநேக எறும்புகள் கூடி வேறே யெத்தனமில்லாமல் தங்களுடைய வாயினாலேயும் காலினாலேயும் களஞ்சியத்துக்குப்போகிற பாதையைப் பற்பல சுற்றுகளாக மறைத்து மகா பிரயாசத்தோடே வழியுண்டாக்கித் தானியங்களைச் சேர்த்துவைக்கும். சில சமங்களிலே அநேக எறும்புகள் மேலேயேறித் தட்டையைக்கடித்துத் துண்டித்துக் கதிரைவிழப்பண்ணும். மற்ற எறும்புகள் தானியமணிகளை யெல்லாம் உதிர்த்து ஆளுக்கொன்றாய்ப் பங்கிட்டுக் கொடுத்துச் சேருவைக்காரன் போலே யிருக்கிறவொன்று கூட்டிக்கொண்டுபோகக் களஞ்சியத்துக்கும் தாங்களிருக்கிறதற்கும், பிரேதம் அடக்கிறதற்கும் இந்த மூன்று வகைக்கும் மூன்றுவிதமாகக் கட்டின அறைக்குள்ளே வைத்துக்கொண்டு அதுகள் முளைத்து வளராதபடிக்கு முளையைக் கிள்ளிப்போடும். மழை வருஷிக்கிறதற்கு முன்னே தனதுவீடு ஈரமாய்ப்போமென்று முன்னாடியறிந்து அதற்குப் பயப்பட்டு முட்டைகளை வெய்யிலிலே காயவைத்து உலர்ந்தவிடத்திற் கொண்டுபோம்.

இதைப்பார்க்கத் தேனீக்களுடைய கூட்டம் அதிசயமாயிருக்கும். எல்லாத்துக்கும் ஒரு வண்டு இராசாவைப் போலே யிருக்கும். இந்த விராசா எங்கேபோனாலும் மற்ற ஈக்கள் கூடவே வளைந்துகொண்டு போயிருக்கிறதற்கான ஸ்தலத்தைச் சம்பாதித்து எண்ணப்படாத ஆறுகோணமுள்ள கூடுகள் குழல்போலே மெழுகாலே பண்ணி ப[illegible]க்த ஈக்கள் புட்பங்களிலே விழுந்து இரசத்தையுண்டு அமிர்தமான தேனாக்கி முன் சொல்லப்பட்ட அறைகளிலே பத்திரமாய் வைக்கும். வேலை செய்கிறதேனீக்களும்மற்றத்தேனீக்களும்இரைகள்சம்பாதிக்கும். இராத்திரி காலத்திலே ஒரு சத்தமானாலுமில்லை. அதிகாலமேயோவென்றால் ஒருபெரிய தேனீ புறப்பட்டு மகா சத்தத்தோடே மற்றத் தேனீக்களெல்லாத்தையும் எழுப்பும். யாதாமொரு ஈ சோம்பலினாலே வேலை செய்யாமற்போனால் பெரிய ஈ தனது கொடுக்கினாலே கொட்டும். இந்த வர்த்தமானத்தையும் இதைப்பார்க்க வதிசயமான விசேஷங்களையும் அநேக மகாத்துமாக்கள் வெகு வருஷந் தேனீயின் கூட்டத்தைப் பரிக்ஷித் தெழுதி வைத்தார்கள்.



இவைகளெல்லா வற்றையும் பார்க்கப் பூச்சிகளுடைய விசேஷங்களை விசாரிக்கும்போது புத்திக்கடங்காத ஆச்சரியத்தைவருத்திவிக்கின்றது. அதெப்படியென்றால், இளம் பூச்சிகள் துவக்கத்தி லொருவகை ரூபத்திலிருந்து பின்பு வளர வளரத் தன் சொந்த ஜாதியினிலைமைக்கு வருகின்றது அதெப்படியென்றால், அவைகள் முட்டையினின்று வெளியே வந்தமாத்திரத்திற் புழுக்களாக நெளிந்து கொண்டிருந்து அழுகின மாமிச முதலியவற்றையும் மெல்லிய இலைகளையுந் தின்று சிலகாலமான பின் தன்னை மறைக்கும்படியான கூண்டுகளைக்கட்டி பிரேதம்போலசைவற்றுஉள்ளேகிடந்து தக்க பிராயம் வந்தபின் சிறைவளர்ந்து வண்டு, ஈ, குளவி முதலிய ரூபங்களைக்கொண்டு பறந்துதிரியும். இவ்வித பூச்சிகளில்அநேகம்முட்டையிட்டவுடனே மாண்டுபோகின்றன. ஆகிலுந் தானிடு முட்டையினின்று வெளிப்படுங் குஞ்சுகளுக்கேற்ற ஆகார மிருக்கும்படியான விடந்தேடி அங்கே தனது முட்டையைப் பீச்சுகின்றன. இதற்குத் திருஷ்டாந்தமாகப் பூக்களின் தேனை யருந்துகின்ற தும்பி வண்டுகளிற் சிலது முட்டைகளை யம்மலரிலிடுவதினா லவைகள் காய்காளால்மூடப்பட்டுத்தக்க காலத்திற்பொரித்து அங்குள்ள பருப்புகளைத் தின்று பெரிதாய் வளர்ந்த பிற்பாடு பழத்தைப்பீறி வெளியே புறப்பட்டுப் போய்விடுகின்றது. இதற்குத் திருஷ்டாந்தமாக மாங்கொட்டையிற் காணலாம். வேறே சிலதோவென்றால் மிருகங்களின் தேகத்தில் நாவிற்கெட்டின விடத்தில் முட்டைகளைப் பீச்சுவதினால் அம்மிருகங்களின் நாவிலகப்பட்டுள்ளேசென்று குடல்களிற்றங்கி அங்கே பொரிக்கப்பட்டு சாணங்களின் வழியாக வெளிப்பட்டுப் பறந்து போகின்றது. இப்படியே லோகத்திலுண்டான மற்ற ஒவ்வொரு வஸ்துக்களிடத்திலேயுஞ் சர்வேஸ்வரனுடைய அளவில்லாத விமரிசை மிகவும் விளங்கினாலும் இவைகளெல்லாவற்றையும் விட சர்வலோகத்தின் குறிப்பிடமாயிருக்கிற மனுஷனிடத்தி லதிகமாய்ப் பிரகாசிக்கு மென்பது குன்றாத சத்தியமாகும். ஆனபடியினாலே மனிதனென்னப்பட்ட யாவரும் சகல நன்மை சொரூபமாயிருக்கிற திரியேக சர்வேஸ்வரனைத் தோத்திரம் பண்ணவேணுமென்று மிகவு மபேக்ஷையா யிருந்து இதுவரையிற்சொல்லிய இந்த 12 அதிகாரங்களிலும் அண்டத்தின்பேரிலே வியாக்கியானம்பண்ணினமையால் இனிவரும் அதிகாரங்களிலே பிண்டத்தையு மதற்கடுத்த விசேஷங்களையும் வெளிப்படுத்த உத்தேசித் திருக்கின்றோம்.

## ௰௩-ம். அதிகாரம்.

# பிண்டமானது அண்டத்தின்

### குறிப்பிடமா யிருக்கிற விவரம்.

சர்வலோகத்தையும் உண்டாக்கினவருமாய்த்தப்பில்லா
தகிரமத்தோடு சகலத்தையும் நடத்திக்கொண்டு வருகிறவரு
மாயிருக்கிற பராபரவஸ்துவினுடைய அத்தியந்த கிருபாகடா
க்ஷத்தினாலே அண்டவியாக்கியானம் பண்ணினதற்குப் பிற்
பாடு சர்வத்துக்கும் வல்லவராயிருக்கிற கடவுளுடையமனோ
வாக்குக்கெட்டாத மகிமை கீர்த்திப்பிரதாப சோபனங்கள்
மென்மேலும் அதிகமதிகமாய் விளங்கத்தக்கதாகப் பிண்ட
வியாக்கியானத்தை வெளிப்படுத்தத் துவக்கிறோம்.

அதெப்படியென்றால், மனுஷர் சுபாவமானது சர்வலோ
கத்திலே அடங்கியிருக்கிற வஸ்துக்களுடைய குறிப்பிடமா
யிருக்கிறதென் றங்கீகரிக்கக் கடவதாகும், இது நிமித்தமாக
இந்தச் சீமையிலிருக்கிற ஜனங்கள் அண்டத்துக்கொத்தது
பிண்டத்துக்கென்று சொல்லுகிறார்கள். இதிலேமோசம்வரா
தபடிக்குப் பிண்டமென்கிற வார்த்தைக்குச் சாஸ்திரமறியா
தவர்கள் சொல்லுகிறப்போலே செத்தபிரேதமென்கிற அர்
த்தத்தைக் கொண்டிருக்கிறதென்று நினையாமல் பிண்டமெ
ன்கிறபதத்துக்கு (நரசீவனைக்கொண்ட) தேகமென்கிற சுபா
வமான அர்த்தமுண்டென்று விசாரிக்கக் கடவோம். சர்வ
லோகத்திலுண்டான வஸ்துக்களுடைய சுபாவத்தைப் பார்
க்கும்போது இந்தப்பொருளென்னப்பட்டவை யாவும் நாலுவித
அந்தஸ்திற் பிரிந்திருக்கிறதென்று சாஸ்திரிகள் சங்கேதம்
பண்ணினார்கள்.

அவைகளின் முதலாமந்தஸ்திற் குறிக்கப்பட்ட வைக
ளாவன. சில்துகளுக்கு வளர்சீவனில்லாமலும் இந்திரியச்
சீவனில்லாமலும் யோசனைபுத்தி யில்லாமலும் வெவ்வேறு
மாறுதலும் ஸ்திதியுமுண்டு. இந்தமுந்தின அந்தஸ்திலே சோ
திமண்டலங்களும்,அதிலுள்ள சந்திரசூரிய நக்ஷத்திரங்களும்,
கிரகங்களும், பூதியங்களும், அதிலே யுண்டான உயிரில்லாத
எல்லா வஸ்துக்களும் அடங்கி யிருக்கின்றன.

இரண்டாமந்தஸ்த்து ஏதென்றால், நரசீவனில்லாமலும்
பஞ்சேந்திரியங்களினாலே வருகிற சேஷ்டைகள்இல்லாமலும்
வளர்சீவனைமாத்திரங் கொண்டிருக்கிற சகலவித பொருட்க



ளும் இரண்டாமந்தஸ்தென்று சொல்லப்படும். அவைகளே
தென்றால், புற்கள், புட்பங்கள், செடிகள், பூண்டுகள்முதலிய
விருக்ஷங்களும் இவைமுதலாயினவைகளுமாம்.

மூன்றாமந்தஸ்திலே பஞ்சேந்திரியங்களைக் கொண்டிரு
க்கிற மிருகங்களெல்லாம் அடங்கியிருக்கின்றன.

நாலாமந்தஸ்திலோவென்றால் யோசனை புத்தியுள்ளபிர
தான வஸ்துக்களாய் விளங்கப்பட்டவைகளே.

இதெல்லாம் இப்படி யிருக்கையிலே இந்தநாலு அந்தஸ்
துக்களிலே யிருக்கிற சுபாவமெல்லாம் மனுஷரிடத்திலேமிக
வும் பிரகாசிக்கிற தென்கிறது பிரசித்தமான சத்தியமாயிருக்
கிறபடியினாலே மனுஷர் சுபாவமானது சர்வலோகத்தினுடை
யகுறிப்பிடமா யிருக்கிறதென் றங்கீகரிக்கக்கடவோம். அதெ
ப்படியென்றால், முந்தின அந்தஸ்திலே யுண்டான வஸ்துகளு
க்குள்ளே ஆகுதலும் ஸ்திதியுமிருப்பதுபோல் மனுஷரிடத்
திலேயும் ஆகுதலும் ஸ்திதியுமுண்டு. இரண்டமந்தஸ்திலே
யுண்டான புட்பங்களும் செடிகளும் வளர்கிறதுபோல் மனு
ஷரும் வளருகிறார்கள். மூன்றாமந்தஸ்துக்கடுத்த மிருகங்க
ளுக்குப் பஞ்சேந்திரியங்களும், பஞ்சேந்திரியச் சேஷ்டைகளு
மிருப்பதால்மனுஷரிடத்திலேயும்பஞ்சேந்திரியங்களும் அவை
களுடைய சேஷ்டைகளுமுண்டு. நாலாமந்தஸ்துக்குச் சம்ப
ந்தமாயிருக்கிற யோசனை புத்தியும், வேண்டும் வேண்டாமெ
ன்கிற பலத்தைக்கொண்டிருக்கிற சுதந்தரமுள்ளமனசும் பிர
சித்தமாய் மனுஷரிடத்திலே காணப்படும். ஆகையால் மனு
ஷர் சுபாவமானது சர்வலோகத்தினுடைய குறிப்பிடமாயிரு
க்கிறதென்பது தப்பில்லாத சத்தியமாகும்.

இப்படிப்பட்ட விசேஷத்தை முற்றுமுணர்ந்த ஓர் மகா
த்துமாவானவர் திருவுளம் பற்றினதாவது: மட்டில்லாதவல்
லமையையும் தயாளத்தையுங் கொண்டிருக்கிற கர்த்தரான
வர் லோகத்தையும் அதிலே நிறைந்திருக்கிற எண்ணப்படா
தவஸ்துக்களையும் படைத்ததற்குப்பிற்பாடு அவைகளுடைய
குறிப்பிடமாக மனுஷனைச் சிருஷ்டித்தார். அதெத்தன்மை
யோவென்றால்: சம்பிரதியானவன் தனதுகணக்குகளை எல்
லாம் விஸ்தீரணமாய்க் குறித்தபிற்பாடு கூடியதொகையை
நாலு ஐந்து அக்ஷரங்களுக்குள்ளே அடக்கிவைக்கிறப்போ
லே அளவறுக்கப்படாத ஞானத்தையும் சாமர்த்தியத்தையுங்
கொண்டிருக்கிற சர்வேஸ்வரனானவர் எண்ணிக்கைக்குள்
அடங்காத வஸ்துக்களை யுண்டாக்கி அவைகளெல்லாந் தொ
கையாக மனுஷர் சுபாவத்திலே அடக்கிவைத்திருக்கிறார்.

ஆனால் இந்தச்சத்தியம் அதிகமதிகமாய் விளங்கத்தக்க
தாக முன் சொன்ன நாலு அந்தஸ்துக்களிலேயும் அடங்கி
யிருக்கிற வஸ்துக்களைத் தனித்தனியே பார்த்து அவைக
ளெல்லாம் மொத்தமாயும் உத்தமப் பிரகாரமாயும் மனுஷரி
டத்திலே அடங்கியிருக்கிறதென்று கூடினமாத்திரஞ் சொல்
லிக் காட்டுவோம். இந்த விஷயத்திலே அநேகருக்கு மயக்க
முண்டாகும். அதெப்படியென்றால, சர்வ லோகத்திலும்
உண்டான பொருட்களெல்லாம் பிண்டமாகிற மனிதனிடத்
திலே நிச்சயமா யிருக்கிறதென்று சொன்னால் பிரத்தியக்ஷ
மான தப்பறையா யிருக்கிற தென்றும், பயித்தியக்காரனு
டைய வார்த்தைக்குச் சமானமா யிருக்குதென்றும் சொல்
லுவார்கள். அப்படியே யாதாமொருத்தன் சூரியனும் சந்திர
னும், நக்ஷத்திரங்களும் கிரகங்களும், மரங்களும், மிருகங்க
ளும், கற்கள் முதலானவைகளும் சுபாவமுமாய் உறுதிமாய்
மெய்யாகவே மனுஷரிடத்தி லிருக்கிறதென்று சொன்னால்
பிரசித்தமான தப்பறையா யிருக்கிறதுமல்லாமல் அப்படி
சொல்லுகிறவனை யாவரும் பயித்தியக்காரனென்றே சொல்
லுவார்கள். ஆனபடியினாலே அண்டத்துக் கொத்தது பிண்
டத்துக்கென்று வழங்கிற வார்த்தைக்கு அர்த்தமேதென்
றால்; நாலு அந்தஸ்துகளிலே அடங்கியிருக்கிற வஸ்துக்களு
டைய வகையை மேலே நம்மாற் சொல்லபபட்ட பிரகாரமா
கப் பிண்டத்தி லுண்டாயிருக்கிறதந் தவிர அந்தந்தப் பொ
ருட்களைத் தனித்தனியே பார்க்கும்போது அதுகளுடைய
ஒவ்வொரு அடையாளமும் ஒவ்வொரு லக்ஷணமும இரு
க்கிறதென்று அர்த்தமாகும். இதுவும் சகல தூரியங்களி
லேயும் அல்ல, இந்தப் பிரகாரமாகப் பிண்டமானது ஒரு
பட்டினம்போ லிருக்கிறதென்றும் அரண்மனைபோலிருக்கிற
தென்றும் சொல்லும்போது மனுஷசுபாவம் மெய்யான அ
ரண்மனையுமாய் மெய்யான பட்டினமுமாயிருக்கிறதென்று
முதிர்ந்த பயித்தியத்தைக் கொண்டிருக்கிறவன் முதலாய்ச்
சொல்லமாட்டான். ஆனாலிந்த வுவமைகளுக்கும் திஷ்டா
ந்தரங்களுக்கும் அர்த்தமேதென்றால் ஒரு அரண்மனையிலே
பலபல அங்கணங்க ளிருக்குமாப்போலே மனுஷர் தேகத்
திலே பலபல அங்கணங்களுண்டு. சுவரும், கைமரமுதலா
னதுகளும் வீட்டுக்கு இருக்குமாப்போலே நர சரீரத்திலே
கால்களும் பக்க எலும்புகளு முள்ளெலும்களும் உண்டா
யிருக்கின்றன. இந்தப் பிரகாரமாகப் பட்டினத்திலே வாசல்
களும் தெருவீதிகளும் இருக்குமாப்போலே தேகத்திலே—





மெய், வாய், கண், மூக்குச் செவி முதலியவைகள் வாசல்
போலேயும் உள்ளேயுண்டான சில தத்துவங்கள் தெருவீதி
கள்போலேயும் வீடுகள்போலேயு மிருக்கும். இதெல்லாம்
இப்படி யிருக்கையிலே இதுவிஷயத்திலே நம்மாற் சொல்லப்
போகிற வியாக்கியானத்தை யொரு திஷ்டாந்தரம் போலே
யெண்ணவேணு மொழிய மற்றப்படியல்ல,

அதெப்படியென்றால், மூன்றின அந்தஸ்திலே அடங்கி
யிருக்கிற வஸ்துக்களுக்கும் மனுஷருக்கும் உண்டான விசே
ஷமான தலையையும் அதின் பாவனையையுங் கிரகிக்கிறதற்கறி
யவேண்டினதாவது, சீவனில்லாத பொருள்க ளென்னப்ப
ட்ட யாவும் அதிசயமான கிரமத்தோடேயும் விமரிசையோ
டேயும் அடுக்கடுக்காய் வைத்திருககுமாப்போலே மனுஷரி
டத்திலே யுண்டான தத்துவங்க ளெல்லாந் திவ்விய சித்தத்
தின்படியே அற்புதமான வொழுங்கா யிருக்கிறது.

அவ்வண்ணமே மேலான மகிமையைக் கொண்டிருக்
கிற பரமண்டலங்க ளெல்லாம் உயர்ந்த ஸ்தலத்தி லிருக்கி
றது மல்லாமல் பூதியங்களாகிற கீழ்த்தரமான வஸ்துக்கள்
தாழ்த்தியா யிருக்கிறது, இந்தப் பிரகாரமாகப் பூதியங்க
ளுக்குள்ளே தேயுவென்கிற பூதிய மேலான பெருமையை
க்கொண்டிருக்கிறபடியினாலே யுயர வேறுகிறது. ஆகாயம்
இரண்டாம்அந்தஸ்திலே வைத்திருக்கிறது. தண்ணீரும் பூமி
யும் எல்லாத்துக்குங் கீழே ஸ்தாபிக்கப்பட்டதா யிருக்கிறது.
அத்தன்மைபோலே மனுஷரிடத்திலுண்டான சகலமான அ
வயவங்களுக்குள்ளே தலையானது பிரதானமான அவயவமா
யிருக்கிறதினாலே உயர்ந்த ஸ்தலத்திலே ஸ்தாபிக்கப்பட்டது.
கால்கீசமா யிருக்கிறதினாலேயும் மற்ற தத்துவங்களைச் சுமக்
கிறதினாலேயும் கீழ்ஸ்தலங்களிலே வைக்கப்பட்டது. வே
றே தத்துவங்கள் அவைகளுடைய மகிமைகளுக்குத் தக்கது
அடுக்கடுக்காய்க் காண்பிக்கிறது.

இதற்கப்பால் பரமண்டலங்க ளெல்லாம் பிரபஞ்சத்துக்
குள்ளே யடங்கி யிருக்கிற காரியங்கள் ஆன வகையோடே
நடக்கிறதற்கு உதவுகிறப்போலேயும் சூரியனானது கிரகங்க
ளுடைய நடுவிலிருந்து சகலமான வஸ்துகளுக்கும் பிரகாசத்
தையும் உஷ்ணத்தையுங் கொடுக்கிறாப்போலேயும் மனுஷனு
டைய சிரசானது உறுப்புகளை யெல்லாம் நடத்துகிறதென்
றும் இருதயமானது தேகத்தினுடைய நடுவிலிருந்து மேலே
யிருக்கிற அங்கிஷங்களுக்குங் கீழேயுண்டான அங்கிஷங்க

ளுக்கும் சகலமான அவயவங்களுக்கும் இரத்தத்தி னிமித்தமாகப் பலத்தையும் உஷ்ணத்தையும் கொடுக்கிற தென்று பிரசித்தமாய்க் காண்பிக்கிறது.

இதல்லாமல் நரசரீரத்திலே யுண்டாயிருக்கிற நாலு பிரதான குணங்கள் நாலு பூதியங்களுக்கும் அடையாளமாயிருக்கும். அதெப்படி யென்றால்? குளிரும் ஈரமுமா யிருக்கிற வாதமானது தண்ணீர்க்கடையாளம். உஷ்ணமுமா யுலர்ந்ததுமாயிருக்கிற பித்தமானது நெருப்புக் கடையாளமாம். குளிருமா யுலர்ந்ததுமா யிருக்கிற சிலேஷ்மம் பூமியினுடைய அடையாளம். உஷ்ணமுமா யீரமுமா யிருக்கிற இரத்தமானது ஆகாயத்துக் கடையாளம், ஈரமுள்ளதுமாய் மிருதுவுமாயிருக்கிற தலையிலுள்ள மூளையானது சந்திரனுடைய அடையாளம். இருதயம் சூரியனுடைய அடையாளம். நல்லீரல் வியாழனுடைய அடையாளம். பிச்சுப்பை செவ்வாய்க்குலக்ஷணம். வாலீரல் சனியினுடைய அடையாளம். மாங்காய் சுக்கிரனுடைய அடையாளம். காற்றும் பெரும்புசலும் எப்படி யிருக்குமென்று சொல்லத் தேவையில்லை. இரத்தத் தாரைகள் ஆறுகளுடைய அடையாளம். கண்ணீர் மழைகளுடைய அடையாளம். வியர்வை பனியினுடைய அடையாளம். அவயவங்களுடைய நடுக்குதல் பூமியினுடைய அதிர்ச்சியி னடையாளம். கோபத்தினாலே சிவந்திருக்கிற கண்ணானது இடிக்கும் மின்னலுக்கு மடையாளம். மணல்களும் கல்லுகளும் அநேகம் விசை சிறு நீர்த்தாரையி லிருப்பதால் சலப்பைகள் சமுத்திரத்தி னடையாளம். இரத்தம் இடைவிடாமல் ஏறுகிறதும்இறங்குகிறதும் கடலினுடைய வடிவுக்கும் பெருக்குக்கு மடையாளம். அஸ்திகள் பருவதங்களுக்கு அடையாளம். 9-வகை இரத்தினங்களுடைய விவரங்களைக் கண்களுக்குள்ளேயும் புறத்தியிலேயுங் காண்பிக்கும் ஆகையால் சகலமான வர்ணங்களையும் பிண்டத்திலே காணலாம். நித்திரையும் சாகரணமும் இராப்பகலுக் கடையாளம்.

லோகத்திலுள்ள இரண்டாமந்தஸ்திலகப்பட்ட வஸ்துக்கள் பிண்டத்தி லொரு பிரகாரமாய்க் காணலாம். அதெப்படி யென்றால், புல்லுகளும், புட்பங்களும் விருக்ஷங்களிலே அடங்கி யிருக்கிறபடியினாலே விருக்ஷங்களுக்கும் மனுஷருக்கும் உண்டாகிற சம்பந்தத்தை மாத்திரஞ் சொல்லிக்காட்டுவோம். அவ்வண்ணமே மனுஷருடையகால் மரத்தினுடைய வேருக்கடையாளம், வயிறும் நெஞ்சுமென்கிற அடிப்பிண்டம் அடி



மரத்தினுடைய அடையாளம். இரண்டு கைகளும் கொம்புகளுடைய அடையாளம். மயிர் இலைகளுடைய அடையாளம். மூட்டப்பட்ட கண்கள் அரும்புகளுடைய அடையாளம். மனுஷனுடைய பாவபுண்ணியம் மரத்தினுடைய அழுகின பழங்களுக்கும் நல்ல கனிகளுக்கும் அடையாளம்.

மூன்றாமந்தஸ்தி லுண்டான மிருகங்களுடைய பஞ்சேந்திரியங்களும் தத்துவங்களும் உத்தமப் பிரகாரமாகப் பிண்டத்திலே யுண்டென்று பிரத்திக்ஷமாய் வருகிற அதிகாரத்திலொப்புவிப்போம். நாலாமந்தஸ்திலே பரமதூதர்களுடைய அசரீரி சுபாவமும் நினைவும் சுதந்தர மனதும் யோசிக்கிற புத்தியும் நரசீவனிடத்திலே பிரசித்தமாயிருக்கிறதென்றுகடைசி அதிகாரத்திலே கெட்டியாக ஒப்புவிப்போம்.

இதற்கப்பாலறிய வேண்டியதாவது, சர்வலோகங்களிலும் உண்டானசமஸ்தவஸ்துக்களுடைய சுபாவங்களும்மனுஷரிடத்தி லுண்டென்று சொன்னாலும் கண்டிப்புள்ள வஸ்துக்களிடத்திலே யுண்டான அநேகங் குறைச்சல்களைத் தள்ளிப்போட்டு அப்பாலே கடந்துமேலான நன்மைகளுண்டாயிருக்குமென்றறிவாயாக. இந்தப்பிரகாரமாக மிருகங்களுக்கும் பஞ்சேந்திரியங்க ளுண்டென்று சொல்லுகிறபடியே இதெல்லாமனுஷர் சுபாவத்திலே யுத்தமபிரகாரமா யிருக்கிறதென்கிறதற்குச் சந்தேகமில்லை. இதெல்லாம் இனிமேல்பிரசித்தமானநியாயங்களினாலே யொப்புவிப்போம்.

இப்போது மிருகசரீரத்துக்கும் மனுஷர் தேகத்துக்கும் அனேககாரியங்களிலே மகாவித்தியாசமா யிருக்கிறதென்றறிவாயாக. அதெப்படி யென்றால்.

முதலாவது.—சகலமான மிருகங்களும் பூமியிலே பிறந்து செத்தவுடனே வேறே கதியில்லாமல் மறுபடிமண்ணாய்ப் போகிறதற் கடையாளமாகக் குனிந்துகொண் டெப்போதும் பூமியைப் பார்த்துக்கொண்டு திரியும். மனுஷனோவென்றால் மோக்ஷ ராச்சியத்துக்குப் போகிறதற்குச் சர்வேஸ்வரனாலே யுண்டாக்கப்பட்டவனா யிருக்கிறதினாலே எப்போதும் நிமிர்ந்து பரலோகத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறான். ஆனால் மனுஷர்கள் தங்களுடைய மகிமையையறியாமலும் உத்தமகதியைக்கண்டுபிடியாமலும்அழிந்துபோகிற வாழ்வுகளை அபேக்ஷித்து நீசமான மிருகங்கள்போலே பூலோகத்திலே திரிகிறார்கள். இப்படிப்பட்ட விசேஷத்தை வாசிக்கிறவர்களும் கேட்

கிறவர்களும் தங்களுடைய விர்த்திகளைப் பரிக்ஷித்துப் பாவங்களைத் தள்ளிப்போட்டு அநேக தருமங்களைச் செய்து எப்படியானாலும் பரிபூரணபூர்த்தி வருவிக்கிற பரமானந்தமாகிற மோக்ஷத்தை யநுபவிக்கப் பிரயாசைப்படக் கடவார்கள்.

2-வது.—மனுஷருடைய தலையானது எறக்குறைய வுண்டைபோலே யிருக்கும். அவ்வண்ணமே, இப்படிப்பட்ட ரூபமானது பார்க்கிறதற்கும் சுகாதனத்துக்கும் எளிதான அசைவுக்கும் பஞ்சேந்திரிய நிமித்தமாகப்பலபல சேஷ்டைகளைப் பண்ணிவிக்கிற ஆத்துமத்தினுடைய பத்திராசனத்துக்கும் ஆனகைங்கிரியமா யிருக்கும். மிருகங்களுடைய தலையோ வென்றால் பற்பல ரூபமாயிருக்கும்.

3-வது.—மனுஷனுக்கு மாத்திரம் புறவிந்திரியங்களுடைய சேஷ்டைகளையும்உள்ளிந்திரியங்களுடைய விர்த்திகளையும் நல்லமேரையாகப்பண்ணுகிறதற்கு ஈரமுமாய்விஸ்தீரணமுமாயிருக்கிற மூளைவேண்டி யிருக்கிறபடியினாலே இந்தக் குணங்களுள்ள மூளையைச் சிரசிலே கொண்டிருப்பான். மிருகங்களுடைய தலையிலோவென்றால் மூளைகொஞ்சமா யிருக்கும்.

4-வது.—மனுஷன்மாத்திரம் உச்சிதமான முகத்தைக் கொண்டிருப்பான். அதிலே மகிமையுஞ் சகலமான ஆசையும் பிரகாசிக்கிறது. மிருகங்களோ வென்றால் அவலக்ஷண முகத்தைமாத்திரங் கொண்டிருக்கும்.

5-வது'—மனுஷருக்கு மாத்திரம் பலபல வர்ணமுள்ள கண்களுண்டு. மிருகங்களோவென்றால் தங்கள்சாதிக்கொத்த கண்களைமாத்திரங் கொண்டிருக்கும்,

6-வது.மனுஷரிடத்திலேமாத்திரம்இரண்டுகண்ணுங்கிட்டவிருக்கிறது. இப்படிப்பட்டிருப்பு சாங்கோபாங்கமான சேஷ்டைகளைப் பண்ணத்தக்கதாக வேண்டியிருந்தது.

7-வது.—மனுஷருக்குமாத்திரம் கீழ்மேலாகிய இரண்டு நிமைகளிலேயும் மயிர்வளர்ந்திருக்கும்.

8-வது.—மனுஷருக்கு மாத்திர முகம் அழகாகவும் மூக்கு நிமிர்ந்ததாகவு மிருக்கும்.

9-வது.—மனுஷருக்கு மாத்திரந் திருஷ்டியின் சிற்றுச் செவ்வையாயிருக்கும்.

10-வது.—மனுஷருக்கு முன்னாகவிருக்கிற அவயவங்கள் மிருகங்களுக்குகீழேதானேயிருக்கும். பிறகேயிருக்கிற அவயவங்கள் மிருகங்களுக்கு மேலாகவிருக்கும்.



11-வது.—மிருகங்களுடைய முன்னங்காலுந் தொடையும் அநேக எலும்புகளினாலே கூட்டப்பட்டதா யிருக்கிறது. மனுஷனுக்கு அப்படியல்ல.

12-வது.—இறகில்லாமல் நடக்கிற மிருகங்க ளெல்லாம் நாலு காலோடு திரியும். மனுஷன் மாத்திரம் அண்ணாந்துகொண்டு பரமண்டலத்தைப் பார்த்து இரண்டுகாலோடு நடக்கிறான்.

13-வது.—மனுஷனானவன் நாசிவனைக் கொண்டிருந்து அநேககாரியங்கள்பேரிலே தியானம் பண்ணவேண்டி யிருக்கிறதினாலே அவனுக்கு மாத்திரம் உட்கார்ந்திருக்கிறதற்கு வல்லமையுண்டு. மற்றமிருகங்கள் உட்கார்ந்திராது.

14-வது.—ஸ்பரிசமானது மனுஷனுக்கு மகா அவசியமாய் வேண்டியிருக்கிறதினாலே மனுஷனுக்கு மாத்திரஞ் சருமமிருதுவா யிருக்கிறது. இந்தப் பிரகாரமாகச் சீவனில்லாத வஸ்துக்களுக் குள்ளேயும் வளர்சீவனுள்ள பொருட்களுக் குள்ளேயும் பஞ்சேந்திரியமுள்ள வஸ்துக்களுக் குள்ளேயும் உண்டான எல்லாக் குணங்களும் மனுஷரிடத்திற் காணப்படுகிறதுமல்லாமல் அவன் அப்பாலே கடந்து வித்தியாசமுள்ள வஸ்துக்களைச் சகல காரியங்களிலேயும் அதிசயித்திருப்பான். இது நிமித்தமாகச் சிலசாஸ்திரிகள் பிண்டமானது சர்வலோகத்தினுடைய குறிப்பிடமா யிருக்கிறது மல்லாமல் சகல காரியங்களுக்கும் நல்ல மாதிரிகையா யிருக்கிறதென்றெழுதி வைத்தார்கள்.

அதெப்படியென்றால், சகலமான வஸ்துக்களையும் அளக்கிறதற்கும் கண்டிப்புள்ள வஸ்துக்களுக்குண்டான வுயரத்தையும் நீளத்தையும் அகலத்தையும் மதிக்கிறதற்கும் மனுஷருடைய அவயவங்களைப் பார்த்து அந்த வஸ்துக்களுடைய பிரமாணத்தைச் சொல்லலாம். அவ்வண்ணமே பிண்டத்தினுடையவிரல்களையும் சாணையும் முழத்தையும் பாதத்தையுங் குறித்துக் கண்டிப்புள்ள பொருட்களிலே யெத்தனை அடியெத்தனைமுழம் உண்டென்று சொல்லுவார்கள். ஆகையால் இதெல்லா மிப்படி யிருக்கையிலே பிண்டத்தினுடைய தத்துவங்களைத் தனித்தனியே வெளிப்படுத்துகிறதற்கு முன்னே பொதுவிலே நாசிவசரீரத்தினுடைய அளவெல்லாம் நன்றாய்ச்சொல்லிக் காட்டுவோம்.

முந்த முந்த அறியவேண்டியதாவது:-சகலமான அளவுகளுக்கும் பிரமாண சாஸ்திரிகள் சொல்லுகிறப்போலேவஷ

யம் சதுரம் முக்கோணம் ஆகிய இம்மூன் றுருவங்களும் பிர
தானமானதா யிருக்கிறதுந்தவிர மற்றதற்கு மாத்திரிகையா
னகாரணமாகவுமிருக்கும். இதெல்லா மிப்படியிருக்கையிலே
பிண்டமானது சர்வலோகத்தினுடைய குறிப்பிடமுமாய் மா
த்திரிகையுமா யிருக்கிறதினலே இப்படிப்பட்ட ரூபம்உத்தம
ப்பிரகாரமாக மனுஷரிடத்தி லிருக்கிறதென் றெப்புவிக்கக்
கடவோம். அதெப்படியென்றால் ஒருபெரிய வயதுள்ளமனு
ஷனை மல்லார்ந்து படுத்துக்கொள்ளச்சொல்லி யிரண்டு கைக
ளையும் அகலமாய் விரித்துத் தலையின்கிட்டக் கொண்டுபோய்
நீட்டச்சொல்லி யதின்பிறகு கூடினமாத்திரங் காலையகலமா
ய்நீட்டினற்போல விரிக்கப் பண்ணவேணும். இதிலே அறிய
வேண்டியதாவது: கூத்தாடிக ளல்லாமல் மற்றமனுஷருக்கு
உடம்பு அத்தனை துவளாததினலே அவர்களைப்போலே
நன்றாய் நீட்டமாட்டார்கள். ஆனாலுங் கூடினமட்டும் விரித்
தால் அப்போது தொப்புளிலே பெரியகவராசத்தினுடைய
ஒருகாலைநிறுத்தி வேறேகாலைக் கொண்டுவீசினல் ஒருவளைய
முண்டாகும். அந்தவளையங் கையிலேயுண்டான பாம்புவிர
லையுங் காலின்பெருவிரலையுந் தொட்டுக்கொண்டாற்போலச்
சுற்றிவரும். இதல்லாமல்இரண்டு கால்களுடைய பெருவிரல்
களுக்குள்ளே ஒருகீற்றும் கைகளின் இரண்டுபாம்புவிரல்களி
லேஒருகீற்றும் இந்த இரண்டுகீற்றுஞ்சேருகிறதற்குப்பெருவிர
ல்துவக்கிப் பாம்புவிரல்மட்டும் இரண்டுபக்கத்திலும்கீறினல்
அப்போது சாங்கோபாங்கமான சதுரமாயிருக்கும். இந்தச்
சதுரமும் சாஸ்திரத்தின்படியே வளையத்துக்குள்ளே முழு
தும் அடங்கியிருக்கும். கடைசியிலே வலதுபாம்புவிரல்துவ
க்கி யிடதுகாற்பெருவிரல் மட்டும் ஒருகீற்றுத் தொப்புள்வழி
யாகக்கீறி யெதிரானபக்கத்திலேயும் அப்படியே கீறினல் சரி
யாகநாலு கோணம்பிறக்கும். இந்தநாலுகோணங்களுஞ் சரி
யாகச் சதுரத்திலே அடங்கியிருக்கும். இந்தப் பிரமாணத்
தைப் பார்த்ததற்குப் பிற்பாடு மனுஷன் செவ்வே நிமிர்ந்திரு
க்கவேணும். இப்படியே நிமிர்ந்திருக்கிற மனுஷனவன்சாங்
கோபாங்கமா யிருந்தால் தன்விரலினலே தொண்ணூற்றாறு
விரற்கடையாவது, எட்டுச்சாணவது, நாலுமுழமாவது, ஒரு
பாகமாவதுஅளவிலேயிருப்பான். எந்தப்படிபார்த்தாலும்அவ
னவன் தன்னைத்தன் கையினலேதானே உச்சிதுவக்கி உள்ள
ங்கால்மட்டும் அளந்துகொள்ளவேண்டியது. பூருவகாலத்தில்
இந்தச் சீமையிலுண்டான சிலபேர்கள் மனுஷருடைய உய
ரம் 96-விரற்கடை யிருக்கிறதென்று கண்டு வியர்த்தமாய் 96



தத்துவங்களை விதித்தார்கள். இனிபிண்டத்தினுடைய அவ
யவங்களைத் தனித்தனியே அளந்துபார்ப்போம்.

உச்சியிலே துவக்கித் தாழ்வாய்க் கட்டைவரைக்கும்ஒரு
சாணுயரம். இந்தச்சாணை நாலாய்ப்பிரித்து உச்சிதுவக்கி
நெற்றி மேற்புறமட்டும் ஒருபங்கும். அவ்விடந்துவக்கி மூக்கி
ன்தண்டு ஆரம்பம்அல்லது புருவமட்டும் ஒருபங்கும். அவ்
விடந்துவக்கி மூக்கினுனிமட்டும் ஒரு பங்கும். அவ்விடந்து
வக்கித் தாழ்வாய் அல்லது உச்சிக் கழுத்திலிருந்து தொ
ண்டைக் குழிமட்டும் பாதி தேகத்தில் நாலத்தொரு பங்
காகிய ஒருசாணுயரம் இருக்கிறது. தாழ்வாய்க் கட்டை
துவக்கி யீரற்குலைமட்டும் ஒருசாணுயரமுண்டு. அவ்விடந்து
வக்கித் தொப்புள்மட்டும் ஒருசாணுயரம். அவ்விடந்துவக்கிக்
குய்யத்தானமட்டும் ஒருசாணுயரம். அவ்விடந்துவக்கி முழ
ங்காலுக்குக்கீழ்மட்டும் இரண்டுசாணளவிருக்கிறது. அவ்விட
ந்துவக்கிக் கெண்டைச் சதைக்கீழ்மட்டும் ஒருசாணுயரம்.
அவ்விடந்துவக்கிக் குதிகால்மட்டு மொருசாணுயர மிருக்
கும். இப்படிப்பட்டமனுஷன் தன்கையைக்கூடினமாத்திரம்வி
ரித்தால் அந்தப்பாகத்தி னிகளத்துக்கும்அவன்சரீரவுயரத்து
க்குஞ் சரியாயிருக்கும். நெஞ்சினுடைய நடுவே துவக்கித்
தோள்பட்டையின் அடிமட்டும் ஒருசாண். அவ்விடந்துவக்
கிமுழங்கைமட்டுமொருசாண். அவ்விடந்துவக்கிமணிக்கட்டு
மட்டு மொருசாண். மணிக்கட்டுதுவக்கி பாம்புவிரல் நுனிம
ட்டுமொருசாண். மெத்த அகலமா யிருக்கிற விலாஇரண்டு
சாண்களுமும் அகலங் கொஞ்சமாயிருக்கிற விலா இரண்டு
முகவளவும், தலையும் மணிக்கட்டுதுவக்கி விரல்நுனியும் பாத
மும் வும-ஒரளாயிருக்கிறது, நெற்றிவுயரமும், மூக்கும், காதும்,
பெருவிரல் களமுஞ் சரியாயிருக்கும். கண்ணும், நாசியும்,
வாயுஞ், சரியாயிருக்கும். மேற்சொல்லப்பட்ட விசேஷங்கள்
சிறுபிள்ளைகளுக்குச் சொல்லத்தக்கதல்ல. அந்தவகைவேறு.
அதெப்படி யென்றால், சிறுபிள்ளை அதினுடைய ஐந்து
தலையளவுமாத்திரமிருக்கும். அதில்தலைதுவக்கிக் குய்யத்தா
னமட்டுமூன்றுதலையளவும், அவ்விடந்துவக்கிப்பாதமட்டுமிர
ண்டுதலை யளவுமிருக்கும். ஆகையாற் காற்பக்கம்பிற்பாடதி
கமாய்வளரும். பின்னையும்அகலங் கொஞ்சமாயிருக்கிற விலா
வொருதலையளவு. கைவிரித்தாற்சரீரவுயரஞ் சரியாயிருக்கும்.
மணிக்கட்டு கழுத்திலே பாதி. கால்மணிக்கட்டும் அப்படியே
யிருக்கும். இதெல்லாமிப்படி யிருக்கையிலே பிண்டப்பிரமா
ணசாஸ்திரிகள் இன்னமு மதிகமான அளவுகளைச் சொல்லிக்

கொண்டுவருகிறார்கள். இதெல்லாமிங்கேசொல்லுகிறதற்கவகாசமில்லாதபடியினாலே இம்மாத்திரஞ் சொன்னதுபோதும் இந்தப் பிண்டமென்கிற மாத்திரிகையைப் பார்த்துச் சாஸ்திரிகளுந் தொழிற்காரருந் தங்களுடைய சாஸ்திரங்களுக்குந் தொழில்களுக்கு மடுத்தகாரியங்களை நடத்துகிறார்கள். இந்தப்பிரகாரமாக நல்லஅரண்மனை நல்லதேவாலய முதலானநேத்தியுள்ள விநோதவேலைகளெல்லாம்பண்ணுகிறதற்குஇந்த மாத்திரிகை வெகுவுதவியா யிருக்கிறது.

ஆனபடியினாலே பிண்டத்தினுடைய அஸ்திகளையுந்தலையையுநெஞ்சையுங் குக்ஷியையும் சாணகாதியையும் அதிலேயுண்டான தத்துவங்களையும் இனிவரும் அதிகாரங்களிலே வெளிப்படுத்துவோம்.

## ௰௪-ம் அதிகாரம்.

### அஸ்தியினுடைய விவரம்.

அஸ்திகளானது பிண்டத்துக்கு அஸ்திவாரமா யிருக்கிறதினாலே திரேகத்தைநன்றாயறிகிறதற்கு அவசியமாயெலும்புகளுடைய விவரத்தை முன்னதாகவெளிப்படுத்தவேண்டியிருக்கின்றது. இதல்லாமல் அஸ்திகள் அநேக மாங்கிஷநரம்புகளினாலே கட்டியிருக்கிறதினாலேயும் துளையுள்ள எலும்புகள் வழியாக இரத்தத்தாரைகளுந்தாதுக்களும் ஓடுகிறதினாலேயும்இப்படிப்பட்ட தாதுக்களையும் நரம்புகளையும் நன்றாய்க்கண்டுபிடிக்கிறதற்கு அங்கங்களுடைய வர்த்தமானத்தைத் தெரியப்பண்ணக் கடவோம் ஆனபடியினாலே அஸ்திகளுடைய நிருபணத்தையும் எலும்புகளுக்குள்ளே யுண்டான வித்தியாசத்தையும் சந்துகளுடைய காரணங்களையும், அங்கங்களுடைய எண்ணிக்கைகளையும் சங்க்ஷேபமாகச்சொல்லிக்காட்டுவோம். அதெப்படியென்றால்? அஸ்தியானது பிண்டத்துக்கு மகாஸ்திரமுள்ள அவயவமென்று சொல்லப்படும். இப்படிப்பட்டஎலும்புகளுக்குள்ளேயுண்டான வேற்றுமைகளையெல்லாம் முதலாவது.—உறுதியினாலேயும், 2-வது.—பிரமாணத்தினாலேயும்,3-வது.—ரூபத்தினாலேயும், 4-வது.—இருப்பிடத்தினாலேயும்,5-வது.—பிரயோசனத்தினாலேயும்,6-வது. அசைவினாலேயும், 7-வது.—சருமத்தினாலேயும், 8-வது.—துவாரங்களினாலேயும் கிரகிக்கலாம். அதெப்படியென்றால்,



முதலாவது.—சில அஸ்திகள் சுபாவமாய் வெகுகெட்டியாயிருக்கிறது. சிலதுகள் அத்தனை ஸ்திரமா யிருக்கிறதில்லை சிலதுகள் மிருதுவாயிருக்கும். இந்தப் பிரகாரமாகத் தொடையெலும்புகெட்டியாயிருக்கும். முள்ளெலும்புகள் அத்தனை ஸ்திரமில்லை. நெஞ்செலும்பு மிருதுவாயிருக்கும்.

2-வது.—இதன்றியே சிலதுகள் பெரிதாயிருக்கும். சிலதுகள் மட்டாயிருக்கும். இப்படியே தொடை யஸ்திகளுங் குதிரைமுகப் பக்கத்தி னஸ்திகளும்பெரியதா யிருக்கும். சிரசினஸ்திகள் தட்டையாயிருக்கும். விரல்களுடைய அஸ்திகள் சின்னதா யிருக்கும்.

3-வது.—அஸ்திகளுடைய சுபாவத்தையும் பிரமாணத்தையும் பார்த்து அதற்குள்ளே வேற்றுமை கண்டாற்போலே ரூபத்தினிமித்தமாகவும்இருப்பிடத்தி னிமித்தமாகவும்வித்தியாசமுண்டாயிருக்கும். அப்படியே சிலதுகள் வட்டரூபமாயிருக்கும். சிலதுகள் சதிரமா யிருக்கும். சிலதுகள் முக்கோணமா யிருக்கும். சிலதுகள் தட்டுப்போலே யிருக்கும். இந்தப் பிரகாரமாகச் சின்ன சக்கர வெலும்பு வட்டமா யிருக்கிறது. சிரசின் சுவரெலும்பு சதிரமா யிருக்கிறது. நெஞ்சினுடைய கடைசியான வெலும்பு முக்கோணமாயிருக்கும் வாயினுடைய மேலண்ணத்தினெலும்புகள் தட்டுப்போலிருக்கும்.

4-வது.—இதுதவிர சிலதுகள் உயரமாயிருக்கும். சிலதுகள் நடுவிலே யிருக்கும். சிலதுகள் அஸ்திவாரத்திலிருக்கும், இவ்விதமாகக்கபாலம் உயரமாயிருக்கிறது. பக்கவெலும்புகள் நடுவிலிருக்கிறது. காலெலும்புக ளஸ்திவாரத்தி லிருக்கிறது.

5-வது.—இப்போதைக்கு அஸ்திகளுடைய பிரயோசனத்தையும் அசைவையுங் குறித்து அவைகளுக்குள்ளே யுண்டான பின்னபேதத்தைச் சொல்லிக்காட்டுவோம். அதெப்படியென்றால், சில அங்கங்கள் திரேகத்தைச் சுமக்கும். சிலதுகள் பிரதான தத்துவங்களை மூடும். சிலதுகள் அப்படியேமூடி மறைக்கிறது மல்லாமல் மோசம் வராதபடிக்குப் பரிசைபோலேயிருக்கும். இந்தப்பிரகாரமாகத் தொடைகால்களுடைய அங்கங்கள் திரேகத்தைச் சுமக்கும். பக்கவெலும்புகள் வெள்ளீரலையும் இருதயத்தையுமூடும். கபாலஞ்சிரசின் மூளையை மூடுகிறதல்லாமல் அதற்குமோசம்வராதபடிக்குப் பரிசைபோலே யிருக்கும்.

6-வது.—இதன்றியே சிலதுகள் பிரத்தியக்ஷமா யசையும், சிலதுகள் இரகசியமா யசையும். சிலதுகள் பரிச்சேதம்

அசையாது. இவ்விதமாகக் கால்களுடைய அஸ்திகளும் விரல்களுடைய அஸ்திகளும் பிரத்தியக்ஷமாயசையும். உள்ளங்கையுள்ளங்கால்களுடைய அஸ்திகளசைந்தாலும் அத்தனை காண்பியாது. தலையினுடைய அஸ்திகள் பரிச்சேதமாய் அசைவைக் காண்பியாது.

7-வது.—கடைசியிலே அஸ்திகளுடைய சருமத்தையுந் துவாரத்தையும் விசாரித்தாலதற்குள்ளே பேதகங்காணப்படும். அவ்வண்ணமே சிலதுகள் நாள்வட்டத்திலே கெட்டியாயிருக்கும். சிலதுகள் தாயாருடைய வுதிரத்திலேதானே சாங்கோபாங்கமாக விருக்கும். இம்மேனையாய்க் காதினுடைய மூன்றுசின்ன எலும்புகள் தாயாருடைய வுதாத்திலே தானே மகாஸ்திரமா யிருக்கும். அந்த அஸ்திகள் மெள்ளமெள்ளக் கெட்டியாய்ப்போம். தாள்வாயஸ்திகள் தீவிராய்க் கெட்டியாயிருக்கும். கபாலத்திலே சிலதுகளநேக வருஷத்துக்குப் பிற்பாடு மகாஸ்திரமாய்ப்போம்.

8-வது.—இதல்லாமற் சிலதுக்கள் குழல்போலே யிருக்கும். உள்ளே மூளைமெத்தவிருக்கும். சிலதுகள் பலபலதாரைகளுக்கு வழியாகத் திறந்திருக்கும். சிலதுகள் சிறுதுவாரங்களினுலேநிறைந்திருக்கும். இந்தப்பிரகாரமாகக்கைகாலெலும்புகளுடையகுழலுக்குள்ளேமெத்தமூளையிருக்கும். கபால அஸ்திவாரத்தினெலும்புகளுக்குள்ளேசிலதாரைகள்போம். மூக்குஅஸ்திஅநேகந்துவாரங்களால்நிறைந்திருக்கும்.

இப்படியே யிந்தஎட்டுப் பிரிவுகளையுஞ் சொல்லிக் காட்டினதற்குப் பிற்பாடு அஸ்திகளுடைய சுகுணங்களை வெளிப்படுத்தக் கடவோம். அதெப்படியென்றால் அஸ்திகள் நன்றாயிருக்கிறதற்கும் அசைகிறதற்கும் வேண்டினசந்துக்களை ஒழுங்குடன் விசாரிக்கிறவன் அதிலேவிசேஷமாய்ப் பிண்டத்தையுண்டாக்கின பராபர வஸ்துவினுடைய அளவில்லாத விமரிசையையுஞ் சாமர்த்தியத்தையுங் காண்பானேயொழிய மற்றப்படியல்ல. அவ்வண்ணமே பலபல சந்துக்களுடைய வகைகளுண்டாயிருந்தாலும் அவசியமா யதுகளையெல்லாம் ஆனமேனாயாக அவயவங்களை யசைக்கிறதற்கு வேண்டியிருக்கின்றது. இவைகளில் ஒருசந்துமாத்திர மில்லாதிருந்தால் பிண்டமானது எற்றக்குறைச்சலா யிருக்கும். அவ்வண்ணமேசில அஸ்திகள் விக்கினமில்லாமல் அசைகிறதுக்குச் சாஸ்வதமா யிருக்கும். சிலதுகள் குழிபோலே பள்ளமாயிருக்கும். அதற்குள்ளே சரியாகப் பிரவேசிக்கிறதற்கும் அசைகிறதற்கும்வே



றேஅஸ்திகள்பருமமாயிருக்கும். சிலதுகள் அன்னியோன்னியமாய்ப் பிடிக்கும் படிக்கு அவைகள் ரம்பத்தைப்போலே யிருந்து அந்தப்பல்லுகள் அன்னியோன்னியமாய்ப் பின்னிஸ்திரமாயிருக்கும். இந்தச் சந்துகளல்லாமல் மாங்கிஷக்கற்றைகளினுலேயும் நரம்புகளினுலேயும் அஸ்திகள் கட்டியிருக்கின்றது, இதெல்லாம் உள்ளதுள்ளபடியே விசாரித்தோமானால் சர்வத்துக்கும் வல்லவரா யிருக்கிற ஆண்டவர்பேரிலே தோத்திரம்பண்ணுகிறதற்குவிசேஷமானகியாயமுண்டாகும்.

இதற்கப்பால் அறியவேண்டியதாவது அஸ்திகளுக்குக் காரணமேதென்றால் அதற்குப் பிரத்தியுத்தரத்தைக்கண்டு பிடிக்கிறதற்கு மனதிலே கெட்டியாக வொருகாரியத்தை ஸ்தாபிக்கவேணும். அதேதென்றால் வித்துக்களிலேயிருந்து விருக்ஷத்தினுடைய பட்டையும், கொம்புகளும், இலைகளும், புட்பங்களும், காய்களும், கனிகளும் புறப்படுகிறாப்போலே மனுஷருடைய சரீரத்திலேநின்று எலும்புகளும் மாங்கிஷங்களும் இரத்தத் தாரைகளும் கொழுப்பு முதலானவைகளும்புறப்படும். அப்படியே சூரியனுடைய வுஷ்ணத்தினுலே மரங்களுடைய அங்கிஷங்களெல்லாம் விஸ்திரித்துமெள்ளமெள்ள சாங்கோபாங்கமாய்ப் போகிறாப்போலே பிண்டத்திலுள்ள சுபாவவுஷ்ணத்தினுலே ஸ்திரமுள்ள அங்கிஷங்கள் பிரிந்து அடர்த்தியாகிப்போய் யஸ்திகளாய்ப்போகிறதற்குக் காரணமாயிருக்கும். இத்தனை வேற்றுமையுள்ள தத்துவங்கள் உஷ்ணத்தினுலே எப்படிஸ்திரமுள்ள தாகுமென்று கேட்டால் இதெல்லாம் பலபல அங்கிஷங்களுடைய அமரிக்கையினுலே வருமென்றறிவாயாக. இந்தமெய்யான விசேஷத்தை யொருவமையினுலே வெளிப்படுத்துவோம். சூரியனுடைய வுஷ்ணத்தினுலே சேறுஉறைந்து கட்டியாய்ப்போகின்றது. மெழுகானது உருகி நீற்றுப்போகின்றது. அதெப்படியென்றால், சேற்றுக்கும் மெழுகுக்கும் வெவ்வேறே அங்கிஷங்களுண்டாயிருக்கிறதினுலே யிந்தவித்தியாச முண்டாகின்றது. இதுபோல நரபிண்டத்தின் பற்பல அவயவங்களுடைய வகையிலே மகாபின்னபேதமா யிருக்கிறதினுலே யாச்சரியப்படத் தேவையில்லை. இதுதவிர மனிதனிடத்திலுண்டான அஸ்திகள் எதினுலே பிழைக்கிறதென்றும் வளருகிறதென்றும் கேட்டால் எலும்புகளுக்குள்ளே யுண்டான மூளையினுலேயும் நரம்புகளிலேயுண்டான சாரங்களினுலேயும் இரத்தத் தாரைகளினுலேயும் உண்டாகிறதென்றறிவாயாக. அவ்வண்ணமே யிப்படிப்

பட்ட சரீரங்களை அஸ்திகள் சுவிகரிக்கிறதினாலே மெள்ள மெள்ள வர்த்திக்கும். இதன்றியே பிண்டம்பிறந்த நாள்துவக்கி யிருபதுவருஷமட்டும் அஸ்திகள் வளருகிறது. அதற்குப்பிற்பாடு 21-ம். வருஷந்துவக்கி 60-ம். வருஷமட்டும் ஒருகண்டசீராயிருக்கும். 60-ம். வருஷந்துவக்கி மரணபரியந்தமெள்ளமெள்ளக் குறைந்துபோகிறதுமன்றி அஸ்திகளுடைய அங்கிஷங்க ளடர்த்தியாய்ப்போம்.

இதுவுந்தவிர அஸ்திகளுடைய வர்ணமேதென்றால்,சிலதுகள் மெத்தவெண்மையாயும், சிலதுகள் சாம்பல் வர்ணமாயும் இருக்கிறது மல்லாமல், அஸ்திகளெல்லா மகாமெல்லியசருமத்தினாலே மூடப்பட்டதாயு மிருக்கும். இந்தச்சருமத்தைக் காயங்கள் நிமித்தமாகத் தொட்டால் வெகுவாய்நோகும். அஸ்தியைப் பரிசித்தால் நோகாது.

கடைசியிலே அஸ்திகளுடைய எண்ணிக்கை யேதென்றால், நரபிண்டத்திலே 249 அஸ்திகள் சரியாயிருக்கிறதென்றறிவாயாக. அதெப்படியென்றால், தலையிலே 60 எலும்புகளுண்டு. அடிப்பிண்டத்தில் 67 எலும்புகளிருக்கின்றன. தோள்துவக்கி விரல்மட்டும் இரண்டுகைகளிலேயும் கையொன்றுக்கு 31-ஆக. 62 அஸ்திகளிருக்கின்றன. இரண்டு காலகளிலேயும் துடைகளிலேயும் 60 எலும்புகளுண்டு. ஆக 249 அஸ்திகளுண்டா யிருக்கின்றன. இத்தனையெலும்புக ளில்லாமற்போனால் மனுஷருடைய சரீரம் அசையவும், குனியவும், நிமிரவும், உட்காரவும், நடக்கவும், பிடிக்கவு மெல்லவு மற்றச்சேஷ்டைகளை யொழுங்கோடே செய்யவுமாட்டாது.

அஸ்திகளுடைய எண்ணிக்கைகளைப் பொதுவிலே பார்த்ததற்குப்பிற்பாடு தனித்தனியே அங்கங்களெல்லாம் பரிக்ஷிக்கவேணும். முந்தமுந்தத் தலையிலே 60 எலும்புகளுண்டென்று சொன்னோமே அதுகளுக்குள்ளே கபாலத்துக்குள் 14 முகத்துக்குள் 46 அஸ்திகளிருக்கும். கபாலத்தினுடைய 14 எலும்பேதென்றால், நெற்றியஸ்தியொன்று கபாலத்தின்பின்னஸ்தி யொன்று. சுவராஸ்தியிரண்டு. காலஸ்தியிரண்டு கபாலத்தின்ஸ்திவார அஸ்தியொன்று, துவாரஎலும்பொன்று. இரண்டுகாதிலுமுள்ள சின்னஅஸ்திகளாறு ஆக 14. இந்த 14 அஸ்திகளுங் கபாலத்தின் பற்பல பொருத்தங்களாகச் சேர்ந்திருக்கும். முகத்திலே 46 அஸ்திகளேதென்றால், மேல்வாயிலே 27 அவையாவன மூக்கினஸ்தியொன்று. அதனிருபக்கத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் அவ்வைந்து பல்லுகள் 16



ஆக. 27 கீழ்வாயிலே 19 எலும்புகளுண்டு. அவையாவன: பல்லுகள் 16, கடைவாயி னிரண்டுபக்கத்திலேயும் பல்லுகளுக்குக் கடைசியிலேயு மிரண்டஸ்தி, பற்களுடைய அஸ்திவாரத்தின் அஸ்தியொன்று ஆக 19. ஆகமொத்தம் 60 எலும்புகள் தலையிலேயிருக்கின்றன. அடிப்பிண்டத்திலே 67 எலும்புகளுண்டென்று சொன்னோமே. அதாவது: உள்ளேநெஞ்சில் முள்ளெலும்புகள் 32. பக்கஎலும்புகள் 24. இதுகளின்மேலேயுந் தோள்மேலேயுமுள்ள இறப்பெலும்புகள் 2. முன்னெஞ்சிலேயுள்ள அஸ்தி 3. இடுப்புக்கருகில்அஸ்திகள் 6 ஆக. அடிப்பிண்டத்திலே 67 எலும்புகளுண்டு. தோள்துவக்கி விரல்மட்டு மொவ்வொருகைக்கு 31 அஸ்திகளுண்டென்றுசொன்னோமே. அதுகளுக்குப் பேரேதென்றால், தோளஸ்தியொன்று, கைப்பட்டையஸ்தியொன்று, முன்கையிற் பெரியஎலும்பொன்று, சிறியஎலும்பொன்று, மணிக்கட்டுதுவக்கி விரல்மட்டும் சின்னஅஸ்தி 12. ஒவ்வொரு விரல்களில் மும்மூன்றாக விரலுக்குக்கும் அஸ்திகள் 15, ஆக 31. மற்றக்கையிலே எலும்புகள் 31. ஆகக்கையெலும்புகள் 62. கால்களிலேயோவென்றால் அஸ்திகள் 60 மாத்திரமுண்டு. அதெப்படியென்றால் ஒவ்வொருகாலிலே முந்தமுந்த துடையஸ்தி யொன்று. முழங்கால் சில்லுஒன்று. குதிரைமுகத் தெலும்பொன்று. கெண்டைக்கால் அஸ்தியொன்று. மணிக்கட்டுதுவக்கி விரல்கள்மட்டும் எலும்புகள் 12. விரல்கள் ஐந்துக்கும் எலும்புகள் 14. ஆகக்காலொன்றுக்கு எலும்பு 30 ஆக கால்களிரண்டுக்கும் எலும்புகள் 60. இவ்விதமாய் ஆக யெலும்புகளுடைய மொத்தம் 249. ஆனால் சிலசாஸ்திரிகள் 217 அஸ்திகள்மாத்திர முண்டென்று சொல்லுவார்கள்.

இதற்குக் காரணமேதென்றால், பிண்ட சாஸ்திரிகளுக்குள்ளே பலவிஷயத்திலே தர்க்கமுண்டு. சிலபேர்கள்பற்களை எலும்புகளென்று சொல்லுகிறார்கள். சிலபேர்க ளல்லவென்று சாதிக்கிறார்கள். அஸ்திகளுடைய எண்ணிக்கைக்குள்ளே பல்லுகளடங்காதென்று சொல்லுகிறவர்களுடைய நியாயங்களையும் வெளிப்படுத்துவோம். அதுகளுக்கு விரோதமான பக்ஷத்தை யநுசரிக்கிறவர்களுடைய பிரத்தியுத்தரத்தையுந் தெரியப்பண்ணுவோம். அதெப்படியென்றால் மனுஷன் பிறக்கிறபோது 217 அஸ்திகளோடு பிறப்பான். பற்களோவென்றால், பிண்டம்பிறந்து ஏழுமாதத்திற்குப்பிறகு தோன்றுமென்று சொல்லுகிறார்கள். வேறுசிலர் பற்களெலும்புகளோடேகூடத் தாயாருதிரத்திலே துவக்கியிருந்தது. ஆனால்

சின்ன பள்ளங்களிலே அடங்கி யிருப்பதினாலே அதுமுளைக்கிறதற்கு ஏழுமாதஞ் செல்லும் என்கிறார்கள். ஆனால்இதிலேயும் பராபரவஸ்துவினுடைய விமரிசை காணப்படுகின்றது. அதெப்படியென்றால், முதலாவது.—பற்களானவை குழந்தைப்பருவத்திற் பிரயோசன மில்லாததினாலேயுந் தாயாருடைய மிருதுவான முலைக்காம்பை யுபாதிக்கு மென்கிறதினாலேயும் அந்தப்பருவத்திலே காண்பியாமல் பிற்பாடு காணப்படும். 2-வது.—மெய்யான அஸ்திகளெப்போதுஞ் சரீரத்திலிருந்து நாளுக்குநாள் பலத்துப்போம், பற்களோவென்றால் முளைத்த ஏழாம்வயதிலே விழுந்துபோம். இதற்குப் பிரத்தியுத்தரமேதென்றால், மெய்யான பற்கள் நிற்கும், விழுகிறபற்கள் மெய்யான பற்களுடைய நுனியாகமாத்திர மிருக்கும். ஒன்றில் சிலபேர்கள் சொல்லுகிறப்போலே புட்பம் விழுகிறபோது கனிக்கு இடங்கொடுக்கிறப்போலே புட்பங்கள்போலேயிருக்கிற முந்தினபற்கள் விழுகிறது கனிகளுக்குச் சமரனமாயிருக்கிற மெய்யானபற்கள் முளைக்கிறதற்கும் பலக்கிறதற்குங் காரணமாயிருக்கும். இதுநிமித்தமாகப் பிற்பாடு முளைக்கிற பற்களுக்குவேருண்டு. அதற்குப்பின்பு சிலதுகள் விழுந்தால் வியாதிநிமித்தமாகவிழும். அப்படியேதானே யெலும்புகளும் வியாதிநிமித்தமாக விழுகிறது. இந்தப்பிரகாரந்தானே குஷ்டவியாதி நிமித்தமாகவும் வேறே காரணங்களினிமித்தமாகவும் விரல்களுடைய எலும்புகள் விழுகிறது. 3-வது.—எலும்புகளெண்ணிக்கையிலே வர்த்திக்கிறதில்லை. ஆனால்பற்கள் வர்த்திக்கிறது. அதெப்படியென்றால் முந்தமுந்த விரண்டு முளைக்கிறது. பிறகு வேறே யிரண்டு தோன்றுகின்றது. இந்தப்பிரகாரமாக முப்பத்திரண்டு பற்கள் தோன்றுமட்டு மெப்போது மெண்ணிக்கையிலே வர்த்தித்துக்கொண்டுவருகிறது. இதற்குப் பிரத்தி யுத்தரமாவதுஃ-பற்களெல்லா மொருமிக்க முளையாமற்போனாலும் ஒருமிக்கத் துவங்கியிருக்தன. ஆனால் சிலதுகளுக்கு அங்கிஷங்க ளடர்த்தியா யிருக்கிறதினாலேயும் பமைதிகமாயிருக்கிறதினாலேயு முளைக்கிறதற் கனேககாட்செல்லும். இந்தப்பிரகாரமாகக் கோவிரையையும் யாதொருமரத்தினுடைய கொட்டையையு மொருநாளையிலேவிரைத்தாலும் கோ தீவரமாய்முளைக்கும். மரமுளைக்கவனேககாட்செல்லும். 4-வது.—பற்கள் மெல்லிய சருமத்தினாலே மூடப்படாமலிருக்கிறதுந்தவிரக் கண்களுக்கு முதலாய்ப் பிரத்தியக்ஷமாய்த் தோன்றுகிறது. சகல அஸ்திகளோவென்றால், மாங்கிஷங்களுக்குள்ளே மறைந்திருக்கிறது மல்லாமல் மெல்லிய சருமத்தினாலேயும் மூடப்பட்டிருக்கின்றது. இந்தச்சந்தேகத்துக்குப் பிரத்தியுத்தரமாவதுஃ பற்களிரண்டு பக்கங்களையும் பரிக்ஷிக்கவேணும். புறத்தியிலேகாண்பிக்கிற அங்கிஷம் போசனத்தை மெல்லுகிறதற்கு வேண்டியிருக்கிறபடியினாலே கண்ணுக்குத்தெரியும். வேறேபக்கங்களோவென்றால், மாங்கிஷத்துக்குள்ளே மறைந்திருக்கிறதுமல்லாமல் மெல்லிசான தோலாலே மூடியிருக்கிறது. 5-வது.—எலும்புகள் 20 வருஷமட்டுமெப்போதும்வளரும், பிற்பாடு ஒருகண்டமா யெப்போதுமிருக்கும், பற்களோவென்றால் எப்போதும்வளரும். இதற்குப் பிரத்தியுத்தரமாவதுஃ-சர்வேஸ்வரனுடைய மட்டில்லாத விமரிசையினாலே யெலும்புகள் 20 வயதுமட்டு மாத்திரம் வர்த்திக்கும், அவ்வண்ணமே யெப்போது மரணபரியந்தம் வளர்ந்தால் மனுஷ ராக்ஷதனைப் போவான். ஆகையால் மனுஷனானவன் சாங்கோபாங்கமா யிருக்கிறதற்கு ஒருவிசேஷமான வுபாயங்குறித்திருக்கிறது. பற்களோவென்றால், தினந்தின மெல்லுகிறதினாலேயும் வேறேயசைவினாலேயுந் தொஞ்சங் கொஞ்சமாய்க் குறைந்து போகிறதினாலே யவ்வளவுக்குத் தினந்தினம் வர்த்திக்கவேண்டி யிருக்கிறது. ஆனாலிந்தவிதமா வர்த்தித்தாலு மெப்போதும் அந்தமட்டிலேதானே நிற்கும். இன்னமும் வேறே நியாயங்களைச் சிலர் சொல்லிக்கொண்டு வருகிறார்கள், ஆனாற் பிண்டசாஸ்திரிக ளிதுவிஷயத்திலே பண்ணுகிற தர்க்கத்தைக் கண்டுபிடிக்கிறதற் கிம்மாத்திரஞ் சொன்னதுபோதும். ஏனென்றால் இந்த அஸ்தி விஷயத்திலே தர்க்கம் பண்ணுகிறப்போலே மற்றுமுண்டான பிரசித்தமில்லாத ஒவ்வொருவியங்களிலேயும் வெகுவாய்த்தர்க்கித்து அவரவர் தனது பக்ஷத்தை [illegible] ஸ்தாபிக்கத் தக்கதாகவும் விரோதமான பக்ஷத்தை யா[illegible]பிக்கத்-தக்கதாகவு மெத்தவும்பிரயாசப்படுவார்கள். ஆனபடியினாலேயிந்தத் தேசத்தாரைப்போலே கினவு கண்டாற்போலே மனதின்படியே விதித்துக்கொண்டு அண்டபிண்ட வியாக்கியானம், பண்ணுகிறோமென்று விசாரிக்கவும் எண்ணவும் வேண்டாம்.

இப்போது எலும்பு வகையிலேயுண்டான சில ஆச்சரிய விசேஷங்களைச் சொல்லிக்காட்டுவோம். அதெப்படியென்றால், சோடுகளா யிருக்கிற அஸ்திகள் சரியாக வளரும். இந்தப்பிரகாரமாக ஐந்து வயதுள்ள ஒரு பிள்ளை யிரண்டுகைகளையுஞ் சரியாகக் குவித்தா லிரண்டு பெருவிரல் முழுதுஞ் சரியாயிருக்கும், இரண்டாள்காட்டி விரலுஞ் சமனாயிருக்கும், இரண்டு பாம்புவிரல்களும் பின்னபேத மில்லாமலி

ருக்கும். இரண்டுமோதிரவிரலுஞ் சுண்டுவிரலும் கிரானமா
யிருக்கும். பதினைந்து வருஷத்துக்குப் பிற்பாடு மறுபடி
சோதித்தால் முழுதுஞ் சரியாய் வளர்ந்ததென்றும் எட்பிர
மாணமானாலும் வித்தியாச மில்லாமலிருக்குதென்றும் பிர
த்தியக்ஷமாய்க் காணலாம். அதிலே சர்வேஸ்வரனுடைய
மட்டில்லாத விமரிசை முழுதும் விளங்குகிறது. அவ்வண் 1
ணமே, பிரதிதினமும் ஆகாரபான நிமித்தமாகச் சாணகாதி
யாகிற சகல அவயவங்கள் வளருகிறபோது ஒவ்வொருபக்
கத்திலேயுமுள்ள அதற்கெதிரான சோடுகள் சரியாக விரத்
தத்தைச் சுவிகரித்து வேற்றுமை யில்லாமலொருகண்டசிரா
யப் பெருத்து வளரும். இரண்டு கைகளுடைய அஸ்திகள்
விஷயத்திலே யோசித்தாற்போலே கால்களுடைய எலும்புக
ளிலேயும் பக்க எலும்புகளிலேயும் யோசிக்கக்கடவோம்.

இதற்கப்பா லறியவேண்டியதாவது, ஒவ்வொரு அஸ்தி
யும் விசேஷமான ஒவ்வொரு காரியத்துக் குதவுகிறதினாலே
அதுதற்கும விசேஷமான ஒரு தொழிலுண்டு. அதிற் சிலது
கள் குனிகிறதற்கும், சிலதுகள் நடக்கிறதற்கும் சிலதுகள் பத்
திரமா யிருக்கிறதற்கும். சிலதுகள் உட்காருகிறதற்கும், சில
துகள் அசைகிறதற்கும், சிலதுகள் தாங்குகிறதற்கும், சிலது
கள் கேட்கிறதற்கும், சிலதுகள் முகர்ந்து பார்க்கிறதற்கும்,
ஸ்பரிசிக்கிறதற்கும், சிலதுகள் தெரிசிக்கிறதற்கும் உதவும்.
பூர்வகாலத்திலே ஒரு பெரிய சாஸ்திரியானவர் பிண்டத்தி
லுண்டான அஸ்திகளைக்குறித்து அநேக வருஷம் தியானம்
பண்ணினதற்குப் பிற்பாடு இந்த அஸ்திகளை வேறே வகை
யோடே ஸ்தாபித்தால் என்னவருமோவென்று புத்தியினாலே
சோதித்துப்பார்த்துச் சர்வேஸ்வரன் கட்டளையிட்ட வொழுங்
கல்லாமல் வேறே விதமாக அதுகளை வைத்தால்மோசம் வரு
மென்று கண்டு திருவுளம்பற்றினதாவது. "அளவறுக்கப்ப
டாத நியாயத்தையும் விமரிசையையுங் கொண்டிருக்கிற பரா
பர வஸ்துவே உமக்களவில்லாத தோத்திரமுண்டாகக் கட
வது. என்னுடைய தாயாருடைய உதரத்திலேதானே அவள
றியாமல் இந்த அஸ்திகளெல்லாம் பிண்டத்துக் கஸ்திவாரமா
யிருக்கிறதற்கும் எண்ணிக்கைக்குள்ளே யடங்காதசேஷ்டை
டைகளுக் குதவியா யிருக்கிறதற்கும் கற்பித்தருளினதினாலே
நன்றியுமிந்த மனதோடே தேவரீரை ஸ்துதிக்கிறேன்." என்று
அருளிச்செய்தார். இதெல்லாம் ஒழுங்கோடே தியானிக்கிற
வன் அவசியமா பொருக்கடவுள்,, ஒருவஸ்து, ஒருதேவன்,



ஒருகர்த்தன், ஒருஅதிகாரணம், ஒருசர்வேஸ்வரன் இருக்கிற
ரென்று கெட்டியாக மனதிலே ஸ்தாபிக்கிறதுமல்லாமல் இப்
படிப்பட்ட மட்டில்லாத பலத்தையும் கிருபாகடாக்ஷத்தை
யுங் கொண்டிருக்கிற ஆண்டவர்பேரிலே ஸ்தோத்திரம் பண்
ணித் தப்பில்லாத கிரமத்தோடேசகலத்தையும் நடத்திக்கொ
ண்டு வருகிறபராபர வஸ்துவினுடைய சித்தத்துக்குப் பொரு
ந்தாத பாவங்களைத் தள்ளிப்போட்டு அவருடைய சித்தத்துக்
குப்பொருந்தின தருமங்களைச் செய்துகொண்டு வருவான்.

## ௯௫ - ம். அதிகாரம்

### சிரசின் விவரம்.

சிரசானது உச்சியிலே துவக்கி முந்தின முள்ளெலும்பு
மட்டு மடங்கியிருக்கின்றது. தலையினுடைய ரூபமானது ஏற
க்குறைய வட்டமாயிருக்கும். காதுகளுடை ஸ்தலங்களிலே
தகடுபோலேயிருந்து தாழ்வாய்க் கட்டைமட்டுங் கொஞ்சம்
நீளமாயிருக்கும். பஞ்சேந்திரியங்களினாலே வருகிற சேஷ்
டைகளை நன்றாய்ப் பண்ணுகிறதற்கு மூளை மெத்தவேண்டி
யிருக்கிறதினாலே யிப்படிப்பட்ட மூளையை மூடுகிறதற்குப்
பெரிய தலைவேண்டியிருந்தது. அந்தநியாயத்தினாலே சின்ன
தலையைப்பார்க்கப் பெரியதலை நன்றாயிருக்கும், ஆனாலந்தப்
பருமமு மட்டமாயிருக்கவேணும்.

சிரசானது பிண்டத்தினுடைய வுயர்ந்த ஸ்தலத்திலே
ஸ்தாபிக்கப் படுகிறதுக்குக் காரணமேதென்றால், சிரசின்
மூளை வழியாய்ப் புறப்படுகிற நரம்புகளில் அநேக சிவ
வணுக்கள் ஓடுகின்றன. அந்தச்சிவ வணுக்களின் ஓட்டத்
தின் மிகுதியினாலே நரம்புகளெல்லாம்அசைக்கப்பட்டு மற்ற
அவயவங்கள் யிழுக்கிறதினாலே சிரசானது உயர்ந்த ஸ்த
லத்திலே யிருக்கவேண்டி யிருந்தது. அதெப்படி யென்
றால் சிங்காரத்தோப்புகளிலேயும் இராசாக்களுடைய நந்தவ
னங்களிலேயும் உயர்ந்த ஸ்தலத்திலிருந்து பற்பல வாய்க்
கால்களின் வழியாய்த் தோட்டங்களி லுண்டான புட்பங்க
ளுக்கும், விருக்ஷங்களுக்கும் ஜலம் இறைக்கப்படுகிறதுப்போ
லே முன் சொலலப்பட்ட காரணங்களுக்காக தலையானது
உயர்ந்த ஸ்தலத்திலே யிருக்கவேண்டியிருந்தது. மேலும் இ
ருதயமானது நடுவிலே யிருந்தாலும் மேலே யுண்டான அ
வயங்களையுங் கீழே யுண்டான சாணகாதிகளையும் பிழைப்

பிக்கிறதற்கு இரத்தத் தாரைகளைக் கொண்டு மகாபலத்தோடு சில அக்கினியைத் தள்ளினாலும் இப்படிப்பட்டவலுமை சிரசின் மூளையிலிருந்துண்டாகிறதினால் பராபரவஸ்துவானவர் தலையை யுயர்ந்த ஸ்தலத்திலே வைக்கச் சித்தமானார். மூந்த மூந்த நரர் தலையிலே உண்டாயிருக்கிற மயிர்களுடைய சுபாவமேதென்றால் நீளமுமாய், மெல்லியதுமாய்க் குளிருமா யுலர்ந்ததுமா யிருக்கும். சில பிண்டசாஸ்திரிகள் மயிர்கள் பிண்டத்துக்கு மெய்யான அங்கிஷங்களல்லவென்கிறார்கள். அதேதென்றால் மற்றஅவயங்களைப்போலே யுயிருள்ளதா யிருக்கவில்லை யென்றும், பிண்டத்துக்கு யாதொருவிக்கினமுமில்லாமல் மயிர்களைக் கத்திரிக்கிறதையும, முழுதுஞ் சவரம் பண்ணுகிறதையும் திஷ்டாந்தரப்படுத்துகிறார்கள்.

இப்படிப்பட்ட மயிர்கள் பிறக்கிற வகையேதென்றால் அந்தந்தரோமங்கள்இரத்தத்தினுண்டாயு அசுத்தமான புகையிலேயுண்டாக்கப்பட்டு அந்தவொட்டடையுள்ள புகையானது பிண்டத்தின் புறத்திப் பக்கத்திலே உஷ்ணத்தினாலே தள்ளுண்டுபோய் ரோமத்துவாரத்துக்குள்ளே கட்டாயத்தினாலே அடர்த்தியாய்ப்போய்ப் பெரிய மயிர்களையும் சின்ன ரோமங்களையு முண்டாக்கின்றது. இதிலே யறியவேண்டினதாவது இரத்தத்தினுடைய அசுத்தமான புகையைத் தள்ளுகிற உஷ்ணமானது மிகுதியானால் ஒன்றில் வேரோடு மயிர்களைக் கெடுக்கிறது. ஒன்றில் வர்த்திக்கவொட்டாது. அந்த வியாயத்தினாலேதானே அபிசீன விராச்சியத்திலுண்டான சனங்களுடைய மயிர் வர்த்தியாது. மயிர்களுடைய பருமமும் நிகளமும்வெவ்வேறுவிதமாயிருக்கும். இதற்குக் காரணமேதென்றால் மயிர்வளருகிறதற்கு வேண்டியசாரமெத்தவுண்டானால்அப்போதுநீளமாயிருக்கும். கொஞ்சமுண்டானால்வளராது. ஆனால்சிலதுகள்பருமமாயும், சிலதுகள்மெல்லீசாயுமிருக்கிறதேன்? ரோமத்துவாரங்கள்பெரியதானாற்பருமமாயிருக்கும் சின்னதானால்மெல்லீசாயிருக்கும். இதற்கப்பால்சிலபேர்களுக்குச்சுருட்டுமயிருண்டு. சிலபேர்களுக்கு வளையாமலிருக்கும்இதற்குக்காரணமென்ன? ரோமத்துவாரங்கள் செவ்வேயிருந்தால் வளையாதிருக்கும். சாய்ப்பானாற் சுருண்டுபோயிருக்கும். மயிர்களுடைய ரூபமென்ன? கண்ணுக்குஉருட்சியாகக் காண்பித்தாலுஞ் சின்ன வஸ்துக்களைப் பெரியதாய்க் காண்பிக்கிற கண்ணாடியைக் கொண்டு பார்த்தாற் சிலதுகள் முக்கோணரூபமாயுஞ், சிலதுகள்சதுரமாயுஞ், சிலதுகள்உரு



ட்சியாயுங் காண்பிக்கும். இத்தொகைப்பட்ட ரூபங்களுக்குக் காரணமேதென்றால், ரோமத்துவாரங்களெந்த ரூபமாயிருக்கின்றதோ அதுகளுடைய வழியாகவருகிற மயிர்களும் அந்த ரூபத்தையே கொண்டிருக்கும். பின்னையும் அவைகளநேக இழைகளினாலே யுண்டாக்கப்பட்டிருப்பதால் ஒவ்வொருமயிரையும் பிளந்து கிளைகிளையாக நீளத்திலே தானே அநேகபிரிவாகப் பிரிக்கலாம். சில சமயங்களிலே அந்த இழைகளுடைய பிரிவு முனையிலே காண்பிக்கும். இதன்றியே ரோமங்கள் குழல்போலே துவாரங்களைக்கொண்டிருக்கின்றன. இந்த விசேஷத்தை முன் சொல்லப்பட்ட கண்ணாடியாற் காணலாம். இதுவுமன்றிசிலவிசைஅவலக்ஷண வியாதிகள் நிமித்தமாகத் தலையிலுண்டான விரத்தம் அந்த ரோமங்கள் வழியாக வோடுகின்றது. ரோமங்களின் வர்ணம் எதினாலே வருகிறதென்றால் பற்பல விராச்சியங்களுடையவெவ்வேறே குணத்தினாலேயும் சரீரங்களுடைய வெவ்வேறே சுபாவங்களினாலேயும், வயதுக்குத்தக்க சாரத்தின் குணத்தினாலேயும், வெவ்வேறே வர்ணங்களுக்குக் காரணமாயிருக்கும். இந்தப் பிரகாரமாக வுஷ்டணதி சீமையிலே பிறந்தவர்களுக்கு மயிர் கறுப்பா யிருக்கும், குளிரான விராச்சியத்திலே பிறந்தவர்களுக்கு மயிர்செம்பட்டையா யிருக்கும், வெவ்வேறு சீமையிலே திரிகிறவர்களுக்கு மயிர்கறுப்புமல்ல செம்பட்டையுமல்ல. இதன்றியே அந்த வித்தியாசங்களினாலேதானே சரீரங்களுடைய சுபாவமும் சாரத்தின் குணமும் வெவ்வேறே நிறங்களைப் பிறக்கப்பண்ணும். ஆனாலெந்தச் சீமையிலே பிறந்தாலும் எந்தச் சரீரத்தின் வகையைக் கொண்டிருந்தாலும் வயதுசென்றபின் மயிரெல்லாம் வெள்ளையாய்ப்போம். அப்படியே கிழவர்களுக்குள்ளே மயிர்வளருகிற சாரங் கொஞ்சமானபடியினாலே மயிர்வேறேவர்ணமாய்ப்போம். இந்த மயிர்கள் தோலிற் சென்மித்து பிற்பாடு அதிலே நாட்டப்பட்டாற்போலே வளரும். இந்தத் தோலையும் அதற்குண்டான குணங்களையும் குக்ஷிவிவரத்தைச் சொல்லும்போது வெளிப்படுத்துவோம்.

இந்தத் தோலின் கீழே கபாலங் காண்பிக்கும். இந்தக் கபாலத்திலேயு முகத்திலேயு மறுபது எலும்புகளுண்டென்று முன்னே சொல்லியிருக்கின்றோமாகையால் இங்கேயொரு விசேஷத்தைமாத்திரம் வெளிப்படுத்துவோம். அதெப்படியென்றால் தலையிலேதானே அநேகங் கபாலப் பொருத்தங்களுண்டு. அவைகள் மெய்யான பொருத்த மென்றும்

பொய்யான் பொருத்தமென்றுஞ் சொல்லப்படும் மெய்யான பொருத்தத்தினாலே கபால அஸ்திகள் இரண்டு ரம்பங்களுடைய பற்கள் அன்னியோன்னியமாய்ப் பின்னியிருப்பது போலே பின்னலாயிருக்கும். பொய்யான பொருத்தங்களோவென்றால், மீன் செலாம்புகளைப்போலே அடுக்கடுக்காயிருக்கும். இந்தக் கபால பொருத்தங்களினால்வரும்பிரயோசனமேதென்றால் அந்த வழியாக இடைவிடாமல் தலையிலே மிஞ்சின ஆவிகளும் புகைகளும் வீசப்படும். ஆனால் அடர்த்தியான கபாலப் பொருத்தங்களைக் கொண்டிருக்கிறவர்களுக் கவைகள் அப்புறப்படுகிறதற் கவகாசமில்லாததினாலே அநேகம் விசை தலைநோவுண்டாம். இந்தச் சீமையிலே தத்துவங்களையறியாத அநேகம்பேர்களிந்தக் கபாலப்பொருத்தத்தைத் தலையெழுத்தென்றும், லலாட லிபியென்றுஞ்சாஸ்திரமாய் விதித்தார்கள். கபாலத்தினுடைய மேற்பக்கத்தின் கீழே அநேக ஸ்தலங்களிலே கபாலத்தோடே சேர்ந்திருக்கிற கெட்டியான சருமமுண்டு. அந்தத்தோலுக்குக் கீழாக வேறே மெல்லியதான சருமமுண்டு. இந்த விரண்டு தோல்களினாலே மூளையும் அதிலேயுண்டான தத்துவங்களும் மூடியிருக்கின்றது. அந்தத் தோல்களைவாங்கினால் மூளையெல்லாம் பிரத்தியட்சமாய்க் காணலாயிருக்கும். இப்படிப்பட்ட மூளையானது இரண்டுவிதமாகப் பிரிந்திருக்கின்றது. அது முன்மூளையென்றும், பின்மூளையென்றுஞ் சொல்லப்படும். முன்மூளையானது பெரியதாயிருக்கும், பின் மூளையானது சிறியதாயிருக்கும். இந்த விரண்டு மூளைகளுங் கெட்டியான தோலின் மடிப்பினாலே பிரிந்திருக்கும். இந்த மூளையினுடைய ரூபமானது கபால ரூபத்தைப் போலவேயிருக்கும். இதல்லாமல் வயிற்றிலே குடல் பலவிதமாகச்சுற்றிக்கொண்டிருக்கிறப்போல மூளையின் புறத்திப்பக்கம் அனேகவிதமாய்ச் சுருண்டிருக்கும். இப்படியே உழப்பட்ட நிலத்திலே பள்ளங்களுமேடுகளுங் காணப்படுகிறப்போலே யிங்கேயுஞ் சில பள்ளங்களுமேடுகளுங் காண்பிக்கும். இந்தச் சின்ன பள்ளங்களிலே சிவ அணுக்கள் மெத்த அடங்கியிருக்கிறது. இனபடியினாலே யிப்படிப்பட்ட பள்ளங்களைக் கொண்டிருக்கிற சனங்கள் மற்றவர்களைப்பார்க்கப் பிரதிபிம்பங்களையுண்டாக்குகிறதற்கான அமரிக்கையுள்ள வெத்தனங்களைக் கொண்டிருக்கிறதினாலே காரியங்களைக் கண்டுபிடிக்கிறதற்கு ம காபுத்திக்கூர்மையுள்ளவர்களாயிருக்கிறார்கள். சிரசினுடைய மூளைக்குஇரண்டசைவுண்டு. உப்புகிறபோது அநேகஞ் சீவ



அணுக்களைச் சுவிகரிக்கின்றது. வற்றுகிறபோது நரம்புகளிலே சிவவணுக்களைத் தள்ளுகின்றது. இந்த மூளையானது நரசீவனுடைய விருத்திகளுக்குப் பிரதான கைங்கிரியமுமாயிருக்கின்றதுமல்லாமற் சீவவணுக்களையும் நரம்புகளுடைய சாரத்தையும் வடிக்கட்டி நரம்புகளின் வழியாகச் சகல அவயவங்களுக்கும்இந்தச்சீவவணுக்களை யுதாரமாய்க்கொடுக்கின்றது. அன்றியும், இரண்டுவகையங்கிஷங்கள் மூளையிலேயிருக்கின்றது. சிலதுகள் சாம்பல் வர்ணம்போலேயிருக்கும் சிலதுகள் கற்கள்போலேயிருக்கும். முந்தின அங்கிஷங்கள் மகா மிருதுவாயிருக்கும். வேறே அங்கிஷங்கள் கூடியவரையில் ஸ்திரமாயிருக்கும். கல்லைப்போலே யிருக்கிற அங்கிஷங்கள் திறந்திருந்தால் இரண்டுபெரிய பள்ளங்கள் காண்பிக்கும் அதினுடைய நுனியானது மூக்கினடியிலே துவக்கும். அதின்பிறகு போகப்போக விசாலமாயிருக்கும். இந்த இரண்டு பள்ளங்களையும் படல்போலேயிருக்கிற வொரு சருமத்தினாலே பிரிந்திருக்கின்றது. இந்தப் பள்ளங்களுகடைய நடுவிலேயொரு துவாரமுண்டு. அந்த வழியிலே மூளையிலுண்டான அநேக ஈரங்களு மிஞ்சின சலங்களுங் கழிந்துபோகிறது. அந்த விரண்டு பள்ளங்களுங் கூடுகிற ஸ்தலத்திலொரு தாக்கிருக்கிறது அந்தத் தாக்கு மூன்று தூண்களினாலே தாங்கியிருக்கின்றது. இரண்டுபின் தூண்களின் பிறகே மூன்று பள்ளங்களுண்டு. அதிலே யெண்ணப்படாத சின்ன விரத்தத் தாரைகளினாலேயும், நரம்புகளினாலேயும் நிறைந்திருக்கிற வலைபோலே மகாமெல்லீசான தோற்கள்காணப்படும். அந்த மூளையினுடைய அநேக ஸ்தங்களிலே யெண்ணிக்கைக்குள்ளடங்காத சின்ன புருக்கைபோலே அநேக அங்கிஷங்களுண்டு. அந்த அங்கிஷங்கள் வழியாகச் சிவ அணுக்கள் வடிக்கட்டப்படும். அதின் பிறகு ஒரு வாய்க்கால்போலே நாலாம் பள்ளத்துக்குப் போகிறதற்கு ஒரு வழியிருக்கின்றது. சின்ன மூளையானது கீழ்ப்பக்கத்திலே பெரியமூளையோடொன்றித்திருந்தாலும் மேற்பக்கத்திலே கெட்டியான சருமத்தினுடைய மடிப்பினாலே பிரிந்திருக்கின்றது. அதினுடைய திகளத்தைப்பார்க்க அகலமானது மிஞ்சியிருக்கும். இரண்டு பக்கத்திலே செதுக்கப்பட்ட வொரு வுண்டைபோலே யிருக்கின்றது. சின்ன மூளையினுடைய அங்கிஷங்கள் பெரிய மூளையினுடையஅங்கிஷங்களைப்பார்க்க ஸ்திரமா யிருக்கும். பெரிய மூளையானது சின்னமூளையைப்பார்க்க ஆறத்தனை பெரியதாயிருக்கின்றது. சின்ன மூளையானது சாம்பல் வர்ணமா யிருக்

கின்றது. சில ஸ்தலங்களிலே வெள்ளையாயிருக்கும். சின்ன மூளைக்குள்ளே முன் சொல்லப்பட்ட நாலாம் பள்ளமிருக்கிறது. இது முள்ளெலும்பினுடைய பக்கத்திலே முடியும்.

இப்போது மூளையினுடைய சுபாவத்தையுங் குணங்களையும் வெளிப்படுத்தினதற்குப் பிற்பாடு அதிலே நின்று புறப்படுகிற நரம்புகளைத் தெரியப் பண்ணக்கடவோம். முள்ளெலும்புக்குள்ளே யுண்டான மூளையினுடைய வாலிலே நின்று 32 நரம்புகளுடைய சோடுகள் புறப்படுகிறதுமல்லாமல் தலையிலே யுண்டான மூளையிலேதானே பத்து நரம்புகளுடைய சோடுகள் புறப்படுகிறது. முந்தின சோடு மூக்கிலேபோய் முகர்ந்து பார்க்க வுதவும். இரண்டாஞ் சோடு திஷ்டிநரம்புகளென்று சொல்லப்படும். அந்த நரம்புகள் முந்தமுந்தக் கிட்டிப்போய்ப் பிறகு ஒன்றித்துக் கடைசியிலே பிரிந்துபோயிரண்டு கண்களிலேயும்போம். மூன்றாஞ்சோடு கண்களையசைக்கிற நரம்புகள். நாலாஞ்சோடு ஆசைகளைக் காண்பிக்கிற கண்களுடைய அசைவை யிழுக்கிற நரம்புகள். ஐந்தாஞ் சோடு மூன்றுவிதமாய்ப் பிரிந்து ஒருபங்கு கண்களுக்குப் போகின்றன. வேறே யிரண்டுபங்கு மேல் வாய்க்குந் தாழ் வாய்க்கும் போகிறது. ஆறாஞ்சோடு ருசியினுடைய நரம்புகளென்று சொல்லப்படும். ஏழாஞ்சோடு செவிகளுடைய நரம்புகள். எட்டாஞ்சோடு பொதுநரம்புகளாக அநேக விடங்களுக்குப் போகிறதுமல்லாமல் விசேஷமாய் நாவுக்குப்போம். பத்தாஞ்சோடு அநேக அவயவங்களுக்குள்ளே பிரிந்துபோம். இதற்கப்பா லறியவேண்டியதாவது. மூளையை அஸ்திவாரத்திலே பார்த்தால் கீழ்ப்புக்கம் மகா அதிசயமாயிருக்கும். கபாலத்துக்குள்ளே யுண்டான ஆறு பெரிய பள்ளங்களை மூளையானது நிறைத்ததினாலே அதிலே ஆறு மேடுகள் காணப்படும். முள்ளெலும்புகளுக்குள்ளே யுண்டான மூளையினுடைய வால் முப்பத்திரண்டு சோடுநரம்புகளுக்கு வேராயிருக்கிறது. அந்த நரம்புகள் சகல அவயவங்களுக்குள்ளே பிரவேசித்து மாங்கிஷங்களோடு கலந்து ஸ்பரிசத்தினாலே வருகிற நோவுக்குஞ் சந்தோஷத்துக்குங் காரணமாயிருக்கும். இப்படியே முன்சொல்லப்பட்ட 32 நரம்புகளுடைய சோடுகளிலே நின்று புறப்படுகிற நரம்புகள் எண்ணிக்கையில்லாமற் சரீரத்துக்குள்ளே யெங்கும் பாய்ந்திருக்கும். அதற்குள்ளே யிடைவிடாமற் சிவ அணுக்களோடுகின்றன. ஆனபடியினாலே இதெல்லாஞ் செவ்வே நடத்து



கிறதற்கு மேலான பலம்வேணும். அந்தப் பலத்தைக்கொண்டிருக்கிற பொருளானது மனுஷரிடத்திலே நரசீவனென்று சொல்லப்படும்.

இப்படிப்பட்ட நரசீவனானது சிரசின் மூளையிலேதனக்கொத்திருக்கிற விருத்திகளைச் செய்யும். பிண்டசாஸ்திரிகள் நரசீவனுக்குமூன்றுவித பலமுண்டென்று சொல்லுகிறார்கள். அதேதென்றால் மதிக்கிற சத்தி, யோசிக்கிற சத்தி, ஸ்மரணிக்கிற சத்தி, ஆக மூன்று சத்தி. நரசீவனானது அசரீரியா யிருந்தாலும் சரீரத்தோடு அயிக்கமாயிருக்கிறதினாலே தேகத்தினுடையபஞ்சேந்திரியங்களைக்கொண்டுதனதுகிரியைகளைத் துவக்கிறது. மதிக்கிற சத்தியினாலே அந்தந்த வஸ்துக்களுடைய ரூபங்களும் பிரதிபிம்பங்களும் உள்ளிந்திரியங்களிலே மதிக்கப்படும். அதினாலே பற்பல விசாரம் ஆத்துமத்துக்கு வரும். இந்த மதிக்கிற சத்திக்குதவுகிற மூளையினுடைய பங்கேதென்றால், நெற்றியின்கிட்டேயிருக்கிற மூளையினுடைய பங்கு மதிக்கிறதற்குதவு மென்கிறார்கள். அவ்வண்ணமே யாதாமொருத்தன் ஒருகாரியத்தின் பேரிலேயோசிக்கவுந் தியானம்பண்ணவு, மனதுண்டானாற் சுபாவமாய் நெற்றியிலே கையைவைத்து விசாரப்படுகிறான். இதல்லாமல் ஸ்மரணத்தி னிமித்தமாக மறந்துபோன காரியத்தைத் திரும்பநினைக்க மனதுண்டானால் சிரசின் பின்பக்கத்தைத்தொட்டுக் கொண்டிருப்பான். ஆனதால துநினைவுக் குதவுமென்கிற அடையாளம். இதெல்லா மினிமேல் நரசீவனுடையகுணங்களையுஞ் சுபாவத்தையும் விஸ்தீரணமாய் வெளிப்படுத்துகிறபோது தெரியப் பண்ணுவோம். அப்போது யோசிக்கிற வகையையுஞ் சொல்லிக்காட்டுவோம். இப்போது முகத்தையும் அதற்குண்டான விசேஷங்களையும் அறிவிப்போம். அதெப்படியென்றால், மனுஷனிடத்திலே முகமானது விசேஷமாய்ப் பிரகாசிக்கிறது அதிலே மகிமையின் பத்திராசனம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. துஷ்டமிருகங்கள் முதலாய் அதைக் கண்டால் ஓடிப்போம். சர்வேஸ்வரனாலே யுண்டாக்கப்பட்ட கண்டிப்புள்ள வஸ்துக்களுக்குள்ளே உத்தமவிராச்சியபாரம் பண்ணுகிற நரசீவனானது பஞ்சேந்திரியங்களைக்கொண்டு எதிரேயுண்டான வஸ்துக்களை யறிகின்றது. பிரதானி தளவாய் மந்திரிமார் முதலானபிரபுக்கள் இராயருடைய சமுகத்திலே நடந்த சேதிகளையெல்லாம் விண்ணப்பம் பண்ணுகிறதுபோலே மெய், வாய், கண், மூக்கு, செவி, யென்கிற பஞ்சேந்திரியங்கள் நரசீவனுடைய கைங்கிரியமாயிருக்கிறதினாலே எதிரி

லேயுண்டான வஸ்துக்களுடைய சுபாவங்களையுங் குணங்க
ளையும் நரஆத்துமத்துக்குத் தெரியப்பண்ணும்.

முதலாவது.—நெற்றியானது புத்தியினுடைய அடை
யாளங்களைக் காண்பிக்கும். அவ்வண்ணமே சின்னநெற்றியு
ள்ளவன் மிகுந்த புத்தியுடையவனாயிருப்பது அபூருவம். பெ
ரியநெற்றியானது நல்லபுத்தியினுடைய லக்ஷணம். அதேதெ
ன்றால், பெரியநெற்றியிலே மூளையானது அமிழ்க்கப்படாமல்
எளிதாய்ப் புத்தியினுடைய சேஷ்டைக்குதவும். நெற்றியா
னது மேலே மயிர்களுக்குள்ளேயும் பக்கத்திலே காலஅஸ்தி
களுக்குள்ளேயும் கீழேபுருவத்திற்கு மேலேயும் அடங்கியி
ருக்கிறது. அந்த கால அஸ்தியென்கிற பேருக்கர்த்தமேதெ
ன்றால்:—மனுஷனானவன் வயதுகாலமாகிறபோது அவ்விடத்
திலே முந்தமுந்த நரைத்துப்போய்க் காலங்களைக் காண்பிக்கி
றதினாலே காலஅஸ்தியென்கிற பேருண்டாச்சுது. நெற்றியா
னது மாங்கிஷ நரம்புகளினாலே யசையும். முகத்திலே யுண்
டான சருமமோவென்றால் வாயிலேயும், மூக்கிலேயும், கண்
ணிலேயும், காதிலேயும் வழிவிட்டுத் திறக்கப்பட்டிருக்கிறது.

2-வது.—கண்ணானது சகல அவயவங்களைப்பார்க்கமுக
த்திலே யதிகமாய் விளங்குகிறது. ஆகையினாலேதான் விலை
மதியாத மாணிக்கங்களைப் பட்டுப் பட்டாவளிகளினாலே பூச்
சியமாய் மூடிவைத்திருக்கிறாப்போலே சகலமான இரத்தின
ங்களையு மிகவு மதிசயித்திருக்கிற கண்களிரண்டையும் இர
ண்டு இமைகளினாலேயும் பற்பல சருமங்களினாலேயும் பத்தி
ரமாய் மூடியிருக்கின்றது. இப்படிப்பட்ட கண்களுடைய
சுபாவசம்பந்தமேதென்றால், இரண்டுகண்களும் ஒருமிக்க
பின்னபேதமில்லாமல் உயர்த்துகிறதும், ஒருமிக்கத் தாழ்த்
துகிறதும், ஒருமிக்கத் திக்குகளைப் பார்க்கிறதும், இதன்றி
யே யொருவஸ்துவினுடைய பிரதிபிம்பங்கள் இரண்டுகண்க
ளிலேயும் எழுதப்பட்டிருந்தாலும் இவ்விரண்டு பிரதிபிம்பங்
களும் பொதுஇந்திரியத்திலே யொன்றித்து ஒருவஸ்துவாக
மாத்திரங் காண்பிக்கின்றது. இந்தப்பிரகாரமாக இரண்டுக
ண்கள் முன்பாக ஒருவச்சிரத்தை வைத்தால்இரண்டு வச்சி
ரங் காண்பியாமல் ஒருவச்சிரமாத்திரந் தோன்றுகின்றது.
பின்னையும் இந்தக்கண்களுடைய சுரூபமேதென்றால் அதிக
மான பலத்தோடேயும் எளிதான அசைவோடேயும் அங்க
ங்கே திரும்புகிறதற்கு வுண்டைரூபமாகச் செய்யப்பட்டிரு
க்கின்றது. மேலும் கண்களுக்கு மோசம்வராதபடிக்கு அவை



கள் கெபிக்குள்ளே பதிந்திருக்கிறதுந்தவிர மற்றுமுண்டான
சரீரத்தினுடைய அவயவங்களுக்கு வருகிற விக்கினங்களை
யெல்லாம் நீக்கத்தக்கதாக உயர்ந்த ஸ்தலத்திலே வேவுகா
ரர்போலே ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. இதன்றியே கண்
களுக்குக் குளிர்முதலான ஆகாயத்தினுடைய பற்பல விகார
ங்கள் நிமித்தமாக மோசம்வராதபடிக்குக் கண்களிலே மாங்
கிஷங்கள் கிடையாது. இப்படிப்பட்ட கண்களுக்குள்ளே சர்
வலோகத்திலே யுண்டான சகலமான கண்டிப்புள்ள வஸ்து
வின் சுரூபங்கள் சுபாவமான வர்ணங்களோடு ஒருக்ஷணத்தி
லே யுச்சிதமா யெழுதப்படும். இந்தப்பிரகாரமாகச் சந்திர
சூரிய நக்ஷத்திரங்களெல்லாம் எத்தனை தூரமா யிருந்தாலுஞ்
சோதி மண்டலங்களெத்தனை விஸ்தீரணமா யிருந்தாலுங்
கண்களிலே யொருக்ஷணத்திலே தெரிகின்றது. ஆனால்கண்
டிப்புள்ள பொருட்களைக் கண்கள் பார்க்கிறதுந்தவிர அசரீ
ரியாயிருக்கிற நரசீவனுடைய இரகசியமான எண்ணங்களை
முதலாய் வெளிப்படுத்தும். அதெப்படியென்றால், ஒருவனு
டைய மனதிலுண்டான வன்மமும், பக்ஷமும், கோபமும்,
பயமும், சாதுவும், துணிவும், நம்பிக்கையும், அகங்காரமும்,
தாழ்ச்சியும், நிந்தையும், வணக்கமும், பராக்கும், அவதான
முதலான ஆசைகளெல்லாம் அவனவனுடைய கண்களிலே
சுபாவமாய்க் காணலாமென்று பிரத்தியட்சமான அநுபவத்
தினாலே கண்டுபிடிக்கிறோம். கடைசியிலே விலையேறப்பெற்ற
மாணிக்கங்கள் தங்கத்திலே பதித்திருந்தால் சம்பிரமமாகக்
காண்பிக்கிறாப் போலேயும், சந்திரசூரியன் சோதிமண்டலங்
களிலே விளங்கிறாப்போலேயும் இரண்டுகண்களும் அலங்கா
ரமாக் முகத்திலே பதிக்கப்பட்டு மிகவும் பிரகாசிக்கிறதென்
கிறது பிரத்தியட்சமாகும். இப்போதைக்குப் பார்வையெப்
படி வருகிறதென்றால் இந்தப் பிண்டசாஸ்திரத்தினுடையஇர
கசியத்தைக் கண்டுபிடிக்கிறதற்கு முன்னே யறியவேண்டின
தாவது:—கண்ணானது ஆறுதோல்களினாலேமூடியிருக்கின்
றது. முந்தின சருமமானது மகாவெண்மையா யிருக்கும்.
இரண்டாந் தோலானது நகம்போலவுங் குளம்புபோலவுமிரு
க்கும். மூன்றாவது கறுத்த முந்திரிகைப் பழம்போலே யிருக்
கும். நான்காவது திஷ்டிநரம்புஇதுநூல்களினாலே யுண்டாக்கப்
பட்ட ஓர் வலைக்கொப்பா யிருக்கும். அதிலே பிரதிபிம்பங்க
ளெழுதப்படும். ஐந்தாவது வளையல் நிறத்தை யொத்திருக்கி
றதினாலே வளையல்தோலென்று சொல்லப்படும். ஆறாவது
சிலந்திப்பூச்சி வலைபோலே யிருக்கும். இதல்லாமற் கண்ணி

லே மூன்றுவகை இரசங்களுண்டு. தண்ணீர்போலே யிருக்
கிற இரசம் கண்ணின் முன்பக்கத்திலே யிருக்கும். இதினு
டைய பிரயோசன மேதென்றால் கண்கள் எப்போதும் ஈர
மா யிருக்கிறதற்கும் பிரகாசத்தின் கதிர்களினாலே யுலராத
படிக்கும் உதவும். இரண்டாம் ரசமேதென்றால், உருகின
வளையல்போலே கண்ணின் பின்பக்கத்திலே யிருக்கும். இது
வலைத்தோலானது ஆனவகையோடே விரிந்திருக்கிறதற்குத
வும். மூன்றும்இரசம் உறைந்ததுமாய் முழுதும் ஸ்படிகம்
போன்றதுமாய் நடுவிலே ஸ்தாபிக்கப்பட்டதுமாய் ஏறக்கு
றைய வட்டரூப முள்ளதுமா யிருக்கும். அதினுடைய பிர
யோசனமென்ன பிரகாசத்தினுடைய கதிர்கள் ஆனவகை
யோடே உள்ளே பிரவேசிக்கிறதற்கும் புறப்படுகிறதற்கும்
உதவும். ஆறுதோல்களில் மூன்று இரசங்களடங்கி யிருக்கி
றது. மூன்றுஇரசங்களின் பிரதிபிம்பங்களை யுச்சிதவிதமாகக்
கண்ணிலே யெழுதப்படுகிறதற் குதவும். அதெப்படி யென்
றால், ஒருவஸ்துவின்மேலே பிரகாசம் படுகிறபோது அந்தப்
பிரகாசமானது அப்படிப்பட்ட வஸ்துவினுடைய ரூபத்தை
யெடுத்து அது அப்பாலே கிளம்பிக் கண்களிலே விழுகிறது.
அவ்வண்ணமே விழிக்குள்ளே புகுந்து மூன்று இரசங்களுக்
குள்ளே பிரவேசித்து அப்புறம் உள்ளேதானே யுருவிப்புறப்
படுகிறபோது கண்முடிவிலே யுண்டான நரம்புகளுடையவலை
யின் சில நூல்கள்மேலே பட்டால் காணப்பட்ட வஸ்துவி
னுடையரூபம் அந்தக் கதிர்களினாலே திஷ்டிநரம்பிலெயெழு
தப்படும். அதின்பிறகு அந்தரூபமானது திஷ்டிநரம்பு வழி
யாகவறிப் பொதுவிந்திரியத்திலே வருகிறது. அந்தப்பொது
விந்திரியத்திலே யுண்டான ரூபத்தைக் கிரகிக்கிறதற்கு ஆத்
துமத்துக்கு விசேஷமான பலமுமுண்டு. அந்தநியாயத்தினாலே
வஸ்துக்களைக் காணாதிருந்தாலும் அந்தரூபங்கள் பொதுவிந்
திரியத்திலே யுண்டானால் அந்த வஸ்துக்களைக் கண்டாற்
போலே யிருக்கும். இதுநிமித்தமாக விராத்திரி காலத்திலே
நித்திரையிலே இந்தரூபங்கள் தாறுமாறாக அசைந்திருக்கிறதி
னாலே சொற்பனத்தைக் காண்கிறோம். ஆனால் யாதாமொரு
வன் பார்வை சம்பவிக்கிற வகையை யறிய மனதுண்டானால்
ஒரு அறையிலே பிரகாசமிராம லெங்கும்மூன்றாயடைத்துப்
போட்டுச் சூரியனுக் கெதிராகவிருக்கிற திஷ்டிக்கதவிலொரு
விரற் பிரமாணம் ஒருவட்டத்துவாரந் துளைத்து இரண்டுபக்
கத்திலே புடைப்புள்ளவொருஸ்படிகத்தையதிலேஸ்தாபித்து
உள்ளே யொருவெள்ளைத் துப்பட்டியைப்பிடித்தால்அதிலே



புறத்தியிலே யுண்டான சகலவஸ்துக்களுடையபிரதிபிம்பங்க
ளுஞ் சுரூபங்களு மெழுதப்படும். அப்படியே அந்தத்துவாரம்
போலே கறுப்பு விழியிருக்கும். இதுஸ்படிகத்துக்குச் சரியா
யிருந்து. இந்தத் துப்பட்டியிலே பிரதிபிம்பங்களெழுதி யிரு
க்குமாப்போலே திஷ்டிநரம்புகளுடைய நூல்களிலே சிறுரூப
ங்க ளெழுதப்படும். கண்களிலே யுண்டான இரசங்களுந்
தோல்களும் அதிக பிரகாசத்தோடே யுச்சிதமாக வெழுதப்
படுகிறதற்குதவும், கடைசியிலே யந்தரூபத்தைத் துப்பட்டி
யிலே தலைகீழாயெழுதி யிருக்குமாப்போலே அப்படித்தானே
கண்ணிலே காணப்படும்.

3-வது.—மனுஷர் கேட்கிற வகையை வெளிப்படுத்து
வோம். அதெப்படியென்றால்:—செவியினாலேதொனியைக்
கிரகிக்கிற விந்திரியமானது மகாவுச்சிதமா யிருக்கிறது. காதி
னுடைய புறத்திப்பட்ட அங்கிஷங்கள் நாம்சொல்லாதிருந்தா
லும் உள்ளேயுண்டான தத்துவங்களைச் சுருக்கத்திலே சொ
ல்லிக் காட்டுவோம். உட்காதினுடைய வகையேதென்றால்,
உள்ளே பாம்புபோலே நெளிகிற பாதையுண்டு. அதற்குப்பிற்
பாடு துவாரங்காணப்படும். அந்தத்துவாரத்தின் முகிலிலே
யொருதோல் விரிந்திருக்கிறது. அப்பா லொருசின்ன கெபி
போலே ஒருபள்ளமிருக்கிறது, அதிலே ஆகாயமிருக்கிறது.
இந்தச் சின்ன கெபிக்குள்ளே மூன்று சிறிய எலும்புகளு
ண்டு. அந்த அஸ்திகளுடைய ரூபத்துக்குத் தக்கபேருண்டு.
ஒன்றுக்குப்பேர் சுத்தியல் மற்றொன்றுகூடம்.மூன்றாவது அ
ங்கவடி, இந்தமூன்றெலும்புகளை நரம் பசைக்கிறது. கடை
சியிலே செவியினுடைய நரம்புகள் அதிலே முடியும். இதெ
ல்லா மிப்படி யிருக்கையி லொருகாரியத்தை யின்ன மறிய
வேண்டி யிருக்கிறது. அதெப்படியென்றால் ஆகாயமானது
அசையாதிருக்கும் போது பலபல விதமாக அடிபட்ட அந்த
ஆகாயங் கிட்டவிருக்கிற ஆகாயத்து க்குஅசைவு கொடு
க்கும். இதெல்லாமொரு வமையினாலே வெளிப்படுத்துவோம்
அசையாத குளத்திலொருகல்லைப் போட்டால் முந்தமுந்தக்
கல்லு விழுந்த விடத்தி லொரு சின்ன வளையமுண்டாம்.
அந்தச்சின்ன வளையம் இரண்டாம் வளையத்துக்குக் கார
ணமா யிருக்கும். இப்படி யேபோகப்போகக் கடைசியிலே பெ
ரியவளையமாய்க் கரைமட்டும் வரும். அத்தன்மையாகத் தொ
னிவிஷயத்தை யோசிப்பாயாக. நாவினாலேயும் பற்களினாலே
யும் அண்ணத்தினாலேயும் ஆகாய மடிபட்டு அந்த அசை
வைக் கிட்டின ஆகாயத்துக்குக் கொடுக்கிறது. கடைசி

லே போகப்போகக் காதிலே விழுகிறது. அந்தக் காதானது ஆகாயத்திலே அந்தச் சத்தத்தைக் கேட்கிற பாதையின்வழியாகத் துவாரத்துக்குள்ளே விழப்பண்ணி யந்தத்தொனி யங்கேவிரிந்திருக்கிற சருமத்தை விசையாய்சைத்து அந்தஅசைவினாலே அப்பாலே யிருக்கிற மூன்றுசின்ன எலும்புகளை யசைத்து அந்தஅசைவினாலே தொனிபலத்துப்போய் செவியினுடைய நரம்புகளின் வழியாக வந்தசத்தம் பொதுஇந்திரியத்திலே போகிறது. அப்போது ஆத்துமம் சத்தத்தையும் வார்த்தைகளையுங் கிரகிக்கிறது.

4-வது.—இதல்லாமல்ஆக்கிராணத்தினுடைய வகையேதென்றால், கண்டிப்புள்ள வஸ்துக்களிடத்திலே நின்று எண்ணப்படாத ஆவிகளும் புகைகளுஞ் சின்ன அணுக்களுடைய புகைகளும் புறப்படுகிறது. இந்தவிதமாக விசேஷமாய் புட்பங்களும் மகா கந்தமுள்ள பொருட்களும் இடைவிடாமல் வாசனையுள்ள ஆவிகளை வீசுகிறது. இந்தஆவிகளும் புகைகளும் நாசிக்குள்ளே பிரவேசித்து அங்கேயிருக்கிற சிலமாங்கிஷவுண்டைகள் மேலேபட்டுக் கடைசியிலே ஆக்கிராணத்தினரம்புகள் வழியாகப் பொதுஇந்திரியத்திலேறினவுடனே நரசீவனானது துற்கந்தத்தையும்நற்கந்தத்தையுங்கிரகிக்கிறது.

5-வது.—கடைசியிலே சுவையிந்திரியத்தைக் கண்டுபிடிக்கிற வகையேதென்றால், நாவின்மேலே யெண்ணப்படாத கூர்மையுள்ள அங்கிஷங்களிருக்கிறது. அப்படிப்பட்ட அங்கிஷங்கள் மேலே நாம்புசிக்கிறவஸ்துக்களுடைய அணுக்களுங் குடிக்கிற பானத்தினுடைய ஈரங்களும் படுகிறபோது சரீரத்துக் கொத்திருந்தால் உருசிபிறக்கும். ஒவ்வாமற்போனால் அரோசகம் பிறக்கும். அவ்வண்ணமே இந்தக் கூர்மையுள்ள சின்ன அங்கிஷங்கள் ஒன்றில் நாக்குநரம்புகளுடைய நூல்களாயிருக்கும். ஒன்றில் அதுகளோடுகலந்திருக்கும். அந்த நரம்புகள்வழியாகப் பொது இந்திரியத்தி னரம்புகளசையப்படும். அந்த அசைவுக்குத் தக்கது ஆத்துமமானது நல்லதும் ஆகாததும் உருசியும் அரோசகமுங் கிரகிக்கிறது. வாக்குக்கடுத்த அநேகஅதிசயங்களின்னமுமுண்டு. இனிமேல் குக்ஷிவியாக்கியானத்தையும் போசன சீரணத்தையுஞ் சொல்லும்போது அவைகளை விஸ்தீரணமாய் வெளிப்படுத்துவோம்.



## ௰௬-ம். அதிகாரம்.

### நெஞ்சின் விவரம்.

நெஞ்சை நன்றாய்க் கண்டுபிடிக்கிறதற்கு இப்படிப்பட்ட நெஞ்சிலே இருதய மடங்கியிருக்கிறதென்று சொல்லவேணும். ஆகையால் நெஞ்சானது கழுத்தினுடைய முகிலிலே துவக்கிக் குக்ஷியையும் நெஞ்சையும் பிரிக்கிற சருமமட்டும் அமைக்கப்பட்டதா யிருக்கின்றது. முன்னே பக்கவெலும்புகளைச் சேர்க்கிற அஸ்தியினாலேயும் பிறகே முள்ளெம்புகளினாலேயும் பக்கத்திலேவிலா வஸ்திகளினாலேயும் மூடப்பட்டதாயிருக்கிறது. முன்னேகாண்பிக்கிற பக்கத்துக்கு நெஞ்சென்கிற நாமமுண்டாயிற்று. பிறகேயுண்டான பக்கத்துக்கு முதுகென்று சொல்லப்படும். நெஞ்சினுடைய ரூபமேதென்றால், பெரிய முட்டைபோலே யிருக்கிறது. முன் பக்கத்திலே அகலமுமாய்த் தட்டையுமாயிருக்கும். இதிப்படியா யில்லாமற்போனால் நெஞ்சுக்குள்ளே அடங்கியிருக்கிற பிரதான தத்துவங்களுடையசேஷ்டைகளுக்குதவாது. இது நிமித்தமாகசின்ன நெஞ்சைக் கொண்டிருக்கிறவர்கள் அநேகவருஷம் பிழைத்திருக்கமாட்டார்கள். அதினுடையசுபாவமேதென்றால், மாங்கிஷங்களினாலேயும்அஸ்திகளினாலேயுங் கூட்டப்பட்டதா யிருக்கிறது. உயர்ந்த ஸ்தலத்திலிருக்கிற கபாலமுழுதும் எலும்புகளினாலேயுங் கீழேயிருக்கிற வயிறுமுழுதும் மாங்கிஷங்களினாலேயும் உண்டாக்கப்பட்டதாயிருக்கின்றது. நடுவிலேயிருக்கிற நெஞ்சோவென்றால் முழுது மாங்கிஷங்களினாலே யானாலும் முழுதும் எலும்புகளினாலேயென்கிலும் உண்டாக்கப்படாமல் அதுகளினாலேயும் இதுகளினாலேயுங் கூட்டப்பட்டதா யிருக்கிறது. நெஞ்சினுடைய பிரதான கிரிகையேதென்றால் இருதயத்தையும் ஈரல்களையும் பத்திரமாய் மூடி அதுகளுக்கு மோசம் வராதபடிக்கு எங்கும் அதுகளைச் சுற்றிக்கொண்டிருக்கிறது. மாங்கிஷ நரம்புகளின் கீழேயும் பக்கவெலும்புகளின் கீழேயும் ஒரு தோல் காணப்படும். அந்தச் சருமமானதுஉள்ளேயுண்டான இருதயத்தையும் நல்லீரலையும் மூடுகின்றது. இந்தத் தோலினுடைய உட்பக்கத்திலுண்டான அங்கிஷங்கள் இருதயத்தினுடைய அசைவுக்கும் நல்லீரலினுடைய அசைவுக்கும் விக்கினமாயிராமல் மகாமிருதுவாயிருக்கும். புறத்திப்பக்கத்திலே சின்ன மேடுகளும் பள்ளங்களுமிருக்கும். இந்தச் சரு

மம் முள்ளெலும்புகளோடேயும் பக்கவெலும்புகளை மூடுகி
றதோலேடேயுஞ் சேர்ந்திருக்கிறது. அதிலே சில துவாரங்
களுண்டு. அந்தத் துவாரங்கள் வழியாகப் போசனதாரை
யும், சுவாசத்தாரையும், பெரியதாதும், இரத்தத் தாரையும்
போம். இதல்லாமல் உள்ளே வேறே தோலுண்டு; அந்தத்
தோலானது நெஞ்சுக்குள்ளே யுண்டான தத்துவங்களைச்
சரியாக விரண்டாய்ப் பிரிக்கிறது. அந்தத் தோல் நிமித்த
மாக வொருபக்கத்தி லிரத்தமானாலும் ரசமென்கிலும் விழு
ந்தால் மற்றப்பக்கத்துக்கு பொல்லாப்புச்செய்யாது. இந்தச்
சருமம் இருதயத்தையும் இருதயத்தினுடைய மாங்கிஷப்
பையையுந் தாக்குகிறதற் குதவுகிறது மல்லாமல் வயிற்றை
யுமநெஞ்சையும்இரண்டு அங்கணமாய்ப்பிரிக்கிறவேறேதோல
கீழேயிருக்கிற தத்வங்களுடைய கனத்தினாலே விழாதபடிக்
குத் தாக்கிறதற்கும் ஒத்தாசையா யிருக்கும். நெஞ்சுக்கு
ள்ளே பார்க்கும்போது இருதயத்தைக் காணக்கூடாது.
அவ்வண்ணமே யிருதயமானது பெரிய மாங்கிஷப் பைக்கு
ள்ளே மறைந்திருக்குறது. இந்தப் பையானது மகாகெட்டி
யாயிருக்கும். இருதயமானது ரூபத்துக்குச்சரியாயிருக்கும்.
இந்தப்பையானது நடுவிலே தூக்கப்பட்டிருக்கிறது. இந்த
ப்பையானது ஐந்து விடங்களில் திறக்கப்பட்டிருக்கிறதினா
லே அந்தத் துவாரங்களின் வழியாக இருதயத்துக்குப்போ
கிற விரத்தத் தாரைகளும் இருதயத்திலே நின்றுபுறப்படுகிற
தாதுக்களும்ஒடும். இந்தப் பையினுடைய பிரயோசனமே
தென்றால, முந்தமுந்த விருதயத்தைச் சுற்றிக்கொண்டிருக்
கிறபடியினாலே இருதயந் தனது வாட்டத்தினிமித்தமாகவும்
பெருக்கு நிமித்தமாகவும் மெத்த அசையும்போது தனது
சமீபமாயிருக்கிற அங்கிஷங்களினாலே மோசம் வாராதபடிக்கு
ஒன்றில் அவைகளுக்குக் கெடுதிவருத்தியாதபடிக்கு அந்த
மாங்கிஷப்பைநடுவிலேயிருக்கும். பின்னையும் அந்த மாங்கிஷ
ப்பையிலிரண்டு மூன்று கரண்டித் தண்ணீரிருக்கிறது. அந்
தத் தண்ணீரினாலே யிருதயமானது நனைந்துபோ யந்தத்து
லையாத அசைவினாலே யுணராதபடிக்குதவியா யிருக்கும்.
இந்தத் தண்ணீரானது சிறு நீர்போலே யிருந்தாலும் அதிலே
உப்பில்லை. இதல்லாமல் அந்தத் தண்ணீரிருக்கிறதினாலே
இருதயமானது அதிக லகுவோடே யசைகிறது. ஆனால்
நெஞ்சுக்குள்ள பிரதானகாரியமோவென்றால் இருதயமானது
நரசீவனுடைய பிண்டத்துக்குள்ளே பிரவேசித்தவுடனே
தனது சேஷ்டைகளைப் பண்ணத்துவக்கும். நரசீவன் கிரே



கத்தை விட்டவுடனே யசையாமலிருக்கும். நரசீவன் கிரே
கத்தை விடாதவரையிலிருதயப் பையானது இப்படிப்பட்ட
அசைவை இடைவிடாமலசைத்துக்கொண்டு இரவும்பகலும்
க்ஷணத்துக்கு க்ஷணங் காணப்படும்.

இருதயத்தினுடையரூபமேதென்றால், கோபுரம்போலே
யிருக்கும். அஸ்திவாரத்திலே அகலமாயிருந்து நுனியிலேகூர்
மையாயிருக்கும். நடுவிலே யுருட்சியாயிருக்கும். முன்னேபு
டைப்புபோலேகாண்பிக்கும். இருதயத்தினுடைய அஸ்திவா
ரம்நெஞ்சினுடையநடுவிலேயிருக்கும். இருதயத்தினுடையநு
னிஇடதுபக்கத்திற்கொஞ்சமாய்ச்சாய்ந்திருக்கும். இதுநிமித்
தமாகவதினுடைய அசைவைக்கையினாலேதானே யந்தஸ்தல
த்திற்கண்டுபிடிக்கலாம். இடதுபக்கத்திலேயிப்படிசாய்ந்திருக்
கிறதற்குக்காரணமேதென்றால், வலதுபக்கத்திலே யுண்டா
னபெரிய விரத்தத் தாரையிலே யிடைவிடாமல்இரத்த மோ
டுகிறதினாலே இருதயத்தினுடைய அசைவுக்கு விக்கினமா
யிருக்கும். ஆனபடியினாலே வில்லங்கமா யிராதபடிக்கு இரு
தயத்தினுடைய சிகரம் இடதுபக்கத்திலே கொஞ்சமாய்ச்
சாய்ந்திருக்கிறது. இருதயத்தினுடைய இருப்பிடத்தைப் பார்
த்தால் மகாவதிசயமா யிருக்கும். அவ்வண்ணமே தாதுகளை
க்கொண்டு சகல அவயவங்களுக்கும்இரத்தத்தைக்கொடுக்க
வேண்டியிருக்கச் செய்தே யிந்தக் கிரிஷிக்குத் தக்கது ஆ
னஸ்தலத்திலே ஸ்தாபிக்கப்படவேண்டி யிருந்தது. இது
நிமித்தமாக மட்டில்லாத கிரமத்தோடு காரியங்களெல்லாவற்றை
பட்டயாவையும் நடத்திக்கொண்டுவருகிற சர்வேஸ்வரனா
வர் அந்த விசேஷமான ஸ்தலத்தை இருதயத்துக்குக் கட்
டளையிட்டார். இதெல்லாங் கண்டுபிடிக்கிறதற்கு வயிற்றுக்
குள்ளேதானே இருதயம் ஸ்தாபிக்கப்பட்டதென்றுவிசாரித்
துக்கொள். அப்போது தலையினுடைய வுச்சிமட்டும் இரத்த
தைத் தள்ளுகிறதற்குப் பலமில்லாற்போம். பின்னையும் கா
லுக்கும் இருதயத்துக்கும் வெகுதூரமா யிருந்தாலும் பாத
மட்டும் இரத்தமோடுகிறதற்குக் கொஞ்ச பலம்போதும். அ
தேதென்றா லிரத்தந்தானே தனது சுபாவகனத்தினாலே வி
ழும். ஆனபடியினாலே சர்வ பிண்டத்தை யிரத்தத்தினாலே
பிழைப்பிக்கிறதற்கு மகாயோக்கியமான ஸ்தலத்திலே இரு
தயத்தைப் பராபர வஸ்துவானவர் ஸ்தாபித்தார்.

மனுஷிருதயத்தின்பருமத்தையுமுயரத்தையும்பார்க்கு
ம்போதுசகலமானமிருகங்களைப்பார்க்கஸ்தூலமான இருதய

த்தைமனுஷர்கொண்டிருக்கிறார்கள். பெரியவர்களுக்கு ஆறுவிரற்கடைகளுமொருவிரற்கடை அகலமு முண்டு. பெரிய இருதயமுள்ளவர்களுக்குச் சுபாவமாய்ச் சூரத்தனமும் தைரியமுமில்லை. அவ்வண்ணமே பெரியவிருதயத்திலேயுஷ்ணம் அவ்வளவாக ஆகாது. சின்ன விருதயம் அடக்கமாயிருக்கிறதினாலே சிவாக்கினிக்குக் கட்டாயம் பண்ணுகிறதற்கும் இரத்தத்தைப் பலத்தோடே அசைக்கிறதற்கும் யோக்கியமாயிருக்கும். இருதயம் அஸ்திவாரப் புறத்திலே முன்னெலும்புகளோடு பொருந்தியிருக்கிறது. அந்த அஸ்திவாரப்பக்கத்திலே தானொனாலு பெரிய தாரைகளுண்டு. அதுகளி லிரண்டுகுழல் இரத்தத்தைஇருதயத்திலே விழப்பண்ணும். இருதயத்திலேநின்று புறப்படுகிற விரத்தம் வேறேயிரண்டு தாரைகள் வழியாக ஏறும். இருதயமானது தோலாலே மூடியிருக்கும். ஆனால் அந்தத்தோல் இருதயத்தினுடைய மாங்கிஷ அங்கிஷங்களோடு மகா ஸ்திரமாய்ப் பொருந்தி யிருக்கிறதினாலே பிரிக்கக்கூடாது. இந்த மாங்கிஷ நூல்கள் அஸ்திவாரத்திலேயிருந்து நுனிக்குப்போகிறபோது வளைந்திருக்கிறாப்போலே காண்பிக்கும். இருதயத்தினுடைய அஸ்திவாரத்திலே கொழுப்புண்டு. இந்த கிணம் இருதயத்துக்குள்ளே சுவிகரிக்கப்பட்டு அலராதபடிக் குதவியா யிருக்கும். இருதயத்தினுடைய நுனியிலே யத்தனை கொழுப்பில்லை. அந்தச் சிகரமெத்த அசைந்துகொண் டிருந்தாலும் விசேஷமான தண்ணீரினாலே நனையப்படுகிறதினால் அவ்விடத்திலே யத்தனை கிணம் வேண்டியதில்லை. இதல்லாமல் நரம்புகள் சரீரத்தினுடைய அவயவங்களை யசைக்கிறதற்கு வேண்டியதாயிருந்தாலும் இருதயத்திலே மகாகொஞ்சமாக விருக்கும். இதற்குக் காரணமேதென்றால் இருதயம் இரத்தத்தினாலே சுபாவமா யசைகிறதினால் நரம்புகளிருந்தாலும் பிரயோசனமிராது.

இனிமேல் நாம் சொல்லப்போகிற விசேஷங்களை நன்றாய்க் கண்டுபிடிக்கிறதற்குமுன்னே அறியத்தக்கதாவது:— இரத்தத்திலே யிரண்டு வகையுண்டு. இரத்தத்தாரையிலேயும் இரண்டுவகை யுண்டு. சுபாவமான இரத்த மொன்று. சிவாக்கினியைக் கொண்டிருக்கிற இரத்தமொன்று. முந்தின விரத்தமுள்ள தாரையை யிரத்தத்தாரை யென்று சொல்லப்படும். இரண்டா மிரத்தத்தைக் கொண்டிருக்கிற தாரையைத் தாதுவென்று சொல்லப்படும். இந்தத் தாரைகளினாலேயும் அதுகளிலே யுண்டான இரத்தங்களினாலேயும் இருத



யத்தினுடைய அசைவை வெளிப்படுத்தத்தக் கடவோம். அதைச்சாவதானமாய்க் கேளுங்கள். இருதயத்துக்கு இரண்டசைவுண்டு. பெருக்கினாலே வருகிற அசைவும் வாட்டத்தினாலே வருகிற அசைவும் இரண்டுண்டு. பெருக்கினாலே வருகிற அசைவேதென்றால் இரத்தமானது இருதயத்தினுடைய பெரிய பைகளிலே விழுந்து அங்கிஷங்களை யுப்பப்பண்ணி சிலேஷ்டிம நாடிகளையெல்லாம் நீண்டிருக்கச் செய்யும். வாட்டத்தினாலேவருகிற அசைவோவென்றால் இருதயத்தினுடைய பைகளிலே விழுந்த இரத்தம் அதிலே சுபாவமான வுஷ்ணத்தினாலே பால் பொங்கிறாப்போலே கொதித்துக் குதித்து அத்தியந்த பலத்தோடே தள்ளுண்டுபோயிருதயம் வாடிப்போம். இருதயத்தில் இரத்தமானது மகாபலத்தோடே விழுந்தால்இருதய மதிகமாயசையும். அந்த நியாயத்தினாலேயாதாயொருத்தன்முடிகட்டத்தற்குப் பிற்பாடு அவனுடைய இருதயத்தைத்தொட்டால் மகாபலத்தோடே யசைகிறதென்று காணப்படும். அவ்வண்ணமே ஒட்டத்தினாலே யிரத்தத் தாரைகளிலே யுண்டான இரத்தம் மிகவும் அடிபட்டதினாலே சீக்கிரத்தோடேயும் பலத்தோடேயும் இருதயத்தினுடைய பைகளிலே விழுந்து அதிகமான வுஷ்ணத்தோடு தாதுக்களிலே தள்ளுண்டுபோம். இப்படியே யிரத்தமானது நிமைத்தவத யிடைவிடாமற் சுற்றிக்கொண்டு மறுபடி பெரிய விரத்தத்தாரைகளிலே வந்து இருதயத்திலே விழும். இந்தச் சுற்றை நன்றாய்க் கிரகிக்கிறதற்கு அறிய வேண்டியதாவது.

இருதயத்திலே யிரண்டு பெரியபையுண்டு. இந்த விரண்டு அங்கங்கள் மகா ஸ்திரமுள்ளதுமா யடர்த்தியுள்ளதுமா யிருக்கிற மாங்கிஷப் படலத்தினாலே பிரிந்திருக்கிறது. ஒரந்தஸ்திலே யிருக்கிற விரத்தமானது வேறே யந்தஸ்திலே போகக்கூடாது. ஒருதுளி முதலாய்ப்போகாது. நடுவிலே மாங்கிஷம் மதில்போலே யிருக்கிறது. இந்தஇரண்டு பைகளல்லாமல் வேறேயிரண்டு சிறியபைகள் இருதயத்தினுடைய காதுகளென்று சொல்லப்படும். முந்தினகாது வலதுபுறத்திலுண்டான இருதயத்தின் வாசலில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இரண்டாங்காது இடதுபுறத்திலுண்டான பெரியபையினுடைய வாயிலேயிருக்கிறது. முந்தின காதிலேபெரிய விரத்தத்தாரைமுடியும். அந்தக்காதிலே யிரத்தம் விழுந்தவுடனே யிருதயத்தினுடைய வலதுபுறத்தின் பெரியபையிலே விழும். இரண்டாங்காதிலே வெள்ளையினுடைய விரத்தத்தா

ளை முடிந்திருக்கிறது. அதிலேயோடுகிற இரத்தம் இந்தவிரண்டாங்காதிலே விழுந்தவுடனே அந்த இருதயத்தினுடைய இடதுபுறத்தின் பெரியபையிலே விழுகிறது. இருதயத்தினுடைய விரண்டுபெரிய பைகளுக்குள்ளே பள்ளங்களும் மேடுகளுமாகியமாங்கிஷமடிப்புகளுண்டு. அதற்குக் காரணமேதென்றால் அதிலே விழுகிறவிரத்தம் அந்தப்பள்ளங்களிலே அகப்படுகிறபோது மேடுகளிலேயடிபட்டு நுரைபோலேசிவ அக்கினியுள்ள அங்கிஷங்களினாலே யுப்பிமகாபலத்தோடே தள்ளுண்டுபோம். வலதுபக்கத்திலேயிருக்கிற பையானது இடதுபுறத்திலேயுண்டான பையைப்பார்க்க அகலமாயிருக்கிறது. ஆனாலிடதுபைபோலே இருதயத்தினுடைய நுனிமட்டும் போகாது. முந்தின பையினுடைய மாங்கிஷங்கள் அத்தனை ஸ்திரமல்ல. இரண்டாம் பையினுடைய மாங்கிஷங்கள் மகாகெட்டியாயிருக்கும். இதற்குக்காரணமேதென்றால் வலதுபையிலே விழுகிற இரத்தம்சுபாவமான இரத்தமாயிருக்கிறது. ஆனபடியினாலே அதைத் தள்ளுகிறதற்கு அத்தனைபலந் தேவையில்லை. ஆனாலிடதுபையிலே விழுகிற விரத்தமானது எண்ணப்படாத ஜீவாக்கினியினாலே நிறைந்திருக்கிற படியினாலேயும் சிரசின்மட்டுக்குந் தள்ளப்படுகிற படியினாலேயும்மகாபலம்வேணும். இதற்காக இரண்டாம் பைகளுடைய மாங்கிஷம் ஸ்திரமாயிருக்கிறது.

இருதயத்தினுடைய அஸ்திவாரத்திலே யுண்டானதாது பெரிய தாரைகளுடைய சுபாவத்தையும் குணங்களையுங் கூட்டப்பட்ட வகையையுஞ் சொல்லிக்காட்டுவோம். அதெப்படியென்றால்: வலதுபாரிசத்திலே யுண்டான இரண்டுதாரைகளிலே முந்தினதாரை பெரியவிரத்தத் தாரையென்றும், இரண்டாந்தாரை வெள்ளீரலுடைய தாதென்றும் சொல்லப்படும். இந்த இரத்தத்தாரைக்குந் தாதுக்குமுண்டானவேற்றுமையைச் சொன்னபின்பு இடதுபாரிசத்திலே முந்தின தாரைவெள்ளீரலுடைய விரத்தத் தாரையென்றும், இரண்டாந்தாரை பெரியதாதென்றுஞ் சொல்லப்படும். பெரியவிரத்தத்தாரையிலே தேகத்தினுடைய விரத்தத்தாரைகள் சேர்ந்திருக்கிறதினாலே பெரிய விரத்தத்தாரையிலே யிரத்தமெல்லாம்விழுகிறது. இந்தப்பெரிய இரத்தத் தாரையினுடைய வாசலிலே மூன்றுசின்ன கதவுகளுண்டு. இரத்தம் விழுகிறபோது அந்தக் கதவுகளைத்திறக்கிறது. ஆனாலிருதயம் வாடுகிற சமயத்திலே அந்தமூன்று சின்னக்கதவுகளை யடைக்கிறது. வெள்ளீரலுடைய தாதுகளுக்கோவென்றால் முன்சொல்லப்



பட்ட பிரகாரத்துக்கு விரோதமான மூன்றுசின்ன கதவுகளுண்டு. அவ்வண்ணமே வலதுபக்கத்திலே விழுகிற விரத்தம் பெரியவலதுபையிலே விழுந்தவுடனே கிளம்பித் தள்ளுண்டுபோகிறபோது பெரியவிரத்தத் தாரையினுடைய மூன்றுசின்னகதவுகளை யடைத்தமாத்திரத்தில் வெள்ளீரலுடைய தாதின் மூன்றுசின்ன கதவுகள் திறக்கப்படுகின்றது. பின்னையும் ஏறினவிரத்தந் திரும்பத்தாதிலேவிழுந்தா லிருதயத்தினுடைய வலதுபையிலே விழாமல் தாதினுடைய மூன்றுகதவுகளடைபட்டுப்போம். இந்தப்பிரகாரமாகத் திரும்பப்பெரியவிரத்தத் தாரையிலே யுண்டானவிரத்தம் மூன்றுகதவுகளைத்திறந்து பெரியபையிலே விழுகிறபோது தள்ளுண்டுபோயிரத்தத் தாரையினுடைய கதவுகளையடைத்துத் தாதினுடைய கதவுகளைத்திறந்து மேலேயேறும். இப்படியே இடைவிடாமல் இருதயமானது பெருகிறதும் வடிகிறதுமாயிருக்கும். இதன்றியே இந்தப்பெரிய விரத்தத் தாரையினுடைய வகையிலேயும் வெள்ளீரலுடைய தாதுவகையிலேயும்யோசித்தாப்போலே வெள்ளீரலுடைய விரத்தத் தாரையிலேயும் பெரியதாதிலேயும் யோசிப்பாயாக. அதேதென்றால் வெள்ளீரலுடைய விரத்தத்தாரையி லுண்டான விரத்தம் சின்ன கதவுகளைத் திறந்து இடதுபையிலே விழுந்துபொங்கித் தள்ளுண்டுபோயிரத்தத்தாரையின் கதவுகளை யடைத்துப்போட்டுப் பெரியதாதினுடைய மூன்று கதவுகளைத்திறந்துமேலேயேறும். பின்னையுங் கீழேவிழுகிறதற் கவகாசமில்லை. அல்லது தாதின் மூன்று கதவுகளை யடைக்கும். பெரியவிரத்தத்தாரைக்கும் வெள்ளீரலுடைய விரத்தத்தாரைக்கும் ஒருவேற்றுமைமாத்திரமுண்டு. அதேதென்றால், முந்தின தாரைக்கு மூன்றுகதவுகளுண்டு. இரண்டாந்தாரைக் கிரண்டு கதவுகள் மாத்திரமுண்டு. இதெல்லாம் இப்படியிருக்கையிலே இரத்தம் எப்போதும் சுற்றிக்கொண்டு வருகிறவகையை வெளிதாய்க் கண்டுபிடிக்கலாம். அதெப்படியென்றால், பெரியதாதிலே யேறுகிற விரத்தம் தலைக்குங் கைகளுக்குங் கால்களுக்கும் போம். பின்னையும் அவ்விடத்திலிருந்து முன்னிருந்த ஸ்தலத்துக்குவரும். இந்தவதிசயமான விசேஷத்தை யுற்றுக்கேள். இருதயத்தினுடைய இடதுபையிலே நின்று இரத்தமானது மகாபலத்தோடு புறப்பட்டு இருதயத்தினுடைய அசைவினாலே பெரியதாதுக்குள்ளே தள்ளுண்டுபோயதினுடையசீவாக்கினிகளைக் கொண்டிருக்கிற அங்கிஷங்கள் பெரியதாதின் உயரத்தில் ஏறுகிற தாரைகளிலேயோடி ஒரு பக்கத்திலே

தாதுவழியாகக் கைகளுக்குள்ளே யோடிவேறே பக்கத்திலே தலையின் தாதுவழியாயேறி மூளையினுடைய தத்துவங்களுக்குட் பிரவேசிக்கும். இப்படிப்பட்ட விரத்தத்தினுடைய கனமுள்ள அங்கிஷங்கள் கீழேபோகிற தாதின்வழியாகப் பற்பல தாதுக்களைக்கொண்டு வயிற்றுக்குள்ளேயும் கல்லீரலுக்குள்ளேயும், வாலீரலுக்குள்ளேயும், உடல்களுக்குள்ளேயும், கால்களுக் குள்ளேயும்போம். இப்படிப்பட்ட இரத்தஞ் சரீரத்தைச் சுற்றிக்கொண்டு வருகிறபோது ஆனசமயத்திலே வடிக்கட்டப்படும். இந்தப்பிரகாரமாக மூளையிலே சிவ அணுக்களும், வாயிலேயுமிழ்நீரும், வயிற்றினுடைய கீழ்ப்பக்கத்திலே புளித்திருக்கிறவிரசமும், கல்லீரலிலேவாதமும், மாங்காயிலே சிறுநீரும், ஸ்திரீகளுடைய மார்பிலேயும், வடிக்கட்டப்படும். இந்தவிதமாக மேலேயுங் கீழேயும் பெரியதாதினுடைய தாரைகளிலே சிவாக்கினியைக் கொண்டிருக்கிற விரத்தம் எங்குஞ் சிதறிப்போனதற்குப் பிற்பாடு மாங்கிஷங்களுக்குந் தத்துவங்களுக்கும் போசிப்பாயிருந்து மிஞ்சின இரத்தம் மயிர்போலேயிருக்கிறசின்ன விரத்தத் தாரைகளுக்குள்ளே பிரவேசித்துப் புதிதாய்வருகிற வேறேயங்கிஷங்களினாலேதள்ளுண்டுபோய் வாய்க்காலுஞ் சின்னஆறுகளும் பெரியநதிகளிலேவிழுந்து சமுத்திரத்திலேபோய்ச்சேருப்போலே அந்தசின்ன விரத்தத்தாரையிலேயுண்டானவிரத்தப்பற்பல தாரைகளிலேயோடினதற்குப் பிற்பாடு கடைசியிலே பெரியவிரத்தத்தாரையிலே விழுந்து இருதயத்துக்குத் திரும்பவரும். இந்தப்பிரகாரமாகத் தலையிலேயும் நெஞ்சிலேயும் வயிற்றிலேயுஞ் சாணகாதிலேயும் மிஞ்சினவிரத்தம் இரத்தத்தாரைகளுடையவழியாகவோடிப் பெரியவிரத்தத் தாரையிலே பிரவேசித்து எப்போதும்போலேயிருதயத்தினுடைய வலதுப்பையிலேவிழுந்து அதிலே யுண்டானசுவாசமான வுஷ்ணத்தினாலே பொங்கிமேலேயேறி வெள்ளீரலுக்குள்ளே தாதுவழியாகப் பிரவேசித்து அங்கேசுவாசத்தி னீழிக்கிறாக ஆகாயத்தினுடைய மெல்லிசான அங்கிஷங்களோடேகலந்துபோய் வெள்ளீரலுக்குள்ளேயுண்டான விரத்தத் தாரையிலேயோடி யிருதயத்தினுடைய இடதுபக்கத்திலே விழுந்து மறுபடி பெரியதாதிலே தள்ளுண்டுபோயிப்படியேபோகவரஇடைவிடாமற்சுற்றிக்கொண்டிருக்கும். இருதயத்திலே விழுந்த இரத்தம் மகாபலத்தோடே தாதுகளுக்குள்ளே தள்ளுண்டுபோகிற வேகமெல்லாம் நாடியடிக்கிறது. இதுநிமித்தமாக வைத்தியர் நாடியைப்பார்க்கிறபோது எத்தனைவிசை தாதுகளுக்குள்ளே இரத்தந் தள்ளுண்டு



போயிற்றோ அத்தனைவிசை நாடிமேலே வைத்திருக்கிற விரலிலே காண்பிக்கும். பின்னையும் இரத்தத்தினுடைய பற்பல குணங்கள் நிமித்தமாகவெவ்வேறே விதமாக நடக்கும். இப்படியே யிரத்தமசையப் பட்டதினாலேயும் வழியிலே பற்பல அவயவங்களுக்குவேண்டிய போசிப்பைக் கொடுத்ததினாலேயும் குறைந்துபோமென்பதற்குச் சந்தேகமில்லை. ஆனாலாகாரபான நிமித்தமாக விந்தக்குறைவு தீர்க்கப்படும். இந்தவிசேஷத்தை வருகிற அதிகாரத்திலே விஸ்தீரணமாய்ச் சொல்லிக்காட்டுவோம.

கடைசியிலே இரத்தம் இருதயத்திலெம்மாத்திரம் விழுமென்றுகேட்டால் ஏறக்குறைய பெரியதாதிலே யொவ்வொருவிசைக்கு ஒவ்வொருபலந் தள்ளுண்டுபோம். ஆனபடியினாலே ஒருநிமிஷத்துக்குள்ளே பெரியமனுஷருக்குநாடி யேறக்குறைய64விசையடிக்கிறதினாலேயொருதாசுக்குள்ளே3,840 பலம் இரத்தந் தாதுவழியாகயோடும். பின்னையும் இரவும்பகலும் 24 தாசுக்குள்ளே 92,160 பலம் பெரியதாதுக்குள்ளே யோடும். சரீரத்திலே யிம்மாத்திரம் இரத்தமுண்டானா லொருவிசை மாத்திரம் இராப்பகலுக்குள்ளே சரீரத்தைச் சுற்றிக்கொண்டு வரும். ஆனால் பெரியசரீரத்துக்குள்ளே யேறக்குறைய 1,440 பலமாத்திர முண்டாயிருக்கிறதினாலே ஒரு தாசுக்குள்ளே மூன்றுவிசை யதிகமாய்ச் சுற்றிக்கொண்டுவரும். ஆனபடியினாலே யவசியமா யிரத்தமொருநாளையிலே யநேகவிசை சுற்றிக்கொண்டு வருகிறது. இல்லாமற்போனால் மனுஷன் செத்துப்போவான். இப்படிப்பட்ட விசேஷத்தைப் பிரத்தியக்ஷமாயொப்புவிக்கிறதற்குச் சொல்லத்தக்க வேறே நியாயங்களையிவ்விடத்திலே வெளிப்படுத்தச் சமயமல்ல.

இருதயத்தினுடைய பிரதான விசேஷத்தைச் சொல்லிக்காட்டினதற்குப் பிற்பாடு வெள்ளீரலுக்கடுத்த அநேககாரியங்களை வெளிப்படுத்தவேணும். அதெப்படியென்றால்:—வெள்ளீரலைப் பகுத்துப்பார்த்து விசாரித்தால் எண்ணப்படாத சின்னபைகளினாலே கூட்டப்பட்டதாயிருக்கிறதென்று காணப்படுகின்றது. இப்படிப்பட்ட நுரையீரலோ அநேக விரத்தத் தாரைகளுந் தாதுகளுங் கலந்திருக்கின்றன. இவைகள் இருதயத்தின்பிறகே சேர்ந்திருக்கின்றன. சுவாசம் வாங்குகிறபோது அந்தச் சின்னபைகளெல்லா மாகாயத்தினாலே நிறைந்திருக்கிறதைப்பற்றி யிருதயத்தை மூடியப்பும். பிற்பாடு மூர்ச்சைவிடுகிறபோது சுருங்கியிரியும்.

நுரையீரலுடைய ரூபமேதென்றால் மாட்டின் குளம்புக்குச் சமானமாய்த் தாக்கின பிரகாரமாய் வளைந்திருக்கும். அதினுடைய நிறமேதென்றால் மிகுதியும் பஞ்சவர்ணமாயிருக்கும். சில சமையங்களிலே பற்பலவர்ணங்களும் அதிலேகாண்பிக்கும். அநேகவருஷம் வியாதியா யிருந்தவர்களுக்குக் கறுத்தாற்போற் காண்பிக்கும். நுரையீரலுடைய பிரயோசனத்தைக் கண்டுபிடிக்கிறதற்கு முன்னே சுவாசத்தாரையை யறியவேணும். இப்படிப்பட்ட தாரையானது வாயிலே துவக்கி நுரையீரல்மட்டும்போம். இதுபோசனதாரைக்கு மேலேவைத்திருக்கிறது. அதனோடுகூட நெஞ்சினுடைய காலாமுள்ளெலும்புமட்டும் நுரையீரலுக்குள்ளே யிரண்டுவழியாகப்போம். அதின்பிறகு எண்ணப்படாத சிலகுழிகளுக்குள்ளே போய்ச் சின்னபைகளையெல்லாம் பெருக்கிப்பிரிக்கும். அப்படிப்பட்ட பைகள் முந்திரிகைப்பழம்போலே யிருக்கும். ஆகாயம் அந்த மூச்சுத்தாரைகளுக்குள்ளே விக்கினமில்லாமற் போகவும் வரவும் அசைகிறதற் கிந்தத்தாரை யெப்போதும் திறந்திருக்கிறது. அநேகமாங்கிஷ மோதிரங்களைப்போலே பற்பல கட்டுகளினாலே விரித்திருக்கிறது. போசனதாரையின் பக்கத்திலே மாத்திர மோதிரமுழுது முடியாது. போசனதாரையைச் சுவாசத்தாரை முழுதும் விட்டுப்பிரிக்கிறதற்குப் பிற்பாடு அதினுடைய கட்டுகள் முழுதும் வளையமாயிருக்கும். கொல்லனுடைய துருத்தியை யுயர்த்துகிறபோது ஆகாயத்தைச் சுவிகரிக்கும். பின்னையுமதை யழுத்துகிறபோது ஆகாயத்தைவிடும். அதுபோலே நுரையீரல் வாடுகிறபோது சுவாசம் வெளிப்படும். உப்புகிறபோது ஆகாயம்பிரவேசிக்கும். சுவாசம் வாங்குகிறதினாலே யிரண்டு பிரயோசனமுண்டு. முந்தமுந்த மூச்சு வாங்குகிறபோது நுரையீரலெல்லாம் உப்பிப்போகிறதினாலேயதிலேயுண்டான பிரதானநாடியிலே யோடுகிற விரத்தம இரத்தத்தாரைக்குள்ளே பிரவேசிக்கிறதற் குதவும். அந்தவிரத்தம் பிறகுஇருதயத்தி னிடதுபக்கப்பையிலேவிழும். இரண்டாவது வலதிருதயத்தின் பையிலே யிருந்து புறப்படுகிற விரத்தம் அநேகஞ் சிவாக்கினி யங்கிஷங்களோடு கலந்துபோய் நுரையீரலுக்குள்ளே வருகிறதினாலே அந்தப்புகையானது சிதறிப்போனதபடிக்குக் குளிர்ந்த ஆகாயத்தின் சயித்தியத்தினாலே தன்னுண்டுபோய்ப் பிரியாமலிரத்தத்தோடுகூடவோடும். சுவாசம் விடுகிறதினாலே பிரயோசனமேதென்றால், முந்தமுந்தவிரத்தத்தினுடைய அசுத்தமானதுமாய்க் கறுப்புள்ளதுமாயொட்டடையுள்ளதுமாயிருக்கிற அங்கிஷங்கள் ஆகாயத்தோடு கூடப்



புறப்படும். இந்தவிசேஷத்தை யொப்புவிக்கத் தக்கதாக ஒரு நியாயத்தைச் சொல்லுவோம். சுவாசம் விடுகிறதிலே புறப்பட்ட ஆகாயம் ஒருவெள்ளைக் கடுதாசியின்மேலே விழுந்தால் சான்வட்டத்திலே கறுப்பாய்ப்போ யொட்டடைபோலேயிருக்கும். ஆனபடியினாலே நுரையீரலிலே நின்று புறப்படுகிற ஆகாயம் மிகாஅசுத்தமாயிருக்கும். இரண்டாவது, ஆகாயஞ் சுவாசத்தாரையிலே யேறுகிறபோது கூப்பிடுகிறதற்கும், பேசுகிறதற்கும், பாடுகிறதற்குமுதவும். இன்னமும்போசனதாரை சுவாசத்தாரைக்குக் கிட்டவிருக்கின்றது. அதைப்பற்றியும் போசனத்துக்கும், சீரணத்துக்கும், வயிற்றுக்கும், நல்லீரலுக்கும், இது முதலான தத்துவங்களுக்கும் சம்பந்தமாயிருக்கிற விசேஷங்களையும் வருகிற அதிகாரத்திலே வெளிப்படுத்துவோம்.

## ௰௭-ம், அதிகாரம்.

### தக்ஷியினுடைய விவரம்.

இதுவரைக்குந் தேகத்தை யெங்குஞ் சுற்றிக்கொண்டிருக்கிற சருமத்தையும் அதற்கடுத்த சிலவிசேஷங்களையும் வெளிப்படுத்தாமலிருந்ததினாலே இப்போது குக்ஷியின் விவரத்தைச் சொல்லிக்காட்டுகையில் அதிலே அஸ்தியில்லாமல் பற்பல மாங்கிஷங்கள் மாத்திரங் காணப்படுகிறதினாலேதோலினுடைய வர்த்தமானங்களை யெல்லாம் முன்னடி தெரியப்பண்ணவேண்டியது ஞாயமா யிருக்கின்றது.

சற்றுப்பருமமுள்ள சருமத்தைக்காண்பிக்கிறதற்குமுன்னே இந்தச் சருமத்தின்மேலே மகாமெல்லீசான தோலிருக்கின்றது. அதுபெரிய சருமத்தோடே ஒன்றித் திருக்குமாப்போற் காண்பிக்கிறது. ஆனாலது உஷ்ணத்தினுக்கிரத்தினாலேயும் வெவ்வேறே காரணங்களினாலேயும் பிரிந்துபோம். இந்த மெல்லீசான தோலின் விஷயத்திலே பண்டசாஸ்திரிகளுக்குள்ளே தர்க்கமுண்டு. சிலபேர்கள் அந்த மெல்லீசான சருமம் ஆகாயத்தினாலேயும் குளிரினாலேயும், ஆகாசஅசைவாகிறகாற்றுமுதலான விகாரங்களினாலேயும் வருகிறதென்று சொல்லுகிறார்கள். அதெப்படியென்றால், சரீரத்திலேநின்றுஇடைவிடாமல் கொழுப்புள்ள புகையானது புறப்படுகின்றது. அதுபுறப்படுகிறபோது ஆகாயத்தினாலேயும், குளிரினாலேயும், சரீரத்தில்தானே தடைபட்டுக் கெட்டியாய்ப்போகும். இதெல்லாம்

ஒருவண்மயினாலே வெளிப்படுத்துகிறார்கள். பால்காய்ச்சினத ற்குப் பிற்பாடு செய்யுள்ள அங்கிஷங்கள் அசைவினாலே புறப் படுகிறபோது குளிரினாலேயும் ஆகாயத்தினாலேயும் காற்றினா லேயும் தடைபட்டுப் பால்மேலே மெல்லீசான ஆடைகள் படருகிறதுபோலே சரீரத்திலேநின்று புறப்படுகிற செய்யுள்ள அங்கிஷங்கள் ஆகாயத்தினாலேயும், வேறே காரணங்களினா லேயும் அமிழ்க்கப்பட்டு மெல்லீசான தோலாய்ப்போம். இர ண்டாவது, அந்தமெல்லீசான சருமம் மெய்யான தோலானால் அதிலே அநேகயிரத்தந் தாரைகளுந் தாதுக்களுங் காணப்ப டும். இந்தப் பின்தோலிலே பரிச்சேதமா யொன்றுங் காணக் கூடாதென்கிறார்கள். வேறே சாஸ்திரிகளோவென்றால் இந்த மெல்லீசானதோல் குழந்தை பிறந்தவுடனே சரீரத்தின்மே லே காண்பிக்கிறதினாலே முந்தின சாஸ்திரிகளுடைய பக்ஷம் அநுபவசித்திக்கு விரோதமா யிருக்கிறதென்றும் ஆகையா லது மெய்யாயிருக்கக் கூடாதென்றுஞ் சொல்லுகிறார்கள். இந்தமெல்லீசான தோலானது அலங்காரத்துக்குக் காரணமா யிருந்து பற்பல சீமையிலே பிறந்தவர்களுக்கு வெவ்வேறே வர்ணமாயிருக்கும். இந்தமெல்லீசான தோலினுடைய பிர யோசனமேதென்றால், முந்தமுந்த சருமத்துக்குள்ளே காண் பிக்கிற அனேகந் தாரைகளுடைய முகவிலேயுண்டான சார ங்கள் அப்பாலே போகாதபடிக்கு மூடும். இரண்டாவது பிர தானதோலிலே யுண்டான நரம்புகள்மேலே கண்டிப்புள்ள பொருள்கள் அழுந்தப்பட்டால் மகாநோவு பிறக்குமென்கிற தினாலே நோவுகடினங் காண்பியாதபடிக்கு இந்தமெல்லீசான தோல் மேலே ஆதாரமாயிருக்கும். இந்தமெல்லீசான தோலி ன்கீழே பெரியசருமங் காணப்படும். அந்தச் சருமமானது புற த்திப்பட்ட சகல அவயவங்களை மூடித் தேகத்தையெங்குஞ் சுற்றிக்கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட பெரியதோலானது கைகளிலேயுங்கால்களிலேயும் அரையிலேயு மிடுப்பிலேயு மகா கெட்டியா யிருக்கிறது. முகத்திலே மிகாமிருதுவா யிருக்கி றது. உதடுகளிலே மகாமெல்லீசா யிருக்கிறது.

இந்தச் சருமமானது மிருகங்களிலே யதிகமான பலத் தையும் பருமத்தையுங் கொண்டிருக்கிறது. அவ்வண்ணமே மிருகங்களெல்லாம் வெயிலுக்குங் காற்றுக்கும்படப்படாமல் இரவும்பகலு மெங்குந் திரிகிறதினாலே யிந்தவிகாரங்களினாலே மோசம் வராதபடிக்கு அவைகளுடைய தோலானது மகா கெட்டியா யிருக்கும். இப்படிப்பட்ட சருமத்திலே பெரிய



துவாரங்களுண்டா யிருக்கிறது மல்லாமல் எண்ணப்படாத சின்னத் துவாரங்களுங் காணப்படும். ஒவ்வொரு சின்னதுவா ரத்திலும் சின்னரோமமுண்டு. அந்த உரோமத் துவாரங்கள் வழியாகச் சரீரத்திலே மிஞ்சின சாரங்களும் சலங்களு மற்ற ஆவிகளும் புகைகளும் புறப்படுகின்றன. சலந்திரளாய்ப் புறப் பட்டால் வெயர்வையாகும். கொஞ்சமானால் தேகத்தின் மேலேதானே காய்ந்துபோ யசுத்தமாய் அழுக்காய்ப்போகும். இத்தொகைப்பட்ட ஆவிகளும் புகைகளும் சரீரத்திலே நின் றிடைவிடாமல் வீசப்படுகிறதினாலேவேட்டைநாய்கள் அவை களை முகர்ந்து பார்க்கிறபோது முயலும்மானும்எங்கே ஒதுங்கி யிருக்கிறதென்று பார்க்கிறதுமல்லாமல் தங்களுடைய ஆண்ட வமாரிருக்கிற ஸ்தலத்தைக் கண்டுபிடித்து அவர்கள் கிட்டத் திவரமாய்ப்போகும். இதல்லாமல் சரீரத்திலே நின்றுபுறப்ப டுகிற சாரங்களினாலேயும் ஆவிகளினாலேயும் ஒருவிசேஷமான நன்மையுண்டு. அவ்வண்ணமே யதுகளினாலே சருமமெல்லாம் நனைந்திருக்கும். இல்லாமற்போனால் உலர்ந்து கெட்டுப்போ கும். தேகத்தினுடைய குணங்களுக்குத் தக்கதல்லன்றில்சரு மமுடப்பும், ஒன்றில்வாடும். இந்தப்பிரகாரமாக மகோதரவியா தியிலேயுடப்பும், க்ஷயவியாதியிலேவாடும். சருமமானது சரீ ரத்தினுடைய அவயவங்களோடு வெகுஐக்கியமாயிருந்தாலும் உள்ளங்கையிலேயும், உள்ளங்காலிலேயும் விசேஷமா யொன் றித்திருக்கிறது. ஆனால் வயிற்றிலேயும் நெற்றியிலேயும் அத் தனை ஸ்திரமாய்ச் சேர்ந்ததல்ல. சருமத்துக்குக்கீழே கொழு ப்பு காண்பிக்கும். இந்தகிணைஞ் சரீரத்தைச் சுற்றிக்கொண்டி ருக்கிறது. கொழுப்பானது வெள்ளையா யிருக்கிறது. இதுஇர த்தத்திலேயுண்டான செய்யுள்ள அங்கிஷங்களினாலே கூட்டப் படும். அதனாலே தேகமெல்லாம் வெதும்புகிற சுபாவவுஷ்ண த்தைத் தணிக்கிறது. ஆகாரபான மில்லாதவர்களுக்குச் சில நாளுதவும். அநேகந்தாரைகள் மரங்களுக்குஞ் சருமத் துக்கும் விக்கினமில்லாமற் போகிறதற்குச் சாந்தாசையாயிருக் கும். சந்துகளிலே அவயவங்களுடைய அசைவுக்குதவுகிறது

இப்படிப்பட்ட விசேஷங்களைச் சொல்லிக் காட்டினதற் குப் பிற்பாடு வயிறுக்குண்டாகிய சொந்த வர்த்தமானத்தை வெளிப்படுத்துவோம். அதெப்படி யென்றால்:—வயிறானது ஆகாரத்தையும் பானத்தையுங் கொள்ளுகிற பாத்திரமாகவும் சீரணத்துக்கேற்றபாத்திரமாகவுமிருக்கும். குக்ஷியையும்நெஞ் சையும் பிரிப்பிக்கிற ஒருசருபமுண்டென்று சொன்னோமே.

அந்தத்தோலின் கீழாகவாயிருக்கும். நல்லீரலுக்கும் வாலீ
ரலுக்கும் நடுவிலே குக்ஷிகாணப்படும். ஆனால் நல்லீரலானது
வாலீரலைப்பார்க்கப் பெரிதுமாய்ப் பலமுள்ளதுமாயிருக்கிறதி
னாலே வயிற்றை யிடதுபக்கத்திலே வாலீரலிடமாய்த்தள்ளும்.
கொஞ்சமாய்ச் சாப்பிடுகிறவர்களுக்கு வயிறுசிறிதாயிருக்கும்.
போசனப் பிரியருக்குப் பெரிதாயிருக்கும். இந்தநியாயத்தி
னாலே ஸ்திரீசனங்களுக்கு வயிறு சிறிதாயிருக்கும். புருஷர்க
ளுக்கு விஸ்தீரண வயிறாயிருக்கும். உப்புகிறதற்கும் வாடுகிற
தற்கும் வயிற்றுக்குச் சுபாவபலமுண்டு. வயிறு நீளமாயிருந்
தாலு முருட்சியாயிருக்கும். புறத்திப்பக்க மிருதுவுமாய்வெள்
ளையுமா யிருக்கும். உட்பக்க மெழுகப்பட்ட சிலம்போலே
யிருக்கும். அது பள்ளங்களையுமேடுகளையுங்கொண்டிருந்து செ
கப்பாயிருக்கும். மூன்று தோலாலே மூடியிருக்கும். அதிலே
யெண்ணப்படாத சிலநரம்புகளுண்டு. போசனமானதுசீரண
மானதுக்குப் பிற்பாடு பள்ளங்களிலேமிஞ்சி அசனத்தின் அங்
கிஷங்கள் புளித்துப்போ யந்தநரம்புகளைக் கடித்துப் பசியெடு
க்கும் அந்தநரம்புக ளுலர்ந்துபோனால் தாகமெடுக்கும். மேற்
பக்கத்திலே யொருதுவாரமுண்டு. அதிலே போசனதாரை
மூடியும். அது அநேக நரம்புகளினாலே மூடியிருக்கும். இந்
தப்போசனதாரையிலே ஆகாரமும் பானமும் விழுகிறபோது
முன் சொல்லப்பட்ட துவாரந் திறந்திருக்கும். வயிற்றிலே
விழுந்தவுடனே யந்தவாசல் மூடிப்போம். அதற்குக்காரண
மேதென்றால். முதல்முந்த அந்தத்துவார மடைபட்டிருக்கிற
தினாலேவயிற்றிலேயுண்டான வுஷ்ணம அப்பாலேபோகாமலும்
சிதறாமலும் சேமிக்கிறதற்கு அதிகமான பலமாயிருக்கும்.
இரண்டாவது: வயிற்றிலேவிழுந்த அசனமேற்சாறும் அசைவி
னாலே கொதிக்கிறபோது மேலே யேறுதபடிக்குத்தடுக்கிறது.
வலதுபக்கத்திலே வேறொருதுவார மிருக்கிறது. அதுவயிற்றினு
டைய இரண்டாம்வாசலென்று சொல்லப்படும். அந்தவாசல்
வழியாக வயிற்றிலே ஜெரித்த ஆகாரபானங்கள் கூழாய்ப்
போன பிற்பாடு குடல்களுக்குள்ளே சுற்றிக்கொண்டுபோம்.
இப்படிப்பட்ட வாசல் சின்னதாயிருக்கும். அதைத் திறக்கிற
தற்கும் அடைக்கிறதற்கும் நம்முடைய மனதின்படியே வரா
மல் தனதுசுபாவமான அசைவினாலே மாத்திரம்வரும். குக்ஷி
யினுடைய பிரதான பிரயோசனமேதென்றால், வயிற்றிலே
விழுந்த அசனமும்பானமும் கலந்திருந்ததற்குப் பிற்பாடுஆன
வகையோடே கூழாய்ப்போய்ச் சீரணமாகிறதற்கு வயிறுபிர
தான எத்தனமாயிருக்கும். ஆனால்இதெல்லாம் நன்றாய்க்கண்



டுபிடிக்கிறதற்கு அடியிலேதுவக்கி யிந்த ஆச்சரிய விசேஷத்
தை வெளிப்படுத்தக்கடவோம். அதெப்படியென்றால்:—

போசனதாரை வாயிலேதுவக்கி வயிற்றினுடைய துவார
மட்டும் போமென்று சொன்னோமே, அசனத்தை வாயிலே
போட்டதற்குப் பிற்பாடு முன்வாய்ப் பல்லுகளினாலேயும்
கடைவாய்ப் பல்லுகளினாலேயும்அதைக்கடித்து மெல்லுகிற
போது மேல்வாயாகிற அண்ணத்திலேயும் நாக்கிலேயும் உண்
டான வுமிழ்நீர்களோடு கலந்து செரிக்கத் துவக்கினதற்குப்
பிற்பாடு விழுங்குகிற சமயத்திலே முன் சொல்லப்பட்ட
போசனத் தாரையின் வாயைத்திறந்து சுவாசத்தாரையை
யடைத்து உள்நாக்கு பாலம்போலேயிருந்து நரம்புகளுடைய
பலத்தினாலே மென்றஅசனத்தைப் போசனத் தாரையிலே
தள்ளி விழுங்கின போசனம் வயிற்றிலேவிழும். இந்தப்பிரகா
ரமாகப் பானமும் வயிற்றிலே விழுந்ததற்குப் பிற்பாடு போச
னத்தைச் சமைக்கிறதற்குக் குக்ஷிசட்டிபோலே யிருக்கும்.
சமீபமாயிருக்கிற அவயவங்களுடைய உஷ்ணமுங் கொளுத்
தின கொள்ளிபோலே யிருக்கும். இதல்லாமல் வயிற்றிலே
தானே அநேகஞ் சின்னபைகளுண்டு, அவைகள் புளிக்கப்
பட்ட ரசங்களினாலே நிறைந்திருக்கும், அந்தப்போசனத்தினு
டைய கனத்தினாலே பையிலேயுண்டான மகாபலமுள்ள ரசம்
புறப்பட்டு அதினுடைய வுக்கிரத்தினாலேயும் காற்றினாலேயும்
அங்கிஷங்களெல்லாம் பிரிந்துகொதித்து அசனமும் பானமும்
கலந்து கூழாய்ப்போம். கூழாய்ப்போன போசனஞ் சாம்பல்
நிறமாயிருக்கும். அதின்பின்பு வயிற்றிலே சீரணமான அங்கி
ஷங்கள் வலதுபக்கத்திலே யுண்டான வாசல்வழியாகப் புறப்
பட்டுக் குடல்களுக்குள்ளேபோம். குடலுடைய சுபாவமே
தென்றால், தோலாலே யுண்டாக்கப்பட்டகுழல். அந்தக்கு
ழல் வட்டமாயிருக்கும். வயிற்றினுடைய வாசலிலே துவக்கி
அபானவாய்மட்டும்போம். குடலினுடைய நீளம் பெரியவர்க
ளுக்கு 28 முழமிருக்கும். சிலவிடங்களிலே பருமஞ் சிறிதா
யிருக்கும். சிலவிடங்களிலே பெரிதாயிருக்கும். அந்தக்குட
லெல்லா மெல்லிசான தத்துவங்களால் சுற்றிக்கொண்டிருக்
கும். இந்தத்தத்துவங்கள் மெல்லிசான மாங்கிஷச் சீலைகளைப்
போலிருக்கும். சவுக்கம்போலே யிருக்கிற இந்தமெல்லிசான
மாங்கிஷம் முள்ளெலும்போடே கட்டியிருக்கும். குடல்க
ளேதென்றால் சுற்றிக்கொண்டுபோகாமல் செவ்வேபோனால்
அவயவங்கள் வேண்டியசாரத்தைச் சுவிகரிக்கிறதற் கவகாச

யில்லாமலிருக்கிறதுந்தவிர மனுஷர்சாப்பிட்டுச் சற்றுநேரத்துக் குள்ளேதானே சலவாதிக்குப் போகவேண்டி யிருக்கும். ஆனபடியினாலே யித்தனை விக்கினம்வராதபடிக்குக்குடலிலேயிருக்கிற பிரணமான சாரம் அநேகவிசை சுற்றிக்கொண்டு வரும். இதுவும்படாமல் மெள்ளமெள்ளப் போகிறபோது அந்தச்சாரம் வெண்மைபொருந்தின ரசம்போலேயிருக்கும். அந்தவெள்ளை ரசமுழுதும் பாலுக்குச்சமானமாயிருக்கும். இப்படிப்பட்ட வெள்ளைரசத்தைக் குடலுக்குள்ளேதள்ளுகிறதற்கு இரண்டு குணமுண்டு. முந்தமுந்த குடல்களிலே யுண்டான மாங்கிஷ நூல்களுடைய விசேஷத்தினாலே வெள்ளைசாரந் தள்ளுண்டுபோம். இரண்டாவது—வெள்ளைரசமானது வயிற்றினுடைய வாசலைக்கடந்தவுடனே யிரண்டுதாரைகளிலேநின்று மகாபலமுள்ள விசேஷமான ரசமும் பித்தமும் அந்தக்குடலிலே விழுந்து அந்தரசங்களுடைய அங்கிஷங்கள் அக்கினி யணுக்கள்போன்றதாய் அந்தவெள்ளை சாரத்தோடேகலந்து அதையசைத்து அப்பாலேயிழுக்கும். இந்தக்குடல் மெல்லிசான மாங்கிஷச் சிலையைச் சுற்றிக்கொண்டிருக்கிறதென்று சொன்னோமே. அதினுடைய நடுவிலே சின்னக்குளம்போலே யிருக்கிறது. அதிலே பெல்லனப்பாத பால்த்தாரைகள் புறப்பட்டுக் குடலுக்குள்ளேபோம். அந்தச்சின்ன பால்த்தாரைகளுடைய வாயானது குடலுக்குள்ளே புகுந்து வெள்ளை ரசத்தினுடைய மெல்லிசான அங்கிஷங்களைக்குடிக்கும். குடித்ததற்குப் பிற்பாடு அந்தத் தாரைகளிலேயோடி முன்சொல்லப்பட்ட குளத்திலே பாலபோலே யிருக்கிற வெள்ளைரசம்விழும். இப்படியேவெண்மையான சாரத்தினுடைய நல்ல அங்கிஷங்களைப் பால்த்தாரைகள் குடிக்கிறதற்குப் பிற்பாடு ஒன்றுக்கும் ஆகாத மலத்தின் அங்கிஷங்கள் மாத்திரம் நின்றுபோம். அவைகளுந் கடைசியிலே அபானவாயிலால் வெளிப்படும்.

இதெல்லாம் எவ்வளவாகிலுங் கண்டுபிடிக்கிறதற்கு ஒருவமையினாலே தெரியப் பண்ணுவோம். அதெப்படி யென்றால், வட்டரூபமாயிருக்கிற ஒருபெரியவலை யுண்டென்று விசாரித்துக்கொள். அந்தவலையைச் சுற்றிப் பெரியஒருகயிறு கோத்திருக்கிறதாகவும் அந்தவலையின் மையத்திலே யொருபாத்திரம் இருக்கிறதாகவும் அந்மையத்திலே யிருந்து அநேகசின்னக் குழல்கள் கயிற்றின்மட்டு போகுகிறதென்றும் நினைத்துக் கொள். முன்சொல்லப்பட்ட பெரியகயிறு குழல்போலாயாக விருந்து அதற்குள்ளாகத் தண்ணீராகிலும் பாலாகிலும்



வேறேரசமாகிலும் ஓடினால் இப்படிப்பட்ட ரசஞ்சின்னக்குழல்களுக்குள்ளே புகுந்து அதுகளுடைய முனையிலே மையத்திலிருக்கிற பாத்திரத்திலே செவ்வேவிழுமல்லவா இந்தப்பிரகாரமாகக் குடல்களிலுண்டான வெள்ளைரசஞ் சுற்றிக்கொண்டு வருகிறபோது சின்னபால்த் தாரைகளிலே பிரவேசித்து அந்தத் தாரைகளுடையவழியாக மெல்லிசான மாங்கிஷசிலையினுடைய சின்னகுளத்திலே விழுகிறதென்று யோசிப்பாயாக. இந்தக்குளத்திலேயும் ஒருதாரையுண்டு. அந்தத் தாரையின் வழியாகக் குளத்திலவிழுந்த வெள்ளைரசம் ஏறிப்பெரிய விரத்தக்... விழுந்து இரத்தத்தோடு கலந்து இருதயத்திலே விழுந்து இருதயத்திலிருக்கும் இரண்டுதாதுகள் வழியாகச் சரீரத்தினுடைய சகல அவயவங்களுக்கும் தத்துவங்களுக்கும் வேண்டிய சாரத்தைக்கொடுக்கும்.

இப்படிப்பட்ட அதிசயமான விசேஷங்களை யாதாமொருத்தன் முழுதும் நிரவிசாரித்தாலவசியமாயந்தத்தத் துவங்களை யுண்டாக்கினவருமாய் மட்டில்லாத கிரமத்தோடே நடத்திக் கொண்டு வருகிறவருமாகிய சர்வேஸ்வரன்பேரிலே தோத்திரம்பண்ணுவானொழிய மற்றப்படியல்ல.

வயிறு கல்லீரலுக்கும் வாலீரலுக்கும் அடியிலே ஸ்தாபிக்கப்பட்டதா யிருக்கிறதென்று சொன்னோமே. இப்போது இந்த கல்லீரலினுடைய வர்த்தமானத்தைத் தெரியப்பண்ணுவோம். முந்தமுந்த கல்லீரலானது வலதுபக்கத்திலிருக்கிறது. இது மாட்டினுடைய குளம்புபோலிரண்டாய்ப் பிரிந்துபோம் குக்ஷியையுநெஞ்சையும் இரண்டு அங்கமாகப் பிரித்திருக்கிற சருமத்தோடு ஒட்டியிருக்கும். மேலும் அது உறைந்த விரத்தம்போலிருக்கும். ஏறக்குறைய எப்போதுஞ் சிவப்பாயிருக்கும். அநேகவி ரத்தத்தாலாகளுந் தாதுகளு மதனோடு கலந்திருக்கிறது. அதில் விசேஷமாக பித்தத்தினுடைய தாரைகள் காணப்படும். கல்லீரலுடைய பிரயோசன மேதென்றால், இரத்தத்தைச் சுத்திகரிக்கிறதற்குதவும். அவ்வண்ணமே பித்தத்தைக் கொண்டிருக்கிறவிரத்தமான துகல்லீரலுக்குள்ளே போகிறபோது வடிக்கட்டப்பட்டுப் புறப்பட்ட பித்தம் அங்கேயிருக்கிற பித்தத்தாரைக்குள்ளே போம். அதற்குப்பிற்பாடு இந்தப் பித்தத்தாரை ஒன்றில் குடலுக்குள்ளே போம். ஒன்றில் பிச்சினுடைய பையிலேவிழும். கல்லீரலை யுயர்த்தினால் கீழே பிச்சினுடையபை காணப்படும். அந்தப் பிச்சுப்பை கோழிமுட்டை ரூபமாயிருக்கும். காலுசருமத்தி

னுலே கூட்டப்பட்டதா யிருக்கும். கல்லீரலுக்குள்ளே பதிந் திருக்குமாப்போலே யிருக்கும். ஒன்றுமாத்திர மிருக்கும் இரண்டு காணுகிறது அபூருபம் அதினுடைய தாரைகுடலுக்குப் போம். புறவுக்குப் பித்தினுடைய பையில்லை.

வாலீரலினுடைய வகையேதென்றால்: இது குட்சியினுடைய இடதுபக்கத்திலே காணப்படும். கல்லீரலைப் பார்க்க சிறியதாயிருக்கும், அதினுடைய நீளம் எட்டு விரற்கடை. அதினுடைய அகலம் மூன்றுவிரற்கடையுள்ளது. ஒருபெரு விரற்கடை மாட்டி [illegible] போலிருக்கும். கடிவிலே வெள்ளை நூல்போலே யிருக்கும். குழ [illegible] ல் சிவப்பாயிருக்கும். பெரியவர்களுக்குக் கறுத்தாற்போ லிருக்கும். இதற்குக் காரணமேதென்றால்:—சிலேஷ்மசாரம் அதிலே கலந்திருக்கிறபடியினாலே அப்படியிருக்கும். வயதுள்ளவர்களுக்குக் கெட்டுப்போன பச்சைபோலிருக்கும். அதிலே அநேகந்தாரைகளுண்டு. இப்படிப்பட்ட வாலீரலிலே யிரத்தமோடுகிறபொது மிஞ்சின சிலேஷ்மரசம் வடிக்கட்டப்படும்.

இதல்லாமல் வாலீரலுக்கருகில் அநேகஞ் சிறுமாங்காய்க் குலைபோலே யிருக்கிற ஒருதத்துவமுண்டு. அது வயிற்றினுடைய கீழ்ப்பக்கத்திலே யிருக்கும். இடதுபக்கத்திலே விசேஷமாய்ச் சாய்ந்திருக்கும். அதிலே யிரத்தம் வடிக்கட்டப்படுகிறபோது புளித்தரசம் புறப்படும், அதுமஞ்சள் வர்ணமாயிருக்கும். இப்படிப்பட்ட சாரம் விசேஷமான தாரைவழியாகக் குடலுக்குப்போம். இந்தப்புளிக்கிற ரசமும் பித்தநீரும் குடலிலேயுண்டான வெள்ளைரசத்தை அப்பாலே தள்ளும். கடையிலே யிரண்டு மாங்காய் காணப்படும். ஒன்று கல்லீரலுக்குக் கீழேயிருக்கும், ஒன்று வாலீரலுக்குக் கீழேயிருக்கும். இடதுபக்கத்திலே மாங்காய் மேலந்தஸ்திலே யிருக்கும். வலதுபக்கத்திலே யிருக்கிறமாங்காய் கீழந்தஸ்திலே யிருக்கும். அந்த மாங்கா யொன்றுக்கொன்று நாலுவிரற்கடை தூரமுண்டு. பெரிய விரத்தத்தாரைகளோடு கலந்திருக்கும். நீளம் நாலுவிரற்கடை, அகலம் மூன்றுவிரற்கடை, பருமம் இரண்டுவிரற்கடை. மேற்பக்கஞ் சமனாயிருக்கும் ஒருவகை செகப்புவர்ணமாயிருக்கும். ஒவ்வொருமாங்காய் வழியாய் பெரியதாது ஓடுகிறது. அதிலேயுண்டான விரத்த மாங்காயிலே வடிக்கட்டுண்டுபோய்ச் சிறுநீர்புறப்படும். ஒவ்வொரு மாங்காய்க்குள்ளே ஒருகெவிபோலே யிருக்கும். அதிலேவிழுந்த சிறுநீர் இரண்டுதாரையாக மூத்திரப்பையிலே விழும்.



இந்த விஷயத்திலே கனமான வதிசய முண்டு. அவ்வண்ணமே ஆட்டினுடைய மூத்திரப்பையைப் பார்க்கும்போது அதிலே யெத்தனை தண்ணீர் வார்த்தாலும் உள்ளே விழாது.

இதெல்லாம் இப்படியிருக்கையிலே யெந்தவிதமாகச் சிறுநீர் மூத்திரப்பையிலே பிரவேசித்தது? இப்படிப்பட்ட விசேஷத்தைக் கண்டுபிடிக்கிறதற் குரியவேடிக்கையதாவது:— மூத்திரப்பையானது இரண்டு தோலாலே கூட்டப்பட்டதாயிருக்கும். மூத்திரத்தாரை ஒருபக்கத்திலே முன்தோலிலே பிரவேசித்து இரண்டு [illegible] சற்றுநேர [illegible] இருக்கிற விரண்டாந் தோலினுடைய இன்ன துவாரத்துக்குள்ளே புகுகிறது. ஆனபடியினாலே போனவழியிலே திரும்ப வருகிறதற் கவகாசமில்லை. இந்த விரண்டு மாங்காய் கிட்ட புளித்திருக்கிற ரசத்தினுடைய விரண்டு பைகளுண்டு.

இப்படிப்பட்ட காரியங்களிலே யிரண்டு மூன்று ஆச்சரியமான விசேஷங்களை பற்றி விசாரிக்கவேணும் முக்கமுந்தப்போசனமானது குடல்களிலே வெள்ளை ரசமாயிருந்து பிறகுஇரத்தமாய்ப்போ யெங்குஞ் சிதறியிருக்கிறபோது அந்தத்தத்துவங்கள் தனது சுபாவத்துக் கொத்திருக்கிற அம்சங்களைமாத்திரஞ் சுவீகரிக்கும். மற்ற அம்சங்களை விட்டுவிடும். இரண்டாவது:—எந்தத்தத்துவமானாலும் நன்றாயிருக்கிறதற்கு வேண்டிய சாரத்தைமாத்திரஞ் சுவீகரிக்குமல்லாமல் அதிகமாய் வாங்காது. மூன்றாவது:—வயிறானது சுயம்பாகிபோலேயிருக்கிறது. அது தன்னிடத்திலே விழுந்ததெல்லாஞ் சமைத்துச் சீரணமாக்கிச் சகல அவயவங்களுக்கும் வேண்டிய சாரங்களைக் கொடுத்துத் தனது இரத்தத்தாரைகளுடைய வழியாக வருகிற பங்கைமாத்திரஞ் சுவீகரிக்கும்.

இதெல்லாந் தியானிக்கிற மனுஷனானவன் தன்னுடைய சுபாவ மகிமைக்குப் பொருந்தினவைமாத்திரம் அபேட்சிக்கவேணுமல்லாமல் மற்றுமுண்டான லௌகீக காரியங்களைச் சட்டைபண்ணும விருப்பதற்கவிர அவசரமான லவுகீக காரியங்களை அநுபவிக்கிறபோது மட்டோடேயும் மேரை மரியாதையோடேயும் அவைகளை யடையவேணுமொழிய மற்றப்படியல்ல. கடைசியிலே தனக்கவசியமாயிருக்கிற காரியங்களில் வேண்டியதை மாத்திரம் வாங்கி மற்றதுகளை யெல்லாம் வேறேபேர்களுக்கு உதாரமாய்க் கொடுக்கக்கடவான்.

## ௰௮-ம் அதிகாரம்.

### சாணகராதி விவரம்.

அடிப்பிண்டத்துக்கடுத்த சுபாவத்தையும் அதிசயமான குணங்களையும் சொன்னதற்குப் பிற்பாடு அடிப்பிண்டத்தோடு கட்டப்பட்டிருக்கிற சாணகாராதியின் விவரத்தைவெளிப்படுத்தவேணும். காலும், பாதமும், பிண்டத்துக்கு அஸ்திவாரமாயிருக்கிறது. கையோவென்றால், சகல காரியங்களுக்கும் பிரதான [illegible] கிறதென் றனுபவசித்தினாலே கண்டுபிடிக்கிறோம். அதெப்படியென்றால், மிருகங்களுக்குச் சுபாவமா யுண்டான ஆயுதங்கள் மனுஷருக்கில்லாமற் போனாலும்சகலமான ஆயுதங்களைப் பண்ணுகிறதற்கான கைகளுண்டாயிருக்கிறதினாலே அநேக ஆயுதங்களைச்செய்து மிருகசாதிகளை யெல்லாந் தனக்குக் கீழ்ப்படியக் கட்டாயஞ்செய்வான். தப்பில்லாத கிரமத்தோடு காரியங்கள் யாவையும் நடத்துகிற பராபரவஸ்துவானவர் மனுஷருக்குப் புத்தியைக் கட்டளையிட்டிருக்கிறபோது அந்த நரசீவன் யோசிக்கிற விசேஷங்களைச்சொல்லுகிறதற்குக் கையானது எத்தனமாயிருக்கும். இந்தக் கையினாலே சகலமான தொழில்களெல்லாம் வரும். ஆத்துமத்திலே யுண்டான விசாரங்களும், ஆலோசனைகளும், ஆசைகளும், எண்ணங்களும் கையினாலே யறியலாம். கையினாலே தேவாலயங்கள், அரமனைகள், உப்பரிகைகள் கட்டப்படும், குளங்கள், ஏரிகள் வெட்டப்படும், கையானது உழுகிறதற்கும், விதைக்கிறதற்கும், அறுக்கிறதற்கும், நாட்டுகிறதற்கும், இறைக்கிறதற்கும், சமைக்கிறதற்கும், வஸ்திரங்களைப் பண்ணுகிறதற்கும், எழுதுகிறதற்கும், சரீரத்தைப் பராமரிக்கிறதற்குங் கூடுமாயிருக்கின்றது, கையினாலேவார்த்தைபாடுகொடுக்கலாம், அழைப்பிக்கலாம், அனுப்பலாம், தட்டலாம், மன்றாட்டுவரங் கேட்கலாம், கொடுக்கலாம், அடிக்கலாம், பாஷைகளை யறியாதவனோடும் பேசலாம், கையானது கரியங்களெல்லாஞ் சோதிக்கிறது. கையின் ஸ்பரிசத்திலே குளிர், உஷ்ணம், உலர்தல், ஈரம், ஆக நாலு குணங்கள் தெரியும். கண்டிப்புள்ள வஸ்து கடினமோ, மிருதுவாயிருக்கிறதோவென்று தெரியும். கண்டிப்புள்ள வஸ்துக்களிலெந்தெந்த வஸ்துவைப் பிடுங்க, எடுக்க, சுமக்க, தள்ள, எறிய பிடிக்கவேணுமோ அதெல்லாத்துக்குங் கரமானது உதவும். கையினாலே நோவுகளை யமத்தலாம், மருந்துகளை வாங்க



லாம் அவுஷதங்களை விசாரிக்கலாம், தயிலங்களைப் பூசலாம், சரீரங்களை யிரக்ஷிக்கலாம். கண்டசிலே மகாபேர்பெற்றான ஒரு சாஸ்திரியானவர் "கரமானது எத்தனங்களுக்கும் எத்தன காரணங்களுக்கும் காரணமா யிருக்கிறதென்பது நிச்சயம்" என்று திருவுளம்பற்றினார்.

இப்படிப்பட்ட கையானது தோள்துவக்கி விரல் நகமட்டும் அடங்கி யிருக்கிறது. அதிலே 31 அஸ்திகளுண்டென்று சொன்னோமே, இப்போதைக்கு அதுகளுடைய விபரத்தைத் தெரியப் பண்ணுவோம். முந்த முந்தத் தோளஸ்தியானது அகலமா யிருந்தாலும் [illegible] யில்லை பிறகே [illegible] ருக்கும், முக்கோணரூபமாயும் படிமானமாயுங் கொஞ்சங் கவிழ்ந்ததாகவு மிருக்கும். கைப்பட்டையைச் சரீரத்தோடு கட்டுகிறதற்கு அஸ்திவாரம்போலே யிருக்கும். இது கையினுடைய அசைவுக்குக் குதவும். இந்தக் கைப்பட்டை யோவென்றால், பெரியதா யிருக்கும். சற்று நடுவிலே குவிந்திருக்கும் அதினுடைய தலைபெரியதாயிருக்கும், மூளையினாலே நிறைந்திருக்கும். தலையிட்டவொரு சின்ன வாய்க்கால்போலே யிருக்கிறது அதிலே யொருநரம்பு பதிந்திருக்குமாப்போலே காண்பிக்கும். முடிவிலே அகலமாயிருக்கும், அவ்வண்ணமே முன்கையினுடைய இரண்டு அஸ்திகளோடு கட்டி யிருக்கிறது. இந்த முன்கையின் பெரிய அஸ்தியானது வளைந்திருக்கிறபோது அதினுடைய தலைப்பாகிற முழங்கை கூர்மையுள்ள கோணல் காண்பிக்கும். அந்தத் தலைமேலே துவக்கி முழம் அளந்து பார்க்க நிர்ணயித்திருக்கிறது. முன்கையின் கதிரென்கிற விரண்டாமஸ்தி மணிக்கட்டின் கிட்டபருமமாயிருக்கும். இந்தஇரண்டஸ்திகளுக்குப் பிற்பாடு நாடி பார்க்கிற விடத்திலே யெட்டு சின்ன அஸ்திகளுண்டு, அவைகள் ஒன்றோடொன்று சேர்ந்திருக்கிறது இந்த எட்டெலும்புகளும் உண்டைபோலிருக்கும். உள்ளேதோன்றியிருக்கிறது. உள்ளங்கையிலே நாலுநீளமான அஸ்திகள் விரல்கள் மட்டும்போம். பெருவிரல் கிட்டவிருக்கிற அஸ்தி சற்றுப் பருமமாயிருக்கும், போகப்போகவேறே மூன்று அஸ்திகளும் பருமத்திலே குறைந்துபோம். விரல்களிலேபதினைந்து அஸ்திகளுண்டு, ஒவ்வொரு விரல்களிலே மூன்றஸ்திகளுண்டு. அந்த அஸ்திகள் எளிதா அசைகிறதற்கு உட்பக்கத்திலே பள்ளமும் புறத்தியிலே மேடுமாயிருக்கும்.

இப்போது கால்களின் வகைகளை யோசிக்கக்கடவோம் கைப்பட்டையிலே யொரு அஸ்தி யிருக்குமாப்போலே து

டையிலே யொரு அஸ்திமாத்திரமுண்டு. அதினுடைய தலைப்பிலொரு சின்னவாய்க்கால்போலே யிருக்கும். அதற்குள்ளே யொரு நரம்பு மறைந்திருக்கும். இந்த அஸ்திசற்றுகவிழ்ந்திருக்கிறது. துடையினுடைய அஸ்தி முடிவிலேயும் குதிரைமுக அஸ்தியின் துவக்கத்திலேயும் ஒரு சிறுவளையமுண்டு. அதற்கு முழங்காற்சில்லென்று பெயருண்டாச்சுது. குழந்தைகளிலே அந்த அஸ்தி கெட்டியுள்ள மாங்கிஷமாயிருக்கும் நாள்வட்டத்திலே யெலும்பாய்ப்போம். காலிலே யிரண்டு அஸ்திகளுண்டு. குதிரை முகஅஸ்திகெண்டைக்கால் அஸ்திஇதுகளுடைய [illegible] காடு தூணைப்படும். அதற்குப் பிற்பாடு பாதத்திலே பனிரண்டு சின்ன அஸ்திகளுண்டு. அதுகளில் குதிநால் விசேஷமாயுதவும். அவ்வண்ணமே சரீரமல்லாக்காய் விழாதபடிக்கு அதை நிறுத்துகின்றது. கால்விரல்களிலே பதினாலு அஸ்திகளுண்டு. அதெப்படியென்றால் பாதத்தினுடைய பெருவிரலிலே யிரண்டு அஸ்திகளும் மற்றதுக்கு மும்மூன்று அஸ்திகளும் உண்டு.

இவைகளை யெல்லாம் அறிந்தபிற்பாடு இன்னமுங் கைகால் முதலான அவயவங்கள் அசைகிறவகையைக் கண்டுபிடிக்கிறதற்கு அறியவேண்டிய அநேகஅதிசயமான காரியங்களுண்டு. முந்தமுந்தத்தலையிலேயுண்டான மூளையிலேநின்று நரம்புகளுடைய பத்துச்சோடு புறப்படுகிறதென்றும் முள்ளெலும்புகளுக்குள்ளே யுண்டான மூளையிலேநின்று வேறே நரம்புகளுடைய முப்பத்திரண்டுசோடு புறப்படுகிறதென்றுஞ் சொன்னோமே, அந்நரம்புகளைக்கொண்டு சரீரத்துக்குநோவும் மகிழ்ச்சியும் வருகிறதுமல்லாமல் முன்சொல்லப்பட்ட நரம்புகள்தானே சகலமான அசைவுகளுக்குங் காரணமாயிருக்கின்றன. அதெப்படியென்றால், மூளையிலேநின்று நரம்புகள் புறப்படுகிறபோது வேறேகலப்பில்லாதிருந்தால் அவைகளுக்கு மூளைநரம்பென்கிற பேர்செல்லும். ஆனாலிந்தமூளையினரம்புகள் அப்பாலேபோகிறபோது சகலமான தத்துவங்களுக்குள்ளும் பிரவேசித்து நரம்புகளுடைய நூல்கள் பிரிந்துபோய் மாங்கிஷங்களோடேயும் இரத்தத் தாரைகளோடேயுந் தாதுக்களோடேயுங் கலந்திருக்கும்போது அப்பொழுதிந்தக் கூட்டத்துக்கு மாங்கிஷநரம்புகளென்கிறபேர்செல்லும். அதின்பிறகு மறுபடி நரம்புகளோடு சிலமாங்கிஷங்கள்கூடி யெலும்புகளோடு ஐக்கமாயிருக்கும்போது அதுகளுக்கு மாங்கிஷக்கற்றை நரம்புக ளென்கிற பேர்செல்லும். இதல்லாமல் ஒரு காரியத்தை ஸ்திரமாய்ஸ்தாபிக்கவேணும். அதென்னவென்



றால், முன்சொல்லப்பட்டநரம்புகளுடைய நூல்களு உள்ளே நுழைந்திருக்கிறதினாலே யந்தநூல்களுக்குள்ளே நிகுதியான சீவஅணுக்கள் பிரவேசிக்கும்போது மூளையினரம்புகளும்மாங்கிஷநரம்புகளும் மாங்கிஷக்கற்றை நரம்புகளும் சுருங்கிப்போவதினாலே அதுகளோடயிக்கமாய்க் கட்டியிருக்கிற எலும்புகளும் அவயவங்களும் அசைந்து ஒன்றில்நீட்டுகிறது, ஒன்றில்முடக்கிறது. ஆனபடியினாலே கையசைக்கவுங், கால்நடக்கவும், என்னவேண்டி யிருக்கிறதோ மனதுகட்டளையிட்டதின்படியே சிரசிலே சீவவணுக்கள் நரம்புகளுடைய குழலுக்குள்ளே பிரவேசித்து அந்த நரம்புகளோடு கட்டியிருக்கிற கையுங்காலும் அசையும். ஆகையால் நீட்டுகிறது முடக்கிறது என்கிற விரண்டசைவுகளுடைய வகையிலே சகலஅவயவங்களுடைய அசைவுகளும் அடங்கியிருக்கிறது. அவ்வண்ணமே பற்பல நரம்புகளினாலே சீவஅவயவங்கள் வளைந்துபோகும். சிலதுகளுயர்த்தப்படும். சிலநரம்புகள் பிடிக்கிறதற்கும், அமிழ்த்துகிறதற்கும், திறக்கிறதற்கும், மடக்கிறதற்கும், தாழ்த்துகிறதற்கும், உயர்த்துகிறதற்கும் இதுமுதலான எண்ணப்படாத வகைகளுக்கும் பிரதானகாரணமாயிருக்கிறது. ஆனால்கடினமான அசைவு வேண்டியிருந்தால் மூன்று நாலுநரம்புகள் கூடிக்கொள்ளும். இதற்கப்பாலறியவேண்டியதாவது. மனுஷன் எந்தநேரத்திலே தேகத்தையசைக்க மனதாயிருக்கிறானோ அதந்க்ஷணத்திலே தானே யசையும். ஆனால்சிரசின் மூளையிலேயுண்டான சீவஅணுக்கள் பாதத்துக்குத் தீவரமாய்ப்போனாலும் நாலைந்து க்ஷணம் வேண்டாமோ? இதற்குப் பிரத்தியுத்தரமேதென்றால், நரம்புகளெல்லா மெப்போதுஞ் சீவஅணுக்களிலே நிறைந்திருக்கும். ஆனபடியினாலே புதுசாய் நரம்புகளுடைய தலைப்பிலே மனதுகட்டளையிட்டதின்படியே சில சீவவணுக்கள் பிரவேசிக்கிறபோது அந்தக்ஷணத்திலேதானே பாதத்துக்குப்போகிற நரம்புகள் சுருங்கிப்போய்ப் பாதத்தையசைக்கும். இதெல்லா மோருவமையினாலே வெளிப்படுத்துவோம். அதெப்படியென்றால், பெரியதுரைகளுடைய சிங்காரத்தோப்புகளிலேயும் அரமனைகளுடைய விசேஷமான அங்கணங்களிலேயும் தண்ணீரினாலே நிறைந்திருக்கிற குளங்களுண்டு. அக்குளத்திலேயிருந்து அநேகஞ் சலதாரைகள்பற்பல சலசூத்திரங்களாகப்போம். இந்தத் தாரைகளெல்லாந் தண்ணீரினாலே நிறைந்திருந்தாலும் ஒருதிருகாணி நிமித்தமாகத் தண்ணீர்வராது. இதிப்படியிருக்கையிலே குளத்துக்குந்தண்ணீர்கிளம்புகிற ஸ்தலத்துக்கும் எத்தனை தூரமா யிருந்தா

னும் எந்தக்ஷணத்திலே தோட்டக்காரன் திருகாணியைத் திருப்பினானோ அந்தக்ஷணத்திலேதானே தண்ணீர் ஆகாயத்திலே கிளம்பியேறும். அத்தன்மைபோலச் சீவ அணுக்களினாலே நிறைந்திருக்கிற சிரசின் மூளையானது குளத்துக்குச் சமானமும், தண்ணீரினாலே நிறைந்திருக்கிற சலதாரைக்குச் சீவவணுக்களினாலே நிரம்பியிருக்கிற நரம்புகள் சமானமும் ஆகும். மனதானது தோட்டக்காரனுக்குச் சமானமாகும். ஆனபடியினாலேஎந்தக்ஷணத்திலேமனதின்படியேசீவ அணுக்கள்நரம்புகளுடைய வாயிலே பிரவேசிக்கிறதோ அப்போதே அந்தத்தின்நரம்புகளுடைய முடிவிலேயுண்டான சீவவணுக்கள் தசைநார்புகளோடிருக்கிறதினாலே நரம்புகளாற் கோர்க்கப்பட்ட பாகங்கள் அசையும். ஆனாலிந்த அசைவுகளால்சீவவணுக்கள்மெத்தவுஞ்சிதறிப்போனதினாலேயும்,சரீரத்திலேநின்றுரோமத்துவாரங்கள் வழியாகச் சிலது தப்பிப்போகிறதினாலேயும், தலையிலுண்டான சீவவணுக்கள் இத்தனை யசைவுகளுக்குப் போதுமென்று விசாரிக்கவேண்டாம். இதுநிமித்தமாக அங்கங்கே சிதறி சீவ அணுக்கள் இரத்தத்தாரைகளுக்குள்ளேயகப்பட்டு ஓடுகிற விரத்தத்தோடுசுற்றிக்கொண்டுபோய்த்திரும்பவுந்தலையிலே வருகிறதினாலேயும் ஆகாரபானத்தி னிமித்தமாகவெவ்வேறே சீவவணுக்கள் சிரசின் மூளையிலே வடிக்கட்டுண்டு போமென்கிறதினாலேயும் தப்பிப்போன சில அணுக்களுக்கு வேறேசில அணுக்கள் அடிக்கடி தலையிலேயேறும். இந்தப்பிரகாரமாக விராத்திரிமுழுதும் ஒருகொல்லன்கையையசைத்தாலும் வழிப்போக்கன் பகலெல்லாங் கால்நடைநடந்தாலும் கைகளுக்குங் கால்களுக்கும் வேண்டிய சீவவணுக்களுண்டாயிருக்கும். இப்படியே சீவவணுக்களினாலே நரம்புகள் நிரம்பியிருக்கும்போது அவயவங்கள் அசையுமென்று அநுபவசித்தியினாலே யொப்பிவிக்கலாம். அதெப்படியென்றால், யாதாமொருத்தன் பாதத்தின்மேலே யென்கிலும் கைமேலேயென்கிலும் உட்கார்ந்திருந்து மூன்றுநாழிகையளவாய்த் தங்கியிருந்தால் அப்போது பாதத்தையுங் கையையும் அசைக்கமாட்டான். அவ்வண்ணமே சாணக்ராதியி னரம்புகள் சரீரத்தினுடைய கனத்தினாலே அமிழ்ந்தி யிருக்கிறபடியினாலே நரம்புகளுக்குள்ளே சீவ அணுக்க ளோடுகிறதற் கவகாசமில்லை. ஆனபடியினாலே யசைக்கமாட்டாது. கடைசியிலே யெந்தநியாயத்தினாலே நரம்புகள் மூடியிருக்கிறதோ அதிலே சீவவணுக்கள் ஓடக்கூடாததினாலே தப்பாமலவயவஞ் சும்மா நிற்கும். அந்தக் காரணத்தினாலே திமிர்வாதக்



காரரின் அவயவங்களசையாது, ஆனால்இதிலே ஒருசந்தேகத்தைக் கேட்கலாம். திமிர் கொஞ்சமாயிருக்கும்போது ஊசியினாலே குத்துகிறதுபோலே சுறுக்குசுறுக்கென்று குத்துகிறதற்குக் காரணமென்ன? பிரத்தியுத்தரத்தைக்கேள். நரம்புகள் அழுந்தியிருந்தபடியினாலே சீவவணுக்கள் உள்ளேயோடுகிறதற்கு விக்கினமாயிருந்தது. ஆனாலந்தவிக்கினம் வாங்கினவுடனே அப்போது மகாதீவரத்தோடே தாறுமாறாயோடுகிற சீவவணுக்கள் எங்கும் பரவுகிறதினாலே தைக்கிறதுபோலேயும், குத்துகிறதுபோலேயும், உறுத்துகிறதுபோலேயுங்காண்பிக்கும். இதன்றியே கைநடுங்குகிறதற்கும், கால்பதைக்கிறதற்குங் காரணமேதென்றால் இந்த அவயவங்களிலே ஓடுகிற சீவ அணுக்கள் அதுகளை நிறுத்துகிறதற்குப் புஷ்டியில்லாததினாலே அப்படிவருமென் றறிவாயாக. இந்த நியாயத்தினாலே வயதுள்ளவர்களுடைய நரம்புகளிலே யுண்டான சீவ அணுக்கள் திரளாயில்லாததினாலேயும் பலன்கொஞ்சமாயிருக்கிறதினாலேயும் அவயவங்களைச் செவ்வே நிறுத்துகிறதற்குச் சத்துவமில்லாததினாலேயும்அநேகஅவயவங்கள்நடுங்குகிறது.

இப்போதைக்கு மனுஷன் நடக்கிறவகையிலே யறியவேண்டிய சிலஆச்சரிய விசேஷங்களைச் சொல்லிக் காட்டுவோம். முந்தமுந்தக் கண்டிப்புள்ள வஸ்துவினுடைய கனத்தின்மையமானது சுமக்கிற அஸ்திவாரத்தின்மேலே நின்றால்விழாது. சுமக்கிற அஸ்திவாரத்தின்மேலே தாங்காமற்போனால் தப்பாமல்விழும். இந்தப்பிரகாரமாகத் தூணுடைய கனத்தின் மையம் குறட்டின்மேலே தாங்கியிருந்தாற் செவ்வேநிற்கும். நில்லாமற்போனால் அவசியமாய்விழும். இதெல்லாம் மனுஷர் நடக்கிறவகையிலே பிரசித்தமாய்க் காண்பிக்கும். அவ்வண்ணமே மனுஷர் செவ்வேநிற்கும்போது சரீரத்தினுடையகனத்தின்மையம் இரண்டு கால்மேலேநிற்கும். வலதுகாலை நீட்டுகிறபோது முன்னேசற்றுநேரம் இடதுகாலிலே சரீரக்கனத்தின் மையமிருக்கும். வலதுகாலை நீட்டுகிறபோது சரீரமும் அதைப்பின் சென்றுபோனாலும்எப்போதும்தேகத்தினுடையகனத்தின்மையமானதுஇரண்டுகால்களுக்குள்ளேயிருக்கும் ஆனபடியினாலே மனுஷன் விழக்கூடாது. அதின்பிறகு வலதுகால்மேலே கனத்தின்மையம் நிற்கும்போது இடதுகாலை உயர்த்தி அதைமுன்னே வைக்கலாம். இப்படிப் போகப்போகக் கனத்தின் மையமென்றியிரண்டு காலுக்குள்ளேயிருக்கும். ஒன்றிலொரு காலின்மேலேயிருக்கும். ஆனபடியினாலே

கனத்தின் மையம் அஸ்திவாரத்துக்குள்ளே யடங்ககாற்போ
னால் தப்பாமல் மனுஷன்விழுவான். அந்த நியாயத்தினாலே
யாதாமொருத்தன் கனமுள்ளசுமையைத் தோள்மேலே சும
ந்தால் தலைகுனிந்துபோவான். அல்லது கனத்தின் மையமிர
ண்டு காலுக்குள்ளே யடங்காததினாலேவிழுவான். அந்தநியா
யத்தினாலே கயிற்றின்மேலே கூத்தாடுகிறது மகாவருமையா
யிருக்கும். அவ்வண்ணமே கனத்தின் மையமசைகிறபோது
இரண்டு காலுக்குள்ளே யிராமற்போனால் கூத்தாடிகள் விழு
வார்கள். ஒருவகையிலே வெகுகனமுள்ளபொருளையெடுத்தால
ெதிரான பக்கத்திலே வேறே கைசாய்ந்திருக்கவேண்டியிரு
க்கும். இந்தப்பிரகாரமாக யாதாமொருத்தன்நாற்காலிமேலே
யிருக்கும்போது எழுந்திருக்க மனதுண்டானால் சுபாவமாயிர
ண்டுகாலையும் நாற்காலியின் கிட்டவைத்துத்தலையையும்நெஞ்
சையுங் குனிந்தெழுந்திருப்பான். இப்படியே சரீரமெத்தக்
குனிந்திருந்தால்தலைமுன்னாகவும்இருப்பிடம்பின்னாகவும்நீண்
டிருக்கும். இந்தவிதமாகச் சுவரினகிட்ட நிற்கிறவன்கால்
சுவரிற்படவிருந்தால் முன்னாகமெத்தக் குனியமாட்டான்.
அவ்வண்ணமே அந்தச்சமயத்திலேதலையும்நெஞ்சுங் குனிகிற
போது இருப்பிடமுமெதிராகக் குனியாததினாலேவிழுவான்.

இப்போதுமிருகங்களுடைய நடையையெவ்வளவாகிலும்
வெளிப்படுத்துவோம். அதெப்படியென்றால், நடப்பனவுக்குக்
கனத்தின் மையம் நாலு கால்களிலிருக்கும். ஆனபடியினாலே
அவைகள் விழுகிறது அருமை. நடப்பனவுடைய நடையைக்
குதிரையிலேபார்ப்போம். அதெப்படியென்றால், குதிரையா
னது மெள்ளநடக்கிறபோது முந்தமுந்தப் பின்காலுக்குள்ளே
யொருகாலை யசைக்கும். அதுவலது பின்காலென்று விசாரி
த்துக்கொள். அந்தக்காலை முன்னேவைக்கும்போது வேறே
மூன்று கால்களுக்குள்ளே கனத்தின் மையமிருக்கிறது. அதி
ன்பின் வலதுமுன்காலை யுயர்த்தி அதைமுன்னே வைக்கும்.
அதற்குப்பிறகு இடதுபின்னங்காலை யுயர்த்தி முன்னேவைத்
துக் கடைசியிலே யிடதுமுன்னங்காலை யசைக்கும். இந்தப்
பிரகாரமாக எப்போதும் கனத்தின் மையம் புறத்தியிலே
விழாது. இதெல்லாம் விசாரியாமற் சிலபேர்கள் வலதுமுன்
னங்காலும்இடதுபின்னங்காலும் தரையிலே வைத்திருக்கும்
போது இடதுமுன்னங்காலும் வலதுமுன்னங்காலும் ஆகாய
த்திலே யிருக்கிறதென்று விசாரிக்கிறார்கள். ஆனாலந்தவியா
க்கியானம் நிச்சயமா யிருக்கக்கூடாது. அதேதென்றால்அந்த



சமயத்திலேகனத்தின்மையம்நடுவிலேயிருக்கிறது. அருமையா
யிருக்கும். [illegible] குதிரை யோடுகிறபோது இரண்டு முன்ன
ங்காலும் ஆகாயத்திலே யுயர்த்துகிறது. அப்போது கனமான
அசைவுநிமித்தமாகவும் இப்படியே சற்றுநேரமாத்திரமிருக்
கும். [illegible] உயர்த்தின கால்களைத் தரையிலே நிவரமாய்
வைக்கிறதினாலேயுங் கனத்தின் மையத்துக்குக் கனமானவே
ற்றுமையில்லாததினாலேயும் குதிரைவிழாது. இந்தப்பிரகா
ரமாக நட்டுவன் குதிக்கிறபோது குதித்தாக்கிளம்பி கனமான
அசைவுநிமித்தமாகச் சற்றுநேர மாகாயத்திலேநிற்பான்.

இதற்கப்பாலறியவேண்டினதாவது:-பக்ஷிகள் நடக்கும்
போதுகுதிகாலினாலேநிற்கிறதில்லை, பின்விரலுண்டாயிருந்தா
லும்நடக்கிறதற் குதவியுதவாது. ஆனால் கொம்பின்மேலே
நிற்கிறபோது அதைக்கெட்டியாய்ப்பிடிக்கிறதற்குதவும். இதல்
லாமல் பக்ஷியானது ஒருகாலில் [illegible]
வண்ணமே பக்ஷிகளுடைய விரல்கள்நிரோகத்துக்குத்தக்கது
பெரிதாயிருக்கிறதினாலேயும், இறகுநிமித்தமாகச் சரீரம்லகு
வாயிருக்கிறதினாலேயும், தலையும் வாலும்எதிரான பக்கங்களி
லே யிருக்கிறதினாலேயும்நடுவிலேயுண்டானகனத்தின்மையம்
கடினங்காணப்படாது. அந்த நியாயத்தினாலே யொருசட்டி
யை செவ்வையாய் நிறுத்துகிறது அருமையா யிருந்தாலும்
நடுவிலேயிருக்கிற கனத்தின்மையம் எந்த வஸ்துவின்மேலே
தாங்கியிருந்தாலும் எளிதாயங்கங்கேசாயாமலிருக்கலாம். பா
ம்புகள்நாகப்பாம்பு முதலான ஊர்வனவைகள் நடக்கிறவகை
யேதென்றால், ஒருபக்கத்திலே தரையிலே தன்னை யழுத்தி
வேறேபக்கத்திலே தன்னைநீட்டிப் பிறகு பின்பங்கை யிழுக்
கும். [illegible] பின்பக்கத்தைச் சுருக்கினதற்குப் பிற்பாட
[illegible]தைத் தரையிலே யழுத்தி முன்னே யிருக்கிற அவயவங்
களை நீட்டி யெக்கிவிழும். பின்னையும் ஆகாயத்திலேபக்ஷிகள்
எப்படி பறக்கிறதென்றால், ஓடத்திலிருக்கிறவர்கள் தண்டு
மரத்தாலே தண்ணீரைத் தள்ளிவிட்டு ஓடத்தை நடத்துகி
றாப்போலே பக்ஷிகள் தண்டுமரங்களாகிற இரண்டிறகுகளி
னாலே ஆகாயத்தைத் தள்ளிவிட்டுப் பறக்கும். பின்னையுந்
சரீரத்தினுடைய கனத்தின்மையம் நடுவிலே யிருந்தால் மகா
எளிதாய்ப் பறக்கிறதற் குதவுகிறதினாலேபக்ஷிகள் முன்னே
[illegible] பின்னாலே கால்நீட்டிச் சரீரம் நடுவிலே உயர்த்
தியா யிருக்கும். மச்சங்களோவென்றால், நீந்துகிறபோது ப
க்ஷிகள் ஆகாயத்தை இறகுகளினாலேதள்ளுகிறாப்போலே செ

ட்டைகளினாலே தண்ணீரைத் தள்ளும். இதன்றியே ஓடங்களிலேயும் கப்பல்களிலேயும் சுக்கான் மரத்தைக் கொண்டு எந்தெந்தத் திக்குக்குஞ் சுக்கானி கப்பலையும் ஓடத்தையும் திருப்புகிறப்போலே மச்சங்கள் தனது வாலினுடைய பற்பல அசைவினாலே சகல திக்குகளுக்கும் நீந்திப் போம்.

கடைசியிலே, கைகளுக்குங் கால்களுக்கும் நகங்கள் காணப்படுகிறதினாலே அவைகளுடைய சுபாவத்தையுங் குணங்களையும் சங்க்ஷேபமாய்ச் சொல்லிகாட்டுவோம்; அதெப்படியென்றால், புறத்தியிலே பிரத்தியக்ஷமாய்க் காணப்படுகிற நகத்தினுடைய ரூபத்தைச் சொல்லத் தேவையில்லை. காணப்படாத நகத்தினுடைய வேரோவென்றால், மாங்கிஷத்தோடு மகா அயிக்கமாயிருக்கிறது. இப்படிப்பட்ட வேரானது வெள்ளையாயிருக்கும். புறத்தியிலே காணப்படுகிற நகமானது எப்போதும் வர்த்திக்கிறது. இந்தப்பிரகாரமாக நகத்தை யாரும் [illegible] தினந்தினம் அதிகமதிகமாயேறும். நகத்தினுடைய பிரயோசனமேதென்றால்:— சின்னதுமாய்க் கெட்டியானதுமாயிருக்கிற அங்கிஷங்களைப் பிடிக்கிறதற்குதவும். விரல்களுடைய அலங்காரத்துக்கு அது ஒருகாரணமாயுமிருக்கும். வியாதியினுடைய குணங்களைக் காண்பிக்கும். கடைசியிலே சாணகாதி விஷயத்திலே நாமுனக்குச் சொல்லப்போகிற புத்தியை மனதிலே தரித்துக்கொள்வாயாக. அவ்வண்ணமே சாணகராதிகள் அதுகளுக்குக் கர்த்தனாயிருக்கிற நரசீவனுடைய ஆசைகளுக்குத் தக்கபடி சாங்கோபாங்கமாகக் கீழ்ப்படிந்திருப்பதுபோல நரசீவனாகிற நம்மை உண்டாக்கின வருமாயிரக்ஷிக்கிற வருமாய் நமது பேரிலே அளவில்லாத சுதந்தரமுள்ள வருமாய்த் திவ்விய கர்த்தாவுமாயிருக்கிற பராபர வஸ்துவான ஆண்டவருக்கு நாமெப்படி கீழ்ப்படிந்து நடக்க வேண்டியவர்களாயிருக்கிறோமென்று நினைக்கக் கடவோமாக.

## ௰௬-ம் அதிகாரம்.

### நரசீவனுடைய விவரம்.

இதுவரைக்கும் அண்டபிண்டவியாக்கியானத்தை விவரித்ததினாலே பராபரவஸ்துவினுடைய கற்பனைப்படியேயுண்டாக்கப்பட்ட சகல வஸ்துக்களுக்கும் இராசாவாயிருக்கிற



மனுஷனுடைய இராச்சியங்களையும் அரமனைகளையும் மற்றுமுண்டான சகல பொருட்களையும் வர்ணித்தாப்போலாயிற்று. இந்தக் கடைசி அதிகாரத்திலே நரதேகமென்கிற அரமனையிலே யிராச்சியபாரம் பண்ணுகிற நரசீவனுடைய சுயசுபாவத்தையுங் குணங்களையும் வெளிப்படுத்த மனதானோம். அதெப்படியென்றால், நரசீவனானது மனுஷசரீரத்திலுள்ளயெல்லாவற்றையும் பார்க்கப் பிரதானமான காரியமாயிருக்கிறதினாலே மனுஷர்கள் அசரீரியாயிருக்கிற பரமதூதர்களுக்குச் சமானமாயிருக்கிறார்களென்றும் அப்படிப்பட்ட ஆத்துமத்திலே மனுஷன் சர்வேஸ்வரனுடைய சாயலாக வுண்டாக்கப்பட்டவனாயிருக்கிறானென்றும் ஞானசாஸ்திரிகள் சங்கேதம் பண்ணினார்கள். அவ்வண்ணமே பராபர வஸ்துவைப்போலே நரசீவனானது அரூபியாயிருக்கிறதென்று அர்ச். அகுஸ்தீனுவென்கிறவர் திருவுளம்பற்றினார். இப்படியே நரசீவனானது சர்வேஸ்வரனைப்போலே அக்ஷயமுமாயிமேல் நித்தியமுமாயிருக்கிறதென்று மகா பேர்போன சாஸ்திரியான செனேகென்கிறவர் அருளிச்செய்தார். இதன்றியே மனுஷாத்துமமானது புத்தியினிமித்தமாகவும் கடவுளுடைய பாவனையாயிருக்கிறதென்று அர்ச். தமசேனு அருளப்பரெழுதிவைத்தார். இதல்லாமல் பரமாத்துமாவைப்போலே நரசீவனானது வேணும் வேண்டாமென்கிற பலத்தைக்கொண்டிருக்கிற சுதந்தர மனதுள்ளதாயிருக்கிறதென்று அர்ச். அம்புரோசியுவென்கிறவரருளிச்செய்தார். இந்தவுடைவரகமெய்யான தேவனாகிறவரைப் பிரத்தியக்ஷமாய்த் தெரிசித்ததினாலே அளவில்லாத பாக்கியத்தை அநுபவிக்கிறப்போலே அந்த மோக்ஷபாக்கியத்திலே பங்காளியாயிருக்கிறதற்கு நர ஆத்துமமானது பாத்திரமாயிருக்கிறதென்று அர்ச். கிரகோரியுவென்கிறவரறிவித்தார். இவ்விதமாகச் சர்வலோகத்துக்கும் இராசாதிராசனும் பரஞ்சோதியுமாயிருக்கிற ஆண்டவர் தம்முடைய சித்தத்தின்படியேயாவற்றையும் நடத்திக்கொண்டு வருகிறதுபோல் மனுஷனானவன் தனது நரசீவனைக் கொண்டு பராபர வஸ்துவினுடைய கிருபையினாலே யொருபிரகாரமாய் லோகத்திலே மகா ராசாவாயிருக்கிறானென்று அர்ச். பசீலியூசென்கிறவர் சொல்லிக் காட்டினார். ஆனால் நரசீவன் மேலே யெத்தனை தோத்திரம் பண்ணினாலும் அதற்கும்பராபரவஸ்துவுக்குமட்டில்லாத தூரமுண்டென்றறிவாயாக. இப்போதைக்கு மனதிலேதரிக்கத்தக்க விசேஷமாவது இத்தனை மகிமையைக்கொண்டிருக்கிற ஆத்துமத்தை அறியத்

தக்கதாகவும் அதற்கு மோசம்வராமல் வேண்டியஉபாயமெல்லாஞ்செய்யத்தக்கதாகவும் இப்படிப்பட்டஆத்துமம் தன்னையுண்டாக்கினவருமா யிரட்சிக்கிறவருமா யிருக்கிற கடவுளுக்குக் கீழ்ப்படிந்து கர்த்தருடைய சித்தத்தின்படியே நடந்து மோக்ஷராச்சியத்தை யநுபவிக்கத் தக்கதாகவும் வேண்டிய பிரயாசமெல்லாம் படுகிறதற்கு அவனவன்பேரிலே கடன்சுமந்திருக்கிறதென் றறியப்பெற்ற விசேஷமாகும்.

௧ இனி நரசீவனுடைய சுபாவத்தைக்கண்டுபிடிக்கிறதற்கு அதினுடைய விர்த்திகளைத் திரவிசாரிக்கக் கடவோம். அதெப்படியென்றால்:—மனுஷனானவன் விருக்ஷங்களைப் போலே வளருகிறதும், மிருகங்களைப்போலே பஞ்சேந்திரியங்களுக்கடுத்த சேஷ்டைகளைப் பண்ணுகிறதும் அல்லாமல்; மனுஷனானவன் தன்னுடைய சரீரஆதாரமில்லாமல் அநேகம் விர்த்திகளைப் புத்தியினாலேசெய்வான். இப்படிப்பட்ட கிரியைகளேதென்றால் பஞ்சேந்திரியங்களைக்கொண்டு வஸ்துக்களுடைய பிரதிபிம்பங்கள் பொதுஇந்திரியத்திலே வந்ததற்குப் பிற்பாடு நரசீவனானது அதுகளைப்பார்த்துத் தன்னிடத்திலே அரூபியான வடையாளங்களைச் செய்யும். இப்படிப்பட்ட வடையாளங்களைப் பார்க்கும்போது நல்லதென்றும் ஆகாததென்றுந் தீர்வைசொல்லாமல் சும்மாயிருந்தால் இப்படிப்பட்ட புத்தியின் விர்த்திக்குக்கேவலம்—கிரகணம்என்கிறபேர்செல்லும்; அதின்பிறகு அந்தந்தவஸ்துக்களுடையசுபாவத்தையுங்குணங்களையும பார்த்துக் கிரகிக்கப்பட்ட பொருளான துநல்லதென்றும் ஆகாததென்றும் விசாரித்து உள்ளதீர்வைசொன்னால் இந்தவிர்த்திக்குப் பரிச்சேதமும்—தீர்வையும்என்கிற நாமஞ்செல்லும். கடைசியிலே பிரிக்கப்பட்ட பொருளின்பேரிலே பரிச்சேதம் பண்ணினதற்குப் பிற்பாடு அந்தத்தீர்வையானது வேறே தீர்வைக்குக் காரணமாயிருந்தால் இப்படிப்பட்ட புத்தியின்விர்த்தி யோசிப்பென்றும்—புத்தியென்றுஞ் சொல்லப்படும். இந்தப்பிரகாரமாக ஒருபழத்தைப் பார்த்தால் அதினுடைய ரூபமானது கண்களுடைய நரம்புவழியாகப் பொது இந்திரியத்துக்கு வரும். ஆத்துமமானது இதைப் பார்க்கும்போது தனதுசுபாவ பலத்தினாலேஅதற்குத்தக்கது தன்னிடத்திலே யரூபியான ஒருலக்ஷணத்தையுண்டாக்கிறது; அந்தச்சமையத்திலே பழத்தினுடைய அடையாளத்தை மாத்திரம் பார்க்கிறதல்லாமல் வேறேயொன்றுஞ் சொல்லாமற்போனால் கேவலம்—கிரகணமாச்சுது. அதற்குப்பிற்பாடு இந்தப்பழத்



தினுடைய குணங்களை விசாரிக்கும்போது மகா ருசிகரமாயிருக்கிறதென்று புத்தியானது சொன்னால் தீர்வையும்—பரிச்சேதமுமாச்சுது. கடைசியிலே யிந்தத் தீர்வையிலேநின்று வேறே தீர்வை பிறந்து இந்தப்பழம் ருசிகரமாயிருக்கின்றதே—ஆனபடியினாலே இதை யெடுத்துப் பக்ஷிக்கவேணுமென்று நினைத்தால் அப்போது யோசிப்பும்—புத்தியுமாச்சுது. இதெல்லாம் அவனவன் தன்னுடைய ஆத்துமத்திலே யெளிதாய்க் கண்டு பிடிப்பான்.

இதல்லாமல் நரசீவனிடத்திலே, புத்தியுண்டா யிருக்கிறதுந்தவிர இன்னமும் வேறே அதிசயமான பலமுண்டு. அதற்குப் பேரேதென்றால்:—மனது. இதற்கர்த்தமேதென்றால் ஒரு வஸ்துவின்பேரிலே பற்றுதலா யிருக்கத் தக்கதாகவும் ஒன்றில் அருவருப்பா யிருக்கத் தக்கதாகவும் செய்விக்கிற பலமானது மனதென்று சொல்லப்படும். இப்படிப்பட்டமனதானதுவேண்டும் வேண்டாமென்கிற முழுச்சுதந்தரத்தைக் கொண்டிருக்கும். உண்டாக்கப்பட்ட எந்த வஸ்துவானாலும் அந்தமனதுக்குக் கட்டாயஞ் செய்யவல்லதாயிராது. இப்படிப்பட்ட சுதந்தரமுள்ள மனதானது தனது பலத்தைக்கொண்டு இரண்டுவிரோதமான வஸ்துகளுக்குள்ளே ஒன்றைத்தெரிந்து கொள்ளுகிறதற்குச்சத்தியுள்ளதாயிருக்கும். இதுநியதமாக மனதானது சிலசமயங்களிலே பாவத்தின்மேலாசையாயிருக்கும், வேறேசமயத்திலே தருமத்தைச்செய்யத்தெரிந்துகொள்ளும். இப்படிப்பட்ட சுதந்தரமுள்ள மனதுநமக்குண்டென்று அநுபவசித்தியினாலே கண்டுபிடிக்கிறோம். இப்படியில்லாமற்போனால் பாவமும், புண்ணியமுமில்லை. மோக்ஷமும், நரகமுமில்லை சம்பாவனையும், ஆக்கினையுமில்லை. எல்லாங் கட்டாயத்தினாலே வந்ததானால் பாரபத்தியம் பண்ணுகிறது அநியாயமாயிருக்கும். சங்கிலியினாலே கட்டுண்டிருக்கிறவனை ஓடவில்லையென்று அடித்தால் மகா அக்கிரமமாயிருக்கும். அதுபோல் சுதந்தர மனதில்லாதவன் எத்தனை அபத்தங்களைப் பண்ணினாலும் அவன்பேரிலே தோஷமில்லை. ஆனபடியினாலே புத்திக்கொவ்வாத அநேகங் காரியங்களைச்சொல்லாதபடிக்கு அவனவன் வேண்டும் வேண்டாமென்கிற சுதந்தரத்தைக் கொண்டிருக்கிறானென்று அங்கீகரிக்கக்கடவோம். இதிலே அறியவேண்டினதாவது:—இரண்டுவகை மனதுண்டென்று விசாரிப்பாயாக, முந்தின மனசு சுபாவமான மனதே

ன்றும்—கீழாங்கிஷத்திலே பிறக்கிறஆசையென்றும்சொல்லப்படும். வேறேமனசு பிரதானசித்தமென்றும்—ஞானமுள்ளமனதென்றும்—மேலாங்கிஷத்திலே பிறக்கிறஆசையென்றும் சொல்லப்படும். இந்தஇரண்டாமனசு பாவத்துக்குச் சம்பந்த மில்லாதாற்போனால் பாவம்வராது. இந்த இரண்டு வகை மனதினுடைய பிரகாரத்தை ஓருவமையினாலே வெளிப்படுத்துவோம். அதெப்படி யென்றால், யாதாமொருவன் பிழைக்கிறதற்கு அவனுடைய கையையாகிலுங் காலையென்கிலும் அறுக்கவேண்டியிருந்தால் சுபாவமான மனசும்—கீழாங்கிஷத்திலே பிறக்கிற ஆசையும் அதற்குச் சம்மதிக்கமாட்டாது. ஆனால் மேலாங்கிஷமும்—பிரதான சித்தமும் இதெல்லாஞ் சட்டைபண்ணாமல் பிழைக்கிறதற்கு ஒரு அவயவம் போனாலும் போகட்டுமென்று அதற்குச் சம்மதிக்கும். ஆகையால் நரசீவனிடத்திலே புத்தியுமனசுமுண்டா யிருக்கிறதுந் தவிர இன்னமும் நினைவென்கிற பலமொன்று விளங்கப்படும். அந்தப் பலத்தினாலே பூர்வகாரியங்களுடைய பிரதிபிம்பங்கள் புத்திக்குக் காண்பிக்கும். ஆத்துமமானது இந்தநியாயமுள்ள விர்த்திகளைப் பண்ணுகிறதுமல்லாமல் பஞ்சேந்திரியங்களினாலே வருகிற கிரியைகளுக்குக்காரணமாயிருக்கும். ஆனபடியினாலே நரசீவனுடைய நிரூபணத்தை யறியமனதுண்டானால் இப்படிப்பட்ட நரசீவனானது பற்பல சேஷ்டைகளைப் பண்ணுகிறதற்கு எத்தனமாயிருக்கிற அவயவங்களுள்ள சரீரத்துக்கு மாத்திரையா யிருக்கிறதுமல்லாமல் ஞானவிர்த்திகளைப் பண்ணுகிறதற்கு ஆதியாயிருக்கிறதென்றும் அறிவாயாக. இந்தநிரூபணத்திலே மாத்திரையென்கிற வார்த்தைக்குண்டான அர்த்தமேதென்றால், எந்தவஸ்து ஒருபொருளுக்கு நாமமாயிருக்கிறதற்குக் காரணமாயிருக்கின்றதோ அந்தவஸ்து பிரதான காரியமென்றும் மாத்திரையென்றுஞ் சொல்லப்படும். இந்தப் பிரகாரமாக, ஒரு விக்கிரகத்தினுடைய ரூபமானது விக்கிரகமென்கிற பேரிடுகிறதற்கு நிமித்தமாயிருக்கிறதினாலே அந்தரூபமானது விக்கிரகத்தினுடைய மாத்திரையென்று சொல்லப்படும். இவ்விதமாக மனுஷனிடத்திலுண்டான நரசீவனானது மனுஷனென்கிற பேரிடுகிறதற்குப்பிரதான காரணமா யிருக்கிறதினாலே நரசீவனானது மாத்திரையாயிருக்கிறதென் றறிவாயாக. நரசீவனுடைய நிரூபணத்தின் மற்றவார்த்தைகளெல்லாங் கண்டுபிடிக்கிறது எளிதாயிருக்கிறதினாலே இம்மாத்திரஞ் சொல்லிக்காட்டினது போதும்.



இப்போதைக்கு நரசீவனானது அரூபியா யிருக்கிறதென்று ஆன நியாயங்களினாலே ஸ்தாபிக்க வேணும். அதெப்படி யென்றால்,

முதலாவது.—நாமுன் சொன்னாப்போலே ஒருவஸ்துவினுடைய சுபாவங்களையுங் குணாகுணங்களையும் சரியாயறிகிறதற்கு அதற்குண்டான விசேஷங்களை யாராய்ந்து பார்க்கவேண்டும். அவ்வண்ணமே விர்த்தியானது தன்னை யுண்டுபண்ணின காரணத்தினுடைய சுபாவத்தைவெளிப்படுத்துமென்று சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். ஆனால் சரீரசம்பந்தமில்லாத கிரியைகளை ஆத்துமம் பண்ணுகிறதென்று பிரத்தியட்சமா யிருக்கிறது. இந்தப்பிரகாரமாகப்புத்தியானது வஸ்துக்களுக்குச் சாதாரண காரணங்களைக் கண்டுபிடிக்கிறது மல்லாமற் கண்டிப்புள்ள அடையாளங்களைத் தள்ளி அரூபிகமாகவும் தியானிக்கின்றது. பிரமாணத்தோடேகூடின பலமெல்லாமோ வென்றால் விசேஷமான காரியத்தையும் கண்டிப்புள்ள பதார்த்தத்தையு மாத்திரம் நடத்துகிறது. ஆனபடியினாலே நரசீவனானது அவசியமா அரூபியா யிருக்கிறதென்று சொல்லவேண்டி யிருக்கிறது.

2-வது.—சகலமான சாஸ்திரங்களுக்கும் சாதாரணவாக்கியங்களைப் புத்தியானது அளவறுத்துக் கொண்டிருக்கின்றது. இந்தப் பிரகாரமாகப் பற்பல அங்கிஷங்களினாலே கூட்டப்படுகிற பொருளானது தன்னிடத்திலே யடங்கப்பட்ட விசேஷமான அங்கிஷத்தைப் பார்க்கப் பெரிதாயிருக்கும் இத்தடைவாக முழுதுஞ் சமனாயிருக்கிற பொருட்களிலே நின்று சரியாக அங்கிஷங்களை யெடுத்தால் மிஞ்சின பொருட்கள் சரியாயிருக்கும். இதல்லாமற் பிரத்தியட்சமான தாற்பரியங்களைப் புத்திபண்ணுகின்றது. அவ்வண்ணமே தப்பில்லாத் கிரமத்தோடேபிரதான வாக்கியத்தையும் இரண்டாம் வாக்கியத்தையும்வைத்து அதுகளிலேநின்று அவசியமான அனுமதியென்கிற கடைசியான தீர்வையையெடுக்கும். இந்தப் பிரகாரமாக மெய்யான தேவனை யறியாதவர்கள் மோக்ஷத்தை யனுபவிக்கமாட்டார்கள். ஆனால் அஞ்ஞானிகள் மெய்யான தேவனை யறியார்கள். ஆகையினாலே மோட்சத்தை யனுபவிக்கமாட்டார்கள். சொல்லப்பட்ட இந்த மூன்று வாக்கியங்கள் சாஸ்திரத்தின்படியே வைக்கப்பட்டிருக்கிறதி

னலேயும் முந்தின விரண்டு வாக்கியங்களும் மெய்யாயிருக்கிறதினலேயும் மூன்றும் வாக்கியத்திலே யடங்கியிருக்கிற அனுமதியென்கிற கடைசியான தீர்வையானது அவசியமாய் சாஸ்திரப் பிரகாரமாக நிச்சயமாயிருக்கும். இதெல்லாம் இப்படியிருக்கையிலே கண்டிப்புள்ள வஸ்துக்களுக்கு இப்படிப்பட்ட புத்தியும் யோசனையுமில்லாதபடியினலே புத்தியானது அரூபியாயிருக்கிறதென்று சொல்லவேணும்.

3-வது.—புத்தியானது நிதானமுள்ள பரிச்சேதங்களைப் பண்ணுகிறது. இந்தப் பிரகாரமாகச் சில காரியங்கள் அவசியமாய் மெய்யா யிருக்கு மென்றும் சிலதுகள் பொய்யாயிருக்குமென்றுங் கண்டு பிடிக்கிறது மல்லாமல் தன்னிடத்திலே ஸ்திரமாய் ஸ்தாபிக்கிறது. இப்படிப்பட்ட சத்தியங்களும் அரூபமா யிருக்கிறதினலே அதுகளின்பேரிலே பரிச்சேதம் பண்ணுகிற பலமானதும் அரூபியா யிருக்கும். பஞ்சேந்திரியங்களுடைய பலமானது அதற்கு மகா கீழத்தரமாயிருந்து வர்ணம் சத்தம், வாசனே, ருசி, கண்டிப்புஎன்கிற ஐந்து விசேஷங்களை மாத்திரங் கிரகிக்கிறது.

4-வது.—புத்தியானது சகல வஸ்துக்களையும் ஒழுங்காகவைக்கின்றது கண்டிப்புள்ள பொருட்களை அனுக்கிரமத்தோடு நடத்துகின்றது. ஆனபடியினலே சகலமான கண்டிப்புள்ள பதார்த்தங்களைப்பார்க்க மேலான வஸ்துவாயிருந்து பிரமாணத்துக்குள்ளே அடங்காமல் அரூபியாயிருக்கும்.

5-வது.—நரசீவனுடைய புத்தியின் கிரியைகளினலே ஆத்துமம் அரூபியா யிருக்கிறதென்று ஒப்புவித்த பிற்பாடு அதைத்தானே மனதினுடைய விர்த்திகளினலேயும் ஒப்புவிக்கலாம். அதெப்படியென்றுல், யாதாமொருத்தன் புண்ணியவான்மேலே பட்சமாயிருக்கும்போது என்னபார்க்கிறன் சில சமயங்களிலே சரீரம் அவலட்சணமா யிருந்தாலும் அரூபியாயிருக்கிற தருமத்தை மாத்திரம் விசாரிக்கிறன். அவன் தேவபத்தியா யிருக்கிறனென்றும், தாழ்ச்சியா யிருக்கிறனென்றும், முகத்தைப்பாராமல் நீதி நியாயத்தோடு காரியமெல்லாம் நடத்துகிறனென்றும் அறிந்திருக்கிறதினலே அவன்மேலே பிரியமும் சந்தோஷமுமாயிருக்கிறன். இந்தவைவாகயாதாமொருதுரோகியானபாவியின்பேரிலேயருவருப்பாயிருக்கும்போது அவனுடையசரீரத்தைப்பாராமல்அனுடைய



துருட்டுகளையும் தாறுமாறுகளையும் அகங்காரத்தையும் துற்குணங்களையும் பார்த்து அவன் மேலே அரோசகமாயிருக்கிறன். ஆனபடியினலே மனதானது புண்ணியத்தின்பேரிலே சந்தோஷமும் பாவத்தின் மேலே அருவருப்புமா யிருக்கச் செய்கிற அவசியமா அரூபியா யிருக்கவேணும் அவ்வண்ணமே, கண்டிப்புள்ள வஸ்து பிரமாணத்தோடு கூடின காரியங்களோடு மாத்திரஞ்சேரலாம், இதெல்லாம் இப்படி யிருக்கையிலே நரசீவனனது அரூபியாயிருந்தாலும் அகண்டமாயிருக்கும். அவ்வண்ணமே அசரீரியும் அரூபியுமாயிருக்கிற வஸ்துவானது அங்கிஷங்களில்லாமல் அகண்டவிதமா யிருக்குமென்று சாஸ்திரிகள் சங்கேதம் பண்ணினர்கள்.

ஆனலிப்படிப்பட்ட நரசீவனனது அரூபியுமா அகண்டமுமா யிருந்தாலும் அக்ஷயமா யிருக்கிறதென்று தப்பில்லாத சத்தியமாகும். அவ்வண்ணமே கண்டிப்புள்ள காரியமாத்திரம் லயமாய்ப்போகலாம். இதற்குக்காரணமேதென்றுல், கண்டிப்புள்ளவஸ்துபற்பல அங்கிஷங்களினலே கூட்டப்பட்டதாயிருக்கிறபடியினலே அந்தந்த அங்கிஷங்களைப் பிரியப்பண்ணலாம். ஆனல் அங்கிஷமில்லாத பொருட்களைப் பிரிக்கிறது கூடமோன்காரியமாயிராததினலே யெப்போதும் நிற்கும் இப்படியேநித்தியமாய்நிற்கிறதற்குச்சர்வேஸ்வரனுடையஇத்தாசை மாத்திரம் வேணும். அவ்வண்ணமே, அகண்டபொருள் அழியாமாய்ப் போகிறதற்குத் தன்னிடத்திலே ஆதியுங்காரணமுமில்லாததினலே முடிவில்லாத கால மிருக்கும். ஆனபடியினலே ஆத்துமமானது அரூபியாயும் யாதொன்றுற் கூட்டப்படாததாயும் அதினுடைய சுபாவத்திலே அங்கிஷங்களில்லாதபடியினலேயும் அது நிர்மூலமாய்ப் போகிறதற்குக் கூடாது ஆத்துமம் சரீரத்தோடு அயிக்கமாயிருக்கிறதினலே ஆத்துமம் சரீரத்தைவிட்டுப் பிரிகிறதற்குஉபாயம் பண்ணலாம். ஆனல் ஆத்துமத்திலே அங்கிஷங்களில்லாததினலே அதைப்பிரிக்கிறதற்கும் நிர்மூலம் பண்ணுகிறதற்கும் அவகாசமில்லை ஆனல் இதெல்லாம் அதிகமதிகமாய் விளங்கத்தக்கதாக ஆத்துமத்திலே அங்கிஷ மில்லாமற் போனலும் உண்டென்று விசாரித்துக் கொள். அப்போது எண்ணப்படாத அபத்தங்களைச் சொல்லவேண்டி யிருக்கும்.

அதெப்படியென்றுல், புத்திக்கும் அங்கிஷங்களுண்டானல் பிரமாணத்தோடே யிருக்கும். பிரமாணத்தோடிருக்கிற

புத்திகண்டிப்புள்ளபுத்தியாயிருக்கிறதினாலே அதுபற்பலவர்ண
ங்களைக் கொண்டிருக்கலாம். புத்தி வெண்மையாயிருக்கிற
தென்றும் கறுப்பாயிருக்கிறதென்றும், சிவப்பாயிருக்கிறதெ
ன்றும், பச்சையாயிருக்கிற தென்றுஞ் சொல்லலாம். இதன்றி
யே அந்தப் புத்திதானே கனமாயிருக்கலாம். ஆனபடியினா
லே புத்திக்குப் பத்து ரூபா முண்டென்றும் இரண்டு துலா மு
ண்டென்றும சொல்லலாம் இந்தவிடைவாகப் புத்தியையளந்
துபார்க்கலாம். புத்திக்கு மூன்று விரற்கிடையென்றும் இர
ண்டுசாணென்றும் மூன்றுமுழமென்றுஞ்சொல்லலாம். பின்
னையும் புத்தியின் விஷயத்திலே யோசித்தாப்போலே மன
தின் வகையிலேயும் யோசிக்கலாம். அவ்வண்ணமே மனதா
னது கண்டிப்பானால் அப்போது பக்ஷமானது பச்சையாயிரு
க்கிறதென்றும் சிவப்பாயிருக்கிறதென்றும் அந்தப் பக்ஷத்தி
னுடைய நிகளத்தையும் உயரத்தையும் கனத்தையும் பார்க்க
லாம். இப்படிப்பட்ட பொய்யான விசேஷங்கள் மூதிர்ந்தபயி
த்தியத்தோடேகலந்ததாயிருக்கிறபடியினாலேஇந்த அபத்தங்க
ளைச்சொல்லாதபடிக்கு ஆத்துமமானது கண்டிப்பில்லாம
லும் அங்கிஷமில்லாமலும் வர்ணமில்லாமலும் அரூபமா
அக்ஷயமாயிருக்கிறதென்று சொல்லவேண்டியிருக்கிறது
ஆனபடியினாலே மெய்யான வேதமானது நாசீவன்—அக்ஷய
மாயிருக்கிறதென்று படிப்பியாமற்போனாலும் கெட்டியுள்ள
நியாயங்களினாலே யொப்பிவிக்கலாம். இதெல்லா மிப்படியிரு
க்கையிலே மனுஷரெல்லாரும் அக்ஷயமாயிருக்கிற தங்களு
டைய ஆத்துமத்துக்கு மோசம் வராதபடிக்குப் பிரயாசமெ
ல்லாம் படவேணும். யாதாமொருத்தன் சிப்பியைப்பதன
மாகவைத்து விலைமதியாத முத்தை யெறிந்துபோட்டால்
என்ன சொல்லுவார்கள். அத்தன்மைபோலே அழிந்துபோ
கிற சரீரத்தைப் பூச்சியமாய்ப் பராமரித்துக் கொண்டு அ
ழியாத ஆத்துமத்தை விசாரியாமற் போனால் இதற்குச் சரி
யான வேறே குருட்டாட்ட மூண்டோ? இதிலே திவ்விய
குருவானவர் திருவுளம் பற்றினதாவது:—நீ லோகத்தை
யெல்லாம் ஆதாயமா அடைந் திருந்தாலும் உன்னுடைய
ஆத்துமம் சேத மடைகிறதானால் உனக்குப் பிரயோசன
மென்ன?—என்று திருவுளம் பற்றியிருக்கிறார்.

ஆனபடியினாலே நீ உன்னை யறிந்ததற்குப் பிறபாடு
உன்னை யுண்டாக்கின வரும் இரக்ஷிக்கிற வருமா யிருக்கிற



தலைவனாகிற பராபர வஸ்துவினுடைய அளவில்லாத மகி
மைகளை யறிந்து நன்றி யறிந்த மனதோடு அவர் பேரிலே
தோத்திரம் பண்ணி யவருக்கேராத பாவங்களைத் தள்ளி
விட்டு உன்னுடைய ஆத்துமத்துக் கலங்காரமா யிருக்கிற
தரும நடக்கைகளைச் செய்துகொண்டு தங்களுடைய பிர
யோசனத்தைப் பாராமல் சீஷர்களுடைய நன்மைகளை
மாத்திரம் விசாரிக்கிற காரணக் குருக்க ளண்டையிலே
சென்று மோக்ஷத்துக்குப் போகிற பாதையைக் கேட்டு அதி
லே மரணபரியந்தம் நிலைநிற்கக்கடவாய்.

## ௨௰-ம். அதிகாரம்.

### அண்டபிண்ட அறிக்கையினாலே கடவுளைக் கண்டுபிடிக்கிற வகையாவது.

இந்த அண்டபிண்ட வியாக்கியானத்தைத் தியானம்பண்
ணுகிறபோது சோதிமண்டலங்களிலேயும் பிரபஞ்சத்துக்கு
ள்ளேயும் அடங்கியிருக்கிற வஸ்துவென்னப்பட்ட யாவையும்
மிகுந்த தெளிவோடு பரிக்ஷித்ததினாலே சமஸ்தானத்திற் கட
வுளானவர் தமதளப்பில்லாத ஞானத்தையும், அளவறுக்கப்
படாத பலத்தையும், கரைகாணாத கிருபையையும், மனோவா
க்குக்கெட்டாத விமரிசையையும், பிரத்தியக்ஷமாய் விளங்கப்
பண்ணினாரென்று கண்ணாற் கண்டாப்போலாயிற்று. ஆகை
யினாலே யாதாமொருத்தன் நக்ஷத்திரங்களுடைய அக்ஷயத்தை
யும், கிரகங்களுடைய உத்தர தெக்ஷணாயநத்தையும், ஆனச
மயத்திலே சூரிய சந்திர கிராணங்களையும், அமாவாசி பவுர்
ணமி அபர பூர்வபக்ஷத்தையும், பிரிதிவு, அப்பு, தேயு, ஆகாய
மென்கிற நான்கு பூதியங்களா லுண்டாகிற விபரீதங்களினா
லே சமஸ்தானத்தி னிதானத்தையும், இராப்பகலின் சரியா
ன பிரிவையும், காலங்களுடைய தப்பில்லாத கிரமத்தையும்
தீரவிசாரித்தால் அதுகளெல்லாத்தையும் உண்டாக்கினவரு
மாய், நடத்திக்கொண்டு வருகிறவருமாயிருக்கிற பராபர வஸ்
துவுடைய மேலான வல்லமையை யறியாதொழியமற்றப்படி
யல்ல. அதெதென்றால்:—அண்டத்தையும் பிண்டத்தையும்
பொதுவிலே பார்த்தாலும் தனித்தனியேவஸ்துக்களைப் பரா
மரித்தாலும் சர்வ லோகத்திலெங்குங்கடவுளுடைய அடை

யாளங்களையும் இலக்ஷணங்களையும் உத்தம பிரகாரமாகக்
காணலாயிருக்கிறதென்று அநுபவ சித்தியினாலே கண்டுபிடி
க்கிறோம். சர்வலோகத்துக்கும் அலங்காரமாயிருக்குகிற
பிரகாசத்தைப் பார்த்தால் அதைக்கொண்டிருக்கிற சூரியனா
னது பூமிக்குச் சமீபமாயிருந்தால் உக்கிரத்தின்மிகுதியினாலே
யெல்லாஞ் சாம்பலாய்ப்போம். மெத்த தூரமானால் கண்டி
ப்புள்ள வஸ்துக்கள் குளிராயிருக்கிறதற்குப் பலன்போதாம
ற்போம். ஆகாயம் நடுவிலே யில்லாமற்போனாற் சூரியனாலே
பூலோகத்துக்குப் பிரயோசன மென்ன? ஆகாயத்தினுடைய
வழியாகவல்லோ பிரகாசமெல்லாம் வரவேணும் இதனாலே
வர்னங்களெல்லாந் தெரியும். ஆனால் மனுஷருக்குக் கண்களி
ல்லாமற் போனால் வர்னங்களினாலேயும் பிரகாசத்தினாலே
யும் பிரயோசன மென்ன? பிரகாசமில்லாத சமயத்திலே
கண்களிருந்தினாலே பிரயோசன மென்ன? திஷ்டிவிஷயத்
தில் யோசித்தாப்போலே மற்றப் பஞ்சேந்திரியங்களுடைய
விஷயத்திலும்யோசிக்கக்கடவாய். இதெல்லாத்தையும்ஆன
வகையோடே நடத்துகிறதற்கு அவசிமாய் மேலானகருத்
தைக்கொண்டிருக்கிற ஓராதிகாரமுமிருக்க வேண்டியிருக்கி
றது. இத்தனை வித்தியாசமுள்ள வஸ்துக்களுக்குள்ளேயிவ்
வளவு சம்பந்தமும் ஐக்கியமுமாயிருக்கிறதற்கு அண்டத்
தையும் பிண்டத்தையும் ஆளுகிறபரஞ் சோதியாகிற கடவு
ளானவர் அவசியமாயிருக்கிறாரென்று பிரத்தியக்ஷமான சத்
தியமாகும். இதன்றியேயெங்கும்மழை வருஷிக்கிறதற்கும்
சர்வலோகத்திலே மேகங்களைச் சிதறப் பண்ணுகிறதற்கும்
புத்தியில்லாத காற்றுக்குப் படிப்பித்தவனார்? அந்த மழையி
னிமித்தமாக வுயிருள்ள வஸ்துவென்னப்பட்டதியாவும் பிழை
க்கிறதற்கு வேண்டியதெல்லாங் கொடுக்கத்தக்கதாகப் பூமி
க்குப் போதித்தவனார்? பூமியிலேதானியங்களும் பழங்களும்
உண்டாகாமற்போனால் பக்ஷிகளும் மிருகங்களும் மனுஷரு
மென்னசெய்வார்கள்? சீவனுள்ள வஸ்துகளில்லாமற்போனா
னால் பழங்களினாலேயுந் தானியங்களினாலேயும் ஆகிறபிரயோ
சன மென்ன? ஆனபடியினாலே யெல்லாவற்றையுஞ் சிருஷ்டி
க்கிறவருமாய் நடத்திக்கொண்டு வருகிறவருமாயிருக்கிற ஒரு
பராபரவஸ்துவானவரிருக்கிறாரென்றும், அவரண்டைக்கேறு
கிறதற்குச் சர்வலோகத்திலு முண்டான வஸ்துக்களும்
சோபானம்போலே யிருக்கிறதென்றும் ஞானத்திலேதெளிவு
ள்ளவர்கள் சங்கேதம் பண்ணினார்கள். ஆனால் நீசமானபொ



ருட்களை முதலாயுற்றுப்பார்த்தால் அவைகளிலேதானே கட
வுளுடைய மட்டில்லாத நன்மைகளின் பிரத்தியக்ஷமான
அடையாளங்களைக் காணலாம். ஒரு புல்லைமுதலா யுற்று
விசாரித்தால் அதினுடைய அங்கிஷங்களுடைய கிரமத்தை
யும், வர்னத்தையும் ஈட்டிபோலே யிருக்கிற கூர்மையையும்,
இருபுறத்திலேகத்திபோலிருக்கிறவிதத்தையும், பூமிக்குள்ளே
மறைந்திருக்கிற வேரையும் அதினுடைய சுபாவத்துக்குத்
தக்கது அந்த வேர்வழியாக யேறுகிற சாரத்தையும் இதுமு
தலான எண்ணப்படாத விசேஷங்களையும் ஆராய்ந்துபார்த்
தால் அவசியமாய்ப் பராபர வஸ்துவினாலே வந்ததென்றும்,
வேறே காரணத்தினாலேவரக்கூடாதென்றுங்கண்டுபிடிப்பான்
அதெப்படியென்றால், பூலோகத்தி லுண்டான துரைமக்க
ளும் பிரபுக்களும், இராசாக்களும்,சாஸ்திரிகளும், விவேகமு
ள்ளவர்களும், சகல வித்தியாபாரகர்முதலிய எல்லாருங்கூடி
யொரு புல்லை யுண்டாக்கிறதற் காலோசனை பண்ணினாலும்
அவர்களுடைய பிரயாசமெல்லாம்வியர்த்தமாய்ப் போமென்
பதற்குச்சந்தேகமில்லை. இந்த நீசமான புல்லிலே யோசித்தா
ற்போலே மற்ற ஒவ்வொருவஸ்துக்களிலேயும் யோசிக்கக்கட
வாய், பிண்டத்தையும் அதிலே யுண்டான தத்துவங்களையும்
பரிக்ஷித்தாயானால் அதிலேதானே கடவுளுடைய விலக்ஷண
ங்களைப் பிரசித்தமாய்க் காணலாம். அவ்வண்ணமே சாணக
்கியின் அதிசயமான கிரமத்தையும், அஸ்திகளுடைய அஸ்
திவாரத்தையும், சந்துகளையுங், கபால அஸ்திகளையும், பஞ்சே
ந்திரியங்களுக்கடுத்த ஆச்சரிய விசேஷங்களையும், சீவ அணுக்
கள் நரம்பிலேயோடுகிற பிரகாரத்தையும், சீவ அக்கினியோ
டே இரத்தங் கலந்திருந்து தேகமெல்லாம் பாய்கிறதையும்,
சரீரத்துக்குள்ளே பித்தத்தாரைகளும், தாதுகளும், ஆறுக
ள்போலே யிருக்கிறதையும், எலும்புகள் மலைபோலேயிருக்கி
றதையும், கண்கள் உயர்ந்தஸ்தலத்திலே யிருந்து வேவுகாரர்
போலே தேகத்துக்கு மோசம்வராதபடிக்குப் பார்த்திருக்
கிறதையும், வயிறு சுயம் பாகியைப்போலே ஆகாரபானங்க
ளைச் சேமித்து அவயவங்க ளெல்லாத்துக்கும் வேண்டிய
வைகளைக் கொடுக்கிறதையும், இந்தப் பிண்டத்துக்குள்ளே
ஈசீவனானது இராச்சியபாரம் பண்ணிக் கொண்டு மனதின்
படியே அவயவங்களை யெல்லாம் அசைத்துக்கொண்டு வரு
கிறதையும், இதுமுதலான எண்ணிக்கைக் குள்ளடங்காத அ
நேக அற்புதமான விசேஷங்களையும் பராமரித்தால் பிண்ட

மென்கிற சின்னலோகத்தைக் கடவுளுண்டாக்கினாரென்றும்,
இந்தச் சின்ன லோகத்திலே ஒரே ஆத்துமமாத்திரம் இருந்து
இராச்சியபாரம் பண்ணுகிறாப் போலே பரமாத்துமாவாகிற
பராபர வஸ்துவானவர் பெரிய லோகத்தைத் தாமே ஒரு
வராயிருந்து தம்முடைய சித்தத்தின்படியே நடத்திக்கொ
ண்டு வருகிறாரென்றும், எளிதாய்க் கண்டுபிடிக்கலாம். ஆனப
டியினாலே அண்டமும் [illegible]மும் பராபரவஸ்துவினாலேவந்
ததென்றும், மனுஷருக்[illegible]ப் பெரியலோகத்தை யுண்டாக்கி
றபோது இவர்களுக்கு விசேஷமான பிதாவாயிருக்கிறாரென்
றும் மனதிலே கெட்டியாக ஸ்தாபிக்கவேணும். ஆனால்மனு
ஷரானவர்கள் தங்களுக்குள்ள மகிமையையறியாமல் தங்களு
க்குப் பிதாவாயிருக்கிற கடவுள்மேலே பத்தியில்லாமலும்,
அவரையடிக்கடி நினையாமலும், அழிந்துபோகிற பொருட்க
ளின்மேலே பற்றுதலாயிருக்கிறார்கள். இதற்கடையாளமாக
ஒரு உசிதமான சரித்திரத்தைச் சொல்லிக் காட்டுவோம்.
அதெப்படியென்றால், பூர்வகாலத்திலே மகாபேர்போன இரா
யனொருவன் தன்னுடைய விராசதானிப் பட்டணத்திலே
மகா பிரஸ்தாபத்தோடு இராச்சியபாரம் பண்ணிக்கொண்டி
ருந்தான். அவன்தன்னுடைய நெற்றியிலேயும், கையிலேயும்,
மார்பிலேயு மகா அலங்காரமும் விசேஷமுமான ஒரு அடை
யாளந் தரித்திருந்தான். இவ்வித அடையாளங்களை அவனு
டைய பட்டத்துப்பிள்ளையுந் தரித்திருந்தது இப்படிப்பட்ட
இராயனுக் கெதிராளியான வேறேயொரு துரை[illegible]வன்
காய்மகாரத்தினாலே படைகூட்டி இராயனுடைய சீமைகளி
லே யிறங்கி அவனுடைய கோட்டைகளைக் கட்டிக்கொண்டு
இராசதானி பட்டணத்துக்கு முற்றிகையிட்டான். கடைசி
யிலே அநேகநாளைக்குப் பிற்பாடு பலவந்தத்தின்மேல் பட்ட
ணத்தைவாங்கி இராயனுடைய அரமனைக்குள்ளே பிரவே
சிக்கிறபோது எல்லாரும்பயந்து ஓடிப்போகிற சமயத்திலே
பட்டத்துக் கிருக்கப்போகிற மூன்று வயதுள்ளபிள்ளை ஒரு
சேவகன்கையிலே யகப்பட்டது சேவகன் அந்தக்குழந்தையி
னுடைய மகிமையையறியாமல் நீசச்சாதியி லுட்பட்டபேர்க
ளுக்கு விற்றுப்போட்டான்; இப்படியே அநேகவருஷம் நீச
ருக்குள்ளே வளர்ந்து அவர்களோடு பழகிப்போய்த் தன்னை
யின்னானென்று அறியாமலிருந்தான். அதற்குள்ளே இராய
னானவன் அநேகஞ்சேவகரையும் இராணுவங்களையும் கூட்
டிச் சத்துருவின்மேலே விழுந்து அவனைத்துரத்தினபோதும்



போலே இராச்சியபாரம் பண்ணினான். அப்போது தன்னு
டைய குமாரனைத் தேடத்தக்கதாக நாலுதிக்கிலும் அநேகம்
பேர்களையனுப்பி விசாரிக்குமிடத்தில் இராசகுமாரனிருக்
கிறவூரிலே அவர்களில் ஒருத்தன்சென்று பார்க்கும்போது
பட்டத்துப் பிள்ளையைத் தெருவீதியிலேகண்டு அதினுடைய
அடையாளங்களை யுற்றுப்பார்த்து சந்தோஷப்பட்டு அவன்
கிட்டேபோய் நீயாரென்று கேட்[illegible]டத்தில்அவன்தானொரு
நீசனுடைய பிள்ளையென்று சொன்னான். அதற்குவாயிலே
ஊழியக்காரன் தேவரீரிப்படி சொல்லவேண்டாம். மகாபெ
ரியவராயிருக்கிறீர். நீர் இராயனுடையகுமாரனுக்கும். நீரென்
னோடேகூடவந்தால் உம்முடைய தகப்பனாகிற இராயனோடே
இராச்சியபாரம் பண்ணுவீரென்று சேவகன் மகா வணக்கத்
தோடு நிதானமாய்ப் பரியாசமில்லாமல்விண்ணப்பம்பண்ணி
னான். இதைக்கேட்டசிறுவன் அவனைப்பின்சென்று அரம
னைக்குப்போனான். அவனுடைய தகப்பனானவிராயன்அரம
னையிலே வந்த தன்பிள்ளையினுடைய அடையாளங்களைக்
கண்டு அத்தியந்த பட்சத்தோடு அவனைக்கட்டி தழுவிக்
கொண்டு தம்மோடேகூட இராச்சியபாரம் பண்ணக் கட்டளை
யிட்டான். அத்தன்மைபோலே பூலோகத்திலே திரிகிற
மனுஷருக்குள்ளே அநேகம்பேர்கள் தங்களுக்கிராசாதி ராச
னாயிருக்கிற பராபரவஸ்துவானவர் பிதாவாயிருக்கிறாரென்
றறியாமலும் நீசமான தங்கள் தாய்தகப்பனாராலே தானே
வந்தா[illegible]ளென்றும் விசாரித்துக்கொண்டு அழிந்துபோகிறவ
ஸ்துகளைமாத்திரம் அபேட்சித்துக்கொண்டு வருகிறார்கள்.
ஆனால்இந்த அண்ட பிண்ட வியாக்கியானத்தை வாசித்தபிற்
பாடு கடவுளானவர் தங்களுக்குப் பிதாவாயிருக்கிறாரென்றும்
அவருடைய அடையாளங்கள் தங்களிடத்திலே மிகவும் பிர
காசிக்கிறதென்றும் கண்டுபிடித்து அநித்திய நன்மைகளை
அரோசித்துத் தள்ளி நமது ஆதிபிதாவாகிய ஆதாமென்பவ
ரைப்போல புத்திமயங்கி நன்றிகெட்டுப் பெருமோசத்திற்
குட்படாமலும், சொதோங்கொமோராவென்னு நகர்களின்
சனங்கள் மோகத்தால் நாசமானதுபோல மோகத்தை விரு
ம்பி நித்திய ஆக்கினைக்கு ஆளாய்ப்போகாமலும், அநித்திய
பொருட்களின்நிலையற்றசந்தோஷங்களைவிரும்பி ஜலப்பிரவா
கத்தால் நாசமானசனங்களைப்போலபரிகரிக்கக்கூடாதபொல்
லாப்பை யடையாமலும், தானென்கிற கர்வத்தால் கெட்டு
நித்திய அக்கினிச் சமுத்திரத்திற் படிந்துபோன தூதர்களைப்

போல் ஆங்காரித்துப் புத்திக்கெட்டா நரகவாக்கினைக் காளா காமனும் நாமரிக்கையில் நம்மை விட்டு நீங்குகிறதுமாய் தற்காலம் மாய்கைகொண்ட நமது கண்களுக்குக் காணப்படுகின்றதுமான உலக பொருட்களை விரும்பாமலும்நம்மையுண்டு பண்ணி யிவ்வுலகில் கொஞ்சநாளைக்குவைத்து நமது கிரிகைகளுக்குத் தகுந்த நித்தியானந்த பாக்கியங் கொடுக்கச் சித்தமாயிருக்கிற நமது மெய்யான தகப்பனுகிற சர்வேஸ்வரனை நமது பஞ்சேந்திரியங்கள் உள்ளிந்திரியங்கள் கொண்டமட்டுங் கட்டிப் பிடித்துக் கொண்டிருப்போமாக மேலும் உலகத்திலிருக்கப்பட்ட சகலரும் ஓரே தகப்பனுகிய பராபர வஸ்துவினுடைய பிள்ளைகளா யிருப்பதால் சாதிபேதமின்றி ஒருவ ரொருவரைச் சிநேகித்துக் கொண்டு தானம், செபம், தபம், ஒறுத்தல், உபவாசம் பண்ணி மாய்கையால் இழுக்கப்படும் நமது பாசங்களின் கொடுமைகளை மேற்கதி தருந்தியானங்களால் யோசித்து அவைகளை வென்று நமக்கு நித்திய ஆஸ்தியா யிருக்கிற தேவனை முழுமனதோடு சிநேகிப்போமாக இப்படி செய்வோமானால் அற்பநாளைக் கிருக்கப்போகிற இந்தச் சரீரம் நம்மைவிட்டு நீங்கின வுடனே முடிவில்லாதகாலம் தேவனோடு மோட்சத்திலே இராச்சியபாரம் பண்ணுவோமென்பதிற் சந்தேகமில்லை.

114577

முற்றிற்று.